
# 2011 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 12</u>

**18.01.2011 பிரம்மாபாபாவுக்குச் சமமாக, வாழ்க்கையில் இருந்துக் கொண்டே ஜீவன் முக்தி நிலையின் ஆனந்தத்தை அடையுங்கள், அவரது அன்பிற்குப் பரிசு!**

**02.02.2011 தனது பாக்கியம் மற்றும் பிராப்தியை நினைவில் கொண்டு சதா புன்சிரிப்போடும், திருப்தியோடும் வாழுங்கள், திருஷ்டி (பார்வை) விருத்தி (உள்ளுணர்வு) மற்றும் பிரவிருத்தி (வாழ்க்கை) ஆகியவற்றின் மூலம் திருப்தியை அனுபவம் செய்வியுங்கள்!**

**17.02.2011 மனதின் சேவையின் மூலமாக ஆத்மாக்களுக்கு அஞ்சலி (ஆறுதல்) தரும் சேவையை செய்து கொண்டே நீண்ட காலமாக தீவிர முயற்சி செய்து எவரெடியாக இருந்தால் மாலையில் மணியாக மாறி விடுவீர்கள்!**

**02.03.2011 இந்த பிறந்த நாளில் அனைவரும் ஒருவருக்கொருவர் ஊக்கம் உற்சாகத்தை வழங்கி சகயோகியாகி வீண் எண்ணங்கள் என்னும் எருக்கம் பூவை அர்ப்பணம் செய்யுங்கள், மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற சுயமரியாதையின் இருக்கையில் அமர்ந்து இதில் நம்பர்-1 பரிசைப் பெறுங்கள்! (சிவ ஜெயந்தி)**

**16.03.2011** மனதின் மூலமாக இயற்கையை சதோகுணி (முழு தூய்மை) ஆக்கும் சேவை செய்யுங்கள் -சுபபாவனை மற்றும் சுபகாம்னா (நல்லாசை மற்றும் நல் விருப்பம்) வைத்து சம்ஸ்காரங்களோடு இணைந்து நடனம் செய்யுங்கள், மற்றும் தன்னுடைய பழைய சம்ஸ்காரங்களை எரித்து விட்டு பிரபுவின் துணையில் இருந்து அவருடைய வர்ணத்தை பூசிக் கொண்டு உண்மையான ஹோலி கொண்டாடுங்கள்!

**31.03.2011** திட சங்கல்பத்தின் மூலமாக டென்சனிலிருந்து (மன இறுக்கம்) விடுபட்டு முன்னுதாரணமாக மாறி, அனைவருக்கும் ஆதார மூர்த்தி ஆகுங்கள், மன சக்தி மூலமாக துக்கத்தில் இருக்கும் ஆத்மாக்களுக்கு குஷியின் வரதானத்தை வழங்குங்கள்!

**13.04.2011** ஜுவாலாமுகி அக்னி சொரூபத்தின் மூலம் யோக சக்தியால் சம்ஸ்காரத்தினை அழித்து விடுங்கள், தன்னுடைய நடத்தை, முகம், திருஷ்டி, விருத்தி (உள்ளுணர்வு) மற்றும் சங்கல்பத்தால் பாபாவை பிரத்யட்சப்படுத்துங்கள்!

**19.10.2011** தந்தையை பின்பற்றி பிரம்மாபாபாவுக்கு சமமாக வீணான சமயம், வீணான சங்கல்பத்தில் வெற்றி அடைந்து, கர்மாதீத் ஆகி முக்திக்கான கதவை திறக்க நிமித்தமாகுங்கள், இந்த தீபாவளியில் ஒவ்வொருவரும்

தங்களுக்குள் கலந்து சம்ஸ்கார சந்திப்பின் ஆனந்த நடனத்திற்கான சங்கல்பம் எழுப்புங்கள்!

**15.11.2011** இப்பொழுது விசயங்களைப் பார்க்காமல் தீவிர முயற்சி செய்து பிரம்மாபாபாவிற்கு சமமாக நிறைவாக (சம்பன்னமாக) மற்றும் சம்பூர்ணமாக தடைகளற்றவராக (நிர்விக்னமாகவும்) மற்றும் எவரெடியாகவும் இருந்து 108-மணி மாலையை தயார் செய்யுங்கள்!

**30.11.2011** அமிர்தவேளையில் விசேஷ சர்வ சக்திகளின் அனுபவி சொரூபமாகி, யோகத்தின் அலைகளை (சகாஷ்) வாயுமண்டலத்தில் பரப்புங்கள், மனதை சதா சுறுசுறுப்பாக வைத்திருங்கள், சமயத்தின் அழைப்பு -தீவிர புருஷார்த்தி ஆகுக!

**15.12.2011** சதா மகிழ்ச்சியில் இருந்து கவலையற்ற இராஜாவாகுங்கள், தீவிர புருஷார்த்தியின் மூலம் சம்பன்னம் மற்றும் சமானமாகி கூடவே செல்வதற்குத் தயாராகுங்கள்!

**31.12.2011** புதிய ஆண்டில் தீவிர புருஷார்த்தி பவ என்ற வரதானத்தின் மூலமாக, தனது முகத்தின் மூலமாக பரிஸ்தா ரூபத்தை காண்பியுங்கள், லைட்-மைட் (ஒளி-சக்தி) சொருபம் மற்றும் ஜுவாலாமுகி யோகத்தால் வீணானதை எரித்து விடுங்கள், துக்கம் அசாந்தியாக உள்ள ஆத்மாக்களுக்கு சக்திகளை தானமாக வழங்குங்கள்!

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂
☂☂☂☂☂☂☂

## 18.01.2011 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பிரம்மாபாபாவுக்குச் சமமாக, வாழ்க்கையில் இருந்துக் கொண்டே ஜீவன் முக்தி நிலையின் ஆனந்தத்தை அடையுங்கள், அவரது அன்பிற்குப் பரிசு!

மனதை வென்று உலகை வென்றவராக மாறிக் காட்டுங்கள். இன்று விசேஷமாக பிரம்மாபாபா அவ்யக்த்தமான நினைவு தினமாகும். அனைத்துக் குழந்தைகளின் கண்களிலும் பிரம்மாபாபாவின் அன்பு கலந்திருக்கின்றது. இன்று நான்கு. மணிக்கு முன்னதாகவே குழந்தைகளின் அன்பு வதனத்தை அடைந்து விட்டது. பிரம்மாபாபாவிடம் சந்திப்பை செய்வதற்காகவும், அன்பை கொண்டாடுவதற்காகவும் தன்னுடைய உளமார்ந்த அன்பிள் அடையாளங்களாக மாலைகள் பிரம்மாபாபாவிடம் வந்து சேர்ந்து விட்டன. ஒவ்வொரு மாலையின் நறுமணத்திலும் குழந்தைகளின் அன்பு கலந்திருந்தது. ஒவ்வொரு குழந்தைகளின் கண்களும் மலர்ந்த முகமும், உள்ளத்தின் விசயங்களை பாபாவிடம் பேசிக் கொண்டிருந்தன. பிரம்மாபாபாவும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் அன்பிற்கான பதில் கைமாறு கொடுத்துக் கொண்டிருந்தார். பாபா பார்த்துக் கொண்டிருந்தார். இப்பொழுதும் கூட ஒவ்வொரு குழந்தைகளும் கண்களின் மொழியில் தன்னுடைய உள்ளத்தின் சிநேகத்தை கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த பரமாத்மாவின் சிநேகம் ஒவ்வொரு குழந்தையையும் சுலபமாகவே பாபாவின் குழந்தையாக மாற்றி விடுகின்றது. இந்த அலௌக்க சிநேகம் மேரா பாபா (எனது தந்தை) என்ற அனுபவத்தால் தன்னுடையவராக மாற்றி விடுகிறது. இந்த அன்பு பாபாவின் பொக்கிஷங்களுக்கு எஜமானனாக மாற்றுகின்றது. ஏனென்றால், குழந்தைகள் சொல்கின்றார்கள் மேரா பாபா என்று அப்படி மேரா பாபா என்றாலே அனைத்து பொக்கிஷங்

களுக்கும் எஜமான் தானே இந்த சிநேகமானது தேக உணர்வை ஒரு நொடியில் மறக்கச் செய்து ஆத்ம அபிமானியாக மாற்றி விடுகிறது. தந்தையைத் தவிர வேறு எந்த ஆத்மாவும் கவர்ச்சிப்பதில்லை. இன்றைய நாளிற்கு மிக அதிகமான மகிமை உள்ளது. இது நினைவு நாள் மட்டுமல்ல கூடவே சக்தியும் நிறைந்த நன்னாளாகும். ஏனென்றால் இன்றைய நாளில்தான் பாபா குழந்தைகளை உலக சேவைக்காக தன்னை செய்விப்பவராக மாற்றிக் கொண்டு குழந்தைகளை செய்பவர்களாக மாற்றுவதற்கான திலகம் வைத்தார். தந்தையைப் போல் குழந்தை (சன் ஷோ ஃபாதர்) செய்வதில் நிமித்தமாக வைத்தார். சேவையில் வெற்றிக்கான சாதனம் தன்னை செய்விப்பவராக வைத்துக் கொண்டு குழந்தைகளை செய்பவர்களாக வைத்தார். ஏனென்றால் சேவையில் வெற்றிக்கு சாதனம் நான் செய்பவன், செய்விப்பவர் செய்ய வைத்துக் கொண்டிருக்கிறார். இந்த நினைவு மிக அவசியமாகும். ஏனென்றால் 63-பிறவிகளான நினைவு நான் என்ற தேக அபிமானத்தில் கொண்டுவருகிறது. செய்விப்பவர் செய்யவைத்துக் கொண்டிருக்கிறார். நான் நிமித்தமான கருவியாக செயல்படுகின்றேன். இந்த நினைவால் தன்னை நிமித்தமாக உணருவதால் தேக அபிமானம் விலகி விடும். எனவே, குழந்தைகளை பாபா செய்பவர்களாக வைத்துள்ளார், தன்னை செய்ய வைப்பவராகவும் வைத்துள்ளார். செய்பவராக மாறும்பொழுது தானாகவே நிமித்தமாகவும் பணிவாகவும் மாறி விடுவீர்கள். இப்பொழுதும் கூட பாப்தாதா குழந்தைகளை சேவையில் நிமித்தமாக வைத்து செயல்படும் காரணத்தால் பாபா சேவாதாரி குழந்தைகளின் நெற்றியில் சேவையின் பலனாக மின்னுகின்ற நட்சத்திரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். பெரும்பாலான குழந்தைகளின் சேவையை பாபா பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். எனவே அப்படிப்பட்ட குழந்தைகளை விசேஷமாக பிரம்மாபாபா ஆஹா! குழந்தைகளே ஆஹா! என்று வாழ்த்துக்களும் தருகின்றார்.

பிரம்மாபாபா விசேஷமாக மகிழ்ச்சியும் அடைகின்றார். மேலும் சேவையில் நிமித்தமாக இருந்து முன்னேற்றுவதற்கான வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றார். இப்பொழுதும் கூட பிரம்மாபாபா குழந்தைகளுக்கு தன்னைப்போல் ஃபரிஸ்தா நிலையில் வருவதற்கான சைகை தருகின்றார். பாப்தாதாவும் பார்க்கின்றார். குழந்தைகளுக்கும் கவனம் உள்ளது. சதா பிரம்மாபாபா வாழ்க்கையில் இருந்துக் கொண்டே

ஜீவன் முக்தி நிலையில் இருந்தார். இவ்வளவு பெரிய பொறுப்புகளில் இருந்தும், இவ்வளவு பெரிய குடும்பத்தை பரிபாலனை செய்து கொண்டும் அனைவரையும் யோகி வாழ்க்கையில் உள்ளவர்களாக மாற்றிக் கொண்டும், இவ்வளவு சேவைகளை பொறுப்புடன் கவனித்துக் கொண்டும், சேவையில் சதா முன்னேறச் செய்வது, இப்படி பலவிதமான பொறுப்புகளிலிருந்து கொண்டே ஜீவன் முக்தி நிலையின் ஆனந்தத்தில் இருந்தார். எனவே பக்தி மார்க்கத்தில் பிரம்மாபாபாவிற்கு ஆசனமாக கமல ஆசனம் காண்பிக்கப்பட்டுள்ளது. ஜீவன் முக்தி நிலையை அடைந்து இப்பொழுதே ஜீவன் முக்திக்கான ஆனந்தத்தை அடையப் பெற்றிருந்தார். அவ்வாறே குழந்தைகளாகிய உங்களையும் மாற்றினார். இப்பொழுதும் கூட குழந்தைகளாகிய உங்களை ஃபரிஸ்தா ஆவதற்காக விதவிதமான வழிமுறைகளைக் கூறி தன்னைப்போல் மாற்றுவதற்காக விரும்புகின்றார்.

பாப்தாதா பார்க்கின்றார், ஒவ்வொரு குழந்தையின் லட்சியமும் நன்றாகவே உள்ளது. யாரையாவது கேட்டுப் பாருங்கள்: உங்கள் லட்சியம் என்னவென்று என்ன சொல்கிறார்கள்? நினைவு இருக்கிறதா, என்ன சொல்கிறார்கள்? பாப்சமான் ஆகியே தீர வேண்டும். அப்படி யென்றால் பாப்சமான் எப்படி ஆக வேண்டும். இந்த வாழ்க்கையிலேயே ஜீவன் முக்தி வாழ்க்கையின் உதாரணமாக மாற வேண்டும். பாப்தாதா பார்க்கின்றார். கொடுக்கின்ற வீட்டு பாடத்தில் கவனம் கொடுக்கின்றீர்கள், அனுபவமும் செய்கின்றீர்கள் ஆனால் சதா செய்வதில்லை. இப்பொழுது கூட ஒரு வீட்டு வேலை கொடுக்கப்பட்டது, அதனுடைய ரிப்போர்ட்டில் குழந்தைகள் முயற்சி செய்வதற்காக ஒவ்வொரு மாதம் முழுக்க கவனம் கொடுத்தார்கள். சில மண்டலங்களிலிருந்து ஒரு மாதத்திற்கான ரிசல்ட் மட்டும் நன்றாக வந்திருந்தது. யாரெல்லாம் ரிப்போர்ட் அனுப்பியிருந்தீர்களோ. எந்த ஜோனிலிருந்து அனுப்பியிருந்தீர்களோ அவர்களை பாப்தாதா பாராட்டுகிறார். ஆஹா குழந்தைகளே ஆஹா! மேலும் வாழ்த்துக்களும் தெரிவிக்கின்றார் ஆனால் பாப்தாதா இப்பொழுது விரும்புவது என்ன? இப்பொழுது பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளிடமும் இதைத்தான் விரும்புகின்றார், இப்பொழுதெல்லாம் அவ்வப்பொழுது சில சமயம் சரியாக இருக்கிறார்கள் ஆனால் பாபா அதை சதா காலமாக இருக்க விரும்புகின்றார். யோகியாகவும் மிக நன்றாகவே மாறியுள்ளார்கள்

ஆனால் சதா யோகியாக இருப்பதை விரும்புகின்றார். இப்பொழுதெல்லாம் பாப்தாதா குழந்தைகளுக்கு வேலையும் தருகின்றார், சதா செய்வதற்காக, அந்த நிலையில் இருப்பதற்காக ஒவ்வொரு மணி நேரத்திற்கும் தன் மீது கவனம் வைப்பதற்காக ஏதேனும் ஒரு யுக்தியை உருவாக்குங்கள். அதனால் அவ்வப்போது என்ற நிலை மாறி சதா என்ற நிலை வர வேண்டும். இப்பொழுது பாப்தாதா விரும்புவது இது தான், மனதை வென்றால் உலகை வெல்லலாம் என்ற வாக்கியத்திற்கு இணங்க நீங்கள் மனதிற்கு என்ன எண்ணத்தைத் தருவீர்களோ அதையே அது செய்ய வேண்டும். ஏன்? எப்படி மற்ற கர்மேந்திரியங்களை எப்பொழுது வேண்டுமோ, எப்படி வேண்டுமோ அப்படியே செயல்படுத்துகின்றீர்கள் அல்லவா? அவ்லாறே மனதிற்கும் கட்டளை இடுங்கள். அதையே செய்ய வேண்டும். பயிற்சி செய்கின்றீர்கள் ஆனால் அவ்வப்போது செய்யாமலும் இருக்கின்றீர்கள். பாப்தாதா இப்பொழுது இதையே எதிர்ப்பார்க்கின்றார். மனதை சக்திகள் எனும் கடிவாளத்தால் எப்படி இயக்க வேண்டுமோ அப்படி இயக்குங்கள். மனதை வென்றால் உலகை வெல்லலாம் என்று யாரைப் பற்றி பாடப்பட்டுள்ளது. இது யாரைப் பற்றிய மகிமை? இது உங்களைப் பற்றிய மகிமைதான். ஒவ்வொரு கல்பமும் செய்துள்ளீர்கள். எனவே அவ்வாறு மகிமை செய்யப்பட்டுள்ளது. ஏனென்றால் எப்படி மற்ற கர்ம இந்திரியங்களை எனது என்று சொல்கின்றீர்களோ அவ்வாறேதான் மனதையும் எனது என்று சொல்கின்றீர்கள். எனது என்று சொல்வதானால் நீங்கள் தானே எஜமான்! மனதில் என்ன எண்ணம் நினைக்க விரும்புகிறீர்களோ. எவ்வளவு நேரம் அந்த எண்ணத்தில் இருக்க விரும்புகிறீர்களோ அப்படியே செய்ய கட்டுப்பட்டுள்ளது மனம். ஏனென்றால் எனது அல்லவா? எனவே பாப்தாதா அன்பு, நிறைந்த இன்றைய நாளில் இதையே வீட்டுப்பாடமாக தர விரும்புகின்றார். நீங்கள் என்ன எண்ணம் நினைக்க விரும்புகின்றீர்களோ அதையே செயல்படுத்த வேண்டும். மாறாக சுப சங்கல்பங்களை நினைக்க விரும்பினால், அந்த சுத்த சங்கல்பம் வீணான எண்ணத்தை அழித்து விட வேண்டும். யோகம் செய்ய வேண்டுமென்றாலும் சம்ஸ்காரங்களின் காரணத்தால் வீண் சங்கல்பம் எழுகிறது. யோகத்தில் சித்தி அடைய முடியவில்லை. இவையெல்லாம் கட்டுப்பாட்டில் வர வேண்டும். நீங்கள் ஒரு மணி நேரம் யோகம் செய்ய விரும்பினால் மனம், தொந்தரவு செய்யக்கூடாது. ஆத்மாதான் எஜமான். மனம் அல்ல

மனம் என்பது ஆத்மாவிற்குத் துணையாக செயல்படுவது. எனவே துணைவனுக்கு அன்பாகக் கட்டளை இடுங்கள். மனதை வெல்லுங்கள். ஏனென்றால் பாப்தாதாவிடம் அநேக குழந்தைகளின் செய்திகள் வருகின்றது. சில சமயத்தில் வீண் எண்ணங்கள் வந்து விடுகிறது. விரும்பாமலும் வந்து விடுகிறது. எஜமானன் இப்படியெல்லாம் சொல்வாரா? பிரம்மாபாபா மீது அன்பு உள்ள தல்லவா? பாபா இன்று அன்பில் தன்னுடைய உள்ள விருப்பத்தை வெளிப்படுத்துகின்றார். இப்பொழுது குழந்தைகள் மனதை வென்று உலகை வென்றவராக ஆகியே தீர வேண்டும். பிரம்மாபாபாவிற்கு இதனை அவரது அன்பின் பரிசாகத் தருவீர்களா? அன்பில் என்ன தரப்படுகின்றது? பரிசு தருவார்களல்லவா? எனவே இன்று பிரம்மாபாபா குழந்தைகளை இந்த பரிசை தரச்சொல்கின்றார். தயாரா? கை உயர்த்துங்கள். இனி எப்பொழுதுமே வீண் எண்ணங்களை வர வே விடமாட்டோம் என்று இன்றே கட்டளை இடுங்கள். செய்ய முடியுமா? இன்று இரண்டு மணி நேரம்-நான்கு மணிநேரம் யோகம் செய்யுங்கள், யோக நிலையிலேயே கர்மமும் செய்யுங்கள். செய்ய முடியுமா? செய்ய முடியுமா. செய்வீர்களா? சரி போனது போகட்டும் ஆனால் இப்பொழுது கட்டளை இடுங்கள். இன்றைய நாள் முதலாக வீண் எண்ணங்களுக்கு முற்றுப்புள்ளி, செய்தே ஆக வேண்டும்.

இன்று யோகத்தில் இதே லட்சியமாக வையுங்கள். அதற்கேற்ப நாள் முழுவதும் முயற்சி செய்ய வேண்டும். பாபா மீது கொண்ட அன்பிற்காக பாபா சொன்னதைச் செய்ய வேண்டும். வீண் எண்ணங்களை முடித்து விடுங்கள். இதற்கு யுக்தியாக பிரம்மாபாபா மீதுள்ள. அன்பை உளமாற நினைவு செய்யுங்கள். அவரை சாகாரத்தில் (ஸ்தூல சரீரத்தில்) பார்த்திருந் தாலும் பாராமலிருந்தாலும் சரி, ஆனால் புத்தியின் பலத்தின் மூலமாக எல்லோருமே பார்த்திருப் பீர்கள் அல்லவா? பார்த்தீர்களா? அல்லது இல்லையா? பாபாவின் அன்பை நான் பார்த்திருக்கின்றேன் என்று சொல்பவர்கள், பிரம்மாபாபாவின் பாலனையை அடைந்திருக்கின்றீர்களென்றால் அப்படியே நடந்து கொண்டிருக்கின்றேன் என்பதுதானே! அப்படி செய்பவர்கள். கை உயர்த்துங்கள். நல்லது. கை உயர்த்தி குஷிப்படுத்தி விட்டீர்கள். பாப்தாதாவிற்கும் மகிழ்ச்சி தான், தைரியம் வைத்துள்ளீர்கள் அல்லவா! ஆனால் எப்பொழுதெல்லாம் ஏதேனும் சக்தி குறைவடைந்து போனால்

சதா பாபாவின் சம்பந்தத்தில், பாபா எத்தனை சம்பந்தத்தில் இருக்கின்றார். சில சமயம் தந்தையாக, சில சமயம் குழந்தையாக ஆகி விடுகின்றார், சில சமயம் நண்பனாகவும் மாறி விடுகின்றார். எனவே இப்படி பல சம்பந்தங்களில் நினைவு செய்யுங்கள் மற்றும் பிராப்திகளை நினைவு செய்யுங்கள். பிராப்திகளையும் மற்றும் சம்பந்தங்களையும் இன்று எப்படி மனதார நினைவு செய்கின்றீர்களோ அப்படியே நினைவு செய்தால் அன்பு உருவாகி விடும். இது கூட அனைவர் மனதிலும் பிரம்மாபாபாவிற்கான அன்பு வந்து கொண்டேயிருக்கிறது அல்லவா? எனவே எப்பொழுதாவது ஏதேனும் சங்கடம் ஏற்பட்டால் சம்பந்தங்களையும் பிராப்திகளையும் நினைவு செய்து கொள்ளுங்கள். பாபா ஒவ்வொரு குழந்தையுடனும் சகயோகியாக இருக்கின்றார். நீங்கள் நினைத்தால் மட்டுமே போதும். புரிந்ததா இன்று என்ன செய்ய வேண்டும்? மனதை வென்றவர்கள் உலகை வென்றவர்கள் இந்த வாக்கியத்தை சொரூபத்தில் தாரணை செய்ய வேண்டும். தன் கட்டளைப்படி மனதை செலுத்துங்கள். இப்பொழுது சிறிது கட்டுப்பாட்டிலிருந்து விலகி விட்டது. எனவே அது தன் வேலையைச் செய்கிறது. இப்பொழுது கவனம் வையுங்கள். மனம் எனது கட்டுப்பாட்டில் செயல்பட வேண்டும். நீங்கள் மனதின் கட்டுப்பாட்டில் செயல்படக்கூடாது. நீங்கள் ஞான விசயங்களை சிந்தனை செய்ய விரும்புகின்றீர்கள் ஆனால் அங்கு வீண் விசயங்கள் வந்து விடுகின்றது. அப்படியென்றால் அங்கு என்ன ஆயிற்று? மனம் எஜமான் ஆனதா? அல்லது நீங்கள் எஜமானன் ஆனீர்களா? இப்பொழுது எல்லோருக்கும் இந்த வீட்டுப்பாடம் புரிந்ததா? மனதை வென்றவர் ஆகுங்கள். நீங்கள் கட்டளையிட்டால் அது கேட்கும். கண்டிப்பாக கேட்கும், கவனம் வைத்தால் போதும். கவனம் வைக்க வேண்டும் அவ்வளவு தான்! மாதர்கள், ஆசிரியைகள் முடியுமா? முடியுமா? ஆசிரியைகள் கை உயர்த்துங்கள்! கை உயர்த்துகின்றீர்கள். முடியுமென்றால் கையை அசையுங்கள். முதல் வரிசையில் உள்ளவர்கள் கை அசையுங்கள். சகோதரர்கள் கை அசையுங்கள். ஆஹா பிறகு என்ன! பிரம்மாபாபாவிற்கு அன்பின் பரிசு கொடுத்து விட்டீர்கள். இதற்கு வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள்!

நல்லது. பாப்தாதாவிடம் கொண்ட அன்பு அதிகமான சகயோகம் (உதவி) செய்கிறது. மேரா பாபா என மனம் உவந்து சொல்கின்றீர்கள்.

மேரா பாபா என்று சொல்கின்றீர்களென்றால் நான் யார்? பாபாவினுடைய கண்டெடுக்கப்பட்ட குழந்தை. நீங்கள் எல்லோருமே எத்தனை முறை மேரா பாபா, மேரா பாபா என்று எத்தனை முறை சொல்கின்றீர்கள். பாபா கேட்கின்றார் அல்லவா? அவை அனைத்தையும் குறித்து வைத்திருக்கின்றார். இரட்டை அயல்நாட்டவரும் சொல்கின்றீர்கள் அல்லவா? பாப்தாதாவும் பார்க்கின்றார் சீசன் முழுவதுமே இரட்டை அயல் நாட்டவரை சார்ந்த குழந்தைகளும் வந்து நிறைந்து விடுகின்றார்கள். மதுபனில் ஒவ்வொரு முறையும் வந்து கொண்டிருக்கின்றார்கள். இப்பொழுதும் 350-பேர் வந்திருக்கின்றார்கள். தங்களுடைய சீசனிலும் வருகின்றார்கள் ஆனால் ஒவ்வொரு முறையும் ஆங்காங்கிருந்தெல்லாம் எப்படியாவது சிறிது சிறிதாக வந்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். எனவே இப்பொழுது இந்த ரிசல்ட்டையும் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். நீங்கள் அனைவரும் சாட்சியாக இருந்து தன்னைப் பற்றிய ரிசல்ட்டை தானே பார்த்துக் கொண்டிருங்கள். இதையே நினைவு வையுங்கள். பாப்தாதாவிற்கு நான் எஜமானாக இருப்பேன் என்று வாக்கு கொடுத்திருக்கிறேன். பாப்தாதா இப்பொழுது குழந்தைகளுக்கு குறைந்தபட்சம் ஒவ்வொரு ஜோனுக்கும் இந்த வேலை தரலாம் அல்லவா? இந்த ஜோன் இந்த வாரத்தில் அல்லது 15-நாட்களில் ரிசல்ட் தர வேண்டும். வீண் எண்ணமே இல்லை என்று ஆனால் எந்த விசயத்தை மனதிற்குத் தருகிறீர்களோ அதனை மனம் செய்கிறதா இல்லையா? பாருங்கள். இது சம்மதமா? சகோதரிகள், டீச்சர்கள், சம்மதமா? ஜோனுக்கு இந்த வேலை தரலாமா? கை உயர்த்துங்கள். டீச்சர்ஸ், மகாராஷ்டிரா அல்லவா? மகாராஷ்டிராவிற்கு மகான் காரியம் தர வேண்டுமல்லவா? பாப்தாதா விற்கும் ஒவ்வொரு மண்டலத்தின் (ஜோன்) மீதும் அன்பு உள்ளது. மேலும் சதா பாபாவிற்கும் ஒரு நம்பிக்கை உள்ளது! குழைந்தைகள் பாபா சொன்னதை செய்வார்கள். அப்படிதானே! மகாராஷ்டிராவினர் பாபா சொல்வதை செய்யும் குழந்தைகள்தானே! அப்படியானால் மகாராஷ்டிரா வைச் சார்ந்தவர்கள் கை உயர்த்துங்கள். அதிகமாக இருக்கின்றீர்கள். வகுப்பில் முக்கால் பாகம். ஒவ்வொரு ஜோனும் பாபாவின் சொல்லுக்குக் கீழ்ப்படியும் குழந்தைகள்தான். எல்லோருமே தலை அசைக்கிறீர்கள். பாபாவிற்கும் நம்பிக்கை உள்ளது. என்னுடைய குழந்தைகள் எப்பொழுதுமே நிச்சயபுத்தி உடைய குழந்தைகள்தான்.

பாப்தாதா இதையே விரும்புகின்றார். தினசரி கேட்கும் மகா வாக்கியமே வீட்டு பாடம் தான். அப்படி தினசரி முரளியில் பாபா சொல்வதைக் கேட்டு குழந்தைகள் செய்து விட்டால், அப்படிச் செய்த குழந்தைகள் தான் பாபாவின் கண்டெடுக்கப்பட்ட அருமையான குழந்தைகள், சொல்லுக்கு கீழ்படியும் குழந்தைகள், இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? தினமும் முரளி படியுங்கள், ஏனென்றால் பெரும்பாலான குழந்தைகளைப் பார்க்கும்பொழுது முரளியில் அன்பு வைத்துள்ளார்கள். சிலர் அப்படி இல்லாமலிருந்தாலும், பாப்தாதாவிடம் ஒரு குழந்தை, பாபா! எனக்கு உங்கள் மீது மிகுந்த அன்பு உள்ளது என்று சொன்னால், ஆனால் பாபாவிற்கு யார் மீது அன்பு உள்ளது? முரளியின் மீதுதானே முரளிக்காக எவ்வளவு தூரத்திலிருந்து வருகின்றார். இப்படி எந்த டீச்சராவது இவ்வளவு தூரத்திலிருந்து பாடம் கற்பிக்க வருவார்களா? அப்படி பென்றால் பாபாவிற்கும் முரளி மீது அவ்வளவு அன்பு உள்ளது. அப்படியென்றால் மேரா பாபா என்று சொல்கின்ற குழந்தைக்கும் முதன்மையான அன்பு பாபாவுடன், பாபாவின் முரளி மீது இருக்க வேண்டும். அதில் பாருங்கள், பிரம்மாபாபா ஒருநாள் கூட முரளியைத் தவறியதே கிடையாது. ஏதோ காரணமாக மும்பைக்குச் சென்றாலும் முரளி எழுதிக் கொண்டே இருப்பார். பிறகு மாதேஸ்வரி மம்மா அதனை வாசிப்பார். இறுதி நாளில் கூட உடல் அசௌகரியமாக இருந்தும் காலையில் வகுப்பு எடுக்கவில்லை ஆனால் மாலையில் வகுப்பு நடத்திய பிறகே அவ்யக்தமடைந்தார். அப்படியென்றால் பிரம்மாபாபாவின் அன்பு எதன் மீதிருந்தது? முரளி மீதுதானே! எனக்கு பாபா மீது அன்பு உள்ளதென்று யார் நினைக்கிறீர்களோ, அவர்கள் பாபாவின் அன்பு எதன் மீதிருந்ததோ அதன் மீதும் இருக்க வேண்டுமல்லவா? எனவே நீங்கள் புரிந்து கொள்ளுங்கள், முரளி படிக்க வேண்டும். வகுப்பில் படித்தாலும் சரி, கட்டாயத்தின் பேரில் படித்தாலும் சரி, சாக்குபோக்குக் கூடாது. ஏதேனும் காரணமிருந்தால் யாரையாவது படிக்கவைத்தாவது கேளுங்கள். அப்படி முரளிக்கு அந்தளவிற்கு மதிப்பு வைத்துள்ளேன் என்பவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது! இங்கே எல்லாமே தென்படுகிறது.

பாபா பின்னால் இருக்கின்ற உங்களையும் பார்க்கின்றார். நல்லது. மிக்க நல்லது. பாபா இடையிடையே பரீட்சை வைப்பார். இன்று முரளி யார்

கேட்கவில்லை என்பதையும் டீச்சர் எழுதி அனுப்ப வேண்டும். சம்மதமா! நல்லது.

இன்று பிரம்மாபாபா ஒவ்வொரு குழந்தைகளையும் சந்தித்து தன் கண்கள் மூலமாக அதிகமான அன்பினை கண்கள் மூலமாக வழங்கிக் கொண்டிருக்கின்றார். நாலா புறத்திலிருந்தும் குழந்தைகள் மூலமாக செய்தி வந்தது. நாலா புறத்திலிருந்தும் வந்துள்ள அன்பான மிக மிக இனிமையான பாவனைகளுடன், விதவிதமான வார்த்தைகளாலும் நினைவுகள் அடங்கிய விதவிதமான கடிதங்கள் வந்து சேர்ந்தது. அனைவருக்கும் பாப்தாதா பதில் அளிக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் பாபாவின் உளமார்ந்த நினைவில் மூழ்கி அன்பில் கலந்திருக்கின்றார்கள். மேலும் இந்த அழிவற்ற அன்பு சதா காலத்திற்கும் பாபாவிற்கும், குழந்தைகளுக்குமான அழியாத மற்றும் முடிவில்லாத அன்பு ஆகும். மேலும் இந்த சங்கமயுகம் முழுவதும் பாபா குழந்தை களுக்குமான சந்திப்பு நிச்சயிக்கப்பட்டதே. நல்லது.

**மகாராஷ்டிரா, மும்பை, ஆந்திரபிரதேஷ் (14,000-பேர் வந்துள்ளார்கள்):** அனைவருக்கும் விசேஷமாக பாப்தாதாவின் அன்பு நிறைந்த நன்னாளில் அன்புகள்! சதா இந்த அன்பு என்றென்றும் இருந்துக் கொண்டே இருக்கும். வந்துள்ள அனைவரும் எழுந்து நிற்கின்றீர்கள் ஒவ்வொரு முறையும் வாய்ப்புக் கிடைக்கும்பொழுதெல்லாம் வருவது உங்களுக்கும் மிகவும் பிடித்துள்ளது. பிடித்துள்ளதா? யாரிடமும் புகார் வரக்கூடாது. ஒவ்வொரு மண்டலத்திற்கும் வருவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. இந்த முறை பிடித்துள்ளதா? பிடித்துள்ளதா? இந்த சிஸ்டம் பிடித்துள்ளதா? நல்லது. பார்க்கின்ற பொழுது ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும் அவரவர் தரப்பிலிருந்து துணையாக இருப்பவர்களையும் அழைத்து வருகின்றார்கள். யக்ஞ சேவைக்கான வாய்ப்பும், பாபாவைச் சந்திப்பதற்கான வாய்ப்பும் கிடைக்கின்றது. இங்கு கிடைக்கின்ற யக்ஞ சேவை ஒரு சில தினங்கள் இருந்தாலும் இங்கு யக்ஞ சேவை செய்து விட்டு சென்ற பிறகு உங்கள் வாழ்வில் யக்ஞத்தினைப் பற்றிய ஆர்வம் அதிகமாக அனுபவ மாகிறது. எனவே ஈஸ்வரிய குடும்பம் என்றாலென்ன? இங்கே எவ்வளவு பெரிய குடும்பம் ஒன்று சேர்கிறது. மண்டலத்தில் கூட இவ்வளவு பெரிய குடும்பம் ஒன்று சேர முடியாது ஆனால் மதுபனிற்கு வரும்பொழுது பாபாவைச்

சந்திக்கும்பொழுது இவைகளோடு பரிவாரத்தின் சந்திப்பும் ஏற்படுகிறது. ஒருமுறை யக்கு சேவை செய்து விட்டால் எப்பொழுதுமே யக்ஞும் கண்ணுக்குள் வந்துக் கொண்டே இருக்கிறது. பார்க்கின்ற பொருள், கேட்கின்ற விசயம் இவற்றிற்கிடையே வேறுபாடு பிடிக்கிறதல்லவா? மதுபன் ஒவ்வொரு குழந்தையின் வீடாகும். சேவைக்காக வித விதமான இடங்களுக்கு நீங்கள் அனுப்பப்பட்டுள்ளீர்கள். ஏனென்றால் உலக சேவகன் ஆக வேண்டுமல்லவா? யாருமே புகார் செய்யக்கூடாது. எங்களுக்குத் தெரிய வில்லையே என்று எங்கள் தந்தை வந்திருக்கின்றார். ஆஸ்திக் கொடுத்து விட்டுச் சென்றிருக்கிறார், எங்களுக்குத் தெரியவே இல்லையே! இப்படி புகார் வரக்கூடாது எனவே பாப்தாதா ஒவ்வொரு சமயமும், சொல்வதுதான்! அக்கம், பக்கம் உள்ளவர்கள் கிராமம் கிராமமாக ஏரியா ஏரியாவாக எல்லா இடங்களிலும் கண்டிப்பாக செய்தியைக் கொடுங்கள். உங்களுடைய தந்தை வந்து விட்டார். அவர்கள் ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி, அது அவர்களுடைய பாக்கியம் ஆனால் நீங்கள் செய்தி தரவில்லையே என்று யாரும் புகார் செய்யக்கூடாது; செய்தி தருவது உங்களுடைய வேலை. அதை ஏற்றுக் கொள்வது பாக்கியத்தை ஏற்படுத்திக்கொள்வது அவர்களுடைய கையில் உள்ளது ஆனால் உங்கள் மீது எந்த புகாரும் வந்து விடக்கூடாது. மிக்க நல்லது. மகாராஷ்டிராவில் சேவையை நன்றாக விரிவுபடுத்தி யுள்ளீர்கள். இதற்காக பாப்தாதா ஆசிரியைகளுக்கும், சேவை செய்தவர்களுக்கும் விசேஷமாக வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். எப்படி பெயரோ அப்படியே வேலையும் செய்துள்ளீர்கள். விஸ்தாரம் செய்துள்ளீர்கள். மேலும் புதுப்புது திட்டங்கள், இப்பவும் டெல்லியைச் சார்ந்தவர்கள் திட்டம் செய்துள்ளார்கள். பாபாதான் சொல்லியிருக்கின்றார். அவர்கள் அதனை நடைமுறையில் கொண்டுவருகிறார்கள். மகாரஷ்டிராவிலும் கூட ஏதேனும் ஒரு புதிய திட்டம், அதையே செய்யக்கூடாது ஆனால் ஏதேனும் புதிய வடிவத்தில் சேவைக்கான திட்டம் வகுத்து செயல் படுங்கள். அதன் மூலமாக நாலாபுறமும் தந்தை வந்து விட்டார் என்ற செய்தி பரவட்டும். மகாராஷ்டிராவில் செய்தி பரவிக் கொண்டுதான் இருக்கிறது ஆனால் நான்கு திசைகளிலும் பரப்புவதற்காக ஏதேனும் ஒரு புது திட்டம் தீட்டுங்கள். இதன் மூலம் பல்வேறு தேசங்களிலும் உங்கள் மூலமாக சேவைக்கான இந்த செய்திகள் செல்லட்டும். நன்றாக

இருக்கிறது. சேவையில் சதா ஈடுபட்டுக் கொண்டிருப்பது பிஸியாக இருப்பது என்றாலே மாயாவை வெற்றி அடைவது என்பதாகும். எனவே பாப்தாதா மகாராஷ்டிரா குறித்து மகிழ்ச்சி அடைகிறார். ஆசிரியைகளுக்கும் மகிழ்ச்சிதானே! நல்லது.

இரட்டை அயல்நாட்டைச் சேர்ந்த சகோதர சகோதரிகள்: இரட்டை அயல்நாட்டினர் என்று கேட்கும்பொழுது எல்லோர் மனதிலும் உளமாற அன்பு ஏற்படுகிறது. பிராமண குடும்பம் முழுவதும் அன்பின் அலைகள் பரவிக் கொண்டே இருக்கிறது. எவ்வளவுதான் தூரத்திலி ருந்தாலும் அந்த தூரத்தினை உள்ளத்தின் அன்பால் வெகு அருகாமையில் கொண்டு வந்து விடுகிறார்கள். இதுதான் இரட்டை அயல்நாட்டினரின் விசேஷ குணமாகும். சேவையில் விரிவடைந்துக் கொண்டே செல்கிறார்கள். இந்த செய்திகளையும் பாப்தாதா கேட்டுக் கொண்டே இருக்கிறார். இப்பொழுதும் எந்த ஒரு குழுவும் நின்றுவிடக்கூடாது, செய்தி கிடைக்கவே இல்லையே என்று புகார் வந்து விடக்கூடாது. இப்பொழுது பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். அயல்நாட்டவர்கள் இந்தியாவுடன் இணைந்து நாலாபுறங்களிலும் செய்தியைத் தருவதை நடைமுறையில் செயல்படுத்தி வந்துக் கொண்டிருக்கின்றார்கள். எந்த தர்மமும். (மதம்) செய்தி கிடைக்காமல் இருந்து விடக்கூடாது. செய்தி தர வேண்டும் அயல்நாட்டு சேவை ஆரம்பத்திலி ருந்தே வாயு மண்டலத்தில் பரவுவதற்கான சாதனமும் உள்ளது. ஆரம்பத்திலேயே அனைவரும் ஒரே மேடையில், ஒரே சமயத்தில் ஒன்றாக அமர்ந்திருந்தார்கள். (1954-ல் அகில உலக மத சம்மேளனம் ஜப்பான் - தாதிஜி கலந்து கொண்டார்) கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும், வித விதமான மதத்தைச் சேர்ந்தவர்களும் அனைவருமே ஒரே மேடையில் ஒன்றாக அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது இவர்கள் அனைவருக்கும் தந்தை என்ற விசயம் வெளிப்படையாகத் தென்பட்டது. எனவே யாருமே நின்றுவிடக்கூடாது. பாரதத்திலும் அயல்நாட்டிலும் கிளைகளாக இருந்தாலும் சரி ஆனால் கண்டிப்பாக செய்தி சென்று சேர வேண்டும். ஏனென்றால் இப்பொழுது நேரமும் எல்லோருடைய புத்தியையும் சிறிது மாற்றிக் கொண்டிருக்கின்றது. துக்கம், அசாந்தியின் சாயல் அயல்நாட்டிலும் அதிகமாகப் பரவிக் கொண்டிருக்கின்றது. பாரதத்தில் இருக்கவே இருக்கிறது. எனவே இப்பொழுது கேட்க வேண்டும் என்ற ஆர்வம்

அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இப்பொழுதெல்லாம் பாருங்கள் நீங்கள் நிகழ்ச்சிக்காக அழைப்பிதழ் தருகின்றீர்கள். அப்பொழுது வருபவர்களின் கூட்டத்தால் மண்டபமே நிறைந்து விடுகின்றது; பின்னால் வருபவர்களுக்கு இடமே இருப்பதில்லை. அப்படியென்றால் மக்களின் ஆர்வம் அதிகமாகிக் கொண்டிருக்கின்றது அல்லவா? எனவே நன்றாக சேவையை விரிவுப்படுத்துங்கள். வாய்ப்புகளும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அயல்நாட்டுக் குழந்தைகளுக்கு சேவைக்கான வனக்கம் உற்சாகம் அதிகமாகவே உள்ளது. இது நாளுக்கு நாள் தென்படுகிறது ஆனால் பாபா சொல்கின்றார்: கிராமத்திலிருந்து வந்தாலும் சரி, அயல்நாட்டிலிருந்து வந்தாலும் சரி, எந்த இடத்திலிருந்து வந்தாலும் சரி எல்லோருக்கும் பாபா சொல்வது ஒன்றுதான். சேவை மிக நன்றாக செய்யுங்கள், நேரம் எப்பொழுது வேண்டுமானாலும் மாறி விடலாம், சேவை செய்ய விரும்பினாலும் செய்ய முடியாத நேரமும் வந்து விடும். எனவே என்ன செய்ய வேண்டுமோ இப்பொழுதே செய்யுங்கள். எப்பொழுதாவது, என்று விட வேண்டாம். இப்பொழுதே பாப்தாதா எப்பொழுதுமே சொல்கின்றார் நாளை என்று விட்டுவிடக்கூடாது. இன்று என்று கூட வேண்டாம். இப்பொழுதே! ஏனென்றால் சமயம் மற்றும் ஐந்து தத்துவங்கள் பாபாவிடம் வருகின்றன. எங்களுக்குச் சொல்லுங்கள் எதுவரையில் இந்த துக்கம் நடைபெறும். இயற்கை, அதுவே துக்கமடைந்துக் கொண்டிருக்கிறது என்றால் என்ன செய்வது? மனித ஆத்மாக்களுக்கும் துக்கம் தானே தரும். எனவே இங்கு வந்துள்ள அனைவரும் இந்த சங்கல்பம் வையுங்கள்! எப்படி பிராமண வாழ்க்கை மிக அவசியமானதோ அப்படியே சமயத்திற்கேற்ப ஒவ்வொருவருக்கும் சேவையும் மிக அவசியமானதாகும். செய்யுங்கள், பிறரையும் செய்ய வையுங்கள். இரட்டை அயல்நாட்டவரைப் பார்த்து முழு பரிவாரத்திற்கும் மகிழ்ச்சி உங்களுக்கும் மகிழ்ச்சிதான் பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகிறார். மற்றபடி பாப்தாதா கொடுத்துள்ள வீட்டுப்பாடம் மனதை வென்று உலகை வெல்லுங்கள் என்பதை செய்தே ஆக வேண்டும். உங்களுடைய மகிமைதான் அது! அதைத் திரும்பச் செய்ய வேண்டும். நல்லது.

**கல்கத்தாவைச் சார்ந்த சகோர சகோதரிகள் மலர் அலங்காரம் செய்துள்ளார்கள்:** நல்லது, முயற்சி அதிகம் செய்ய வேண்டி. உள்ளது

ஆனால் இந்த முயற்சி உங்களுடைய உள்ளத்தில் இருக்கின்ற அன்பினை மலர் அலங்காரத்தின் மூலம் வெளிப்படையாக காண்பிக்கின்றது. கைகளால் செய்திருந்தாலும் புருஷார்த்தத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்திருந்தாலும் எப்படி செய்திருந்தாலும் சரி, முயற்சிக்கான பலமும், பலனும் கண்டிப்பாக கிடைக்கிறது. எனவே மிக மிக அதிகமான அன்பினை பாப்தாதா முக்கியமாக கல்கத்தாவைச் சார்ந்தவர்களுக்காக கொடுத்துக் கொண்டிருக்கின்றார். ஏனென்றால் பிரம்மாபாபாவில் பிர வேசமானதும் கல்கத்தாவில் இருக்கும்போதுதான்! எனவே கல்கத்தாவைச் சார்ந்தவர்கள் தான் நிமித்தமாக உள்ளார்கள். அன்பிற்கான கைமாறு செலுத்துவதற்காக. நன்றாக அன்போடு செய்கின்றீர்கள் அதற்கு வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள். உங்கள் அனைவருக்கும் கூட பிடித்திருக்கிறது அல்லவா? மாற்றம் வேண்டுமல்லவா இந்த மலர் அலங்காரம் அன்பினை வெளிமுகமாகக் காண்பிக்கின்றது. நல்லது நீங்கள் எதிரில் உள்ள குழந்தைகள், தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் பாப்தாதா கேள்விப்படுகிறார். இப்பொழுது நாலாபுறங்களிலும் இந்த முயற்சி செய்கின்றார்கள். ஒவ்வொரு தேசத்திலும் சென்டரிலிருந்து கொண்டே பார்க்கின்றார்கள், கேட்கின்றார்கள் இரவு எத்தனை மணி நேரமானாலும் பார்க்கின்றார்கள். இந்த அறிவியல் சாதனம் உங்களுக்காகத்தான் உள்ளது. உங்களுக்கு அதிகமான லாபம் கிடைக்கின்றது. அப்படியே அறிவியல் மூலமாக விநாசமே வந்தாலும் உங்களுடைய ராஜ்யத் திற்காகத்தான் வருகிறது. நாலாபுறமும் உள்ள அன்பான குழந்தைகளுக்கு விசேஷமான பிரம்மாபாபாவின் அன்பு நினைவுகள் உள்ளத்தின் பிரியமான குழந்தைகள், உள்ளப்பூர்வமான அன்பினை சுவீகாரம் செய்யுங்கள்!!

தாதிகளுடன்: பாக்கியமானது சேவையின்றி இருக்க விடுவதில்லை. யாருக்கு எவ்வளவு பாக்கியம் உள்ளதோ அந்த பாக்கியம் அவரைத்தான் அழைத்துச் செல்கிறது. பாக்கியம் தானே! நல்லது இப்போதைய சமயத்தில் பாக்கியம் உள்ளவர்களையெல்லாம் கொண்டு வருகிறது. பாபா சொல்லியிருக்கிறார் அல்லவா? நேரம் எதிர்பாராத விதமாக எது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் மாறும். நேரம் ஏதேனும் ஒரு ஆத்மாக்களை எழுப்பிக் கொண்டே இருக்கும். மிக்க நல்லது.

பரதாதியுடன் (லௌகீக மகளுடன் பாபா பேசிக் கொண்டிருக்கின்றார்): இப்பொழுது நீங்கள் பாபாவைப்போலவே மாறுகின்றவர்கள்தான். இப்பொழுது சேவையை ஆரம்பிப்பீர்களா இவரை சேவை செய்ய வையுங்கள், பிஸியாக வையுங்கள், எவ்வளவு பேர் வருகிறார்கள் அவர்களில் யாருக்காவது அனுபவம் சொல்லிக் கொண்டே இருக்கட்டும். சேவை செய்து கொண்டே இருக்கட்டும். மிக்க நல்லது!

நிர்மலா தீதியுடன்: (உடல் நிலை அவ்வப்போது மாறுகிறது) புரிந்து கொண்டீர்களா ஏன் இப்படி ஆகின்றது என்று. காரணத்தைப் புரிந்து கொண்டு அந்த காரணத்தை வர விடாதீர்கள். நீங்கள் ஞானி ஆத்மா அல்லவா? தெரியும் அல்லவா? அதைத் தெரிந்து கொண்டு அதை அகற்றி விடுங்கள். வரவிடாதீர்கள்.

மூன்று சகோதரர்களுடன்: பாண்டவர்களை சந்தித்துக் கொண்டிருக்கின்றீர்கள் இது நன்றாக உள்ளது. உங்கள் மூவருக்கும் சேவையில் கவனம், புது புது திட்டங்கள்! வேறு என்ன சாதனம் உள்ளது. அதனால் வெகுவிரைவில் அனைவருக்கும் எப்பபடியாவது ஒரு வகையில் செய்தி கிடைக்காமல் நின்று போகாத வண்ணம் செய்தி பரவிக் கொண்டிருக்க வேண்டும். அதற்கான திட்டம் போடுங்கள். இப்பொழுது இருக்கும் சென்டர்களும், மண்டலத்தினரும் செய்கிறார்கள். உங்களுக்கும் புத்தி வேலை செய்ய வேண்டும். எந்த புதுமையைக் கொண்டு வரலாம் சேவையில். அதோடு மட்டுமல்லாமல் இப்பொழுது நடந்துக் கொண்டிருக்கும் முழு யக்ஞம், அதையும் நீங்கள் இடை இடையே வலம் வர வேண்டும். அனைவருக்கும் சேவைக்கான ஊக்கம் உற்சாகத்தை ஏற்படுத்துங்கள். சில மண்டலங்களில் சேவை செய்து கொண்டுதான் இருக்கின்றார்கள். சில இடங்களில் ஒருபொழுதும் பெரிய நிகழ்ச்சிகள் செய்வதில்லை; அவர்களுக்கும் உற்சாகத்தை ஏற்படுத்தி செய்யவையுங்கள். ஏனென்றால் சந்திப்பதற்கு முன்பு இங்கேயே அதற்கான திட்டத்தை உருவாக்குங்கள். பிறகு ஆங்காங்கே, அவரவர் தனக்கு அருகே உள்ள இடங்களைச் சுற்றி வாருங்கள். சேவை செய்யுங்கள். அர்த்தத்தை புரிந்துகொள்ளுங்கள். சேவைக்கான பொறுப்பை எடுத்து நீங்கள் செய்ய வைக்க வேண்டும். செய்ய வைப்பதோடு மட்டுமல்லாமல் செய்யவும் வேண்டும். சரிதானே! உங்களுடைய சேவைக்கான திட்டம் சொல்லப்பட்டது. சரிதான்.

நிமித்தமாகியுள்ளீர்கள் வேறு யாரும் வருவதில்லை; நீங்கள் தானே வருகின்றீர்கள். நிமித்தமாக இருப்பதால் நிமித்தம் என்பதை தாரணையும் செய்து பிறருக்கும் கற்றுக்கொடுங்கள். அன்பும் கொடுங்கள். அன்பு என்பது சாதாரண அன்பு கிடையாது; தேவைப்பட்டால் மட்டும் அன்பாகச் செய்ய வைப்பது, அதுவும் ஒருவிதமான அன்புதான் ஆனால் அப்படிப்பட்ட அன்பு கிடையாது. அவ்வாறே நிமித்தமாக இருங்கள் சரிதானே!

(ரமேஷ் சகோதரருடன்): உடல் நலமாகி விடும். அதிகமாக சிந்திக்க வேண்டாம். நடப்பதைப் பற்றி ஒரு நொடியில் யோசனை செய்து முடித்து விடுங்கள். இது நடக்க வேண்டும், அது நடக்க வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டே இருக்காதீர்கள். ஒரு நொடியில் திட்டம் தீட்டுங்கள். இப்பொழுது சொன்னது போல ஒவ்வொரு விசயத்திலும் நேரத்தைக் குறைவாக செலவு செய்யுங்கள். குறைந்த நேரத்திலேயே முடிவு எடுங்கள். ஏனென்றால் நிகழ்காலத்தில் நேரமும் மதிப்பு வாய்ந்தது ஒவ்வொரு பிராமணரும் மதிப்பு வாய்ந்தவரே!

ஆப்பிரிக்காவில் ரிட்டீரீட் சென்டர் அமைக்கப்படுகிறது: அதைப் பற்றிய வரைபடம் பாப்தாதாவிற்குக் காட்டப்படுகிறது. நிமித்தமாக இருக்கின்ற அனைத்துக் குழந்தைகளும் ஊக்கம் உற்சாகம் இங்குவரையிலும் வந்துசேருகிறது. பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். எவ்வளவு சென்டர் அதிகமாகுமோ அவ்வளவு பிரிந்துப்போன குழந்தைகளும் தனது பாக்கியத்தை வந்து எடுக்கின்றார்கள். எனவே நீங்கள் திறப்பு விழா செய்வதில்லை. அனைத்துக் குழந்தை களின் பாக்கியத்தை திறந்துவைப்பதில் நிமித்தமாக இருக்கின்றீர்கள்.

ச-ரி. அன்சாவுடன்: நீங்கள் எழுதிய செய்தி கிடைத்தது. இப்பொழுது இன்று என்ன வேலை கொடுக்கப்பட்டதோ, எவ்வளவு நினைக்க வேண்டும், என்ன நினைக்க வேண்டும். இதில் நம்பர்-1 ஆக வர வேண்டும்.

ஐதராபாத் சாந்தி சரோவரின் கோர் கமிட்டி மெம்பர்களுடன்: நீங்கள் அனைவரும் சேவைக்காக நிமித்தமாக உள்ளீர்கள்; இந்த சேவை விஷ்வ சேவை ஐதராபத்திற்கு மட்டுமல்ல; ஆனால் உலகிற்கான

சேவை! உலக சேவை செய்வதால் ஆத்மாவில் குஷி ஏற்படுகின்றது. ஏனென்றால் புண்ணிய கர்மம் செய்கின்றீர்கள். எங்கு புண்ணியம் இருக்கின்றதோ அங்கு ஆசீர்வாதம் கிடைக்கின்றது. பாப்தாதாவிற்கு செய்தி கிடைத்தது. இது அனைத்து சேவைக்கும் நிமித்தமாக இருப்பது மிக்க நல்லது. செய்து கொண்டே இருங்கள்; ஆசீர்வாதம் எடுத்துக் கொண்டே இருங்கள். ஏனென்றால் ஆசீர்வாதம் கிடைப்பது இந்த செயலுக்காக மிகப் பெரிய அளவில் சூட்சுமமான பிராப்திகள் கிடைக்கிறது. எனவே யாரெல்லாம் எங்கிருந்து சேவை செய்தாலும், சேவை என்று நினைக்காதீர்கள். அதனால் தன் புண்ணியத்தை சேமிக்கின்றீர்கள். புண்ணியம் சேமிப்பாவதால் தானாகவே உங்களுடைய சேவையின் பாவனைக்கான பலமும் கிடைக்கிறது. பலனும் கிடைக்கின்றது. எனவே குஷி குஷியுடன் வர வேற்பு செய்து கொண்டே இருங்கள். அந்த ஆத்மாக்கள் மீது சுப பாவனை வைத்துக் கொண்டே இருங்கள். வருபவர்கள் எல்லாம் மனம் நிறைந்து செல்லட்டும். இப்படி சுப பாவனை நல் ஆசை நல்விருப்பங்களுடன் சேவையை மென்மேலும் முன்னேற்றிக் கொண்டே இருங்கள். முன்னேறுங்கள் முன்னேற வைத்துக் கொண்டே இருங்கள். அப்பொழுது வெற்றி உங்களுக்கு பிறப்புரிமையாக கிடைத்துக் கொண்டே இருக்கும். நல்லாசை மற்றும் நல்விருப்பங்களுடன் சேவை செய்தால் அந்த சேவையில் பலம் கிடைக்கிறது. மிக்க நல்லது யாரெல்லாம் சேவை செய்தீர்களோ பாப்தாதாவின் யக்ஞ சேவை செய்கிறீர்கள். யக்ஞ சேவை செய்வதால் அதிக புண்ணியம் கிடைக்கிறது மிக்க நல்லது. முன்னேறுங்கள். பிறரையும் முன்னேற வைத்துக் கொண்டே செல்லுங்கள். நல்லது. யாரெல்லாம் எங்கிருந்தாலும் நல்லவர்களே முன்னேறுங்கள் முன்னேற்றிக் கொண்டே இருங்கள்.

**விடைபெறும் நேரம்:** பாடல் பாடப்பட்டுள்ளது. எங்களை விட்டுச் செல்லாதீர்கள் எங்கள் மனம் இன்னும் நிறைய வில்லை. மனம் ஒருபொழுதும் நிறைவடையாது. சதா கூடவே இருக்கின்றார். கூடவே இருப்பார். கூடவே செல்வார். (84-பிறவிகளும் பாபாவுடனேயே இருப்பீர்கள், இருக்க வேண்டும்) நல்லது. பிரம்மாபாபா சார்பாக அனைத்துக் குழந்தைகளுக்கும் மிக மிக அன்புகள் (பாபா உங்களுக்கு விட்டுச் செல்ல மனம் வருகிறதா?) டிராமாவில் உள்ளது. நல்லது.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 02.02.2011 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## தனது பாக்கியம் மற்றும் பிராப்தியை நினைவில் கொண்டு சதா புன்சிரிப்போடும், திருப்தியோடும் வாழுங்கள், திருஷ்டி (பார்வை) விருத்தி (உள்ளுணர்வு) மற்றும் பிரவிருத்தி (வாழ்க்கை) ஆகியவற்றின் மூலம் திருப்தியை அனுபவம் செய்வியுங்கள்!

இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் பரமாத்மாவின் அன்பின் காரணமாக இங்கே வந்துள்ளனர். ஆக, இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியின் பாக்கிய ரேகையைப் பார்த்துக் கொண்டிருந்தார். இப்படிப்பட்ட மற்றும் இவ்வளவு பெரிய பாக்கியம் முழு கல்பத்தில் எவருக்குமே கிடைக்கவில்லை. ஏனெனில் உங்களுக்கு பாக்கியத்தை வழங்கக்கூடியவர் சுயம் பாக்கிய வள்ளல் ஆவார். ஒவ்வொருவருடைய நெற்றியிலும் முதலில் பிரகாசிக்கும் நட்சத்திரத்தின் பாக்கியம் ஒளிர்விட்டுக் கொண்டிருக்கின்றது. வாயில் இனிமையான சொற்களின் ரேகையாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. உதடுகளில் மதுரமான புன்சிரிப்பின் ரேகையும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. உள்ளத்தில் திலாராம் பாபாவின் ஆழமான அன்பின் ரேகை பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. கைகளில் அனைத்து பொக்கிஷங்களின் சிரேஷ்டமான ரேகையைப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. பாதங்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் பலகோடி மடங்கின் (பாக்கியம்) ரேகை பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. இப்பொழுது சிந்தனை செய்து

பாருங்கள். இப்படிப்பட்ட பாக்கியம் எவருக்கும் ஏற்பட்டுள்ளது எனவே! உங்களது ஞாபகார்த்த சித்திரங்களிலும் கூட பாக்கியத்தினுடைய வர்ணனை செய்யப்பட்டுக் கொண்டிருக் கின்றது. இந்த பாக்கியத்தை சுயம் பாக்கியத்தின் வள்ளல் ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்படுத்தியுள்ளார்.

பாப்தாதா, ஒவ்வொரு குழந்தையின் பாக்கியத்தைப்பார்த்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார் ஆஹா. எனது குழந்தைகளே ஆஹா! மேலும் இந்த பாக்கியம் இந்த சங்கமயுகத்தில் மட்டுமே கிடைக்கிறது மற்றும் தொடர்கிறது. சங்கமயுகத்தின் சுகம் அனைத்து யுகங்களை விட சிரேஷ்டமானது. சத்யுகத்தின் பாக்கியம் கூட சங்கமயுக புருஷார்த்தத்தின் பிராப்தியே ஆகும். எனவே சங்கமயுகத்தின் பிராப்தி சத்யுகத்தின் பிராப்தியை விட அதிகமாகும். உங்களது பாக்கியத்தில் மூழ்கிப்போய் விடுங்கள். என்ன நடந்தாலும் சரி, உங்களது பாக்கியத்தை நினைவில் கொண்டு வாருங்கள். அப்பொழுது என்ன வெளிப்படுகிறது? ஆஹா எனது பாக்கியமே பாக்கியம்! ஏனெனில் சுயம் பாக்கியத்தின் வள்ளல் உங்களது தந்தை ஆவார். ஆக பாக்கியத்தின் வள்ளல் மூலம் ஒவ்வொருவருக்கும் தங்களது பாக்கியம் கிடைத்துள்ளது, நாம் இவ்வளவு பாக்கியவான்கள் என்று அறிகிறீர்களா? எப்பொழுதாவதுதான் இவ்வாறு அறிகிறீர்களா? அல்லது சதா காலமும் இந்த போதை இருக்கிறதா? உங்களுக்கு என்ன கிடைத்துள்ளது என்று உங்களைப்பார்த்து உலகத்தினர் கேட்கின்றனர். அதற்கு நீங்கள் என்ன பதில் சொல்கிறீர்கள்? எதை அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டீர்களா? கை தூக்குங்கள். நல்லது. அடைந்துள்ளீர்களா? உற்சாகத்துடன் கூறுகிறீர்கள். கிடைக்காதது என்று எந்த பொருளும் கிடையாது. அம்மாதிரி பெருமிதம் உண்டு அல்லவா? அது கிடைத்தது எவ்வாறு? பாபாவை அறிந்தீர்கள் என்றால், அவரை உங்களுடையவர் ஆக்கிக் கொண்டீர்கள் என்றால் பாக்கியம் கிடைத்து விட்டது. இந்த பாக்கியத்தை எவ்வளவு நினைவில் கொண்டு வருவீர்களோ அவ்வளவு மலர்ச்சியோடு இருப்பீர்கள். பாக்கியவான் ஆத்மாக்களுடைய முகம் எப்பொழுதுமே மலர்ச்சியாக இருக்கும். இருக்கும் என்பது கூட இல்லை இருக்கிறது அவர்களது பார்வை, அவர்களது உள்ளுணர்வு மற்றும் அவர்களது வாழ்க்கை சதா திருப்தியான ஆத்மாக் களாகி சுயம் தாங்களும் திருப்தியாக

இருப்பார்கள். மேலும் பிறரையும் திருப்திப்படுத்துவார்கள். ஆக உங்கள் அனைவருக்கும் திருப்தியுனுடைய அந்த போதை (பரவசம்) இருக்கிறதா?) ஏனென்றால் திருப்தியுனுடைய ஆதாரம் அனைத்து பிராப்திகளும் ஆகும். ஏதேனும் கிடைக்காத பிராப்தி (அப்பிராப்தி) அதிருப்தியின் ஆதாரம் ஆகும். ஆக நீங்கள் என்ன அனுபவம் செய்கிறீர்கள்? கிடைக்காதது என்று ஏதேனும் பொருள் இருக்கிறதா அல்லது அனைத்தும் பிராப்தியாகியுள்ளதா? பிராப்தியின் போதை இருக்கிறதா? இருக்கிறது, அது சதா காலமும் இருக்கிறதா அல்லது எப்பொழுதாவது தானா? பொதுவாக அய வேண்டியதை அடைந்து விட்டோம் என்று கூறுகிறீர்கள். ஆக, எங்கு அனைத்து பிராப்திகளும் இருக்கிறதோ அங்கு அதிருப்தியின் பெயரின் அடையாளம் கூட இருக்காது.

இன்று பாப்தாதர், உள்நாட்டு, வெளிநாடு எத்தனை நாடுகளிலிருந்து அனைத்து குழந்தை களும் வந்து சேர்ந்துள்ளனர் என்று பார்க்கின்றார் ஆனால் அனைவரையும் விட மிக அதிகமான தூரத்திலிருந்து வருபவர் யார்? அமெரிக்கர்கள் தூரத்திலிருந்து வந்திருக்கிறார்களா? அமெரிக்கர்களா? ஆனால் பாபா எங்கிருந்து வந்துள்ளார்? அமெரிக்காவோ இந்த உலகத்தில் தான் உள்ளது ஆனால் பாப்தாதா எங்கிருந்து வந்துள்ளார். பரந்தாமத்திலிருந்து பிரம்மாபாபா கூட சூட்சுமவதனத்திலிருந்து வந்துள்ளார். ஆக யார் மிக அதிகமான தூரத்திலி ருந்துவந்துள்ளார். அனைவரிலும் தூரத்திலிருந்து வந்திருப்பவர் யார்? இது தந்தை மற்றும் குழந்தைகளின் அன்பின் அடையாளம் ஆகும். என்னுடைய பாபா என்று நீங்கள் கூறினீர்கள் பதிலாக என்னுடைய குழந்தை என்று பாபா கூறினார். அந்த ஒரேயொருவரை அறிந்து கொண்டதனால் எவ்வளவு ஆஸ்தி கிடைத்து விட்டது. உலகத்தினர் சுகத்திற்காக, அமைதிக்காக தேடிக் கொண்டிருக்கின்றனர். எங்கு சாந்தி அமைதி கிடைக்கும், எங்கு சுகம் கிடைக்கும் ஆனால் உங்களின் வாழ்க்கையே சுகம், மற்றும் அமைதி நிறைந்ததாகி விட்டது. இப்பொழுது பாப்தாதா கூறுகிறார். பாப்தாதா என்ன விரும்புகிறார் என்று கேட்கின்றார். ஆக பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளிடமிருந்தும் இதையே விரும்புகின்றார். ஒவ்வொரு குழந்தையும் சதா சுயராஜ்ய அதிகாரியாகி விளங்கட்டும். எப்பொழுதாவது அல்ல (நிரந்தரமாக) ஏனெனில் இப்போதைய சுயராஜ்ய அதிகாரத்தின் வரதானத்தை பாப்தாதா இந்த சங்கமயுகத்தில்

முழுமையாகத் தந்துள்ளார். குறைவாக அல்ல, அவ்வப்போது அல்ல, நிரந்தரமாக ஆக யோசித்துப்பாருங்கள் சதா காலத்திற்கும் சுயராஜ்ய அதிகாரிகளாக ஆகியுள்ளீர்களா? ஏனெனில் பாப்தாதா கூறியுள்ளார்: இந்த அனைத்து கர்மேந்திரியங்கள், மனம், புத்தி சம்ஸ்காரத்திற்கும் கூட எஜமானர்கள் நீங்கள் மற்ற எல்லாவற்றிற்கும் எனது, என்ற வார்த்தையை உபயோகிக் கின்றீர்கள் நான் என்று கூறுவது இல்லை. எனது என்று தான் கூறுகிறீர்கள் ஆக மனம், புத்தி சம்ஸ்காரம் என்னுடையது என்றால் எனது என்பதின் மீது சதா அதிகாரம் உள்ளதல்லவா! இம்மாதிரி மனம், புத்தி, சம்ஸ்காரத்தின் மீது முழுமையான அதிகார நிலை வேண்டும். இதற்குத்தான் சுயராஜ்ய அதிகாரி என்று கூறப்படுகிறது. கட்டளையிட்டவுடன் அதன் பிரகாரம் அந்த காரியத்தை செய்வதற்கு நிமித்தமாகி விடுகின்றன ஆனால் இதற்கு போகும்பொழுதும் வரும்பொழுதும் காரியங்கள் செய்யும்பொழுதும் எஜமானன் நிலையின் போதை (பெருமிதம்) இருக்க வேண்டும். நிச்சயம் மற்றும் போதை ।

தற்பொழுது ஆத்மாக்களுக்கு மனதின் மூலமாகவும், சேவை செய்யக்கூடிய நேரமாகும். கூப்பாடுப் போட்டுக் கொண்டிருக்கின்றனர், எங்களது மூதாதையர்களே ஹே எங்களது மூதாதையர்களே. சிறிதாவது சுகம், சாந்தியின் கிரணங்களை எங்களுக்குத்தாருங்கள். ஆக, மூதாதையர்களே, துக்கமானவர்களின் கூப்பாடு உங்களுக்குக் கேட்டுக் கொண்டிருக்கின்றது அல்லவா! பாப்தாதா சைகையாக கூறியுள்ளார், எம்மாதிரி ஆபத்தும் கூட திடீரென வரும். அதற்கு ஒரு வினாடியில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இந்த பயிற்சியும் செய்து கொண்டிருக்கின்றீர்கள். ஏனெனில் அந்த சமயம் புருஷார்த்தத்தின் (முயற்சியின்) சமயமாக இருக்காது, அப்பியாசம் செய்து பின்னர் பிரயோகிக்க நேரம் இருக்காது. வைப்பீர்கள் முற்றுப்புள்ளி அது ஆச்சரியக்குறியாகி விடும். எனவே புருஷார்த்தம் செய்வதற்கான நேரம் இப்பொழுதுதான் கிடைத்துள்ளது. அந்த நேரம் நடைமுறையில் கொண்டுவரும் நேரமாகும்.- ஆக இப்பொழுதிலிருந்தே அந்தப்பயிற்சியை செய்து கொண்டும் இருக்கிறீர்கள். பாப்தாதா முடிவை (ரிசல்ட்) பார்த்துக் கொண்டிருக்கின்றார். கவனமாக இருக்கிறீர்கள், செய்து கொண்டும் இருக்கிறீர்கள் ஆனால் மேலும் கவனத்தை கீழே கோடிட்டு முக்கியத்துவம் தாருங்கள். புருஷார்த்தம்

செய்வது எவ்வளவு எளிது என்று அப்பொழுது பாருங்கள். நானும் ஆத்மா முற்றுப்புள்ளி (பிந்தி) வைக்க வேண்டும் ஆனால் வைக்க வேண்டியது கவனம் மட்டுமே!

பாப்தாதா விசேஷமாக குழந்தைகளுக்கு பரிசினைக் கொடுக்கிறார். குழந்தைகளே! நான் சதா உங்கள் கூடவே இருக்கின்றேன்! பாபா என்று சொன்னவுடன் குழந்தைகளுக்காக பாபா சதா ஆஜராகி விடுகிறார். எனவேதான் கூப்பிட்டவுடன் ஆஜர் (ஆஜீர் ஆஜர்) என்று கூறப்படுகிறது. அதற்காக சர்வவியாபி அல்ல. குழந்தைகளின் கூப்பிட்டக் குரலுக்கு உடனே ஆஜர். ஆக சதா வெற்றியாளர்கள் ஆக வேண்டும். எங்கு பகவான் கூடவே இருக்கிறாரோ அங்கு வெற்றியடைவது கஷ்டமா? வெற்றி என்பது உங்களது பிறப்புரிமை எனது பாபா என்று சொன்னவுடன் வெற்றி இருக்கவே இருக்கிறது. எனவே சதா வெற்றியாளர்கள் ஆக வேண்டும். யார் கூடவே இருக்கின்றாரோ அவருக்கு மிகவும் எளிதாகும் கஷ்டமே கிடையாது. எங்கு பகவான் இருக்கிறாரோ அங்கு வெற்றி நிச்சயம் உண்டு. ஆக இன்று பாப்தாதா அனைத்துக் குழந்தைகளையும் பார்த்து மகிழ்ச்சி அடைந்துக் கொண்டிருக்கின்றார், எவ்வளவு சிநேகத்தோடு எந்தெந்த சாதனங்கள் மூலம் வந்துள்ளனர் குழந்தைகள்? ரயில் மூலமா அல்லது ஆகாய விமானத்தின் மூலமா? அதுவெல்லாம் சரீரத்தின் மூலமாக வந்து சேர்வதற்கு ஆனால் உள்ளப்பூர்வமாக அன்பு அல்லவா உங்களை இங்கு கொண்டுவந்துள்ளது. தைரியம் உங்களது, உதவி பாபாவினுடையது இருக்கவே இருக்கிறது. இப்பொழுது பாப்தாதா, ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு கர்மத்திலும் தனது சுயராஜ்ய இருக்கையில் ஸ்திரமாக இருக்க வேண்டும் என்பதையே விரும்புகிறார் நல்லது

இன்று முதல் முறையாக யார் வந்திருக்கின்றார்களோ அவர்களெல்லாம் கை தூக்குங்கள் எழுந்து நில்லுங்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் நல்லது! எப்படி முதன் முதலாக வந்திருக் கின்றீர்களோ அவ்வாறே முதல் நம்பரில் செல்ல வேண்டும் தானே? யார் தைரியம் கொள்கிறார்களோ அவர்களுக்கு பாப்தாதாவின் உதவியும் கிடைக்கும் என்பது பாப்தாதாவின் வரதானம் ஆகும். மேலும் தைரியத்தின் மூலம் எவ்வளவு முன்னேறிச் செல்ல விரும்புகின்றீர் களோ அந்த வாய்ப்பைப் பெற முடியும் ஏனென்றால் மிகவும் காலதாமதமாகி விட்டது என்ற

பலகை (டு லேட்) இன்னும் போடப்படவில்லை. நினைவில் இருங்கள் மேலும் என்ன பிராப்தம் கிடைத்துள்ளதோ அவைகளை பிறருக்கும் தந்து சேவை செய்யுங்கள். எவ்வளவு: சேவை செய்வீர்களோ அவ்வளவு ஆசீர்வாதம் கிடைக்கும். மேலும் அந்த ஆசீர்வாதங்கள் நீங்கள் முன்னேறுவதற்கு உதவும். செய்தியைக் கொடுத்துக் கொண்டே போங்கள். மற்றபடி அவர்களுடைய அதிர்ஷ்டம்! ஆனால் நீங்கள் செய்தியைக் கொடுங்கள். உங்களின் புண்ணிய கணக்கை சேமியுங்கள். அந்த புண்ணியம் உங்களை முன்னேற்றிக் கொண்டே இருக்கும். நல்லது!

இவர் (ஒரு சகோதரர்) கராச்சியிலிருந்து வந்துள்ளாரா? ஆரம்ப கால இடத்திலிருந்து வந்துள்ளீர்கள். அங்குதான் ஸ்தாபனையே நிகழ்ந்தது. அந்த முதல் இடத்திலிருந்து வந்துள்ளீர்கள். சதா ஆதி ரத்தினமாகி என்ன அனுபவம் செய்துள்ளீர்களோ சதா குஷியாக இருப்பதற்கு சதா இரட்டை ஒளியாக இருப்பதற்கு, அதையே பிறருக்கும் அனுபவம் செய்வித்துக் கொண்டே இருங்கள். இதுவே பாப்தாதாவின் வரதானம் ஆகும். மற்றபடி நிச்சயம் என்பது மிக உறுதியாக இருப்பதை பாப்தாதா பார்த்தார். இன்னும் முன்னேறிச் செல்ல முடியும். னேறிக் கொண்டும் இருக்கின்றீர்கள். எவ்வளவு விருப்பமோ அவ்வளவு முன்னேறிச் செல்வதற்கான வரதானத்தையும் எடுத்துக் கொள்ள முடியும். நல்லது. இவரும் கூடவே வந்துள்ளாரா? குஷியாக இருக்கிறீர்கள் அல்லவா! குஷியை இங்கிருந்தும் எடுத்துச் செல்லுங்கள். ஒருபொழுதும் குறையாத அளவிற்கு குஷியை எடுத்துச் செல்லுங்கள். உங்களது குஷியைப் பார்த்து பிறரும் குஷி அடைவார்கள். ஆக அங்கு போய் எதைக் கொடுக்கப்போகிறீர்கள். எங்காவது போய்விட்டுத் திரும்பும்போது எதாவது கொடுக்கிறார்கள் அல்லவா நீங்கள் என்ன கொடுக்கப்போகிறீர்கள். குஷி, மகிழ்ச்சியை விநியோகியுங்கள். அழிவற்ற குஷி. யாருக்கு குஷி பிராப்தமாக கிடைக்குமோ அவர்களும் சதா காலத்திற்காக குஷியடைவார்கள். யாரெல்லாம் வருகிறார்களோ அவர்களைப் பார்த்து. பாபாவுக்கும் கூட குஷிதான். ஆக. நீங்களும் குஷியை எடுத்துக் கொண்டு செல்கின்றீர்கள். அவ்வளவு எடுத்துக் கொண்டு செல்லும் அளவு குஷியை சேமித்துள்ளீர்களா? சேமித்துள்ளர்கள் தானே? அப்படியென்றால் அங்கு போய் நன்கு விநியோகம் செய்யுங்கள்.

நீங்கள் போய் உங்கள் அனுபவத்தைக் கூறும்பொழுது நாங்கள் எங்கிருந்து வந்துள்ளோம் என்று கூறுவீர்கள்! குஷி நிறைந்த இடத்திலிருந்து வந்துள்ளோம், உங்களுக்கும் குஷியைக் கொண்டு வந்துள்ளோம் என்று கூறுங்கள். நல்லது. இப்பொழுதெல்லாம் நிறைய பேர் வந்துக் கொண்டிருக்கின்றார்கள், பாருங்கள். ஹாலில் பாதிக்கு மேல் முதல் முறையாக வந்துள்ளவர்கள் நிறைந்திருக்கின்றார்கள். நீங்கள் அனைவரும் முதன் முறையாக வந்துள்ளீர்கள். நல்லது மிகவும் நல்லது. பாப்தாதா முழு குடும்பத்துடன் நீங்கள் உங்களுடைய வீட்டில் வந்திருப்பதற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். எனது பாபா, என்பதை சதா நினைவில் கொள்ளுங்கள் அவ்வளவுதான் எனது பாபா என்பதை மறக்க வேண்டாம். ஏனெனில் பாபாவிடமிருந்துதான் ஆஸ்திக் கிடைக்கிறது. எது கிடைக்காத பொருளோ அது இப்போது கிடைக்கிறது நல்லது. அனைவரும் குஷியடைகிறார்கள், நமது சகோதரர்கள் தங்களது வீட்டிற்கு வந்துள்ளனர். கை தட்டுங்கள், நல்லது.

சேவையினுடைய முறை இந்த சமயம் ஈஸ்டன் ஜோன் (கிழக்கு மண்டலம்) அஸாம். ஒரிசா, வங்காளம், பீகார், நேபால், தமிழ்நாடு, மற்றும் பங்களா தேஷ் மொத்தம் **17,000** பேர் வந்துள்ளனர். முதலில் சென்டர்களில் இருப்பவர்கள் நில்லுங்கள். மற்றவர்களெல்லாம் அமருங்கள் மிகவும் நல்லது, இந்த மண்டலம் அனைத்திலும் மிகப் பெரிய மண்டலமாகும். நன்கு சேர்க்கக்கூடிய மண்டலம் அதுவும் குறைந்தது அல்ல. எனவே இப்பொழுது வந்துள்ள டீச்சர்கள் மற்றும் சென்டரில் வசிக்கக்கூடியவர்கள் வந்துள்ளனர், அவர்களுக்கு விசேஷமாக பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். சேவாதாரி தங்களது சைதன்யமான சித்திரங்களை கூடவே கொண்டுவந்துள்ளனர். பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். ஏனெனில் ஒவ்வொருவரும் அவரவர்களது இடத்தில் விருத்தி செய்வதற்காக மிக நல்ல லட்சியம் கொண்டுள்ளனர் என்று தெரிகிறது. நல்ல முயற்சி செய்துள்ளீர்கள். அந்த முயற்சியின் பலனும் கிடைத்துக் கொண்டிருக்கின்றது அதற்காக வாழ்த்துக்கள்! இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? பாப்தாதா ஏற்கனவே கூட கூறியுள்ளார். வாரிசு தரமான மற்றும் மைக் தரமான அவர்களுடைய பிரபாவம் உலக மக்கள்

மீது படுகின்ற மாதிரியான முக்கிய நபர்கள் இப்படிப்பட்ட மைக் மற்றும் வாரிசு ஆத்மாக்களை, மிகப் பெரிய மண்டலம் ஆயிற்றே நீங்கள் அந்தளவு அதிகமாகக் கொண்டு வாருங்கள். அவர்கள் எந்த வர்க்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி ஆனால் உங்களது மண்டலம் மிகப் பெரியது. ஆக மிகப் பெரிய மண்டலம் ஒன்றாக இணைந்து மிகப் பெரிய எண்ணிக்கையில் இவர்களை மதுபன் வீட்டிற்கு அழைத்து வர வேண்டும். உங்களுடைய மண்டலத்தின் பெயர் முன்னால் வரும் அளவிற்கு இப்பொழுது தயார் செய்யுங்கள். செய்து கொண்டுதான் இருப்பீர்கள். இதனை பாப்தாதாவும் அறிவார். யார் நிமித்தமாக இருக்கிறார்களோ அவர்கள் சேவையில்லாமல் இருக்க முடியாது ஆனால் இங்கு வரைக்கும் அழைத்து வரக்கூடிய அந்த ரிசல்ட்டை பாப்தாதா பார்க்க விரும்புகின்றார் ஆனால் நீங்களோ (டீச்சர்கள்) மிக நன்றாகவே சேவை செய்யக்கூடியவர்களாக இருக்கிறீர்கள் தான். ஏனெனில் பாப்தாதாவினுடைய பீடத்தின் எஜமானர்களாக ஆகி விட்டீர்கள். பாபா டீச்சர்களை (தனக்குச்சமமாக) குருபாய் என்று வர்ணிக்கிறார். ஆக எனது குருபாய்களே இப்பொழுது ஒவ்வொரு இடத்திலிருந்தும் இப்படிப்பட்டவர்கள் வர வேண்டும் சரிதானே நல்ல புருஷார்த்தம் செய்து கொண்டிருக்கின்றீர்கள் நல்லது! மேலும் வெற்றியும் கிடைக்க வேண்டும் அது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல ஏதேனும் பெரிய நிகழ்ச்சியைச் செய்யுங்கள். அதன் மூலம் தொடர்பு அதிகரிக்கட்டும். இன்றைய நாட்களில் பாப்தாதாவும் எந்த மண்டலம் சேவை செய்து கொண்டிருக்கிறதோ அதனுடைய ரிசல்ட்டைக் கேட்கிறார். எளிதில் விருத்தி அடைந்துக் கொண்டிருக்கிறது. மேலும் மைக்குகள் (வி.ஐ.பி ஆத்மாக்கள்) கூட தயாராகி கொண்டிருக்கின்றனர். எனவே இந்த மண்டலத்திலும் வெற்றி என்பது ஏற்கனவே உள்ளது. நல்லது.

இரட்டை அயல் நாட்டினர்: பாப்தாதாவிற்கு மிகவும் இது நன்றாக இருக்கிறது மதுபனில் வந்து (பலநாட்டினர்) சந்தித்துக் கொண்டிருக்கின்றனர், பாபாவோடு சந்திக்கின்றார்கள் மற்றும் சேவையினுடைய சமாச்சாரங்களை பரிமாறிக் கொள்கிறார்கள். இவர்களுடைய இந்த முறை பாப்தாதாவிற்கு மிகவும் நன்றாக இருக்கிறது. எவ்வளவு நாடுகளிலிருந்து வந்துள்ளனர். (76-நாடுகளிலிருந்து) இங்கு மதுபனில் வந்து எத்தனை தேசத்தினரோடு

வந்து சந்திக்கின்றீர்கள்? இந்தியாவின் பல பாகங்களை கணக்கிட்டால் அதுவே மிகப் பெரிய எண்ணிக்கை ஆகி விடும். ஆக உங்களைக் கண்டு இந்தியர்கள் மிக மகிழ்ச்சி அடைகின்றனர். மேலும் நீங்களும் இந்தியர்களைப் பார்த்து குஷி அடைகிறீர்கள். இருவருடைய சந்திப்பும் நன்றாக உள்ளது. உங்களுடைய சந்திப்பு என்றால் உற்சாகத்தை நிரப்பிக்கொள்வது மேலும் வேறெங்கும் இந்த மாதிரி மிகப் பெரிய ஒரு குடும்பம் கூடுவதை காண முடியாது, மதுபனில் தான் இவ்வளவு பெரிய குடும்பத்தை காண்கின்றீர்கள். ஆக உள்ளத்தில் என்ன எழுகிறது? ஆஹா பாபா ஆஹா எனது ஈஸ்வரி குடும்பம்! மேலும் பாப்தாதாவிற்கு எவ்வளவு குஷி ஏற்படு கின்றது. தனது குழந்தைகளைப் பார்த்து பொதுவாக பாப்தாதா அமிர்தவேளையில் அனைத்து தரப்பிற்கும் சென்று சுற்றிவருகின்றார். அவ்வாறு சுற்றி வருவது அவருக்கு என்ன பெரிய காரியமா? மேலும் பாப்தாதா கூறியுள்ளார், அதிகாலை நான்கு மணி சந்திப்பின் விசேம் இதுவும் கூட உண்டு, அதாவது நான்கு மணிக்கு பாப்தாதா அனைத்துக் குழந்தைகளுக்கும் வரதானத்தை வழங்குகின்றார். வரதானத்தை வழங்கும் பாகம் அமிர்தவேளையில் தான் உண்டு மிக விசேஷமாக! என்ன வரம் வேண்டுமோ அவைகளை பாப்தாதா கொடுத்து விடுகிறார். நீங்களே முயற்சி செய்து பாருங்கள் ஆனால் நீங்களும் கூட அந்நேரத்தில் வரதானங்களைப் பெறுவதற்காக விழிப்புடன் இருக்க வேண்டும் இல்லையென்று சொன்னால் பாபா சுற்றிப் பார்த்து விட்டு போய்விடுவார். நீங்கள் யோசித்துக் கொண்டிருக்க வேண்டும். எனவே அமிருத வேளையில் அதற்கான முக்கியத்துவத்தை எல்லோருக்கும் கொடுக்கின்றீர்கள் தான் ஆனால் இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டும். பாப்தாதா பார்த்தார், சமயம் அனுசாரம் சேவையும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. சேவையின் காரணமாக பாப்தாதாவிடமிருந்து வரதானத்தை அடைவதிலிருந்து விலகிப் போய் விடக்கூடாது. மற்றபடி இரட்டை வெளிநாட்டினர் நன்கு புருஷார்த்தம் செய்கின்றனர். இருப்பினும் கவனத்தை அதிகப்படுத்தி கீழ் கோடிடுங்கள். எப்படியாவது மதுபனை வந்து அடைந்து விடுகின்றீர்கள். இந்த விசேஷத்திற்காக பாப்தாதா அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். பாப்தாதா சம்ஸ்காரத்தின் மீது சைகை காட்டினார், (நினைவூட்டினார்) அதை நாம் செய்ய வேண்டுமென்றுதான் அனைவரும் எண்ணுகின்றனர். அதை செய்வதற்காக தினமும் அமிர்தவேளையில் ஒரு சுவமானை வைத்துக்

கொள்கின்றனர். அதன் கூடவே வேறு ஏதேனும் விதமான சம்ஸ்காரத்தின் மீதும் கவனம் வையுங்கள். இன்றைய தினத்தில் இந்த சம்ஸ்காரத்தின் மீது விசேஷமாக கவனம் கொடுக்க வேண்டும். பிறகு இரவில் பாப்தாதாவின் முன்னர் முழு நாளில் சார்ட்டை ஒப்படைக்கும்பொழுது அந்த சம்ஸ்காரத்தினுடைய ரிசல்ட்டை குறிப்பாக கூறுங்கள். அப்பொழுது அந்த குறிப்பிட்ட சம்ஸ்காரத்தின் மீது விசேஷ கவனம் செலுத்தியதாகி விடும். ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சம்ஸ்காரத்தின் மீது கவனம் வைப்பது என்றால் எப்படி பாபாவை நினைவு செய்தல் மீது கவனம் வைத்து சார்ட்டை ஒப்படைக்கின்றீர்களோ அதே போன்று இந்த சம்ஸ்காரத்தைப்பற்றிய கவனத்தின் ரிசல்ட்டையும் பாப்தாதாவிற்கு (இரவில்) ஒப்படையுங்கள். ஒருவேளை நீங்கள் விரும்புவதாவது: அந்த நாளில் உங்களுடைய ஏதேனும் ஒரு சம்ஸ்காரத்தை அழிப்பதற்கான காரியம் முடியவில்லை என்று சொன்னால் உங்களுக்கு நீங்களே பாபாவினுடைய வாழ்த்துக்களைக் கொடுத்துக் கொள்ளுங்கள். இந்த குறிப்பிட்ட சம்ஸ்காரத்தின் மீது இவ்வாறு தினமும் முயற்சி செய்து வரும்பொழுது அந்த சம்ஸ்காரம் உங்கள் வசமாகி விடும். எப்படி யோகத்தின் பொருட்டு சோதனை செய்கிறீர்களோ அவ்வாறே சம்ஸ்காரத்தின் பொருட்டு தினமும் ரிப்போர்ட் எப்பொழுதாவதுதான் வருவதில்லை. ஒருவேளை சோதனை ஏற்பட்டது என்றால், தினமும் வர முடிவதில்லை ஆனால் தினமும் தன்னை சோதிப்பது என்றிருந்தால் இந்த சுவனமானது (அட்டென்ஷன்) மன அழுத்தத்தை (டென்ஷன்) அகற்றி விடும். ஏனெனில் பாப்தாதா பல முறை பார்த்துள்ளார். வெளிநாட்டினரின் ஏதேனும் குழந்தை ஏதேனும் காரியத்தை ஆரம்பிக்கின்றது என்றால் மிக கவனமாக செயல்படுகிறார்கள். ஆக கவனம் கொடுப்பவரே முக்தியை அடைய முடியும். பாபாவினுடைய வரதானமும் அது தான் புரிந்ததா இப்பொழுது இதன் பின்னால் முனைந்து செயல்படுவீர்கள் தானே. தினமும் சோதனை செய்து வந்தீர்கள் என்று சொன்னால் சுயம் தானாகவே தொய்வடைந்து விடும். பாப்தாதாவும் விரும்புகின்றார் இந்த சம்ஸ்காரத்தின் பாடத்தில் நம்பர்-1 ஆகி விடுங்கள். எந்த சம்ஸ்காரத்தை விரும்புகிறீர்களோ அது மட்டுமே காரியத்தில் வரட்டும். போக போக ஆகி விடும்.

கவனத்தில் கொண்டு வந்துள்ளீர்கள் இல்லையா! அப்படியென்றால் ஆகி விடும் ஆனால் கவனத்தை நிச்சயமாக செலுத்த வேண்டும், அப்படியே ஒன்றும் ஆகி விடாது. கவனத்தை நிச்சயமாக செலுத்தித்தான் ஆக வேண்டும். கூட்டாக இருக்கும்போது மட்டுமே இந்த சம்ஸ்காரங்கள் வெளிப்படுகிறது ஏன்? உங்கள் சித்திரங்களைப் பார்த்து பூஜை செய்யக் கூடியவர்கள் உங்களது சம்ஸ்காரங்களை எவ்வளவு சிரேஷ்டமாக வர்ணித்துப் பாடிக் கொண்டிருக் கின்றார்கள். அந்த விதமாக நீங்கள் ஆகி இருக்கின்றீர்கள் எனவேதானே அவர்கள் வர்ணிக்கிறார்கள்! உங்களது தேவதா பட சித்திரங்களை வெளிக் கொண்டு வாருங்கள். அம்மாதி தேவதையாக ஆக வேண்டும் அல்லவா நல்லது மற்றபடி அனைத்து இரட்டை வெளி நாட்டினரும் புருஷார்த்தத்தில் வெற்றியின் அனுபவத்தை செய்து கொண்டுதான் வருகிறீர்கள் இல்லையா! அவ்வாறு அனுபவம் செய்து கொண்டிருப்பவர்கள் கை உயர்த்துங்கள் பார்ப்போம். ஆஹா கை என்னவோ மிக நன்றாக உயர்த்துகின்றனர். இதன் பின்னால் இப்பொழுது கவனம் செலுத்தியே ஆக வேண்டும் என்ற லட்சியத்தை மேற்கொள்ளுங்கள். இதில் கூட வெற்றி பெற்று முன்னால் வர வேண்டும். உங்களைப்பார்த்து மற்றவர்களுக்கு உற்சாகம் வர வேண்டும். ஏனெனில் நீங்கள் நிமித்தமானவர்கள் இல்லையா! மேலும் நிமித்தமானவாகளுக்கு பாப்தாதாவிடமிருந்து விசேஷமாக உதவியும் கிடைக்கிறது. மற்றபடி சென்டர்கள் எண்ணிக்கை அதிகமாகி ஆகிக் கொண்டிருப்பதைப் பார்த்து பாபாவுக்கு மிக மகிழ்ச்சி. புருஷார்த்தத்தின் மீது கவனம் உள்ளது ஆனால் மாற்றத்தை கொண்டு வருவதற்கு நிமித்தமானவர்கள் ஆகுங்கள். அப்பொழுது உங்களைப் பார்த்து பிறருக்கும் பரிவர்த்தனை சக்தியின் உற்சாகம் ஏற்படும். புருஷார்த்தத்தில் வரிசைக்கிரமம் இருக்கிறது தான்! அதை ஏற்கனவே புரிய வைக்கப்பட்டுள்ளது. தான், ஆனால் புருஷார்த்தத்தின் மீது கவனம் உள்ளது, அதை மேலும் அதிகரிக்க வேண்டும். மற்றபடி பாப்தாதாவின் தினசரி அன்பு நினைவுகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. வீட்டிலி ருந்தபடியே பாப்தாதாவினுடைய அன்பு நினைவுகள் கிடைப்பது ஒரு நாள் கூட தவறுவதில்லை ஆனால் தினமும் விதிப்பூர்வமாக முரளியைப் படிக்க வேண்டும். ஒரு நாள் கூட பாப்தாதா அன்பு நினைவைக் கூறுவதற்குத் தவறுவதில்லை. உங்களுக்கு அது கிடைத்துக் கொண்டிருக் கின்றது அல்லவா தினமும் அன்பு

நினைவுகள் கிடைக்கின்றன! எல்லோருக்கும் கிடைக் கின்றது அல்லவா? இது பாப்தாதாவினுடைய அன்பின் அடையாளம் ஆகும். முரளியைத் தவற விட்டால் அன்பு நினைவுகளும் உங்களுக்குக் கிடைக்காது. நீங்கள் வெறும் முரளியை மட்டும் தவற விட்டீர்கள் ஆனால் பாபாவின் அன்பு நினைவுகள் மற்றும் வரதானமும் கூட கிடைக்காமல் போய் விடும். முரளியாவது பிறகு படித்து விடுவீர்கள் ஆனால் எந்த சமயம் நேரம் நிச்சயிக்கப்பட்டுள்ளதோ (முரளி கிளாஸ்) பாப்தாதாவின் அன்பு நினைவுகளைப் பெறுவது அது தவறிவிடுகின்றது அல்லவா! உற்சாகம் இருக்கிறது அதனால் பாப்தாதாவிற்கு மகிழ்ச்சிதான் நல்லது. முரளியைத் தவற விடுகிறீர்களா முரளியைத் தவற விடுபவர்கள் யாராவது இருக்கிறீர்களா? வெளிநாட்டினர் யாராவது அப்படி இருக்கிறீர்களா? ஏதேனும் காரணத்தால் முரளியைத் தவற விடுபவார்கள் யாராவது இருக்கிறீர்களா? எவரும் தவறவிடுவதில்லை. ஒருவர் மட்டும் உயர்த்துகிறார். (அவரிடம் இனிமேல் ஒருபொழுதும் தவற விடக்கூடாது. முரளியை போன் மூலமாவது கேட்டறிய வேண்டும். படிக்க முடியவில்லையென்று சொன்னால் எப்படியாவது கேட்கவாவது செய்யுங்கள். எப்படியாவது ஆஜராகி விட வேண்டும். நல்லது! மற்றபடி சபையில் யார் வந்திருக்கின்றீர்களோ புதியவர்களாக இருக்கலாம் அல்லது பழையவர்களாக இருக்கலாம். ஒருபொழுதும் முரளியைத் தவற விடக்கூடாது என்பதை மிகமிக உறுதியாக. நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். ஏனெனில் பாபா தினமும் பரந்தாமத்திலிருந்து வந்து எவ்வளவு தூரத்திலிருந்து வருகிறார். அதுவும் குழந்தைகளுக்காகத்தானே வருகிறார் எப்படி பாபா முரளியைக் கூறத் தவற விடுவதில்லையோ அவ்வாறே குழந்தைகள் முரளியைக் கேட்கத் தவறக்கூடாது நல்லது

மதுபனிற்கு வருகிறார்கள் இல்லையா? அப்பொழுது விண்ணப்பப்பாரத்தை பூர்த்தி செய்கின்றனர் அந்த ஃபாரத்தில் இதையும் அச்சிடுங்கள். தினமும் முரளியை கேட்டீர்களா? எத்தனை நாட்கள் தவறவிட்டீர்கள்? இப்படி அச்சிடலாமா? சம்மதமா? யாருக்கு சம்மதமோ அவர்கள் கை உயர்த்துங்கள். மதுபன் வாசிகளும் கை உயர்த்துங்கள். எந்த ஒரு காரணத்தைப் பொருட்டும் முரளியைத் தவற விடவேக் கூடாது. எப்படி உணவை தவறவிடுவதில்லையோ அது

போல இதுவும் உணவுதானே! அது சரீரத்திற்கான உணவு இது ஆத்மாவிற்கான உணவு புதியதாகவும் நிறைய பேர் வந்துள்ளனர். இது சரியா புதிதாக யார் வந்துள்ளனரோ குறைந்தபட்சம் இங்கே வரவாவது முடிந்ததே! அவர்களும் கூட இந்த நியமத்தைப் பின்பற்ற வேண்டும். எப்படி பிற நியமங்கள் உள்ளனவோ அதைப்போன்று இதுவும் ஒரு முக்கிய நியமம் ஆகும். பிராமணர்கள் என்றாலே முரளியைக் கேட்பவர்கள். சேவை செய்யக் கூடியவர்கள் நல்லது!

இங்கே வந்திருப்பவர்களில் தனி தனி மண்டலமாக எழுந்திருங்கள், தமிழ்நாடு இவர்கள் சேவைக்காக வந்துள்ளார்கள், மிகவும் நன்று சேவை என்றாலே பரிசை அடைவது.

நேபால்: மிகவும் நன்று சேவைக்காக இவ்வளவு பேர் வருவது பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்துள்ளது. சேவையில் வருவது என்றால் யகஞுத்தில் மீதான அன்பைக் குறிப்பதாகும். யாரெல்லாம் வந்துள்ளீர்களோ அவர்கள் அனைவருக்கும் யக்ஞ சேவை, யக்ஞ சகயோகி ஆத்மாக்கள் என்று பாப்தாதா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார்.

வங்காளம்: நல்லது, யாரெல்லாம் வந்திருக்கின்றனரோ மிக அதிகமான எண்ணிக்கையில் வந்துள்ளனர். மிக உற்சாகம், ஆர்வத்தோடு வந்துள்ளனர். சதா யக்ஞ சிநேகி மற்றும் யக்ஞ சேவகர்களாகவே இருக்க வேண்டும். அது உடலாலும் சரி மனதானாலும் சரி, செல்வத்தாலும் சரி இந்த யக்ஞத்தைப் படைத்தது யார்? பாபாதான் படைத்தார். யாருக்காக படைத்தார்? குழந்தைகளுக்காக படைத்தார். நீங்கள் பிராமணர்கள் இல்லையென்றால் இந்த யக்ஞமே படைக்கப்பட்டிருக்காது. அனைவருமே நன்கு சேவை செய்தார்கள் இல்லையா? நிமித்தமாக இருப்பவர்களின் மூலமாக (தாதி) சான்றிதழ்களும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. மிக நன்றாக. சேவை செய்தீர்கள். மேலும் செய்து கொண்டே இருப்பீர்கள்.

பீகார்: பெயரே எவ்வளவு நன்றாக உள்ளது. பீகார் என்றால் எப்பொழுதும் பகார் (வசந்தம்) நல்லது!

ஒரிசா: ஒவ்வொருவரும் அதிக எண்ணிக்கையைக் கொண்டு வந்துள்ளனர். அனைவருடைய எண்ணிக்கையைப் பார்த்து பாப்தாதா மிகவும் மகிழ்ச்சி அடைகிறார். ஏனென்றால் சேவையில் அவ்வளவு அன்பு ஆர்வம்! சதா முன்னேறிக் கொண்டே இருங்கள்!

அஸாம்: ஒருவரை காட்டிலும் மற்றவர் முன்னால் இருக்கின்றனர். வந்துள்ளவர்கள் அனைவரும் ஒருவரைக் காட்டிலும் மற்றவர் அதிக உற்சாகம் ஆர்வத்தோடு இருக் னர். சேவையினுடைய புண்ணியம், ஆக புண்ணியத்தை சேமிக்கக்கூடிய ஆத்மாக்கள். ஏனெனில் சேவையின் மூலமாக ஆசீர்வாதம் கிடைக்கிறது. சேவை மட்டும் செய்யவில்லை. புண்ணியத் தையும் சேமித்துக் கொண்டே செல்கிறீர்கள் நல்லது

பங்களாதேஷ்: குறைவாக உள்ளனர். யாரெல்லாம் சேவை செய்தனரோ யக்ஞ சேவையினுடைய முத்திரையை தங்கள் மீது பதித்துக் கொண்டதாகவே அர்த்தம். யக்ஞ சிநேகி என்பதே பட்டம் ஆகும். நல்லது மிகவும் நன்றாக செய்தீர்கள்.

ஜார்கண்ட்: எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் சேவையின் மீது அன்பு இருக்கிறது அல்லவா! எவ்வளவு பேர் வந்தீர்களோ அவ்வளவு பேரும் தங்களது எதிர்காலத்தை உருவாக்கிக் கொண்டீர்கள் அவ்வாறு உருவாக்கிக் கொண்டே செல்லுங்கள். எவ்வளவு யக்ஞ சேவை செய்வீர்களோ அவ்வளவு சேமிப்பீர்கள். அதிக சேவை, அதிக சேமிப்பு. நல்லது.

நீங்களோ எதிரில் உட்கார்ந்திருக்கின்றீர்கள், உங்களை விட அதிக எண்ணிக்கையில் பாப்தாதாவிற்கு முன்னால் பல்வேறு இடங்களைச் சார்ந்த குழந்தைகளை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். நீங்கள் எதிரில் அமர்ந்திருக்கின்றீர்கள் அவர்கள் தூரத்தில் இருந்தாலும் பாபாவினுடைய உள்ளத்தில் நிறைந்திருக்கின்றார்கள். நீங்களோ இருக்கிறீர்கள் ஆகையனால் எப்படியோ வந்து சேர்ந்து விட்டீர்கள் ஆனால் பாப்தாதா தூரத்தில் இருந்தாலும் மிக அன்போடு கேட்டுக் கொண்டிருப்பவர்களைப் பார்க்கின்றார். இந்த அறிவியல் உங்களுக்கு நன்கு உதவி செய்ய முடியும் என்று ஏற்கனவே பாப்தாதா ஆரம்பத்தில் கூறியுள்ளார். மிக தூரத்திலி ருந்தாலும் அருகாமையில் அனுபவம்

செய்விக்கக்கூடியது இந்த அறிவியல் சாதனங்கள். வினாச காலத்திலும் உதவி செய்யும். அதுவும் கூட தேவையே மேலும் உங்களுக்கு இங்கும் கூட பிராமண வாழ்க்கையில் பொன்மயமான வாய்ப்பை தந்துள்ளது. ஆக அறிவியல் விஞ்ஞானிகளும் உங்களின் உதவியாளர்களே. அவர்களை தீயவர்களாக (வினாசத்திற் கானவர்கள்) நினைக்காதீர்கள். இவர்கள் என்ன செய்கின்றார்கள் என்று அப்படி நினைக்காதீர்கள் யாருக்கு என்ன வேலையோ அவர்கள் அதை செய்து தான் ஆவார்கள். மற்றபடி அறிவியல் உங்களுக்கு உதவிகர்மானது எதிர்காலத்திலும் உதவிகரமாயிருக்கும். நல்லது

அடுத்து மீட்டிங் போடுபவர்கள் முன்னால் அமர்ந்திருக்கின்றனர். வெளி நாட்டு உச்சர்களும் நிமித்தமானவர்களும் உள்ளனர். அனைத்தையும் பாப்தாதா கேட்டுக் கொண்டிருக்கின்றார். மீட்டிங் போது கூட சுற்றி வந்து அதனுடைய சாரத்தை தெரிந்துகொள்கின்றார். எந்த விசயம் இறுதியாக முடிவு எடுக்கப்படுகிறதோ அந்த சமயத்தில் பாப்தாதா சுற்றி வந்து தெரிந்துகொள்கிறார். மேலும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறார் ஆனால் நீங்கள் மிகவும் பிஸியாக இருக்கிறீர்கள். மற்றபடி சிறிதாகவும் பெரியதாகவும் அநேக சென்டர்கள் விரிவடைந்துள்ளன. அதைப்பார்த்து பாபாவுக்கு மகிழ்ச்சி. மேலும் பல்வேறு மொழிகள், வெளி நாடுகளிலும் பல மொழிகள் இந்தியாவிலும் கூட பல்வெறு பகுதிகளில் பல்வேறு மொழிகள் இவ்வாறு பல மொழிகளாக இருப்பினும் அனைவரையும் ஒன்றுபடுத்துகின்றனர். மேலும் அது நடந்துக் கொண்டும் இருக்கிறது. அனைவருக்கும் இது நன்றாகவே இருக்கிறது. எனவே பாப்தாதாவிற்கும் மகிழ்ச்சியே வாருங்கள் மீட்டிங் போடுங்கள். மேலும் அனைவருக்கும் ஒரு நியமத்தில் ஒரு வழக்கத்தின் கீழ் ஒரே மாதிரியாக (மீட்டிங்) பண்ணுங்கள். ஒரு விசயத்தில் பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி முன்பெல்லாம் இந்திய கலாச்சாரம். வெளி நாட்டு கலாச்சாரம் என்றெல்லாம் பேச்சுக்கள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன ஆனால் இப்பொழுது அம்மாதிரியான பேச்செல்லாம் வருவதில்லை. அனைவருமே பிராமண கலாச்சாரத்தில் வந்து விட்டனர். எனவே வாழ்த்துக்கள்! நன்கு முயற்சி செய்துள்ளனர். இந்தியர்களும் கூட அதிகமான மாநாடுகளை நடத்துகின்றனர். கூட்டங்கள் (மீட்டிங்) கூட போடுகின்றனர்.

அனைத்துக் குழந்தைகளிடமும் பாப்தாதாவிற்கு மிக குஷியே! ஆனால் தினமும் இரவில் தனக்கு பாப்தாதாவின் அன்பு நினைவையும் வாழ்த்தையும் தெரிவிக்க வேண்டும். பாப்தாதாவின் வாழ்த்துக்களை உங்களுக்கு தருகின்றார். தினமும் உங்களுக்கு நீங்களே கொடுத்துக் கொள்ள வேண்டும். பாப்தாதா விட்டுவிடுவதில்லை. எந்த நாடானாலும் சரி. எப்படி அமிர்தவேளையில் சுற்றி வருகிறாரோ அவ்வாறு இரவிலும் கூட அனைவருக்கும் குட் நைட் கூறுகிறார். எனவே உங்களுக்கு நீங்களே வாழ்த்துக்கள் கூறி உறங்கச் செல்ல வேண்டும் நல்லது!

இப்பொழுது அனைத்துத் தரப்புக்குழந்தைகளுக்கும் அன்பு நினைவுகள் கூடவே வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறார். சதா உற்சாகம், ஆர்வத்தில் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு மேலும் முன்னேறிச் செல்ல வேண்டும். ஏதேனும் ஒரு காரணம் தொட்டு தனது உற்சாகம், ஆர்வத்தை ஏதேனும் விசயத்தின் காரணமாகவும் குறைத்துக் கொள்ளக் கூடாது. விசயம் அது விசயமாகவே இருந்து போகும் ஆனால் புருஷார்த்தம், பாபாவின் அன்பு நமக்குரியது. எனவே ஒருபொழுதும் தனது புத்தியை பாபா இல்லாமல் வேறு எந்த விஷயத்திலும் ஈடுபட விடக்கூடாது. பாபா மற்றும் பாபாவினுடைய முரளி மற்றும் பாப்தாதாவின் மூலம் கிடைத்துள்ள சேவை அந்த சேவையை செய்து வர வேண்டும் நல்லது! இப்பொழுது என்ன சொல்ல வேண்டும். கூடவே இருக்கத்தான் வேண்டும். இருப்பினும் விடைபெற்றுக்கொள்கிறார். இவ்வாறும்கூட கூற இயலாது. ஏனென்றால் கூடவே இருப்போம் கூடவே அழைத்துச் செல்வோம். மற்றும் கூடவே வருவோம். நல்லது.

**ச-ரி. மோகினி உடன்:** திடீரென்று ஏற்படும் இவ்வாறு நடப்பதால் (மயக்கம்) அதில் ஏதாகிலும்களைப்பு ஏற்படுகிறது. அது புத்தியினுடையகளைப்பானாலும் சரி, சரீரத்தின்களைப்பானாலும் சரி எனவே ஓய்வாக இருங்கள்! இங்கங்கு அலையாதீர்கள். ஏதேனும் முக்கியமாக இருந்தாலும் சரி மற்றபடி வேண்டாம்! சில சமயம் தனியாகவும் இருக்க வேண்டி வரும். இங்கங்கு போய் வர விரும்புகின்றீர்களென்றால் முதலில் உங்கள் உடல் நலத்தை சரி செய்து கொள்ளுங்கள். அதிக கவனம் செலுத்துங்கள். நன்கு ஓய்வு

எடுத்துக் கொள்ளுங்கள், புத்திக்கும் ஓய்வு தாருங்கள். உடல் ஓய்வு பெரிய விசயம் அல்ல. புத்திக்கும் ஓய்வு தர வேண்டும்.

இரத்தன் மோகினி தாதிஜி: துபாயிலிருந்து அன்பு நினைவுகளைத் தருகிறார் அதற்கு பாபாவும் அன்பு நினைவுகளை கூறச்சொல்கிறார்.

**பரதாதியுடன் (பிரம்மாபாபாவின் மகள்):** உங்களது மண்டலம் எவ்வளவு பெரிது என்று பார்த்தீர்களா (அதற்கு என்ன? பாபா இருக்கிறார்) ஆனால் நிமித்தமாக இருப்பவர்கள் நீங்கள் தானே! நீங்கள் தானே ஆரம்பத்தில் ஸ்தாபனை செய்தது. பரதாதியின் மண்டலம் என்று தானே சொல்வார்கள். எல்லோரும் ஒத்துக் கொள்கிறார்கள்.

ஆண்டி அங்கில் நினைவுகளைத் தந்துள்ளார்கள். பாப்தாதா அவர்களுக்கு மனப்பூர்வமான அன்பு நினைவுகளைக் கூறிக் கொள்கிறார். ஆண்டிக்கு சற்று (உடல் சுகவீனமாக) இருக்கிறார். அதில் பாருங்கள் நீங்களும் உங்களுடைய உடல் நிலையைப் பார்த்துக் கொள்ளுங்கள். சேவை செய்யுங்கள் அதே சமயம் உங்களையும் பார்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் நீங்கள் இந்த யக்ஞத்தினுடைய விசேஷ நிமித்த ஆத்மா ஆவீர்கள் எவரும் ஒரு நல்ல பதவியில் இருந்துக் கொண்டு ஞானத்தில் வந்ததில்லை ஆனால் நீங்கள் தான் முதல் ஜோடி. வெளிநாட்டில் உயர்ந்த பதவியில் (தென்ஆப்பிரிக்காவில் துணை ஜனாதிபதி) இருந்தும் கூட குடும்பம் சகிதமாக சேவையில் இறங்கினீர்கள். எனவே நீங்கள் மிக விசேஷமானவர்கள் ஆக பாப்தாதா எத்தனை முறை கூறினாலும் சரி ஆயிரம், லட்சம் முறை மிகவும் அன்போடு நினைவு செய்கிறார்..இப்பொழுதும் கூட மிக மிக அன்பு நினைவுகளைக் கூறுகிறார்.

ப்ரீத்தம் சகோதரியுனுடைய உடல் நிலை குறைவு பற்றி குல்தீப் சகோதரி (ஐதராபாத்) அன்பு நினைவுகளை அனுப்பியுள்ளார். இப்படியே நடக்கட்டும், இந்த ஒரு சைகையே போதுமானது. பாப்தாதாவும் உதவியாளராக இருக்கிறார்.

தாதி ஜானகி அவர்களோடு: சரியான நேரத்தில் உடல் சரியாகி விட்டது அல்லவா! இதுவே பாப்தாதாவினுடைய உதவியாகும். தாதியினுடைய

உதவியாளர் (ஹன்ஸா சகோதரியுடன்) மிக நன்றாக சேவை செய்கிறீர். அதற்கும் பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். இன்னொருவர் எங்கே? (பிரவீனா) இருவருக்கும் பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். நன்கு முயற்சி செய்து தாதியின் உடல் நலத்தை சரி செய்து விட்டீர்கள். அனைவருக்கும் லாடம் கிடைத்தது. எவருமே வஞ்சிக்கப்படவில்லை. அனைவருக்கும் பாபாவின் வகுப்பு கிடைத்தது. இவ்வாறு கவனித்துக் கொள்பவர்களாகிய உங்களுக்கு வாழ்த்துக்கள்

குல்ஜார் தாதியின் உதவியாளர் நீலு சகோதரியுடன்: இத்தனை ஆண்டுகள் ரதத்தை நடத்தி செல்வது சரியான சமயத்தில் சேவை தருவது இதற்கும் வாழ்த்துக்கள். பாப்தாதா பார்த்தார் இந்த ரதமும் மிகவும் அற்புதமானது. 42-ஆண்டுகளாக சேவை எடுத்துள்ளீர்கள். அதை வழங்குவோர் பாப்தாதாதான். நிமித்தமான ரதம் கூட மிக சரியான சமயத்தில் டைம் பிரகாரம் சேவையில் ஆஜராக இருந்தது. ஒரு சமயம் கூட தவறவிட்டதில்லை. மிக எளிமையான சுபாவம் கொண்டவராக (குல்ஜார் தாதி) இருப்பதின் காரணமாக அந்த ரதத்தை நன்கு எளிதாக நடத்திச் செல்ல முடிகிறது. தாதிஜானகியுடன் இவரும் கூட சேவையின் மிக மிக உற்சாகம், ஆர்வம் நிறைந்தவர். எனவே சேவையின் போது சரீரத்தை சரி செய்து கொள்கிறார். (பாபா சரி செய்கிறார். இதுவும் பாபாவினுடைய அற்புதம்) மிகவும் புத்திசாலிதான். பிரம்மாபாபா அந்த வயதிலும் கூட நன்கு நடத்திச் சென்றார். இப்பொழுதும் கூட நடத்தி வருகிறார். எதுவரை நடத்தி செல்வார். அதை டிராமாவில் பார்ப்போம் பாப்தாதாவின் அனைத்து அற்புதங்களை (கமால்) பார்த்துக் கொண்டே செல்லுங்கள். மேலும் உலகத்தின் டமால் காரியங்களையும் கேட்டுக் கொண்டே செல்லுங்கள். உங்களுக்கென்று எந்த ஆசையும் கிடையாது. கவலையற்று இருங்கள். என்ன நடைபெறுமோ அனைத்தும் பிராமணர்களுக்கு நன்மையாகவே முடியும். உங்களுக்கு சங்கம யுகம் அமிர்தவேளை நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது. அமிர்தவேளைக்குப் பிறகு பகல் வருகிறது. பகல் என்பது வந்துதாள் ஆக வேண்டும். என்ன ஆகுமோ இந்த சங்கல்பம் தேவையில்லை. பகல் வந்துதான் ஆக வேண்டும். உங்களது இராஜ்யம் ஏற்பட்டே ஆக வேண்டும். அது நிச்சயிக்கப்பட்டது. நிச்சயிக்கப்பட்ட ஒன்று ஒருபோதும் மாற முடியாது.

**குஞ்ச் தாதியுடன்:** அனைவரும் தங்களது கணக்கு வழக்கை முடித்துக் கொண்டிருக் கின்றீர்கள் சரிதானா சரியாகிக் கொண்டிருக்கிறதா? நல்லது! சரியாகி விடும். வசதியாக உட்காருங்கள். நன்கு ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். புத்திக்கும் ஓய்வு சரீரத்திற்கும் ஓய்வு ஏனெனில் புத்தியினுடைய குழப்பம் சரீரத்தின் மீதும் ஏற்படுகிறது. சரியாகி விடுவீர்கள்.

டாக்டர் அசோக் மேதா அன்பு நினைவுகளைக் கூறியுள்ளார், அவருக்கு இதய அறுவை சிகிச்சை நடைபெற உள்ளது): நல்லது. மிக தைரியமானவர், தைரியமானது உதவியையும் தருகிறது. பெறவும் செய்கிறது. தைரியத்தினை இழப்பவர் அல்ல அவர். மற்றபடி என்ன நடக்குமோ அது சரியாகி விடும். சற்று நன்கு ஓய்வு எடுத்துக் கொள்ளவும். மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் என்பதில்லை. இப்பொழுது சற்று ஓய்வு எடுத்தால் பின்னால் நன்கு உதவியாக இருக்கும். அல்லதுகளைப்பானது அதனுடைய வேலையைக் காண்பிக்கும். சில நாட்கள் அவசியம் ஓய்வு எடுக்கவும்.

ரமேஷ் சகோதரர்: இன்று அவருடைய யுகல் (உஷா சகோதரி) பிறந்தநாள் என்கிறார். அவரை அவ்வப்போது வதனத்தில் அழைத்து வருகிறோம் மிக மகிழ்ச்சியாக இருக்கிறார். எந்த வித கஷ்டமும் இல்லை.

அடுத்து ஹாலில் பின்னால் அமர்ந்திருக்கக்கூடிய குழந்தைகளை பாப்தாதா தனது உள்ளத்தில் வைத்துப் பார்க்கிறார். ஹாலில் பின்னால் அமர்ந்திருக்கலாம் ஆனால் அன்பிலும், பாப்தாதாவின் உள்ளத்திலும் மிக அருகாமையில் உள்ளீர்கள்.

**சில முக்கிய நபர்கள் பாப்தாதாவைச் சந்திக்கிறார்கள்:** என்ன காரியம் செய்தாலும் உங்களது குஷியை ஒருபொழுதும் இழக்க வேண்டாம். குஷியைப் போன்று சத்தான உணவு எதுவும் கிடையாது. வாழ்க்கை என்பதை பலரும் வாழ்கிறார்கள் ஆனால் மகிழ்ச்சியாக வாழ்வது என்பது குஷியிருந்தால் மட்டுமே முடியும். குஷி இல்லையென்றால் அப்படி இப்படியுமாக இருக்கும். (உங்களது ஆசீர்வாதம் தேவை

என்கிறார்) அதற்கு அதிகாலையில் கண் விழித்ததும் படுக்கையிலிருந்தும் கூட பரவாயில்லை ஆனால் கண்விழித்ததும் பரமாத்மாவிற்கு காலை வணக்கம் செலுத்துங்கள். இதை செய்ய முடியும் தானே! அதிகாலையில் பரமாத்மாவை நினைவு செய்தால், அன்றைய நாள் முழுவதும் மிக நன்றாக இருக்கும். இதில் எந்த விதமான கஷ்டமும் இல்லை. எப்படியும் எழத்தான் போகிறீர்கள். அச்சமயத்தில் காலை வணக்கம் சிவபாபா என்று சொல்ல வேண்டும். நீங்கள் நிமித்தமானவர்கள் இல்லையா? உங்களைப் பார்த்து பிறருக்கும் குஷி ஏற்படும். ஏனெனில் வாழ்க்கையில் ஏதேனும் பிராப்தி வேண்டும். அனைத்திலும் சிறந்தது குஷி எனவே குஷியை ஒருபோதும் இழக்காதீர்கள். பணம் போய்விடலாம் ஆனால் குஷி மறையக்கூடாது. அடிக்கடி இங்கே வந்து போங்கள் எங்கு இருக்கிறீர்களோ அங்கும் போன் மூலமாக தொடர்பில் இருங்கள். ஏதேனும் பிரச்சனைகள் வரும்பொழுது வரதானங்களைக் கேளுங்கள் அதன் மீது சிந்தித்துப்பாருங்கள்.

**அண்ணாமலை பல்கலைக்கழக துணை வேந்தருடன்:** சதா எப்பொழுதும் அதிகாலையில் எழுந்த உடன் சிவபாபாவிற்கு காலை வணக்கம் செலுத்துங்கள். காலையில் எழுந்தவுடன் யார் முகத்தில் விழிக்கிறோமோ அதன்படி அந்த நாள் முழுவதும் நன்றாக இருக்கும். என்கிறார்கள். ஆக எப்பொழுதுமே குஷியாக இருக்க கற்றுக்கொள்ளுங்கள். எந்த வித விசயங்களோ, பிரச்சனைகளோ வந்தால் அவற்றை உங்கள் மகிழ்ச்சியினால் விலக்கி விடுங்கள்.

**இரட்டை வெளிநாட்டின் மீட்டிங் சகோதர சகோதரிகளுடன்:** (இன்று 25-ஆண்டுகள் ஆகி உள்ளது) 25-ஆண்டுகள் மீட்டிங் செய்து வருகிறீர்கள். வாழ்த்துக்கள்! அந்த மீட்டிங்கின் வெற்றி கிடைத்து வருகிறது அல்லவா! என்ன செய்தாலும் அதனுடைய ரிசல்ட் நன்றாக இருக்க வேண்டும். நீங்கள் நேரத்தை ஒதுக்கி மீட்டிங் செய்கிறீர்கள். சங்கமயுகத்தில் நேரம் மிக விலைமதிப்பற்றது. எனவே இதனுடைய ரிசல்ட்டை நன்கு சோதியுங்கள். அந்த ரிசல்ட் மூலம் குஷி ஏற்படும். ஏனெனில் ஞானம் என்றால் செய்வதும் மற்றும் நடப்பதும் கூடவே இருக்க வேண்டும். யார் நிமித்தமாக இருக்கிறார்களோ அவர்கள் செய்கின்ற காரியத்தினால் நன்மையே ஏற்படுகிறது. எனவேதான் நீங்கள் நிமித்தமாக

ஆக்கப்பட்டுள்ளீர்கள். கூடவே பாவனையும் இருக்கிறது. பிரச்சனைகள் என்பது இருக்கத்தான் செய்யும் ஆனால் அவைகள் விலகிப்போய்விடும். 'பிரச்சனைகளுக்கு தீர்வு ஏற்பட வேண்டும். அதுவே வெற்றியாகும். நன்றாக நடந்து வருவதால்தான் இத்தனை வருடங்கள் நடந்துள்ளன. மற்றபடி என்ன விசயம் நடந்தாலும் அது பரவாயில்லை. இருப்பினும் தொடர்ந்து நடந்து வருகிறது என்றால் ஏதேனும் வெற்றி அதில் இருக்கிறது என்று அர்த்தம், நீங்கள் மகாரதிகள் கொடுத்துள்ள நேரமோ விலைமதிப்பற்றது அல்லவா? அந்தளவு பலனையும் கொண்டு வாருங்கள். சில சமயம் நடக்காமல் போனாலும் பரவாயில்லை. கிடைத்த பலனை அடிக்கடி சிந்தித்துப்பாருங்கள். இதை முடிக்க வேண்டும். இதில் இன்னும் பாக்கி உள்ளது. அடுத்த ஆண்டு மீட்டிங் செய்யும்பொழுது அதற்கான திட்டம் தீட்டி அவைகளை முடிவுக்குக் கொண்டு வாருங்கள். இந்த கவனம் தேவை மற்றபடி பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்திருக்கிறது. உங்களுக்குள்ளே சந்தித்துக் கொள்கிறீர்கள் அதுவும் நல்லது. பல நேரம் மிக தூரமாக இருக்கிறீர்கள். மதுபனில் வந்து உங்களுக்குள் சந்தித்துக் கொள்கிறீர்கள் இது மிகவும் நல்லது. இதில் லாபம் தானே ஒழியே நஷ்டம் கிடையாது. பாப்தாதாவிற்கும் மகிழ்ச்சி.

**வெளி நாட்டு சேவை நடந்து 40-ஆண்டுகள் ஆகின்றன**: நன்கு வளர்ந்துள்ளது. எவ்வளவு முயற்சி செய்துள்ளீர்களோ அதற்கான பலன் வெளிவந்துள்ளது. எனவே முன்னேறிச் செல்லுங்கள். பாப்தாதாவும் குஷி அடைகிறார். (டெல்லியில் மிகப் பெரிய நிகழ்ச்சி ஒன்று நடைபெறப்போகிறது) எதுவரை முடியுமோ இந்தியாவும், வெளிநாடுகளும் சேர்ந்து செய்தால் நல்லது (ஒரே கடவுள், ஒரே குடும்பம் நிகழ்ச்சி வைக்கப்பட்டுள்ளது) ஆரம்ப காலத்தின் இந்த லண்டனில் இந்த விசயத்தினுடைய பிரபாவம் மிகவும் பெரியதாக ஏற்பட்டது. இந்த நிகழ்ச்சி மேடையில் கருப்பர், வெள்ளையர், அநேக மதத்தைச் சார்ந்தவர்கள் ஒன்றாக அமர்ந்திருந்தனர். இவர்களிடம் வேறுபாடு இல்லாமல் இருந்தது. எல்லோரும் ஒரே ஒருவரையே நம்புகின்றனர். இந்த ஒரு பிரபாவம் மிக நன்றாக ஏற்படுகிறது. இப்பொழுது சேவைக்கூட பலத்தரப்புகளில் ஏற்பட்டுக் கொண்டு இருக்கிறது. இப்பொழுது இதன் பிரபாவம் மிக நன்றாக. உள்ளது. இதனை அனைவருமே இக்கருத்தை ஒத்துக் கொள்கின்றனர். கடவுள்

ஒரே ஒருவர் என்று கூறுவோர் அவர் இவரே என்று கூறுகின்றனர். இந்நிகழ்ச்சி டெல்லியில் உள்ளது. அல்லவா? அப்பொழுது மேடையில் அனைத்துத் தரப்பினரும் அமர்ந்திருக்க வேண்டும். எப்படி பெஹரின் நகரத்தில் அனைத்து உடை அணிந்தோரும் வந்து அமர்ந்திருந்தனர். எப்படி எந்த தேசத்தில் எந்த உடை அணிந்திருக்கின்றனதோ அதே உடையோடு ஒரே மேடையில் ஒன்றாக தென்பட வேண்டும். (காயத்ரி சகோதரியுடன்) நீங்களும் கூட நன்கு முயற்சி செய்கிறீர்கள், நிமித்தமாக இருக்கிறீர்கள். பாபாவும் கூடவே துணையாக இருக்கிறார். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 17.02.2011 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## மனதின் சேவையின் மூலமாக ஆத்மாக்களுக்கு அஞ்சலி (ஆறுதல்) தரும் சேவையை செய்து கொண்டே நீண்ட காலமாக தீவிர முயற்சி செய்து எவரெடியாக இருந்தால் மாலையில் மணியாக மாறி விடுவீர்கள்!

இன்று அன்புக் கடலான தந்தை தன்னுடைய அன்பு மிகுந்த குழந்தைகளைச் சந்திக்க வந்திருக்கிறார். குழந்தைகள் நினைவு செய்தார்கள், வாருங்கள் பாபா! என்று பாபாவும் சொல்கிறார். என்னுடைய அன்பான குழந்தைகளே, அன்பில் அவ்வளவு ஈர்ப்பு உள்ளது, அதனால் ஒவ்வொரு குழந்தையும் பாபாவை தனதாக்கிக் கொண்டார்கள். பாபாவும் ஒவ்வொரு குழந்தையையும் எனது குழந்தாய் என்று தன்னுள் அடக்கி விட்டார். விந்தை அல்லவா ? குழந்தைகள் சொல்கிறார்கள் மேரா பாபா எனது என்ற சப்தத்தில் அவ்வளவு அன்பு நிறைந்துள்ளது. எனவே பாபாவும் சொல்கின்றார்; எனது குழந்தாய், அன்பு என்னவெல்லாம் செய்து விடுகிறது. ஒவ்வொரு குழந்தையின் நெற்றியிலும் இன்று அன்பு என்னும் அலை வீசிக் கொண்டிருக்கின்றது. இதைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். அன்புதான் உள்ளத்தை தனதாக்குகின்ற சாதனம். எனவே ஒவ்வொரு குழந்தை களுக்குள்ளும் இன்று அன்பெனும் அலை வீசிக் கொண்டிருப்பதைப் பார்த்து பார்த்து, பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைந்துக் கொண்டிருக்கின்றார்.

இப்பொழுதும் 5 நிமிடத்திற்காக பாப்தாதா ஒரு டிரில் எல்லோரையும் செய்ய வைக்கின்றார். தன்னுடைய மனோ சக்தியால் உலகில் உள்ள உங்களுடைய பக்தர்கள் மற்றும் அநேக துக்கத்தில், அசாந்தியிலுள்ள

ஆத்மாக்கள் உங்களை நினைவு செய்து கொண்டிருக்கின்றார்கள். எங்களுடைய பூர்வீக ஆத்மாக்களே எங்களுக்கு சிறிது நேரத்திற்காகவே சாந்தி தாருங்கள். சிறிதளவாவது சுகத்திற்கான அஞ்சலி (ஆறுதலைத்) தாருங்கள், காப்பாற்றுங்கள்! இப்படிப்பட்ட ஆத்மாக்களை இங்கு அமர்ந்துக் கொண்டே நினைவு செய்யுங்கள், அவர்களின் சப்தம் கூக்குரல் காதில் விழுகிறதா காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள். எனவே அப்படிப்பட்ட ஆத்மாக்களுக்கு தன்னுடைய மனோ சக்தியின் மூலமாக ஒளிக்கிரணங்களை அனுப்புங்கள். இந்த மனதின் சேவையை நாள் முழுவதும் அடிக்கடி செய்து கொண்டே இருங்கள். ஏனென்றால் பாபாவுடன் குழந்தைகளாகிய நீங்களும் உலக சேவகர்கள். நாள் முழுவதும் வார்த்தைகள் மூலமாக சேவை செய்வதில் நிமித்தமாக உள்ளீர்கள். அதுபோலவே இடை இடையே மனதால் சேவை செய்வதற்காகவும் பயிற்சி செய்து கொண்டே இருங்கள். இதனால் உங்களுக்கும் லாபம் உண்டு. ஏனென்றால் உங்களுடைய மனம் சதா சேவையில் பிஸியாக (சுறுசுறுப்பாக) இருந்தால் உங்களிடம் இடையிடையே வருகின்ற மாயாவின் வீணான எண்ணங்கள். அதிலிருந்து நீங்கள் தப்பித்து விடுவீர்கள். முயற்சி செய்ய வேண்டி இருக்காது. இப்போது பாப்தாதா கேட்கின்றார் எப்படி இருக்கின்றீர்கள்? என்ன பதில் சொல்வீர்கள்? புருஷார்த்தம் நடக்கிறது தான், ஆனால் அவ்வப்போதுதான்....! சதா முயற்சி நடைபெறுவதில்லை. எனவே பாப்தாதா அனைத்துக் குழந்தைகளிடமும் இந்த ஒரு ரிஜிஸ்டரைப் பார்க்க விரும்புகிறார். அவ்வப்போது என்கிற இந்த வார்த்தை அழிந்தே போக வேண்டும். இதைச் செய்ய முடியுமா?, அவ்வப்போது என்று வார்த்தை அழிந்தே போகுமா? தக்க சமயத்திற்குள் தயாராகி விடுவீர்களா? தயாராகிக் கொண்டுதான் இருக்கிறோம். தயாராகத்தான் வேண்டும். இவைகளுக்குப் பதிலாக இப்போது எவரெடி ஆக முடியுமா? ஏன்? எவரெடியாக இருக்கும் பயிற்சி மாயா ஜீத், (மாயாவை வென்றவர்) மன் ஜீத், (மனதை வென்றவர்) ஜெகத் ஜீத் (உலகை வென்றவர்) இந்த சம்ஸ்காரத்தையும் நீண்ட காலமாக உருவாக்கிக் கொள்வதால் கடைசி நேரத்தில் இந்த நீண்ட கால பயிற்சி உங்களை வெற்றி அடைய வைத்து வெற்றி மாலையில் ஒரு மணியாக உங்களை மாற்றி விடும். பாஸ் வித் ஆனர் (கௌரவத்தோடு வெற்றி அடைவீர்கள் ) ஆகி விடுவீர்கள். வெறும் வெற்றி மட்டுமல்ல, மதிப்புடன் கூடிய வெற்றி அடைவீர்கள். சொல்லுங்கள் தைரியம் உள்ளதா? பாஸ் வித் ஆனர்தானே ஆக

வேண்டும்? யார் துவாபர யுகத்திலிருந்து இது வரை பூஜைக்குரியவராக ஆகின்றீர்களோ அதாவது மாலையில் மணியாக ஆகின்றீர்களோ அப்படிப் பட்டவர்களுக்கு தன்னை மாலையில் மணியாக்க வேண்டுமென்ற சுப சங்கல்பம் இருக்கிறதல்லவா?

பாப்தாதாவும் தினசரி அமிர்தவேளையில் தன்னுடைய மாலையின் மணிகளை விசேஷமாக சந்திக்கின்றார். எனவே நீங்களும் தன்னை மாலையில் மணிகளாகப் புரிந்துள்ளீர்களா? வேறு மாலையும் உள்ளது 16000 அது ஆனால் இரண்டாவது மாலை ஆகி விட்டதல்லவா? விசேஷமான மாலை இது தான். புகழுக்கும் பூஜைக்கும் உரியது. அதுதான் முதல் மாலை. இப்பொழுது பாப்தாதா. அந்த மணிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஏனென்றால் பிரம்மாபாபாவுடன் துணையாக விசேஷமாக ராஜ்ய பதவியிலும் அவர்களே இணைந்திருப்பார்கள். எனவே இன்று பிரம்மாபாபா தன்னுடைய இப்போதைய தீவிர புருஷார்த்திகள் மற்றும் நாளைய ராஜ்ய அதிகார அரியணையில் இருவர் தான் அமருவார்கள். ஆனாலும் ராஜ்யத்தில் துணையாக இருப்பவர்கள் அதிகம். அவர்களின் மாலை தான் முதல் தரமானது. எனவே தன்னைத்தானே சோதனை செய்து பாருங்கள். பாப்தாதா உடன் தான் செல்வோம் ஆனால் இப்பொழுது உங்கள் அனைவருக்குமே வீடு திரும்பும் பயணம் சென்றே ஆக வேண்டும். எனவே பாபாவுடனேயே செல்ல வேண்டும். தனியாகச் செல்லக்கூடாது. ஆகவே உடன் செல்பகள் அருகே உள் மணியாக மாறுபவர்கள் யார்? நீண்டகால தீவிர முயற்சி செய்பவர்கள்தான் அந்த மணியாக மாறுவார்கள் முயற்சி செய்பவரோ அவ்வப்போது முயற்சி செய்பவரோ அந்த மாலையில் மணியாக மாட்டார்கள். நீண்ட காலமாக பாபாவிற்கு நிகராக முயற்சி செய்பவர்கள்தான் ராஜ்ய அதிகாரமும் செய்வார்கள். என்ன புரிந்துள்ளீர்களா? தீவிர முயற்சியாளராகி யார் தன்னை தீவிர முயற்சியாளர் என்ற வரிசையில் உள்ளேன் என புரிந்திருக்கிறீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். தீவிர முயற்சி செய்பவர்கள் நன்றாகக் கையை உயர்த்துங்கள். சிறிய அளவில் அல்ல! அநேகர் கையை உயர்த்துகிறீர்கள் மேலும் கையை உயர்த்துங்கள். அரை குறையாக உயர்த்தாதீர்கள் நல்லது.

பாப்தாதா தினசரி குழந்தைகளின் சார்ட்டை பார்க்கின்றார். பெரும்பான்மையானவர்கள் தீவிர் முயற்சியும் செய்கிறார்கள் ஆனால் அவ்வப்போது என்ற வார்த்தையும் உடன் வந்து விடுகிறது ஆனால் பாபா ஏன் சொல்கின்றார் தெரியுமா? அட்டென்ஷன் பிளீஸ் தயவு செய்து கவனம் வையுங்கள், சூட்சுமமான எண்ணத்தில் கூட அல்ச்சல் (பதட்டம்) ஏற்படக்கூடாது. அச்சல் (அசையாதவர்களாக), அடோல் (உறுதியானவராக) சுத்த சங்கல்பம் உடையவராக நீண்டகாலமாகவே இவைகளை அமைத்தே ஆக வேண்டும். அநேக குழந்தைகள் மிகவும் இனிமையிலும் இனிமையாக ஆன்மீக உரையாடல் செய்கிறார்கள். சொல்கிறார்கள் பாபா நாங்கள் தயார் ஆகி விடுவோம். ஏனென்றால் சமயம் எவ்வளவு அருகே வருகிறதோ நிலமை மிகவும் மோசமாகிக் கொண்டே வருமோ அந்தளவிற்கு வைராக்கியமும் தானாகவே வந்து விடும் ஆனால் உங்களுடைய டீச்சர் யார் ஆவார்? நேரமா? அல்லது பாபாவா ? நேரம் என்பது உங்களுடைய படைப்புதானே எனவே பாபா இப்பொழுது சைகையாக காட்டுகிறார். நீண்டகாலமாக செய்யும் தீவிர முயற்சி தான் கடைசியில் உங்களை மதிப்புடன் வெற்றி பெறச் செய்யும் வெற்றி எல்லோருமே அடைவீர்கள் ஆனால் நீண்டகாலமாக தீவிர முயற்சி செய்பவர்கள்தான் கண்டிப்பாக அந்த நிலையை அடைவார்கள். எனவே இன்றைய தேதியை குறித்து வைத்துக் கொள்ளுங்கள். பொழுது கூட அவ்வப்போது, ஏதாவது செய்து விடுவோம், நாம் செய்தே முடிப்போம், இந்த வார்த்தைகள் இனியும் இருந்துக் கொண்டே இருந்தால் தந்தையின் அன்பு என்னவோ சதா இருந்துக் கொண்டுதான் இருக்கிறது. இறுதி மணியின் மீதும் பாபாவின் அன்பு உள்ளது. உளமாற மேரா பாபா என்று சொன்னதால், இன்றைய மிகப் பெரிய ஆத்மாக்கள் (முனிதர்கள் கூட) மேரா பாபா என்று சொல்வதில்லை, ஆனால் அவர்கள் மேரா பாபா என்று ஏற்றுக் கொண்டார்கள்.

எனவே பாபாவின் அன்பு அவர்கள் மீதும் உள்ளது. குழந்தைகள் மீது பாபாவின் அன்பு எப்போதுமே இருந்துக் கொண்டிருக்கிறது. இறுதி வரையிலும் இருக்கிறது. இறுதி மணியாக வருபவர் மீதும் கூட இருக்கிறது. அன்புதான் உங்களை பாபாவின் குழந்தை ஆக்கியது. பாப்தாதா இதையும் சொல்லியிருக்கின்றார். பெரும்பான்மையான குழந்தைகளுக்கு அன்பும் இருக்கிறது, மேலும் இருக்கும் ஆனால் அன்பு

மட்டும் அல்ல. சக்தியும் இருக்க வேண்டும். தீவிர முயற்சியும் இருக்க வேண்டும். எனவே இப்பொழுது சிவராத்திரியும் வந்து விட்டது. பாபாவின் அவதாரத்தின் உடனே குழந்தைகளின் அவதாரமும் ஏற்பட்டுவிட்டது. எனவே பாப்தாதா விரும்புகின்றார். இந்த சிவராத்திரி நன்னாளில் ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய சாதாரண முயற்சிக்குப் பதிலாக தீவிர முயற்சியாளராக தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். அப்படி மாற்றுவதற்கான சங்கல்பம் செய்ய வேண்டும். சிவராத்திரி அன்று தனக்குத்தானே திடமான சங்கல்பம் வையுங்கள். உறுதிமொழி எடுங்கள். எழுத வேண்டாம், வகுப்பிலும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை ஆனால் பாபாவுடன் உளமாற சங்கல்பம் வையுங்கள். சிவராத்திரி நன்னாளில் பாபா - நான் என்னுடைய முயற்சி என்ற அகராதியிலிருந்து அவ்வப்போது என்று வார்த்தையை அடியோடு நீக்கி விடுவேன். முடியுமா? இது என்ன பெரிய விஷயம் என்று நினைப்பவர்கள். நினைத்தேன். நடந்தது, தைரியம் வைப்பவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. பாபாவை குஷி செய்து விட்டர்கள்.

பாப்தாதாவிற்கு குழந்தைகள் மீது நம்பிக்கை உள்ளதல்லவா? எனவே இப்போதிலிருந்தே பல பல மடங்கு அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். ஆஹா குழந்தைகளே ஆஹா! தைரியசாலி குழந்தைகளே! உங்களுடைய தைரியம் மேலும் பாபாவுடைய உதவி இருந்தால் நடந்தே நடந்து விட்டது. இப்போது ஒரு காரியம் செய்யுங்கள், தன் மனதை பிஸியாக வைப்பதற்காக முதலில் பாபா சொன்னது போல ஒரு செகண்டில் ஸ்டாப், புள்ளி நான், புள்ளி வைக்க வேண்டும். மேலும் அனைவரையும் பிந்து ரூபத்தில் பார்க்க வேண்டும். பிந்துவாகவே பார்ப்பீர்களானால் வேறு எந்த சங்கல்பங்களும் அங்கே ஏற்படாது. மன சேவையிலும் கவனம் வையுங்கள். அவ்வளவு துக்கத்திலிருக்கும் ஆத்மாக்களுக்காக, கதறிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒளி கிரணங்களைத் தருகின்ற சேவையிலும் அதிகமாக மனதை ஈடுபடுத்துங்கள். மனதின் சேவை மிக சிரேஷ்டமான சேவை. துக்கத்திலிருப்பவர்களுக்கும் லாபம்; உங்களுக்கும் லாபம், இரட்டை லாபம் கிடைக்கும் எப்படி வார்த்தைகள் மூலமாக சேவை செய்துகொண்டிருக் கின்றீர்கள். மேலும் இந்த சேவை விரிவடைந்துக் கொண்டே செல்கிறது. உளமாற செய்கின்றீர்கள்.

குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது, சென்டரும் அதிகமாகிக் கொண்டே செல்கிறது. வார்த்தைகளால் சேவை பெரும்பான்மையோர் செய்கின்றீர்கள். அது சரியே அனைவரும் அல்ல, பெரும்பான்மையானோர். அதுபோலவே இப்பொழுது மனதால் விசேஷமாக ஆத்மாக்களுக்கு அஞ்சலி (ஆறுதல்) தரும் சேவையை செய்துகொண்டே இருங்கள். மனதை வெற்றிடமாக விட்டு வைக்காதீர்கள். ஏதேனும் ஒரு சேவையில் மனதால் சக்திகளை தருவதும். வார்த்தைகளால் செய்யும் சேவை, செயல்களால் குணங்களின் சேவை தொடர்பில் ஒருவருக்கொருவர் மகிழ்ச்சி தரும் சேவை இதுபோன்ற விதவிதமான சேவையில் மனதை பிஸியாக வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் முழு உலகிலுமே ரிசர்ச் (கண்டுபிடிப்பாளர்கள்) ஆத்மாக்கள் யார்? நீங்கள் தானே அல்லவா! எத்தனை விதமான பொக்கிஷங்கள் கிடைத்துள்ளது உங்களுக்கு? அந்த ஒவ்வொரு பொக்கிஷத்தாலும் சேவை செய்யுங்கள். பொக்கிஷங்களை எவ்வளவு சேவையில் ஈடுபடுத்துவீர்களோ அந்த அளவு பொக்கிஷங்கள் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். எனவே இப்பொழுது சுய சேவையில் கவனம் வைப்பது போலவே உங்களது துக்கத்திலிருக்கும் ஆத்மாக்களுக்காகவும், பக்த ஆத்மாக்களுக்காகவும் மனதின் மூலமாக ஒளிக்கிரணங்களை வழங்கும் சேவை செய்வதில் கவனம் வைத்து நாள் முழுவதும் செய்துகொண்டே இருங்கள், மிகவும் கதறிக் கொண்டிருக்கின்றார்கள். உங்கள் காதுகளில் கேட்கவில்லையா? பெரும்பான்மையாக ஒவ்வொரு வீட்டிலும் துக்கத்திற்கான காரணங்கள் ஏதாவது ஒன்று உள்ளது. அப்படிப்பட்ட துக்கத்திலிருப்பவர்களுக்கு சுகம் தருபவர்கள் யார்? சொல்லுங்கள். யார்? நீங்கள் தானே இருக்கின்றீர்கள். எனவே மனதின் சேவையால் நாள் முழுதும் சேவை. செய்யுங்கள், தளக்காக எவ்வளவு நேரம் தருகின்றீர்களோ அவ்வாறே மனதின் சேவைக்காக எவ்வளவு நேரம் கருகின்றீர்கள்? நீங்கள் இரக்கம் மனம் உள்ளவர்கள்தானே! எனவே துக்கத்திலி ரூப்பவர்கள் மீது இரக்கம் காட்டுங்கள். உங்களைப் பற்றிய பாடலும் உள்ளதல்லவா, தாயும், தந்தையுமானவரே துக்கத்திலிருப்பவர்கள் மீது இறக்கம் காட்டுங்கள். பாப்தாதாவிற்கு சப்தம் காதுகளில் அதிகமாக வந்தடைந்துக் கொண்டே இருக்கின்றது. உடங்களுக்கு குறைவாக கேட்கிறதா! ஆனால் இப்பொழுது கேளுங்கள். அவர்கள் எங்கே செல்வார்கள்? உங்களுடைய

சகோதர, சகோதரிகள் தாளே! எனவே தனக்கும் லாபம் ஈட்டுங்கள். மனதால் பிஸியாக இருங்கள். மேலும் துக்கத்திலி ருப்பவர்களின் துக்கத்தை தூரம் விரட்டுங்கள். கதறிக் கொண்டிருக்கின்றார்கள். உள்ளம் கதறுகின்றது. பாப்தாதாவின் காதுகளில் கேட்டுக் கொண்டே இருக்கின்றது எனவே பாப்தாதா குழந்தைகளை நினைவு செய்கிறார். என்னுடைய செல்ல குழந்தைகளே! தேடித்தேடி கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளே இப்பொழுதாவது இறக்க மனதை செயலில் காட்டுங்கள். தன்னுடைய பிராமணர்களுக்கும் ஒருவருக்கொருவர் சகயோகம் செய்யுங்கள். எப்படிப்பட்ட சம்ஸ்காரம் இருந்தாலும் சரி, இருக்கட்டும், ஆனால் உங்களுடைய வேலை என்ன? சம்ஸ்காரத்தோடு மோதுவதா? அல்லது அந்த மோதலிலி ருந்து விடுவிப்பதா? உங்களுடைய டைட்டில் என்ன? துக்கம் நீக்கி சுகம் தருபவர்கள் நீங்கள் தானே தந்தையோடு துணையாக இருப்பவர்கள் அல்லவா? தந்தையின் சேவையில் துணைவராக இருக்கும் நீங்கள் செய்த சங்கல்பம் என்ன? இந்த உலகை துக்கம், அசாந்தியிலிருந்து மாற்றி சுகம், சாந்தி படைப்போம் என்று தானே சங்கல்பம் வைத்துள்ளீர்கள் அதை செய்ய வேண்டுமல்லவா? கை உயர்த்துங்கள். செய்வீர்களா? பார்த்தால் மட்டும் போதும் நடந்துக் கொண்டுதான் இருக்கிறது ஆனால் இப்போது மாற்ற வேண்டும். பிராமண ஆத்மாக்களாக இருந்தாலும் பார்த்துக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. இவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள் ஆனால் அவர்களையும் வார்த்தைகளாலும் மனதின் எண்ணங்களாலும் மாற்றம் செய்யுங்கள். செய்ய வேண்டும் என்பதல்ல. செய்தே காட்ட வேண்டும். பாப்தாதா கேட்டுக் கொண்டுதானிருக்கின்றார். பாப்தாதா வரையிலும் செய்தி கொடுத்து விட்டீர்கள். பாபாவுடன் செய்தி கொடுத்து விட்ட பிறகு நீங்கள் பாபாவின் சொற்படி நடந்து செல்லுங்கள். பொறுப்பு பாப்தாதாவுடையது. நீங்கள் தான் தந்தையோடு சேவையில் நிமித்தமாக உள்ள முக்கியமான முதன்மையான குழந்தைகள் எனவே எப்பொழுதும் தன்னுடைய மனதை வீண் எண்ணங்களுக்குப் பதிலாக இப்பொழுது துக்கப்படுகின்ற ஆத்மாக்களுக்கு அவர்கள் பிராமணர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, மனதால் தொந்தரவுக்கு ஆளாகியிருக்கும் ஆத்மாக்கள் அனைவருக்கும் சகயோகம் கொடுங்கள். சகயோகி ஆகுங்கள். நல்லது,

இப்பொழுது இன்று முதன் முறையாக வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். அனைவரும் பார்க்கின்றார்கள். பாப்தாதா முதலில் வந்திருப்பவர்களுக்காக இந்த சபையின் நடுவே பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார். அவர்கள் தொடர்பில் இருந்தாலும் சரி. (VIPs) பாபாவைச் சந்திக்க வந்துள்ளீர்கள் எனவே இங்கு பிராமண குடும்பத்தில் பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது பாப்தாதாவிற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. முன்பிருந்தே நீங்கள் (பழையவர்கள்) தொடர்பில் இருக்கிறீர்கள். அவர்களுக்காக பாபா சொல்வதில்லை ஆனால் முதன் முறையாக மதுபன் வந்திருப்பவர்களுக்கு பிராமணர்களின் மத்தியில் விழா கொண்டாடுகின்றார் ஆனால் இனி இப்படி சிந்தியுங்கள். ஸ்தாபனை சமயத்திலிருந்து காலம் தாமதமாக வந்துள்ளீர்கள். எனவே மீதமுள்ள குறைந்த நாளில் தீவிர முயற்சி செய்து நேரத்தை வீணாக்காதீர்கள்; ஆனால் ஒரு வினாடியில் பத்து நிமிடத்திற்கான வேலை செய்யுங்கள் கவனம் கொடுங்கள். தன்னுடைய முயற்சியை தீவிரமாக்கி எவ்வளவு முன்னேற வேண்டுமோ அவ்வளவு முன்னேறலாம். இது உங்கள் அனைவருக்கும் பிராமணர்கள் அனைவர் தரப்பிலிருந்தும் பாபாவின் சார்பாகவும் நல் ஆசை மற்றும் நல் விருப்பங்கள் நல்லது.

சேவை வாய்ப்பு உத்திரபிரதேசம், பனாரஸ் (காசி) மற்றும் கிழக்கு நேபாளம்: நல்லது. யார் முதல் முறையாக வந்திருக்கிறீர்களோ அவர்கள் உட்காரவும், நல்லது உத்திர பிரதேசத்தைச் சேர்ந்த சகோதரிகள் முன்னாடி நிற்கிறார்கள். நன்றாக இருக்கிறது. உபியில் நாலாபுறங்களிலிருந்தும் பக்தர்கள் வருகிறார்கள். உத்திரபிரதேசத்தைச் சேர்ந்த யாராக இருந்தாலும் சரி, பக்தர்களுக்கு பாபாவின் செய்தியை நிச்சயமாகக் கொடுக்க வேண்டும். செய்தி கொடுப்பது உங்களுடைய கடமை, மற்றபடி பாக்கியசாலி ஆவது, எவ்வளவு பாக்கியத்தை உருவாக்க வேண்டுமோ அது அவர்களது கையில் உள்ளது. நம்முடைய தந்தை வந்துள்ளார்; மேலும் நமக்கு தந்தை ஆஸ்தி தருவதற்காக வந்துள்ளார். இந்த செய்தியை நீங்கள் தாவில்லையே என்ற குற்றச்சாட்டு உங்களுக்கு வரக்கூடாது. நாங்கள் சிறிதளவாவது ஆஸ்தியை அடைந்திருப்போம் அல்லவா எனவே உபி காரர்கள் எப்போது அப்படிப் பட்ட சேவை செய்கிறீர்களோ பாபாவிடம் அந்த செய்தி வந்து சேர்கிறது ஆனால் எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு

தூரம் செய்தியைக் கூறக்கூடிய சேவையை உங்களால் எளிதாக செய்ய முடியும். உ.பி காரர்களிடம் பிரம்மாபாபா மற்றும் ஜெகதம்பா அவர்களுக்கு மிகுந்த அன்பிருக்கிறது. எவ்வளவு முறை பிரம்மாபாபா உ.பிக்கு வந்தாரோ அவ்வளவு முறை மும்பைக்கும் வந்திருக்கிறார் ஆனால் உபியிலும் வந்திருக்கின்றார். எங்கே பிரம்மாபாபாவின் உடைய பாதம் பட்டதோ அந்த இடம் எவ்வளவு பாக்கியசாலியான இடம். லக்னொ மற்றும் கான்பூர் இந்த பாக்கியத்தினுடைய அதிகாரியாக ஆகி விட்டார்கள். மும்பையும் ஆகி விட்டது ஆனால் இப்போது உபியினுடைய சேவையின் றை. நேரடியாக அம்மா அப்பாவினுடைய படிப்பினையின் துளி உபியில் விழுந்துள்ளது. இப்பொழுது உபிக்கு மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும். வார்த்தைகள் மூலமாக விழாக்களின் சேவையை செய்துகொண்டுதானிருக்கின்றீர்கள் ஆனால் இப்பொழுது சமயத்திற்கேற்ப பாப்தாதா கூறிக் கொண்டுதான் வந்திருக்கின்றார். முன்பு கூட சொல்லியிருக்கின்றார். வாரிசு மற்றும் பிரபலமான மைக். பிரபலமானவர் என்றால் அவர்கள் வார்த்தை கேட்பவர்கள் மேல் பிரபாவம் ஏற்பட வேண்டும். அந்த மாதிரி மைக் தயார் செய்யுங்கள். அப்படிப்பட்ட வாரிசு குழுவினர் ஒவ்வொரு சென்டரிலும் இருக்கின்றார்கள். உ.பியில் சென்டர் எவ்வளவு அதிகமாக உள்ளது அல்லவா? அந்தளவிற்கு வாரிசுகளை அதிகம் உருவாக்க வேண்டும். எத்தனை சென்டர்கள் என்று கணக்கு பாருங்கள். அதற்கேற்ப எத்தனை வாரிசு உருவாக்கியிருக்கின்றீர்கள். எந்தளவிற்கு வாரிசு உருவாக்க வேண்டுமோ அந்தளவு உருவாக்கி விட்டார்களா இன்னும் உருவாக்க வேண்டுமா? அப்படி உருவாக்க வேண்டுமென்றால் நேரத்தை நம்ப முடியாது, மிகவும் விரைவாக வாரிசு மைக்கானவர்களை, அவர்கள் சொன்னால் அநேக ஆத்மாக்களின் அதிர்ஷ்ட ரேகை ஏற்பட வேண்டும் அதிர்ஷ்டம் திறந்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் நீங்கள் அநேக சேவை செய்திருக்கிறீர்கள். பழைய குழந்தைகள் அதிகம் சேவை செய்துள்ளீர்கள். இப்போது சேவை செய்ய வையுங்கள். அப்படி சேவை செய்பவர்களை தயார் செய்யுங்கள். செய்ய முடியும் அல்லவா? ஆசிரியைகள் (டீச்சர்ஸ்) கையை உயர்த்துங்கள். நல்லது. ஆசிரியைகளும் அதிகம் இருக்கின்றீர்கள். அந்தளவிற்கு அதிகம் தயார் செய்யுங்கள். சென்டர் சிறியதோ பெரியதோ ஒவ்வொரு சென்டரும் சென்டர் என்ற பட்டியலில் வந்து விட்டது அல்லவா? அவர்கள்

சேவையின் நிருபணத்தைக் கண்டிப்பாக காட்ட வேண்டும். ஏனென்றால் நேரத்தை நம்ப முடியாது. எப்போது வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். எனவே பாப்தாதா இங்கு வரும் அனைத்து மண்டலத்திற்கும், வராத மண்டயத்திற்கும் அனைவருக்கும் இப்போது முன்னேற்றிச் செல்லுங்கள் என்பதைத்தான் கூறுகிறார். வகுப்புகளோ நடந்துக் கொண்டு தானிருக்கிறது. எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டுதானிருக்கிறது ஆனால் இப்போது பொறுப்பாளராக ஆகுபவர்களை உருவாக்குங்கள். மேலும் ஒவ்வொரு மண்டலத்திலும் அந்தமாதிரி பொறுப்பாளராக ஆக முடியும் ஆத்மாக்கள் இருக்கிறார்கள் என்பதை பாப்தாதா பார்த்தார். அப்படி உ.பி.யில் ஒன்று பக்தர்களுக்கு நன்மை செய்யுங்கள். பக்தர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் குறைவாக இருக்கலாம் ஆனால் பக்தர்களாக இருந்தாலும் அவர்களுக்கும் பக்தியின் பலனை கொடுங்கள். முயற்சி அதிகம்

செய்கின்றீர்கள் மிக்க நல்லது. ஒவ்வொரு ஜோனையும் பாபா பார்த்துக் கொண்டிருக்கின்றார். கய முயற்சியிலும் முன்னேறிக் கொண்டிருக்கின்றீர்கள் ஆனால் இன்னும் முன்னேறுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்று பாப்தாதா பார்த்தார். பாபாவின் மிக நல்ல செல்ல குழந்தைகள் (சகோதரிகள்) பிரம்மாபாபாவினுடைய நேரடியான பாலனை பெற்ற குழந்தைகள் இருக்கின்றார்கள். செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள், செய்து கொண்டு இருக்கவில்லை என்று அப்படியில்லை. செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள் ஆனால் இன்னும் கொஞ்சம் வேகத்தை அதிகப்படுத்துங்கள். சேவைக்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. யக்ஞ சேவை என்றாலே தனது பாக்கியத்தை உருவாக்கும் சேவையாகும். ஏனென்றால், உங்களிடம் எத்தனை தான் மாணவர்கள் வந்தாலும் சரி, ஆனால் யக்ஞத்தில் எவ்வளவு பேர் ஒன்றாக சேர்கிறார்கள். இவ்வளவு பிராமணர்களின் யக்ஞ சேவை செய்வது எவ்வளவு புண்ணியமாகும். அப்படி சேவை செய்ய நீங்கள் வருகின்றீர்கள் ஆனால் உண்மையில் சொன்னால் புண்ணியத்தை சேமிப்பதற்காக வருகிறீர்கள் என்று சொல்லலாம். இதுவும் புண்ணியத்தை உருவாக்குவதற்கான சாதனத்தின் வாய்ப்பு என்று பாப்தாதாவிற்கு குஷி ஏற்படுகிறது. அப்படி சேவை நன்றாக சேவை

செய்துகொண்டிருக்கின்றீர்கள் இல்லையா? பார்க்கப்போனால் அனைத்து மண்டலங்களும் நன்றாக சேவை செய்கிறார்கள். பாப்தாதாவிடம் எந்த ஒரு ரிப்போர்ட்டும் வருவதில்லை. நன்றாக இருக்கின்றீர்கள் மேலும் நன்றாக சேவை செய்துகொண்டிருக்கின்றீர்கள். சுடைமாக நடந்துக் கொண்டிருக்கின்றது. சேவை சரியாக செய்கிறீர்கள் அல்லவா? அனைத்து தாதிகளும் உங்களுக்காக வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார்கள்.

பாண்டவர்களும் எவ்வளவு வந்துள்ளீர்கள். பாண்டவர்களும் குறைந்தவர்கள் அல்ல. சில சேவை பாண்டவர்களால் மட்டுமே செய்ய முடியும். எனவே பாண்டவர்களுக்காகவும் பாப்தாதாவும் மதுபன் வாசி அனைவரும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்கள். நல்லது. 10-துறையைச் (விங்ஸ்) சேர்ந்தவர்கள் வந்துள்ளனவர்: நல்லது எழுந்து நில்லுங்கள் உங்களுடைய கொடி மற்றும் பெயர் பலகை எல்லாம் பாப்தாதா பார்த்து விட்டார். எனவே கீழே வைத்து விடுங்கள். இங்கு வந்துள்ள அனைத்து துறையினரையும் பாப்தாதா பார்க்கின்றார். எப்போதிலிருந்து துறைகளின் சேவை உருவாக்கப்பட்டதோ அப்பொழுதிலிருந்து ஒவ்வொரு துறையிலும் சேவையின் ஊக்கம் மிக நன்றாக இருக்கிறது. நாம் செய்து தான் ஆக வேண்டும் என்று ஒவ்வொரு துறையினரும். நாமே செய்ய வேண்டும் என்ற பொறுப்பை உணர்ந்து செயல்படுகின்றீர்கள். எனவே ஒவ்வொரு துறையினரும் சேவை செய்து தன்னுடைய எண்ணிக்கையை சென்டரில் அதிகப்படுத்திக் கொண்டே இருக்கின்றீர்கள். அதுபற்றிய செய்தியும் பாப்தாதாவிடம் வந்துகொண்டிருக்கின்றது. இப்போது ஒரு விசயம் அனைத்து துறையிலும் விசேஷமாக நிமித்தமாக உள்ள ஆத்மாக்கள் யாரை விசேஷமாக நிமித்தமானவர்கள் என்று சொல்வீர்களோ அவர்களுக்கு சேவை செய்து ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு நாளைக் குறித்து ஆங்காங்கு நிமித்தமான ஆத்மாக்களைக் கண்டுபிடித்து வந்து ஒன்று சேருங்கள். முதலில் ஜோனில் அவர்களை ஒன்று சேருங்கள் பிறகு மதுபனில் பார்க்கலாம் ஆனால் முதலில் எந்த ஜோனில் அதிகமான சேவாதாரிகள் இருந்து செய்கின்றீர்களோ அந்த ஜோனில் அனைத்து ஜோனுக்காகவும் முக்கிய நாளைக் குறித்து அந்த ஆத்மாக்களை ஒன்று சேருங்கள். ஒருவரை ஒருவர் பார்க்கும்போதும்

கூட உற்சாகம் வரும். இவரும் செய்கின்றார் நாமும் செய்வோம். மேலும் சேவையும் அதிகரிக்கும். எனவே ஊக்கம் உற்சாகத்தை ஏற்படுத்துவதற்காக முதலில் எந்த ஜோனில் முக்கியமான துறையில் சேவை நடைபெறுகிறதோ அங்கிருந்து மற்ற அனைவரும் ஆலோசனை பெற்று நானைக் குறியுங்கள். அங்கு முதலில் ஒன்று சேருங்கள். பிறகு மதுபனிற்கு அழைத்து வாருங்கள் இதை இன்னும் செய்யவில்லை. அப்போது எத்தனை மைக்கு தயாராகி யுள்ளார்கள் என்று தெரியவரும், எத்தனை சகயோகிகள் தயாராகியுள்ளார்கள். மேலும் எவ்வளவு பேர் ஒருவருக்கொருவர் ஒன்றிணைந்து சேவை செய்கின்றார்கள். ஒரு ஜோனில் உள்ள ஒரு துறை இன்னொரு துறையினருக்கும் சகயோகம் செய்ய முடியும். அப்போது ஊக்கம் ஏற்படும். ஒருவர் ஒருவரைப் பார்த்து செய்தி கேட்டு உற்சாகம் மேலும் அதிகரிக்கும். மதுபனில் கொண்டுவருவதற்கு முன்பாக அங்கேயே ஒன்று சேருங்கள். பிறகு பார்க்கலாம். சரியா! இது சரி என படுகிறதா கை உயர்த்துங்கள். உங்கள் அனைவரையும் ஒன்றாக எழுப்பிவிட்டார்கள். பாப்தாதா ஒவ்வொரு துறையினருக்காகவும் தனித்தனியே வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார் உங்களுடைய ஊக்கம் உற்சாகத்தை பார்த்து! சரியா, நல்லது.

(ஒவ்வொரு துறையையும் சார்ந்தவர்களையும் பாபா கை உயர்த்த வைக்கின்றார்).

<u>வியாபாரத் துறை</u>: பாப்தாதா உங்களை பார்த்து உங்களுக்கு வாழ்த்துக்களைத் தருகின்றார். மேலும் சேவைக்கான திட்டங்களும் கொடுக்கப்பட்டுள்ளது. உங்கள் அனைவருக்கும் விசேஷமான வாழ்த்துக்கள்.

<u>கல்வித்துறை</u>: விசேஷமாக உங்களுக்கும் பாப்தாதா ஊக்கம், உற்சாகத்திற்கான இனிப்பு வழங்குகின்றார்.

<u>இளைஞர் துறை</u>: இளைஞர்கள் அப்படிப்பட்ட ஒரு குழுவைத் தயார் செய்யுங்கள். இதில் சகோதரிகளும் இருக்கின்றீர்கள் அல்லவா! நல்லது இப்படி ஒரு குழுவைத் தயார் செய்யுங்கள். அதில் உள்ளோர்கள் எல்லோரும் பாபாவின் குழந்தை ஆன நாள் முதலாக இந்த நியமங்கள்

மரியாதைகளைக் கடைப்பிடித்து வாழ்பவர்களாக இருக்க வேண்டும். எவ்வளவு மரியாதைகள் படி. நடந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது ஒவ்வொருவருக்கும் பதிவேடு வைக்க வேண்டும்.அப்படி ஒரு நல்ல சிறிய குழுவை தயார் செய்யுங்கள். அவர்களை கொண்டு சென்று அரசாங்கத்திற்கு முன்பாக நிறுத்துங்கள். இவர்கள் மரியாதைபடி நடப்பவர்கள். இப்படிச் செய்தால் சேவை நடைபெறும்.

சமயத்துறை மற்றும் அரசியல் துறை: நல்லது இவர்களும் வந்திருக்கின்றார்கள்.

விளையாட்டுத் துறை: நீங்கள் சொன்னீர்கள் இப்போது என்ன செய்ய வேண்டும். அதை செய்ய வேண்டும். பிறகு பாப்தாதா அந்த ரிசல்ட் பார்த்து மதுபனில் அழைப்பார். மற்றபடி அனைத்து. துறையிலும் பாப்தாதா கேள்விப்பட்டார். நன்றாக சேவையில் மென்மெலும் முன்னேறிக் கொண்டிருக்கின்றீர்கள். நல்ல நல்ல திட்டங்களும் போடுகின்றீர்கள் அதற்கான வாழ்த்துக்கள்!!

பெண்கள் துறை: பெண்கள் துறையில் எத்தனை கமல மலர்கள். குடும்ப வாழ்க்கையில் இருந்துக் கொண்டே தாமரை மலர் போல வாழ்ந்துக் கொண்டிருப்பவர்கள் இருக்கின்றீர்கள், அப்படி எத்தனை பேரை உருவாக்கியுள்ளீர்கள். ஆரம்பத்திலிருந்து சென்டரில் சேவை மூலமாக எத்தனை பெண்கள் அப்படி உருவாகியுள்ளார்கள். பெயர் பட்டியல் வைத்துள்ளீர்களா இதற்கு தலைவி யார். (சக்கரதாரி சகோதரி) நல்லது எத்தனை குடும்பத்தை உருவாக்கியுள்ளீர்கள். அப்படி ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும் பெயர் பட்டியல் பெற்று பிறகு கண்டிப்பாக அனுப்ப வேண்டும். ஏனென்றால் மக்கள் நடுவே இதுவரையிலும் கூட இப்படி நினைக்கிறார்கள். அங்கே போனால் குடும்பத்தை விட்டு விட வேண்டுமோ என்று. இப்போது முன்பை விட அந்த எண்ணம் குறைந்துள்ளது ஆனால் ஆங்காங்கே இப்போதும் அந்த எண்ணம் உள்ளது. எனவே சேவை மூலமாக எத்தனை பேர் அப்படி உருவாகியுள்ளார்கள் ரிசல்ட் எடுங்கள். ஏனென்றால் அரசாங்கத்தில் ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியே டிபார்ட்மெண்ட் செயல்படுகிறது. அவர்களும் இப்படி கேட்கின்றார்கள் இந்த துறையில் நீங்கள் என்ன செய்து ரிசல்ட் வைத்துள்ளீர்கள். எனவே இந்த ரிசல்ட்டும் வைக்க

வேண்டும். பட்டியல் எடுக்க வேண்டும். ஒவ்வொரு மண்டலமும் அவரவரது சென்டரிலிருந்து எத்தனை பேர் உருவாகியுள்ளார்கள். அந்த அனைத்து நம்பரையும் ஒன்று சேர்த்து கொடுத்தால் இவர்களுக்கு அந்த உதவி கிடைக்கும். சரியா!

கிராமியத் துறை: மற்ற துறைகளைக் காட்டிலும் நன்றாகவே சேவை செய்கின்றார்கள் ஏனென்றால் கிராம வாசிகளுக்கு ஓய்வு என்பதே கிடையாது. தன்னுடைய வேளையில் அதிகமாகவே பிஸியாக இருக்கின்றார்கள். எனவே நீங்கள் அவர்களுக்கு முக்கியமாக குஷியை அனுபவம் செய்ய வையுங்கள். சொற்பொழிவு செய்து கொண்டுதானிருக்கின்றீர்கள், ஆனால் கிராமவாசிகள் அனுபவம் செய்ய வேண்டும். இந்த கிராம சேவையைச் சார்ந்த அனைவரும் எங்களுக்கு அதிகமான குஷியைக் கொடுத்துள்ளார்கள் என்பதை உணர வேண்டும். இதனால் நாங்கள் சுகமாகவும் இருக்கின்றோம், மகிழ்ச்சியாகவும் இருக்கின்றோம். இப்படிப்பட்ட ரிக்கார்ட்டை உருவாக்க வேண்டும். எத்தனை கிராமங்களில் சேவை செய்துள்ளீர்கள், அதில் எத்தனை பேர் அனுபவம் செய்துள்ளார்கள் ஏனென்றால் அனுபவம் செய்வது ஒருபோதும் மறக்காது. அனுபவம் செய்யுங்கள்; செய்ய வையுங்கள். அப்போது இந்த ரிசல்ட்டையும் வையுங்கள். எத்தனை கிராமங்களில் எத்தனை ஆத்மாக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள் மேலும் தொடர்பில் இருக்கின்றார்கள். நல்லது.

கலைத்துறை: கலைத்துறையைச் சார்ந்தவர்கள் தன்னுடைய கலைஞருக்கு சேவை நன்றாக செய்துகொண்டிருக்கின்றீர்கள். பாப்தாதா பார்க்கின்றார். சில கலைஞர்கள் யகஞத்தின் சகயோகத்தில் வந்துள்ளார்கள். தன்னுடைய சேவையும் செய்து கொண்டிருக்கின்றார்கள். தனது அனுபவங்களால் பிறரையும் கொண்டுவந்துக் கொண்டிருக்கின்றார்கள். சேவையிலும் முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள். மிக நன்றாக இருக்கின்றது. பாப்தாதா கூறியிருக்கின்றார்; ஸ்தாபனைக்கான இந்த நேரத்தில் உங்களிடம் கலைஞர்களும் அனுபவம் பெற்று பிறருக்கு அந்த அனுபவத்தைச் சொல்ல வேண்டும். அதையே செய்து கொண்டிருக்கின்றார்கள். மேலும் செய்து கொண்டே இருங்கள். அதனால் பெயர் பரவ வேண்டும் பிரம்மா குமார். குமாரிகள் சேவை செய்து கலைஞர்களின் வாழ்வில் நன்

நடத்தையை அனுபவம் செய்ய வைக்கின்றார்கள். நல்ல நல்ல கலைஞர்கள் வந்து கொண்டிருக்கின்றார்கள் அவர்கள் முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள்; பிறருக்கும் தனது அனுபவத்தைக் கூறி மேலும் முன்னேற்றிக் கொண்டே செல்கின்றார்கள். முன்னேறுங்கள் முன்னேற்றிக் கொண்டே செல்லுங்கள்.

ஸ்பார்க் துறையைச் சார்ந்தவர்களும் அவரவரது காரியத்தை செய்து கொண்டிருக்கின்றீர்கள் பாப்தாதா பார்க்கின்றார். ஒவ்வொருவரும் அவரவரது துறையில் சேவை செய்து ஆத்மாக்களை அனுபவி ஆக்கிக் கொண்டிருக்கின்றீர்கள். நல்ல நல்ல சிந்தனை மூலமாக அவர்களது புத்தியை உயர்த்திக் கொண்டிருக்கின்றீர்கள். தாரணையும் செய்ய வைக்கின்றீர்கள். எனவே ஒவ்வொரு துறை யினருக்காகவும் பாபா சொல்கின்றார். சேவை செய்துகொண்டிருக்கின்றீர்கள். சேவைக்கு துணையாகவும் மாற்றிக் கொண்டிருக்கின்றீர்கள் மேலும் அதிகமான சேவைக்கான துணைகளைக் கொண்ட நல்லதொரு குழுவை தயார் செய்யுங்கள். அப்படிப்பட்ட ஒரு குழுவை தயார் செய்து அரசாங்கத்திற்கு முன்பு கொண்டு செல்லுங்கள். அவர்கள் தன்னுடைய காரியத்தில் ஏற்பட்ட நல்லதொரு மாற்றத்தை ரிசல்ட்டை சொல்ல வேண்டும். ஒவ்வொரு துறையிலும் அரசாங்கத்தில் கிளை உள்ளது. அவர்களுக்கும் சேவை செய்யுங்கள். மேலும் மக்களுக்காகவும் சேவை செய்யுங்கள். நல்லது.

இரட்டை அயல் நாட்டு சகோதர சகோதரிகள்: 80-தேசங்களிலிருந்து 750 சகோதர சகோதரிகள் இரட்டை அயல்நாட்டவரின் இப்போதைய நிகழ்ச்சிகளை பாப்தாதா பார்த்தார். ஒவ்வொரு குழுவிலும் மிக அன்புடன் முயற்சி செய்கின்றீர்கள். மேலும் மதுபன் வாயு மண்டலத்தின் அனுபவம் அநேகருக்கும் உள்ளது. மேலும் தனது முயற்சியைத் தீவிரமாகவும் செய்து வருகின்றீர்கள். எனவே பாப்தாதா இப்போது இந்த குழுவினருக்கு பயிற்சி அளிப்பவர்கள் மற்றும் பயிற்சி பெறுபவர்கள் இருவரிடமுள்ள ஊக்கம் உற்சாகத்தைப் பார்க்கின்றார். ஒரே சமயத்தில் எவ்வளவு லாபத்தை பெறு கின்றார்கள். ஒரு பரிவாரத்தை சந்திப்பது வேறு எங்குமே இவ்வளவு பெரிய குரூப்பை சந்திப்பது மதுபனை தவிர வேறு எங்குமே கிடையாது.

இவர்கள் நன்கு புத்திசாலித்தனமாக செய்துள்ளார்கள். மதுபனில் நிகழ்ச்சி வைத்துள்ளார்கள். பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி அநேகரிடம் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் அனுபவத்தை பாப்தாதா கேட்டார். இந்த பூமியில் என்னவெல்லாம் அறிவுரைக் கிடைக்கின்றதோ அதனுடைய உணர்வை மிக விரைவாக அனுபவம் செய்கிறார்கள். வாயு மண்டலம் அப்படி உள்ளது. நல்ல வாயு மண்டலம் கிடைத்துள்ளது. நல்ல குழுவும் கிடைத்துள்ளது. எவ்வளவு நேரத்திற்கு பிறகு ஒவ்வொரு குழுவும் சந்திக்கின்றனர். எல்லோரும் ஒன்றாக சந்திக்கின்றனர். இங்கே இருப்பது நல்லவர்கள் தொடர்பில் நடுவே இருப்பது பாப்தாதா மற்றும் தனக்கேற்படக்கூடிய புத்துணர்ச்சி இவற்றை எல்லாம் பார்க்கும்பொழுது பாப்தாதாவிற்கு நன்றாக இருக்கிறது ஆனால் இங்கே கிடைத்த இவ்வளவு லாடம் பலன் அத்தனையும் நடைமுறையில் கடைபிடித்து நீங்கள் பிறருடைய ஊக்கம் உற்சாகத்தை அதிகப்படுத்துவதற்காக நிமித்தமாக இருங்கள். இருக்க முடியுமா? ஏனென்றால் நீங்கள் செய்துள்ள திட்டம் அதை பாப்தாதாவும் சிறிதளவு கேட்டார் ன்றாக இருக்கிறது. செய்வதற்கான தேதியும் இருக்கிறது பாபாவிற்கு மகிழ்ச்சி ஏனென்றால் இரட்டை அயல் நாட்டவர் தன் மீது நன்றாக சுவனம் தருகிறார்கள். இப்பொழுது ஒரு சந்தன மரமே உருவாகி விட்டது. விதவிதமான தேசத்தை சார்ந்த கிளைகள் மதுபனில் வந்துள்ளீர்கள் ஆனால் இங்கே வந்ததால் ஒரு சந்தன மரமாக உருவாகி விட்டீர்கள், பாப்தாதா பார்க்கின்றார். இங்கு வந்துள்ள அனைவரும் பிராமண பண்பாட்டை நன்கு கடைபிடித்து வருகிறீர்கள். மேலும் கடைபிடித்து வருவீர்கள். இது நிச்சயிக்கப்பட்டது. அதைப்பற்றி சிந்திக்க வேண்டியதேயில்லை. டிராமாவில் நிச்சயிக்கப்பட்டது. ஓம் சாந்தி முக்கியமாக ஆசிரியர்களுக்கு பாப்தாதா விசேஷமாக வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!

இன்று மதுபனில் உள்ளவர்கள் மேலே இருப்பவர்கள், கீழே இருப்பவர்கள். வெளியிலி குப்பவர்கள் ஆனால் மதுபனில் படிப்பு படிப்பவர்கள் அனைவரும் எழுந்து நில்லுங்கள். எத்தனை பேர் வந்துள்ளீர்கள். (முரளி டைப் செய்யக்கூடிய ராஜு சகோதரரைப் பார்த்து) நீங்களும் எழுந்து நில்லுங்கள். எவ்வளவு வேலை செய்கின்றார் பாருங்கள். எல்லாவற்றிலும் பெரிய சேவை இவர் செய்கின்றார்.

அனைத்து பிராமணர்களுக்கும் உடனடியாக அனுப்பி வைக்கின்றார். உங்களுக்கு வாழ்த்துக்கள் விசேஷமான வாழ்த்துக்கள்.

மதுபனைச் சார்ந்தவர்கள் இல்லையென்றால் உங்களை யார் உபசரிப்பது. வசதியாக வருகின்றீர்கள். நன்கு உணவு கிடைக்கிறது. புத்துணர்ச்சி பெறுகின்றீர்கள். எனவே மதுபன் வாசிக்காக கை தட்டுங்கள். பாப்தாதாவிற்குத் தெரியும். இடம் குறைவாக இருப்பதால் மதுபனைச் சார்ந்தவர்கள் சற்று தொலைவில் கேட்க வேண்டியதுள்ளது. இதுவும் ஒரு சேவைதான், மதுபனைச் சார்ந்தவர்கள் இந்த சேவையும் செய்கின்றார்கள். பிறருக்கு சுகம் தருகிறார்கள். சுக வள்ளல் ஆகி விட்டீர்கள் அல்லவா? எனவே மதுபனைச் சார்ந்தவர்களின் வேலையே சுகம் தருவது, சுகம் பெறுவதாகும். ஏனென்றால் வருகின்ற அனைவருக்கும் அனுபவத்துடன் நீங்கள் சொல்கிறீர்கள். அந்த அனுபவத்தால் ஒருவருக்கொருவர் லாபம் ஏற்படுகிறது. லாபம் அநேக விதமாக கிடைக்கிறது ஆனால் நேரம் குறைவாக இருக்கும் காரணத்தால் அனுபவம் குறைவாகச் சொல்கிறார்கள் ஆனால் மதுபனை சார்ந்தவர்களுக்கான டைட்டில் என்னவாக உள்ளது. சுகம் அடைவது சுகம் பெறுவது. சுகமே கொடுங்கள் சுகமே பெறுங்கள். சுகவள்ளலின் குழந்தைகள் தந்தையைப் பின்பற்றுங்கள். நல்லது.

அனைவரையும் சந்தித்தாகி விட்டது. அநேக விதமான ஏற்பாடுகளை செய்து வந்துள்ளீர்கள். ஒவ்வொரு துறையைச் சார்ந்தவர்களும் அதிகமான ஏற்பாடுகளை செய்துவந்துள்ளீர்கள். பாப்தாதாவிற்கும் தெரிகிறது, ஆனால் நேரத்தையும் பார்க்க வேண்டும். எனவே அனைவருக்கும் இப்பொழுது தீவிர முயற்சியாளர் ஆவதற்காக, முன்னதாகவே பன்மடங்கு வாழ்த்துக்களை பாபா தெரிவித்துக் கொள்கின்றார். இப்போது சிவராத்திரியும் வர இருக்கின்றது. இங்கே வருபவர்கள் வீட்டில் அமர்ந்து பார்ப்பவர்கள். சென்டரில் அமர்ந்து பார்ப்பவர்கள் கேட்பவர்கள் முரளி மூலமாக கேட்பவர்கள்.

முரளி எல்லோருமே கேட்கின்றீர்கள் அல்லவா இந்த முறை யாரெல்லாம் வந்துள்ளீர்களோ அதிலும் தினசரி முரளி கேட்பவர்கள் சிலர் கேட்காதவர்களும் இருக்கின்றீர்கள் அவர்கள் கை உயர்த்துங்கள். யாரும் இல்லை. நல்லது, முரளியை படிக்காதவர்கள். கேட்காதவர்கள்

எழுந்து நில்லுங்கள். சிலர் மட்டுமே பரவாயில்லை ஆனால் இனி சமயம் கிடைக்கும்போதெல்லாம் பாபாவின் மகா வாக்கியம் பரந்தாமத்திலிருந்து பாபா வருகின்றார். சூட்சும வதனத்திலிருந்து பிரம்மாபாபா வருகின்றார் வந்து மகா வாக்கியம் உச்சரிக்கின்றார் எனவே முரளியை ஒருநாளும் ஒருபோதும் தவற விடக்கூடாது. அப்படித் தவறினால் பாப்தாதாவின் மன சிம்மாசனம் உங்களை விட்டுப் போய் விடும். எனவே முரளியைத் தவறவிடுபவர்கள் உணருங்கள். நாம் மூன்று ஆசனத்திற்கு அதிகாரி அல்ல. இரண்டு ஆசனத்திற்குத்தான் அதிகாரி அதுவும் அவரவர் சக்திக்கேற்பதான் மாறுவீர்கள். சக்திக்கேற்பத்தான் ஆவீர்கள் எனவே முரளி, முரளி, முரனிய ஏனென்றால் முரளியில் தினசரி டைரக்ஷன் கிடைக்கிறது நான்கு பாடத்திற்குமான டைரக்ஷன் கிடைக்கிறது எனவே தினசரி டைரக்ஷன் பெற வேண்டுமல்லவா யாரெல்லாம் முரளியைக் கேட்கத் தவறுகின்றீர்களோ காரணங்கள் பல இருந்தாலும் எப்படியாவது முரளி கேட்க வேண்டுமென்பதற்காக நேரத்தை ஒதுக்குங்கள். ஏதேனும் வழியைக் கண்டுபிடியுங்கள். இன்றைய அறிவியல் சாதனங்கள் எல்லாம் உங்களுக்காகத்தான் உருவாகியுள்ளது. பிரம்மாபாபாவில் பிர வேசத்திற்கு 100-ஆண்டுகள் முன்னதாகத்தான் இந்த அறிவியல் உருவானது. உங்களுக்கும் அது வேலைக்கு உதவும். எனவே அதனை பயன்படுத்துங்கள்; பலனை அடையுங்கள்! எதிரில் அமர்ந்திருப்பவர்கள் மற்றும் ஆங்காங்கே இருந்து கேட்பவர்களுக்கும் பாப்தாதாவின் உளப்பூர்வமான அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்!

தாதி மார்களுடன்: (தாதி ஜானகிஜியுடன்) உளப்பூர்வமாக சேவை செய்கின்றீர்கள், விசேஷமாள சேவை செய்கிறீர்கள் எங்கே உள்ளம் ஈடுபடுமோ அங்கே அனுபவம் இருக்கும். மேலோட்டமாக. வார்த்தைகளால் சொல்வது அது மனதின் அனுபவத்தை குறைவாகவே ஏற்படுத்துகிறது. உங்களுடைய சேவைக்கான பலனும் கிடைக்கிறது. இது உங்களுக்குக் கிடைத்துள்ள வரதானம். (குல்ஜார் தாதி மிகவும் நல்லவர்) ஒவ்வொருவரும் நல்லவர்தான் இவர்கள் எல்லோரும் நல்லவர்கள் தான்.

மோகினி சகோதரி மற்றும் அவர்களுடைய மருத்துவர்கள்: பாப்தாதா கேள்விப்பட்டார் குறைவாக சிந்தியுங்கள். சிரிக்கிறார். சிந்திக்கவும்

செய்கிறார்கள், முகம் சிவந்திருக்கிறது ஆனால் சிந்திப்பது சிறிது இருக்கத்தான் செய்கிறது, அது உடலைப் பாதிக்கிறது. பாபா நன்றாக்கி விடுவார் என்று மட்டும் சிந்தியுங்கள். இப்போது இரட்டை மருத்துவர் ஆகுங்கள். ஒற்றை மருத்துவர் அதிகம் இருக்கின்றார்கள். நீங்கள் இரட்டை மருத்துவர் ஆக வேண்டும் என்பது விருப்பம் நீங்கள் பெயர் அட்டை அச்சடிக்கும்பொழுது பின்பகுதி காலியாக இருக்கிறது. அதில் மனதின் வியாதிக்காக எழுதி முகவரி எழுதுங்கள். அருகே உள்ள சென்டருக்குச் சென்று தியானம் கற்றுக் கொண்டு மனதை ஆரோக்கியமாக மாற்றிக் கொள்ளட்டும். ஏனென்றால் டாக்டர் பெயரைப் படித்த உடனேயே அவர்கள் மனதில் டாக்டர் சொன்னதை செய்ய வேண்டுமென்று எண்ணம் வருகிறது. எனவே நீங்கள் வீட்டில் அமர்ந்தபடியே இங்கு சேவை செய்ய முடியும். இரட்டை மருத்துவர் ஆகி விடலாம். நீங்கள் செய்ய வேண்டாம்; பிறர் செய்வார்கள். மிக சுலபம் தான், யார் வந்து கேட்டாலும் அட்ரஸ் கொடுத்து விடுங்கள். பெயர் அட்டை அச்சடித்து வைத்துக் கொள்ளுங்கள். அப்படி இரட்டை மருத்துவர் ஆகுங்கள். மருந்தும் ஆசிர்வாதமும் இரண்டின் மூலமாகவும் மாற்றம் தென்படும். பாபாவிடமிருந்து இரண்டுமே கிடைக்கும். இப்படி இரட்டை மருத்துவர் ஆவதற்கான பரிசு வழங்கப்படுகிறது.

பரதாதியுடன்: உங்களுடைய விசேஷமே முகம் சதா மலர்ந்திருப்பதுதான். (பாபாவின் மகள்) இரட்டை மகள் லௌகீகத்திலும், அலௌகீகத்திலும் மற்றும் பரலௌகீகத்திலும் மூன்றும் ஆகி விட்டீர்கள்.

மூன்று சகோதரர்களுடன்: (மூவரும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டு இருக்கிறீர்களா? (கொஞ்சம் கொஞ்சம் என்கின்றனர்) சிறிது சிறிது அல்ல, தொலைபேசி மூலமாகவும் சந்திக்கலாமே? அயல் நாட்டில் இது நன்றாக நடக்கிறது. எந்த செயலானாலும் தொலைபேசி மூலமாகவே மீட்டிங் செய்து முடித்து விடுகிறார்கள். மிக நன்றாக இருக்கிறது. அவர்களின் விதியைப் பாருங்கள். ஒருவருக் கொருவர் சந்திப்பு செய்து கொண்டே இருங்கள். தொலைபேசி மூலமாகவும் சந்திக்கலாம்.

சகோதரர் பூபாலுடன்: யக்ஞத்தின் நாலாபுறமும் நல்ல விதமாக பாதுகாத்து வந்துள்ளீர்கள். கவனம் வையுங்கள் வலம் வந்துக் கொண்டே இருங்கள்.

இந்தூரைச் சார்ந்த முக்கிய பிரமுகர்களுடன்: தன்னுடைய வீட்டிற்கு வந்திருப்பதால் ஆனந்தம் ஏற்படுகிறது அல்லவா! உங்களுடைய வீட்டிற்குத்தான் வந்துள்ளீர்கள். வேறிடத்திற்கு அல்ல! இது பரமாத்மாவின் வீடு எனவே குழந்தைகளுக்கும் வீடுதான் எனவே உங்கள் வீட்டுக்குத்தான் வந்துள்ளீர்கள். எப்போதுமே தன்னுடைய வீட்டில் கவலையில்லாத ராஜாவாக இருங்கள். பயம் வேண்டாம். பயமற்ற ராஜாவாக இருங்கள். வேலை இருந்துக் கொண்டுதானிருக்கும் ஆனால் நீங்கள் கவலையில்லாத ராஜாவாக மாற்றுங்கள். காலையில் எழுந்து பாபாவை நினைப்பீர்கள் அல்லவா! அப்பொழுது முழு நாளும் நல்ல விதமாக முடிவடையும். காலையில் எழுந்து கண்விழித்தவுடனேயே மேரா பாபா என்று நினையுங்கள்,

தர்மத்தலைவர்களுடன்: உங்களைப் பார்ப்பதால் பிறருக்கும் ஊக்கம் வருகிறது. ஏன், இவர்களுக்கு என்ன கிடைத்தது. மேலும் உங்களுடைய அனுபவம் அநேகருக்கு அனுபவத்தை ஏற்படுத்தும், நிமித்தமாக இருப்பீர்கள் (டிரினிடாடைச் சேர்ந்த பிரம்மதேவ் சாமிஜி) கீதையின் பகவான் யார் என்பதை ஊர்ஜிதம் செய்கிறீர்களா? இனி முரளி படியுங்கள்.

சோலார் திட்டத்திற்கான வரைபடம் பாப்தாதாவிற்கு காண்பிக்கப்படுகிறது. நிச்சயபுத்தியுடன் செயல்படுங்கள். அனைவரும் இணைந்து ஒரே சங்கல்பம் வையுங்கள் நடந்தே தீரும். (சகோதரர் ரமேஷ் உடன்) உங்களுக்கு சொல்லப்பட்டிருந்தது இந்த விசயம் அனைத்து பிராமணர்களுக்கும் தெரிய வர வேண்டும். புத்தகத்தின் கட்டுரைகளை எல்லோரும் படிப்பதில்லை.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## **02.03.2011 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்**

## இந்த பிறந்த நாளில் அனைவரும் ஒருவருக்கொருவர் ஊக்கம் உற்சாகத்தை வழங்கி சகயோகியாகி வீண் எண்ணங்கள் என்னும் எருக்கம் பூவை அர்ப்பணம் செய்யுங்கள், மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற சுயமரியாதையின் இருக்கையில் அமர்ந்து இதில் நம்பர்-1 பரிசைப் பெறுங்கள்!

இன்று நீங்கள் அனைவரும் மற்றும் நாலாபுறமும் இருக்கின்ற அனைத்து குழந்தைகளும் அமிர்தவேளையில் இருந்தே மிகவும் அன்பு நிறைந்த வாழ்த்துக்களை தன்னுடைய அன்பு மற்றும் குஷியின் மூலமாக வழங்கிக் கொண்டிருக்கின்றீர்கள். எனவே பாபாவும் தேடிக் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்காக இந்த பிறந்த நாளில் வாழ்த்துக்களை வழங்குவதற்காக வந்துள்ளார். ஒவ்வொரு குழந்யையும் பாபாவிற்கு மிகவும் பிரியமான மற்றும் மனதிற்கு உகந்த குழந்தைகள் தான். எனவே பாப்தாதாவினுடைய கரங்களையே மாலையாக்கி உங்கள் அனைவருக்காகவும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார்.

பாப்தாதா பார்க்கின்றார், நீங்கள் அனைவரும் எதிரில் வாழ்த்துக்கள் தருகின்றீர்கள். பெறுகின்றீர்கள், ஆனால் நாலாபுறமும் உள்ள குழந்தைகள் அவரவரது இடங்களில் இருந்த படியே வாழ்த்துக்களைத் தருகின்றார்கள். மேலும் பாபாவும் உள்நாடு மற்றும் அயல் நாட்டில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் மிகுந்த சிநேகத்துடன்

வாழ்த்துக்களைத் தருகின்றார். பாப்தாதா பார்க்கின்றார், ஒவ்வொரு குழந்தையும் மலர்ந்த முகத்துடன் அன்புக் கடலில் நீந்திக் கொண்டிருக்கின்றார்கள். தந்தைக்கு குஷி என்னவென்றால் பாபா ஒருபொழுதும் தனியாக வருவதில்லை. குழந்தைகளுடனே வருகின்றார், ஏனென்றால் பாபா வருவதே யக்ஞத்தைப் படைப்பதற்காகத்தான். அப்படி என்றால் யக்ஞத்தில் இருப்பவர் யார்? பிராமணர்கள் தானே! எனவே பாபா தனித்து வருவதில்லை ஆனால் குழந்தகளுடன் வந்திருக்கின்றார். ஏனென்றால் இந்த ஜெயந்தி மட்டும் தான் மற்ற அனைத்து ஜெயந்திகளைக் காட்டிலும் அதியசமானதாகும். முழு கல்பத்திலும் இந்த ஒரு ஜெயந்திதான் தந்தை மற்றும் குழந்தைகளுக்கு ஒரே நாளில் பிறப்பு கிடைக்கின்றது. எனவே இந்த ஜெயந்தியைத்தான் வைரத்திற்குச் சமமான ஜெயந்தியாக சொல்லப்படுகிறது. பாபாவும் விசேஷமாக ஆதி ரத்தினங்களான குழந்தைகளுக்கு விசேஷமான வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். எனவே நீங்கள் அனைவரும் இன்று வாழ்த்துக்களைத் தருவதற்காகவும், பெறுவதற்காகவும் வந்துள்ளீர்கள், தந்தை அளித்துள்ள வாக்கே கூடவேயிருப்போம், கூடவே பறந்து செல்வோம். கூடவே வருவோம். மேலும் பிரம்மாபாபாவுடனே ராஜ்யம் செய்வோம். கூடவே இருப்போம் என்பதுதான். நீங்களும் என்ன சொல்கின்றீர்கள். நாங்களும் எங்கே இருந்தாலும் பாபா எங்கிருப்பாரோ அங்கே நாங்களும் இருப்போம் இது தான் குழந்தைகளுக்கும், தந்தைக்கும் மற்றும் தந்தைக்கும் குழந்தைகளுக்கும் இடையே உள்ள வாக்காகும். இங்கு நினைவார்த்தமான தில்வாலா கோவிலும் உள்ளது. அனைவருடைய உள்ளங்களிலும் திலாராம் இணைந்திருக்கிறார் அல்லவா? மேலும் பாபா எப்போதுமே குழந்தைகளுக்கு சொல்கின்றார். ஒருபொழுதும் தனிமையில் இருக்காதீர்கள், சதா கூடவே இருங்கள். கூடவே தான் இருக்க வேண்டும். தனிமையில் இருநதால் மாயை தன்னுடைய வாய்ப்பை எடுத்துக் கொள்ளும். கூடவேயிருந்தால் நீங்கள் லைட் ஹவுஸுடன் இருப்பீர்கள். அதற்கு முன்னால் மாயை வெகு தூரம் ஓடியே சென்று விடும். அருகே கூடவே வரமுடியாது. எனவே குழந்தைகளுக்கு தந்தையிடம், தந்தைக்கு குழந்தையிடமும் சதா கூடவே இருப்போம் என்ற வாக்கு (உறுதிமொழி) உள்ளது. உங்களுடைய வாக்கும் அதுதான் அல்லவா? கூடவே இருப்போம்.

கூடவே இருக்கின்றோம்! கூடவே இருப்பது பிடித்திருக்கின்றது அல்லவா? இதற்காக கை உயர்த்துங்கள்.

பாப்தாதா பார்க்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் பாபாவுடன் மிகவும் மனதில் உள்ள விசயங்களை எல்லாம் பேசுகின்றார்கள். பொதுவாக நேரம் கிடைப்பதில்லை, ஆனால் அமிர்த வேளையில் ஒவ்வொருவரும் மிக இனிமை இனிமையாக உள்ளத்தின் விசயங்களைப் பேசு கின்றார்கள். மேலும் பாபாவும் ஒவ்வொரு குழந்தையும் உள்ளத்தின் விசயங்களைக் கேட்டு அனைத்து விசயங்களுக்கும் பதிலும் தருகின்றார். அனைவருக்கும் ஒரு விசயத்தில் மிகவும் ருஷியுள்ளது. நாம் மனமார மேரா பாபா என்றவுடன் அங்கே பாபாவும் வந்து விடுகின்றார். வந்தேன் ஐயா! என்று நிற்கின்றார். இதில் உள்ளத்தின் விசயம் மட்டுமே தான். உளமார மேரா பாபா என்றால் மட்டும் போதும், வேறு எதுவும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. உளமார மேரா பாபா என்றவுடன் அங்கே பாபா வந்து விடுகின்றார்.

இன்று நாலாபுறமும் இருக்கின்ற குழந்தைகளிடமிருந்து பாப்தாதாவின் காதுகளுக்கு இனிமையான பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. எந்த பாடல் அது. மேரா பாபா, ப்யாரா பாபா இனிமையான பாபா மேலும் பாப்தாதாவும் குழந்தைகளின் அன்பில் மூழ்கி இருந்தார். மூழ்கியே இருக்கின்றார். இப்போது பாபா மற்றும் உங்களிடையே சிநேகத்தின் தெய்வீக செயலைக் கண்டு உங்களுடைய பக்தர்களும் குறைந்த புத்தியுடைவர்கள் அல்ல, அவர்களும் கூட உங்களுடைய நினைவுச் சின்னத்தை மிகவும் அதிகமாகவே பார்த்துக் காப்பி செய்கின்றார்கள். துவாபரயுகத்தில் வந்தார்கள். அவ்வாறு முதன் முதலில் எடுக்கும் பிறவியானது சதோ பிரதானமாக உள்ளது. ஏனென்றால் பரந்தாமத்தில் இருந்து நேரடியாக ஆத்மா வருகின்றது, எனவே பக்தர்களின் பக்கமும் இன்று திருஷ்டி செல்கிறது. எனவே மிகவும் யுக்தி யுக்த்தாக காப்பி செய்கின்றார்கள், ஏனென்றால் ஆரம்பத்தில் முதன் முதலில் விசேஷமான பக்தர்கள் உங்களுடைய நடைமுறை செயலே அப்படி உயர்வாக இருந்ததால் அதை அப்படியே அவர்களும் நல்ல முறையில் நினைவார்த்தமாக காப்பி அடித்து விட்டார்கள். ஆகவே உங்களுடைய வாழ்க்கை முறை தான் அவர்களுக்கு நினைவுச் சின்னமாகிறது. நீங்கள் அதிகமாக விரதம் எடுத்துள்ளீர்கள். என்ன விரதம் எடுத்துள்ளீர்கள்,

தூய்மையாக இருப்போம் என்ற விரதம், அதுபோலவே அவர்களும் விரதம் எடுக்கின்றார்கள். விரதத்தைக் காப்பி செய்கிறார்கள், ஆனால் நீங்கள் இந்த ஒரு பிறவியில் விரதம் எடுப்பதால் அநேக பிறவிகளுக்கு அந்த விரதமே நடைமுறையில் வந்து விடுகிறது. அவர்கள் ஒரு நாளுக்காக மட்டும் தூய்மையாகவும், அன்ன ஆகாரங்களிலும் தூய்மையைக் கடைப்பிடிக்கிறார்கள். நீங்கள் எடுக்கும் விரதம் 21-பிறவிகளுக்கு, அவர்கள் எடுப்பது அற்ப காலத்திற்கு அதுபோலவே கண் விழிப்பதும். நீங்கள் வெளிச்சத்தில் வந்து விடுகிறீர்கள், முழு உலகில் உள்ள இருளையும் நீக்கி விடுகிறீர்கள். அரை கல்பத்திற்கு இருள் வர வே முடியாது. மனதின் இருளை நீக்குகின்றீர்கள். மேலும் வெளிப்புரத்தில் இயற்கையின் துக்கத்தையும் நீக்குகின்றீர்கள், அவர்களும் காப்பி செய்கின்றார்கள், ஒரு நாள் கண்விழிக்கின்றார்கள். மேலும் நீங்கள் பாபாவிற்காக பலியாகின்றீர்கள். பலியாகின்றீர்கள் தானே! முழுமையாக சரண்டர் ஆகி விட்டீர்களா! அவர்களும் அதனை காப்பி செய்கின்றார்கள், ஆனால் தன்னை பலியாக்குவதில்லை, ஆனால் எதை பலி யாக்குகிறார்கள்? தெரியுமல்லவா? ஆட்டை பலிக்கொடுக்கின்றார்கள். ஏன் ஆட்டை தேடிப் பிடித்தார்கள். வேறு எதையும் தேடவில்லை. எல்லோரும் சிரிக்கின்றீர்கள். தெரியுமா? பாபா குழந்தைகளாகிய உங்களுக்கு மீண்டும், மீண்டும் சுட்டிக் காண்பிக்கின்றார், நான் என்பதை விடுத்து நிமித்தமான கருவி என்பதை கடைபிடியுங்கள். எனவே அவர்களும் ஆட்டைக் கண்டுபிடித்தார்கள். ஏனென்றால் அதுவும் மே மே என்று கத்துகிறது பாருங்கள் பக்தரின் புத்திக்கூட எவ்வளவு விந்தை செய்கிறது அல்லவா? உங்களுடைய பக்தர்கள் அல்லவா? உங்களுக்கும் பாபாவுக்கும் பக்தர்கள். எனவே பாபா உங்களுடைய பக்தர்களுக்கும், யார் உண்மையான மனமார செய்கிறார்களோ அவர்களுக்கு ஏதேனும் ஒன்றை பலனாகத் தருகின்றார். பக்தியின் பலனாக அவர்களும் சதா உண்மையாக சாத்வீகமாக இருக்கிறார்கள். மேலும் குஷி யாகவும் இருக்கிறார்கள். துக்கத்திலும் துக்கப்படுவதில்லை ஏனென்றால் உண்மையான உள்ளத்துடன் பக்தி செய்கிறார்கள். எனவே பாபாவும் இப்பொழுதெல்லாம் குழந்தைகளாகிய உங்களுக்கு இதையே சுட்டிக் காண்பிக்கின்றார். நான் என்பதை கொண்டு வர வேண்டாம். நான் சொல்வதுதான் நடக்க வேண்டும். நான் சொல்வதுதான் சரி அதுவே செய்ய வேண்டும். இந்த நான் நான் ஒன்று சாதாரணமான முறையில்

நான் தேகம் உள்ளவன் சரீரதாரி ஆனால் ஒன்று சாதாரணமான நான் என்பது மற்றொன்று மிக ஆழமான நான் என்ற வார்த்தை அதில் பாபாவின் வரப்பிரசாதத்தையும் கூட நானே செய்தேன், நானே சொன்னேன், நான்தான் செய்கின்றேன். இப்படி பாபா கொடுத்த விசேஷங்களையும் தனதாக்கிக் கொள்வது, ஞானத்தைப் புரிந்துகொள்வது மேலும் விசேஷதன்மைகளைப் புரிந்துகொள்வது, இவற்றில் கூட மிக நுட்பமாக நான் என்ற எண்ணம் வந்து விடுகின்றது. எனவே மீண்டும் பாபா சுட்டிக் காண்பிக் கின்றார். நான் மற்றும் எனது எப்பொழுதுமே மேரா பாபா அந்தப் பக்கம் மட்டுமே உள்ளத்தின் ஈர்ப்பு இருக்க வேண்டும். எல்லைக்குட்பட்ட நான் எனது எனது புகழ், எனது கௌரவம் எனது பெயர் இவற்றையெல்லாம் அழித்து விட்டு நான் பாபாவினுடைய குழந்தை பாபா என்னுடையவர் எவ்வளவு குஷி ஏற்படுகின்றது. பகவான் என்னுடையவர் ஆகி விட்டார். வேறு என்ன வேண்டும்? ஒன்று சாதாரணமான எனது, மற்றொன்று மிக நுட்பமான எனது இந்த நுண்ணியமான எனது என்ற சொல்தான் அழுக்கை ஏற்படுத்துகின்றது ஆனால் மேரா பாபா என்று சொன்னால் மிகப்பெரும் செல்வந்தராக மாற்றி விடுகிறது.

இன்று பிறந்த நாளைக் கொண்டாட வந்துள்ளீர்கள். தன்னுடைய பிறந்தாநாளையும் கொண்டாட வந்துள்ளீர்கள் அல்லவா? பாபா குழந்தைகள் இல்லாமல் எதுவுமே செய்வதில்லை. எனவே இன்று பாபா குழந்தைகளுக்கு பிறந்த நாளுக்கான வாழ்த்துக்களைத் தர வந்துள்ளார். ஆஹா எனது குழந்தைகளே ஆஹா! இப்போது ஒரு விசயம் சொல்லட்டுமா? தயாரா? சொல்லலாமா? செய்ய வேண்டும் என்று கூறுபவர்கள் கை உயர்த்துங்கள், செய்வீர்களா? இரட்டை அயல்நாட்டவர் செய்வீர்களா ? டீச்சர்கள் செய்வீர்களா? நல்லது! இன்று பாப்தாதா எப்படி நினைவார்த்தமான நாளில் சிவ பரமாத்மாவிற்கு நினைவு சின்னமாக எருக்கம் பூவை அர்ச்சனை செய்கின்றீர்கள் ரோஜா மலரை அல்ல! வேறு எந்த மலரும் அல்ல. எருக்கம் பூவை அர்ச்சனை செய்கிறீர்கள் எனவே இன்று பாப்தாதா எந்த ஒரு விசயத்தை அர்ப்பணம் செய்ய, வீட்டுப்பாடமாகத் தர விரும்புகின்றார் தயார் தானே! நல்லது.

இதில் பாபாவிற்கு குழந்தைகளை மிகவும் பிடிக்கின்றது. எல்லோரும் சரி என சொல்கிறீர்கள். இன்று பிறந்தநாளில் பாபாவிற்கு ஒரு சங்கல்பம் அனைவரும் ஒருவருக்கு ஒருவர் ஊக்கம் உற்சாகத்தை வழங்கி, ஒருவருக்கு ஒருவர் சகயோகம் செய்து வீண் எண்ணங்கள் எனும் அரளி விதையை அர்ப்பணம் செய்யுங்கள். வீண் எண்ணம் நினைக்க வேண்டாம். அதைக் கேட்கவும் வேண்டாம். வீணான தொடர்பில் வந்து விண் எண்ணங்களில் வர்ணத்தைப் பூசிக் கொள்ள வேண்டாம். ஏனென்றால் எங்கே வீண் எண்ணங்கள் இருக்குமோ அங்கு சுத்த சங்கல்பத்தின் நினைவு இருக்காது. ஞானம் எனும் இனிய வார்த்தை அதைத்தான் நீங்கள் முரளி என்று சொல்கின்றீர்கள். நினைவிற்கான சங்கல்பம் இது போன்ற சுத்த எண்ணங்கள் நினைவில் வராது. முரளி நீங்கள் கேட்கலாம் படிக்கவும் செய்யலாம் அது அவசியம் தான். பிராமணர்களின் நியமயம் அதுதான் ஆனால் கேட்பதோடு மட்டுமே நின்று போகும். மனதில் அதைப்பற்றி சிந்தனை நடைபெறாது. நினைப்பீர்கள் சொல்வீர்கள் இன்று முரளி மிக நன்றாக இருந்தது என்ன இன்று சொன்னார் என்று யோசிப்பீர்கள். வரதானம் நன்றாக இருந்தது ஆனால் நினைவில் வருகிறதா வீண் எண்ணங்களானது மனம், புத்தியை தன் பக்கம் கவர்ந்து இழுத்து விடுகிறது. பாபாவிற்கு முன்பாக என்ன சொல்கின்றீர்கள் தெரியுமா? பாபா ஆர்வமான செய்திகளைக் கேட்கத்தானே வேண்டும். நாலேஜ் புல்லாக (ஞானம் நிறைந்து) மாற வேண்டும் ஆனால் வீணான விசயங்கள் பதவியை மற்றும் பிராப்தியை அடைய விடாமல் நஷ்டத்தை ஏற்படுத்திவிடும். விரும்பவில்லை ஆனால் வந்து விட்டது. எனவே பாபாவிடம் திட சங்கல்பத்துடன் கொடுத்து விட வேண்டும். முதலில் கொடுக்க தெரியுமா? பாபாவிற்கு கொடுத்து விட்டீர்களா? அப்படி கொடுத்த பொருள் தன்னிடம் திரும்பி வந்து விட்டாலோ அதை தன்னிடம் வைத்துக் கொள்வீர்களா திரும்ப கொடுத்விடுவீர்களா? கொடுத்து விட்ட பொருளை நீங்கள் தன்னிடம் வைத்துக் கொண்டால் என்ன பெயர் தெரியுமா? எனவே பாபாவிடம் ஒருமுறை தானே மனம் உவந்து திட சங்கல்பத்துடன் தன்னார்வத்துடன் கொடுத்து விடுங்கள். பிறகு சோதனை செய்யுங்கள் கொடுத்து விட்ட பொருள் மீண்டும் மீண்டும் என்னிடம் வருகிறதா? பிறரது பொருளை தன்னிடம் வைத்துக் கொள்வது என்றால் அது நல்லதாக ஏற்றுக் கொள்ளப்படாது எனவே தினமும் ஓய்வுக்குச் செல்வதற்கு முன்பு, ஓய்வு பிறகுதான் முதலில்

சோதனை செய்யுங்கள். இன்று முழு நாளில் ஏதேனும் வீண் எண்ணம் வராமல் இருந்ததா? வீண் செயல் செய்யாமல் இருந்தேனா? கொடுத்து விட்ட பொருளை திரும்பப் பெறாமல் இருந்தேனா?

ஆகவே இன்று பிறந்த நாளில் பரிசு வழங்குவதற்கான தைரியம் உள்ளதா? தைரியம் இருக்கிறதா? கை உயர்த்துங்கள் தைரியம் இருக்கிறதா? எங்கே தைரியம் இருக்குமோ அங்கு பாப்தாதா உங்களுக்காக பரிசு தருவார். நீங்கள் உளமாற மேரா பாபா, இரக்கம் உள்ளவரே. கருணை உள்ளவரே பாபா நீங்கள் இந்த பொருளை எடுத்துக் கொள்ளுங்கள். இப்படியாக உள்ளம் மனம் உவந்து சொன்னால் பாபா சற்று அதிகமாகவே பரிசு வழங்குவார். ஏனென்றால் தைரியம் உங்களுடையது. அதிகமான உதவி பாபா கொடுப்பார். எங்கே தைரியம் உள்ளதோ அங்கே பாபாவின் உதவி அவசியம் இருக்கும் இதை அனுபவம் செய்துள்ளீர்கள் அல்லவா? ஏனென்றால் பாப்தாதா மிக நீண்ட காலமாகவே சுட்டிக் காண்பித்துக் கொண்டிருக்கின்றார். இப்போது தீவிர முயற்சிக்கான வழி மூன்று புள்ளி வைப்பதுதான். நான் பிந்துவான ஆத்மாவாக இருக்கிறேன். பாபாவான பிந்துவை நினைக்க வேண்டும். மேலும் முடிந்த விசயங்களுக்கு முற்றுபுள்ளி வைக்க வேண்டும். இதைத்தான் பாப்தாதா சொல்லி கொண்டிருக்கின்றார். மனனம் செய்யுங்கள் பிந்துவாக மாறுங்கள். பிந்துவையே பாருங்கள். புள்ளி வையுங்கள். எனவே பிந்து விற்கு அதிகமான மகிமை உள்ளது. இப்போதெல்லாம் உலகத்தில் கூட பிந்து விற்கு மிகுந்த மகிமை உள்ளது. பாருங்கள் பைசாவை எண்ணும்போது கூட எல்லோருடைய அன்பும் அதிகமாக எந்தப்பக்கம் செல்கின்றது பைசா மீதுதானே அந்த பைசா எப்படி அதிகரிக்கிறது? புள்ளி வைத்துக் கொண்டே செல்லுங்கள். 10, இன்னொரு புள்ளி வைத்தால் 100, இன்னொரு புள்ளி வைத்தால் 1000-ம் ஆகி விடும். எனவே புள்ளிக்குத் தான் மகிமை ஆனால் உண்மையான புள்ளி எதுவோ அதனை மறந்து விட்டார்கள். எனவே இன்று பாபாவிற்கு பிறந்தநாள் பரிசு வழங்கி விட்டீர்களா? அதை வழங்கி விட்டீர்களா? மனதார கொடுத்தீர்களா? மனம் உவந்து கொடுத்தீர்களா? ஏன் ஏன் என்ன என்று சொல்ல மாட்டீர்கள் தானே! எப்படி செய்வது ஏன்? இந்த ஏன் ஏன் என்ற மொழி தவறானது. ஏன் செய்ய வேண்டும்? எப்படி செய்ய வேண்டும்? ஏன் ஏன் என்று சொல்லக்கூடாது. ஆகவே பரிசு வழங்குவதற்கான மகிழ்ச்சியோடு கை

உயர்த்தினீர்களா அல்லது கூட்டத்தில் வலுக்கட்டாயமாக கை உயர்த்துனீர்களா? ஏனென்றால் வலுக்கட்டாயமாகச் செய்வது சதா செய்ய முடியாது, அவ்வப்போதுதான் செய்ய முடியும். மனம் உவந்து செய்ய வேண்டும். செய்தே ஆக வேண்டும். ஆகியே தீர வேண்டும். பரிசு வழங்கி விட்டீர்கள். கொடுத்தே ஆக வேண்டும் இப்படி குஷி குஷியுடன் சங்கல்பம் வைத்தால் சர்வ சக்திவான் பாபாவுடைய குழந்தைகள் மாஸ்டர் சர்வ சக்திவான் உங்களுக்கு இது என்ன பெரிய விசயம். இருக்கையில் அமருங்கள். மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற இருக்கையில் சதா அமர்ந்திருங்கள். மறக்கக்கூடாது. சுயமரியாதை உள்ளதல்லவா? தன்னுடைய சுய மரியாதையை ஒருபொழுதும் விடுவதில்லை. சுயமரியாதைக்குப் பின்னால்தானே எல்லோருமே செல்கின்றார்கள். எனவே இன்று பாபாவுக்கு அன்பு ஏற்பட்டது. சின்ன விசயங்களில் தன்னுடைய சுயமரியாதை பரமாத்மா மூலமாக கிடைக்கப்பெற்ற சுயமரியாதை மனிதர்கள் மூலமாக கிடைத்த சுயமரியாதை, அதிலும் எவ்வளவு பாதை இருக்கிறது. இங்கே பரமாத்மா மூலமாக நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்கின்ற சுயமரியாதை கிடைத்துள்ளது. அவர்கள் விரும்பியதைச் செய்ய முடியும். இருக்கிறதா அவ்வளவு தைரியம், தலையை ஆட்டுங்கள். கையை அசைக்க வேண்டாம். தலையை அசையுங்கள். தைரியம் உள்ளதா! ஆசிரியர்கள் நீங்கள் செய்விக்க வேண்டும். கவனம் வைக்க வேண்டும். நீங்கள் செய்தால் பிறருக்கும் கவனம் கொடுத்து செய்விக்க முடியும். நிமித்தமாக இருக்கிறீர்கள் அல்லவா? பிறகு பார்க்கலாம் எந்த வகுப்பில் நம்பர் அதிகம் வருகிறார் என்று. பிறகு நல்ல பரிசு வழங்கப்படும். எந்த பரிசு வழங்குவோம் அதை சொல்லமாட்டோம் ஆனால் மதிப்பு வாய்ந்த பரிசு தரப்படும். ஒவ்வொரு வகுப்பினரும் முயற்சி செய்யுங்கள். ஒருவர் செய்தார் என்று இருக்கக்கூடாது. பெரும்பான்மையினர் செய்ய வேண்டும்.

இன்று பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தைகளும் நம்பர்-1னில் வர வேண்டுமென்ற அன்பு ஏற்படுகின்றது. இரண்டாவதில் கூட வரக்கூடாது. முதல் ராஜ சிம்மாசனத்தில் அமர வில்லையென்றாலும் அரியாசனத்தில் இருவர்கள் அமருவார்கள் அல்லவா? ஆனால் முதல் இராஜதானியும், முதல் இராஜ குலத்தின் சம்பந்தத்தில் வர வேண்டும். இரண்டு நம்பர் வந்து விட்டது ஆனால் இராஜ்யம் செய்யலாம். இராஜ்ய

அதிகாரி ஆக வேண்டுமென்றால் முதல் இராஜ்யத்தில் வர வேண்டும். எனவே பாப்தாதா குழந்தைகள் மீதுள்ள அன்பால் குழந்தைகள் ஏதேனும் ஒரு விசேஷத்தில் நம்பர்-1 வர வேண்டுமென்று விரும்புகின்றார். வரிசைக்கிரமமாக அல்ல. நம்பர்-1. அவ்வளவு ஊக்கம் இருக்கிறதா? நம்பர்-1 வர வேண்டுமா அல்லது எது கிடைத்தாலும் சரி, என்று நினைக்கிறீர்களா? சரி, நல்லது நல்லது என்று போகக்கூடாது. பாபாவின் ஆசை ஒவ்வொரு குழந்தையும் ஏதேனும் ஒரு விந்தை செய்து நம்பர்-1னில் வர வேண்டும். நான்கு பாடம் உள்ளது. ஏதேனும் ஒரு பாடத்தில் நம்பர்-1 வந்தே ஆக வேண்டும். இதில் கவனம் அதிகம் வையுங்கள் கோடிட்டு வைத்துக் கொள்ளுங்கள். சரி பரவாயில்லை, அதிகமாக உங்களைக் கஷ்டப்படுத்தவில்லை. பாபா ஏதேனும் ஒரு பாடத்தில் நம்பர்-1 வர வேண்டும். இது சுலபம் தானே! இன்று ஒவ்வொரு குழந்தையும் அமிர்த வேளையில் இருந்தே சந்திப்பை செய்து கொண்டிருக்கின்றார்கள். மிகவும் அதிர்ஷ்டசாலி களாக மகிழ்ச்சியில் முகமலர்ச்சியுடன் தென்பட்டார்கள். பாபாவும் ஒவ்வொரு குழந்தைக்கும் சதா பறக்கும் கலைக்கான வரதானம் கொடுத்தார். நடக்கும் கலையல்ல. பறக்கும் கலை. எனவே பாப்தாதாவினுடைய இந்த வரதானத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பாப்தாதா தன்னுடைய மற்றும் உங்களுடைய பிறந்தநாளில் என்ன வரதானம் கொடுத்துள்ளார். பறக்கும்கலை உடையவர் ஆகுக! நீங்களும் நாள் முழுவதும் சிவராத்திரிக்கான உற்சவத்தை உளமாறக்கு கொண்டாடினீர்கள் தானே! எல்லோரும் நன்றாக இருக்கின்றீர்கள்! இருப்பீர்கள் மிக மிக நல்ல இராஜ்ய பதவியைப் பெறுவீர்கள். எல்லோரும் நன்றாக இருப்பீர்கள் அல்லவா? பாபா எல்லோரையும் நல்லவிதமாகத்தான் பார்க்கின்றார். நல்லது.

நாலாபுறமும் எதிரில் அமர்ந்திருந்தாலும் ஆங்காங்கே அவரவர் இடங்களில் அமர்ந்து கொண்டாடிக் கொண்டிருந்தாலும் பாப்தாதா பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். குழந்தைகளும் பாபாவின் சந்திப்பால் மகிழ்ச்சி அடைகின்றீர்கள் ஆனால் இன்று ஒரு சங்கல்பம் வையுங்கள் சதா குஷி. அவ்வப்போது குஷி அல்ல. சதா குஷி. யார் பார்த்தாலும் உங்கள் முகத்தைப் பார்ப்பவர்கள் சிந்திக்க வேண்டும், இவர் மிகவும் அதிர்ஷ்டசாலி ஆத்மாவாகத் தென்படுகின்றார். உங்களுடைய பாக்கியத்தை நடத்தை மற்றும் முகத்தின் மூலம் வெளிப்படுத்துங்கள்.

மனதில் மட்டும் மிகவும் குஷியாக இருக்கக்கூடாது. உங்களுடைய அதிர்ஷ்டசாலியான முகம், மலர்ந்த முகம் பிறருக்கும் அறிமுகம் செய்ய வைக்கும். முகம் சிறிது பேசும். உங்கள் முகமே சேவை செய்யும் பாபாவின் பக்கம் பிறரைக் கொண்டு வரும். முகமலர்ச்சியோடு இருங்கள். இதுவும் சேவைக்கான சாதனமே. எனவே நாலாபுறமும் உள்ள குழந்தைகள் அனைவருக்கும், உங்களுக்கும் பிறந்த நாளிற்கான பல பல மடங்கு வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். நல்லது,

சேவைக்கான வாய்ப்பு: இந்தூர் ஜோன் நல்லது: இவர்கள் எல்லோரும் இந்தூரைச் சார்ந்தவர்கள் அசைகிறார்கள் (5-சொரூபத்தின் அடையாளங்கள் கையில் வைத்துள்ளார்கள்) நன்றாக இதை செய்துள்ளார்கள். ஒவ்வொருவரையும் தனியாகப் பார்க்கும்பொழுது தெரிய வருகின்றது. அவரவருக்கான முறையில் யக்ஞ சேவையில் எவ்வளவு அன்பு வைத்துள்ளார்கள். ஏனென்றால் பாபா முதலில் வந்த உடனேயே யக்ஞத்தைப் படைத்தார். யக்ஞத்தை சதா முன்னேற்றிச் செல்வது எப்போதுமே நிரப்பி வைப்பது. இதுதான் யக்ஞத்தின் மீது அன்பு உள்ள குழந்தைகளின் வேலை. எப்படி சென்டரில் நாலாபுற விசயங்களில் கவனம் வைக் கிறீர்களோ அதே போன்று யக்ஞத்திலும் கவனம் வைக்க வேண்டும். இது ஒவ்வொரு குழந்தைக்குமான செயல். பாப்தாதா பார்க்கின்றார். இந்த சேவைக்கான வாய்ப்பைப் பெறுவதில் அனைவருமே வெற்றிதான் யாருமே இதில் குறைந்தவர்கள் அல்ல. எனவே எப்படி தனக்கென வாய்ப்பு வரும்பொழுது யக்ஞத்தின் மீது கவனம் தருகிறீர்கள். அனுபவம் செய்கின்றீர்கள் அதுபோலவே தன்னுடைய சென்டரில் இருக்கும்போதும் ஒவ்வொருவரும் யக்ஞத்தைக் காப்பாற்றக்கூடியவர். அதாவது யக்ஞத்தில் இருப்பவர் மட்டுமல்ல. பிராமணர்கள் ஒவ்வொரு வருமே யக்ஞத்திற்கு பிரியமானவர்தான். யக்ஞத்தை காப்பாற்றுபவர்கள்தான். இவ்வாறு தன்னை பொறுப்புணர்ந்து சதா நடந்துக் கொள்ள வேண்டும். இந்த வாய்ப்பு முடிவடைந்த பிறகு மறப்பது என்பது கூடாது ஆனால் அங்கே இருந்தாலும் கவனம் இருக்க வேண்டும். கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். எப்படி தன்னுடைய சேவைக்கான வாய்ப்பு வரும்பொழுது யக்ஞத்திற்கான பொருட்களை சேகரித்துக் கொண்டு வருகின்றீர்கள். அவ்வாறே எப்பொழுதும் யக்ஞத்திற்காக நினைக்க வேண்டும். பிராமணன் என்றாலே யக்ஞத்தைக் காப்பாற்றுபவர். எனவே

ஒவ்வொரு பிராமணரும் அந்தளவு கவனம் வைக்க வேண்டும். முதலில் யக்ஞம் பிறகு சென்டர். இப்பவும் கவளம் வைத்துள்ளீர்கள். பாப்தாதாவிற்குத் தெரியும் யார் யார் யக்ஞத்தின் மீது கவனம் வைக்கிறீர்கள். மேலும் முன்னேறிக் கொண்டிருக் கின்றீர்கள். பாப்தாதா சமிக்ஞை மட்டும் செய்கிறார். மற்றபடி செய்து கொண்டுதான் இருக்கின்றீர்கள். மேலும் செய்து கொண்டே இருப்பீர்கள். உங்களுடைய இந்த யக்ஞம் என்பது அனைத்து ஆத்மாக்களுக்கும் யக்ஞ பிரசாதம் வழங்குமிடம். எனவே நீங்கள் அனைவரும் யார்? யக்ஞத்தை காப்பாற்றுபவர்களா சென்டரைக் காப்பாற்றுபவர்களா? யக்ஞத்தை காப்பாற்று பவர்கள்தானே? பாப்தாதா துணையாக இருப்பவர்கள்தானே? பாப்தாதா யக்ஞத்தைக் காப்பாற்று பவர் அல்லவா? உங்களுக்கு என்ன டைட்டில் கிடைத்துள்ளது. யக்ஞத்தைக் காப்பாற்றுபவர்கள் என்பதுதானே! நன்றாக செய்து கொண்டிருக்கின்றீர்கள். மேலும் நன்றாக செய்வீர்கள். உடல், மனம், பொருள், சேவை நான்கு பொருட்கள் உள்ளது. யக்ஞத்தைக் காப்பாற்றுபவர் என்றாலே எப்படி ஞானம், யோகம், சேவை, தாரணை என்கின்ற நான்கு பாடம் உள்ளதோ அவ்வாறே இதுவும் நான்கு பாடம். மற்றபடி பாபாவிடம் ரிசல்ட் வந்துக் கொண்டே இருக்கின்றது. பாப்தாதாவும் அனைவரின் ரிசல்ட்டையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஆர்வத்தோடு பார்க்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் என்னென்ன செய்கின்றார்கள். நல்லது! பாப்தாதாவிடம் புகார் எதுவும் வரவில்லை ஆனால் இனி வரும் காலத்திற்காக சைகையை வழங்குகின்றார். நல்லது!

இவர் என்ன விந்தை செய்து காண்பித்துக் கொண்டிருக்கின்றார். ஏதேனும் ஒரு விந்தை செய்துகாண்பிக்கின்றார் அல்லவா? பாப்தாதாவும் கேள்விப்பட்டார். சேவையில் விதவிதமான நிகழ்ச்சிகள் விதவிதமான விதிகளையும் கண்டுபிடித்துள்ளீர்கள். மேலும் அதனை நடைமுறையில் கொண்டுவந்துள்ளீர்கள். அதன் ரிசல்ட்டை பாபா தெரிந்து கொண்டார். வெற்றி அடைந்து விட்டீர்கள். இதில் வெற்றிதானே! கை உயர்த்துங்கள். புதிய புதிய திட்டங்களைத் திட்டுகிறீர்கள். மேலும் அதனை நடைமுறைப்படுத்துகிறீர்கள் நல்லது. இவ்வாறு பயிற்சி செய்து தனக்கும் மற்றும் பிறருக்கும் அனுபவம் செய்யவைப்பதற்கான சாதனம் ஏதாவது உருவாக்குங்கள். நல்லது!

பாப்தாதா வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்!!

**இரட்டை வெளிநாட்டினர் சகோதர சகோதரிகள் 60-தேசங்களிலிருந்து 1100-பேர் வந்திருக்கின்றார்கள்:** அயல் நாட்டுக் குழந்தைகளைப் பார்த்து பாரதவாசிகள் மிகவும் சந்தோஷ மடைகிறார்கள். ஏனென்றால் பாபா டைட்டில் விஷ்வகல்யாணகாரி. பாரதத்திற்கு நன்மை செய்பவர் அல்ல இப்போது அயல்நாட்டவரைப் பார்க்கும்போதுகூட இந்திய சம்ஸ்காரம் உடையவர்களாக மாறி விட்டார்கள். ஏனென்றால் சத்யுகத்தில் ராஜ்யம் செய்பவர் அல்லவா? அதிகாரி ஆகுபவர்கள் அல்லவா? எனவே பாபாவின் பரமாத்மாவின் கலாச்சாரம் அது உங்கள் கலாச்சாரமாக ஆகி விட்டது. எனவே மகிழ்ச்சி ஏற்படுகிறது. நமது சகோதர, சகோதரிகள் எங்கிருந்து எங்கே சென்றுவிட்டார்கள். பாரதத்திலிருந்து சேவைக்காகத்தான் சென்றிருக்கிறார்கள் ஆனால் பாரதத்தின் விதைதான். விதை உங்களுடையதுதான் அயல்நாட்டு விதை அல்ல பாரதத்தின் விதைதான். முதல் உண்மையான விதை பாரதத்தைச் சார்ந்ததுதான். எனவே ஆங்காங்கிருந்து வந்தாலும் பாரதத்தின் ஒரு கலாச்சாரம் உடையவராக மாறி விட்டார்கள். இந்திய கலாச்சாரம் அல்ல பரமாத்மாவின் கலாச்சாரம். மேலும் குஷி குஷியுடன் ஆகி விட்டீர்கள். பாப்தாதா பார்க்கின்றார் இங்கு இந்தியாவில் வந்து இந்தியன் உணவு முறையும் கற்றுக் கொண்டார்கள். குஷி குஷியோடு கற்றுக்கொள்கிறார்கள். அப்படியே நடக்கவும் செய்கிறார்கள். மாற்றம் செய்வதில் தன்னை நிமித்தமாக்கியுள்ளார்கள். அதற்காகவும் வாழ்த்துக்கள். நம்முடையவர்களாக இருந்தீர்கள் நம்முடையவராக மாறி விட்டீர்கள். நினைவு இருக்கிறதல்லவா? அந்த உணர்வு ஏற்படுகிறதா? நாம் இந்தியர்கள் அல்ல. பரமாத்மாவின் கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்கள். இப்பொழுது இறுதியில் வந்து மாறி விட்டீர்கள். நான்கு ஐந்து பிறவிக்குத்தான் அங்கே சேவைக்காக சென்றுள்ளீர்கள். இங்கே வந்திருப்பவர்கள் பாபாவுடையவராக இருந்தீர்கள். மீண்டும் பாபாவுடையவராக மாறி விட்டீர்கள். யக்ஞத்தில் இருந்தீர்கள் மீண்டும் யக்ஞத்திற்கே வந்து விட்டீர்கள். சிலர் நாம் இருந்தோமோ இல்லையா? என்று கேட்கின்றார்கள் பாபா சொல்கிறார். எல்லோருமே இருந்தீர்கள். நல்ல நல்ல சேவாதாரி குழந்தைகளும் வருகின்றார்கள். பாப்தாதாவிற்கு மதுபனில் மிக பெரிய குழுவை

உருவாக்குவது பாபாவுக்கு மிகப் பிடித்திருக் கின்றது. எவ்வளவு பெரிய பரிவாரம் பாருங்கள். பெரிய பரிவாரம், சுகமான பரிவாரம். பொதுவாக பெரிய குடும்பத்தில் துக்கம்தான் இருக்கும் ஆனால் இங்கே பெரிய பரிவாரம் சுகமான பரிவாரம் நன்றாக இருக்கின்றது. பரிவாரம் நன்றாக இருக்கின்றது அல்லவா? பரிவாரத்தைப் பார்த்து குஷி ஏற்படுகின்றது தானே! இங்கே இருந்தீர்கள் அல்லவா? நல்லது இன்று அவதார தினம். எனவே அந்த நாளும் கொண்டாடப்படுகிறது.

தாதிமார்களுடன்: (நான்கு தினங்களுக்காக தாதி ஜானகி அவர்கள் குஜராத் சேவைக்கு செல்கின்றார்) தைரியம் உள்ளது அல்லவா? நினைத்தீர்கள் நடந்தே விட்டது. (பாபா 'தன் விரலால் உங்களை ஆட்டுவிக்கின்றார்) எனவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே நடந்து கொண்டிருக்கின்றீர்கள்.

சகோதரி மோகினியுடன்: இவர் நடந்தே ஆக வேண்டும். கூடவே இருந்து எல்லா வற்றையும் பாதுகாக்க வேண்டும். கவலையில்லாமல் இருப்பவர் சிந்திக்க வேண்டாம். நல்லது நன்றாகவே இருக்கும். எல்லாம் நன்றாக நடைபெறும்.

தாதி இஷுவுடன்: இவரும் உடன் இருக்கின்றார். (பாப்தாதா தன் விரலால் அனைவரின் நெற்றியிலும் திலகம் இடுகின்றார்) வாழ்த்துக்கள் அடங்கிய திலகம் எல்லோருக்கும் கிடைத்ததா (டிவி எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்) அவர்களும் சந்தோஷமாக இருக்கின்றார்கள்.

(அங்கிள், ஆண்டியும் அதிகமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்கள்) நீங்கள் பாபா சார்பாக எல்லோருக்கும் திலகம் இடுங்கள். பாபாவைத் திலகம் இடுவதாக அனுபவம் செய்வீர்கள்.

(சகோதரி ப்ரீத்தம் அவர்களுக்கு போக் நிமித்தமாக குருதீப் சகோதரி மற்றும் பரிவாரத்தினர் வந்துள்ளார்கள்) அவர்களும் நன்றாக நடிப்பை நடித்தார்கள். எல்லோருக்கும் மனம் உவந்து சேவை செய்தார்கள். நிமித்தமாக அவர் தந்தை இருந்தார். குழந்தை பருவத்திலிருந்தே பரிவாரத்திலும் அதிகமான சகயோகம் இருந்தது. ஒரே சைக்கிளில்

நான்கு பேர் அமர்ந்து முரளி கேட்க வருவார்கள். இந்த அளவிற்கு லௌகீக பரிவாரத்திற்கு அன்பு யாரும் கொடுப்படு தில்லை. அதிகமான வரதானத்தையும் அவர்கள் குடும்பத்திற்கு அவர் கொடுத்திருந்தார்.

குஞ்ச் தாதி: அவர்கள் நினைவை அனுப்பியுள்ளார். அவர் அகமதாபாத் மருத்துவ. மனையில் இருக்கின்றார். மாற்றம் எதுவும் காணப்படுவதில்லை. மீண்டும் மீண்டும் அப்படியே ஏற்படுகிறது. அதன் காரணம் என்ன? அவரை விட அதிக வயதுள்ளவர்கள் அதிகம் இருக்கின்றார்கள். அதற்கும் மருத்துவம் நடைபெற்று வருகின்றது. ஏனென்றால் நல்ல சேவாதரி அவர்கள். மற்றபடி கேட்டு அவர்களை மேலும் சிறிதளவு சுறுசுறுப்பை உருவாக்குங்கள், இப்பொழுது அதிக நேரம் படுக்கையிலேயே இருக்கின்றார். நல்லது.

எல்லோரும் பாபாவால் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகள், சேவாதாரி குழந்தைகள். மின்னுகின்ற நட்சத்திரங்கள். உங்களுக்காக இன்று பிறந்தநாளுக்கான வாழ்த்துக்கள். பாபா தருகின்றார். பாபாவுடன் இருக்கின்றீர்கள் கூடவே இருப்பீர்கள். கூடவே செல்வீர்கள். கூடவே ராஜ்யம் செய்வீர்கள். பிரம்மாபாபாவிடம் அதிகம் அன்பு உள்ளது. தனியாக செய்ய முடியாது. இப்பொழுது அனைவருக்கும் தனித் தனியே ஒவ்வொருவருக்குமாக பாபா வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். நல்லது!

பாப்தாதா தன்னுடைய திருக்கரங்களால் கொடியேற்றி சிவஜெயந்தி வாழ்த்துக்களைத் அளித்தார்! உங்கள் அனைவரது உள்ளங்களிலும் பாப்தாதா கலந்திருக்கின்றார், ஆனால் பிறருக்கும் தெரிய வைப்பதற்காக உங்களுடைய பாபா வந்துள்ளார். யாருக்கு என்ன எடுக்க வேண்டுமோ முக்தியா அல்லது ஜீவன்முக்தியா எது வேண்டுமோ வந்து எடுத்துக் கொள்ளுங்கள். இந்த ஒரு எச்சரிக்கைத் தருவதற்காக கொடியேற்றப்படுகிறது. இந்த கொடி ஏற்றுவதும் விசேஷமான சேவைதான் இதிலும் ஈர்ப்பு உள்ளது. எல்லோரும் பாடல் பாடுங்கள். நீங்கள் மட்டும் பாடினால் போதாது. எல்லோரும் பாடல் பாட வேண்டும். நமது தந்தை வந்து விட்டார். விரைவாக சேவை செய்யுங்கள். நேரம் குறைவாக உள்ளது. இப்போது சேவை இன்னும் அதிகம் செய்ய வேண்டி உள்ளது. உங்கள் பக்கத்துவீட்டில் இருப்பவர்களுக்கு

தெரியவில்லை. அவரை பாக்கியசாலி ஆக்கவில்லை. எனவே அக்கம்பக்கம் உள்ள எல்லோருக்கும் செய்தி கொடுத்து உங்கள் தந்தை வந்து விட்டார் என்று சொல்லிவிடுங்கள். இப்போது நீங்கள் எங்கிருக்கின்றீர்களோ அங்கு பாருங்கள். அக்கம்பக்கம் எவ்வளவு பேர் இருக்கிறார்கள். இன்னும் யாருக்கெல்லாம் பாபாவினுடைய அறிமுகம் கிடைக்கவில்லை ஏதேனும் ஒரு காரணத்தால் வராமலிருக்கலாம். ஏதேனும் ஒரு விதி முறை மூலமாக கையில் வாங்காதவருக்கும் நோட்டிசை போஸ்ட் பாக்ஸில் போட்டு விடுங்கள். செய்தியைக் கொடுத்து விடுங்கள். புகார் செய்யக் கூடாது. எங்களுக்குத் தெரியவே இல்லையே, ஏன் சொல்லவில்லை. எப்படியாவது எல்லோருக்கும் இந்த செய்தியை சென்று அடைய வையுங்கள். எல்லோருமே சேவை செய்வது இன்னும் மீதம் இருக்கின்றது. உங்களுடைய மதில் சுவருக்குள் இருக்கின்றவர்களுக்கும் செய்தி கிடைக்கட்டும். இதுவரையில் நேரமில்லை என்றால் கொடுத்து விடுங்கள். எதிர்பாராத விதமாக எல்லாம் நடந்து விடும். பிறகு நினைக்கக்கூடாது. நாம் செய்யவில்லையே செய்யவில்லையே என்று நினைக்கக்கூடாது. செய்து விடுங்கள். புரிந்ததா! கண்டிப்பாகச் செய்யுங்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 16.03.2011 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மனதின் மூலமாக இயற்கையை சதோகுணி (முழு தூய்மை) ஆக்கும் சேவை செய்யுங்கள் -சுபபாவனை மற்றும் சுபகாம்னா (நல்லாசை மற்றும் நல் விருப்பம்) வைத்து சம்ஸ்காரங்களோடு இணைந்து நடனம் செய்யுங்கள், மற்றும் தன்னுடைய பழைய சம்ஸ்காரங்களை எரித்து விட்டு பிரபுவின் துணையில் இருந்து அவருடைய வர்ணத்தை பூசிக் கொண்டு உண்மையான ஹோலி கொண்டாடுங்கள்!

இன்று ஹோலியஸ்ட் (புனிதமான) பாபா தன்னுடைய குழந்தைகளோடு ஹோலி கொண்டாட வந்துள்ளார். நீங்கள் அனைவரும் ஹோலி கொண்டாட வந்துள்ளீர்கள். குழந்தைகள் நாலாடறங்களிலும் மற்றும் தூரத்தில் அமர்ந்திருந்தாலும் ஹோலி கொண்டாட அமர்ந்துள்ளீர்கள், நீங்கள் அனைவரும் எந்த வர்ணத்தை பூசிக் கொண்டு ஹோலி கொண்டாட வந்துள்ளீர்கள்? எல்லாவற்றையும் விட மிக சிரேஷ்டமான வர்ணம் பரமாத்மாவின் துணையில் இருக்கும் வர்ணம் தான் என்பதை அறிவீர்கள், இந்த வர்ணம் எப்பொழுதுமே சிரேஷ்டத்திலும் சிரேஷ்டமாக ஆக்கக் கூடியது. எப்படி பாபா மிக மிக உயர்ந்தவரிலும் உயர்ந்தவராக இருக்கிறாரோ அப்படியே இந்த பரமாத்மாவின் துணை என்ற வர்ணமும் மிகமிக உயர்ந்தவரிலும்

உயர்ந்தவராக ஆக்கக் கூடியது. ஒவ்வொரு குழந்தைகளின் நெற்றியிலும் மின்னுகின்ற பாக்கிய நட்சத்திரத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றார். இந்த பாக்கிய நாட்சத்திரம் முழு கல்பத்திலும் பாக்கியசாலி குழந்தைகளான உங்களைத் தவிர வேறு எவருமே அடைய முடியாது. அந்த சிரேஷ்ட பாக்கியம் என்னவென்றால் குழந்தைகளாகிய நீங்கள் மட்டுமே இரட்டை தூய்மையாளராக அதாவது ஹோலியாசு ஆகிறீர்கள். பொதுவாக தர்மாத்மாக்களும் இருக்கின்றார்கள் ஆனால் அவர்கள் சரீரத்தில் தூய்மை ஆவதில்லை. பிராமண ஆத்மாக்களாகிய உங்களுக்கு மட்டுமே எதிர்காலத்தில் உங்கள் ஆத்மாவும் தூய்மை அடைகிறது. உடலும் தூய்மை பெறுகிறது. இதன் அடையாளமாகவே இரட்டை தூய்மைக்காக இரட்டை கிரீடம் பிராப்தம் ஆகின்றது. முழு கல்பத்திலும் இரட்டை மகுடதாரியான நீங்கள் சங்கமயுகத்தில் பாபாவின் துனையின் வர்ணணத்தால் இரட்டை பவித்திரமாகின்றீர்கள். சங்கமயுகத்தில் பரமாத்மாவின் துணை இரட்டை பவித்திரமானவராக மாற்றி விடுகிறது. எனவே உங்களது ஹோலி (துணை) பாபாவுடன் இருப்பதால், பாபாவைத் துணையாக வைத்துக் கொள்வதால் இரட்டை பவித்திரம் உள்ளவர் ஆகின்றீர்கள். சதா காலமும் உள்ளத்தில் பாபாவின் துணையே இருக்கின்றது. இந்த வர்ணம் எவ்வளவு உயர்வானது. அது உங்களை மிகவும் உயர்ந்தவர்களாக மாற்றி விடுகிறது, உலசு மக்கள் ஸ்தூலமான வர்ணங்களைப் பூசிக் கொண்டு ஹோலி கொண்டாடுகின்றார்கள் ஆனால் நீங்கள் பாபாவின் துணை என்னும் வர்ணத்தால் ஹோலி யாக மாறி விடுகின்றீர்கள். அதுவும் இரட்டை ஹோலி எனவே உங்களுடைய ஹோவி உலகத்தாரிட மிருந்து வித்தியாசமானது. பரமாத்மாவுடன் அன்பானது. நமது ஹோலி பிரபுவின் துணை என்னும் வர்ணத்தால் அரை கல்பத்திற்கு முற்றிலுமே தூய்மையாக மாற்றி விடுகிறது என்ற அந்த போதை இருக்கிறது அல்லவா? அது இப்போது வரையிலும் கூட உங்களுடைய சித்திரங்கள் நியமப்படி பூஜை செய்யப்பட்டு வருகிறது. மற்ற யாருடைய சித்திரமும் இப்படி அன்புடன் பூஜை செய்யப் படுவதில்லை. நீங்கள் உங்களுடையச் சித்திரத்தை தானே பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். மற்றவர் களும் பூஜை செய்யப்படுகின்றனர், ஆனால் இவ்வளவு சமயம் விதிப்படி பூஜை செய்தில்லை. நீங்கள் சதா ஊக்கம் உற்சாகத்தில் இருக்கின்றீர்கள் அல்லவார் ஊக்கம் உற்சாகத்தில் இருக்கின்றீர்களா? கை உயர்த்துங்கள். இருக்கின்றீர்களா,

அவ்வப்பொழுதா, அல்லது சதா காலமுமா? நாங்களும் சதா வக்கம் உற்சாகத்தில் இருக்கின்றோம், பிறருக்கும் ஊக்கம் உற்சாகம் ஏற்படுத்துகின்றோம் என்று சொல்பவர்கள் கை உயர்த்துங்கள். அவ்வப்பொழுது அல்ல, எப்பொழுதுமே எப்பொழுதுமே என்ற வார்த்தையைக் அடிக்கோடு இடுகிறீர்கள் தானே ஆனால் உங்கள் நினைவார்த்தமாக உங்களுடைய . ஸ்திதி எப்படிபெல்லாம் இருக்கிறதோ அதன் நினைவார்த்தமாக உங்களுடைய பக்தர்கள் உற்சவமாக கொண்டாடுகிறார்கள். நீங்கள் பிரபுவின் துணை என்னும் வர்ணத்தை பூசினீர்கள் என்றால், அவர்களும் வர்ணத்தை பூசிக்கொள்கிறார்கள், ஆனால் தேக அபிமானம் உள்ளதல்லவா? எனவே ஸ்தூலமான வர்ணத்தை பூசுகிறார்கள். அந்த வர்ணத்தில் செலவும் அதிகமாகிறது, பிறகு அதனுடைய பலனும் நல்லதாகவும், சில கெட்டதாகவும் அமைந்து விடுகிறது. இப்படித்தான் கொண்டாடுகிறார்கள் ஆனால் உங்களுடைய உற்சகாத்தின் நினைவர்த்தத்தையே அந்த உற்சவமாக கண்டிப்பாக கொண்டாடுகிறார்கள். நீங்கள் பரமாத்மாவின் குழந்தையாக முதலில் தன்னுடைய பழைய சம்ஸ்காரங்களை எரிக்கின்றீர்கள். மேலும் பிரபுவின் துணை என்னும் வர்ணத்தை பூசிக்கொள்வதால் சதா கொண்டாடிக் கொண்டே யிருக்கின்றீர்கள். அவர்களும் அப்படியே தான் முதலில் எரிக்கிறார்கள். பிறகு கொண்டாடுகிறார்கள் ஆனால் நீங்கள் கொண்டாடுவதற்கும், அவர்கள் கொண்டாடுவதற்கும் இரவு பகல் வித்தியாசம் உள்ளது. அவர்கள் தேக அபிமானத்தில் - நீங்கள் ஆத்ம் அபிமானத்தில் கொண்டாடுகிறீர்கள். அவர்கள் தேக உணர்வில் நீங்கள் ஆத்ம உணர்வில்!!

உங்களுக்கு பாப்தாதாவின் டைரக்ஷன் என்னவென்றால், ஹோலி என்றாலே கடந்து முடிந்தவை முடிந்து போனவை இப்படியும் சொல்கிறார்கள், ஹோ-லி முடிந்து விட்டது ஆனால் இந்த அர்த்தத்தை நடைமுறையில் கொண்டுவரமுடியவில்லை. நீங்கள் அனைவரும் ஹோ-லி அதாவது முடிந்தவைகளை முடிந்து போனதாக்கி விடுகிறீர்கள். செய்கிறீர்கள் அல்லவா! அல்லது எப்போதாவது செய்கிறீர்களா? ஏனென்றால் முடிந்தவற்றை நினைவு செய்வதால் விண் எண்ணங்கள் அதிகம் எழுகிறது. நேரமும் வீணாகிறது. நீண்ட காலமான சம்ஸ்காரம் விரும்பாமலும் எழும்பொழுது இந்த

சங்கமயுகத்தில் ஒவ்வொரு நிமிடமும் ஒரு ஜென்மத்தில் 21 ஜென்மத்திற்கான பலனை தருவது எனவே ஒவ்வொரு சங்கல்பமும், ஒவ்வொரு நிமிடமும் எவ்வளவு மதிப்பு வாய்ந்தது ஒரு வினாடி போசுவில்லை; ஆனால் அநேக பிறவியின் பலனில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. பாப்தாதா முன்பு கூட சொல்லியிருக்கின்றார், சங்கமயுகத்தின் நேரம் மற்றும் சங்கல்பத்தை ஒருபோதும் வீணாக்காதீர்கள். ஒருவேளை நீங்கள் சதா பிரபுவின் வர்ணத்திலே தோய்ந்திருந்தால் அதாவது பாபாவை எப்பொழுதுமே தன் துணைவராக வைத்திருந்தால், சங்கமயுகத்தின் ஒவ்வொரு சங்கல்பம் மற்றும் சமயம் அதாவது ஒவ்வொரு நிமிடத்தையும் லாபகரமாக மாற்ற முடியும். எனவே சோதனை செய்துப் பாருங்கள். தன்னுடைய ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு எண்ணமும் லாபகரமாக இருக்கிறதா? அல்லது வீணாகின்றதா? ஏனென்றால் ஒரு நிமிடம் அல்ல, 21 ஜென்மத்திற்கான தொடர்பு அந்த ஒரு நிமிடத்தில், ஒரு சங்கல்பத்தில் உள்ளது. அந்த அளவிற்கு மதிப்பு வாய்ந்தது. எனவே தன்னுடைய உள்ளத்தில் சிந்தனை செய்துப் பாருங்கள், அந்த அளவிற்கு சதா மதிப்பு வைத்திருக்கின்றேனா? இந்த சங்கமயுகத்தின் நேரத்திற்காகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது இல்லையேல் எப்போதும் இல்னை அந்த அளவிற்கு மதிப்பு சதா நினைவில் இருக்கட்டும்! நீங்கள் அனைவரும் இன்று ஹோலி கொண்டாடினீர்கள், அதாவது சதா பாபாவின் துணை என்னும் வர்ணத்தைப் பூசிக் கொண்டீர்கள். நாள் முழுவதும் சோதனை செய்துப் பாருங்கள். பாபாவின் வர்ணத்திலேயே இருந்தேனா? பரமாத்மாவின் துணையில் இருந்தேனா? அல்லது வேறு எங்காவது சமயம், சங்கல்பம் சென்றதா? சோதனை செய்தீர்களா? தலையை அசையுங்கள், கை அல்ல, அப்படி செய்யுங்கள்!

பாப்தாதா எப்பொழுதுமே சுட்டிக் காண்பித்துக் கொண்டிருக்கின்றார். தனது மனதில் சுபமான (சதோ குணி) நல்ல எண்ணங்கள் மூலமாக இயற்கையையும், (சதோகுணி) முழு தூய்மையாக மாற்றிக் கொண்டேயிருங்கள். ஆக, இந்த மனதின் சேவை நினைவில் இருக்கிறதா? ஏனென்றால் இப்போது இயற்கை பெரிய ரூபத்தில் தன்னுடைய வேலையை செய்வுள்ளது. இது எல்லாம் சிறிய விஷயம் தான் ஆனால் இயற்கையை மனித ஆத்மாக்கள் தொந்தரவு

செய்கின்றார்கள். எனவே அதுவும் தொந்தரவு செய்ய ஆரம்பிக்கிறது. எனவே பாப்தாதா சொல்கிறார், மாயாஜீத் ஆவதில் கவனம் வைத்துள்ளீர்களோ, கவனம் வைத்துள்ளீர்கள் தானே? மாயாவிடம் வாக்கு கொடுத்துள்ளீர்கள். உனது வேலை வருவது எனது வேலை வெற்றி அடைவது. இப்படி தானே அனைவரும் வாக்கு கொடுத்துள்ளீர்கள்? செய்துள்ளீர்களா? மாயாஜீத் ஆக வேண்டும் அல்லவா? அவ்வாறே இயற்கையை வென்றவர்களாகவும் ஆக வேண்டும். ஏனென்றால் நீங்கள் இராஜ்யம் செய்ய வேண்டும் அல்லவா? உங்களது இராஜ்யம் வந்து கொண்டிருக்கின்றது அல்லவா? போதை இருக்கிறதல்லவா? பாவம் உலக மக்கள் என்ன ஆகுமோ? ஏது ஆகுமோ என பயந்து கொண்டு யோசனை செய்து கொண்டிருக்கின்றார்கள் ஆனால் உங்களுக்குத் தெரியும், இப்பொழுது சங்கமயுகம் அமிர்தவேளை நடைந்து கொண்டிருக்கின்றது, அமிர்தவேளைக்குப் பிறகு என்ன வரும்? அதிகாலை, விடியல், அந்த விடியலிலேயே நமது இராஜ்யம் வரும். போதை உள்ளதா? நமது இராஜ்யமா? அல்லது மகாரதிகளுக்கான ராஜ்யம் மட்டும் தானா? மகராதிகளுக்கான ராஜ்யமா? உங்கள் அனைவருக்கும் இராஜ்யம் தானே அது. உங்களுக்கு என்ன ஆகுமோ என்ற கவலையில்லை தானே ? மிகமிக நல்லதே நடக்கும். உங்களது இராஜ்யத்தின் இயற்கையும் முழு தூய்மையாகவே இருக்கும். அப்படியானால் இயற்கையை தமோகுணத்தில் இருந்து சதோ குணமாக மாற்றுவது யார்? இயற்கை எப்படியிருந்தாலும் பரவாயில்லையா? உங்களது இராஜ்யத்தில் அப்படியிருக்கலாமா? இருக்கலாமா? ஆமாம், இல்லை ஏதாவது ஒன்று சொல்லுங்கள். அப்படியிருக்கக்கூடாது தானே? அப்படியான இயற்கையை சதோகுணமாக மாற்றுவது யார்? நீங்கள் தானே அதை மாற்ற வேண்டும். எனவே இப்போது எதிர்பாராத விதமாக திடீரென்று முதல் காட்சி சிறிய காட்சி இது ஆரம்பமாகியுள்ளது. இனிமேல் பெரிய பெரிய அளவில் வரயிருக்கிறது. மேலும் அது திடீரென்று தான் வரும். நீங்கள் நினைத்துக் கூட பார்க்காதது அது தான் நடைபெறும்.

பாப்தாதா வெகுகாலமாகவே எதிர்பாராவிதமாக (அச்சானக்) என்ற பாடத்தை கற்பித்துக் கொண்டிருக்கின்றார் ஆனால் இப்பொழுது பிரத்யட்சமான ரூபத்தில் பார்த்து விட்டு தனது வேலையை ஆரம்பியுங்கள், பயப்படாதீர்கள். கதை சொல்கிறீர்கள் அல்லவா?

நாலாபுறமும் தீ எரிந்தது, ஆனால் பரமாத்மாவின் குழந்தைகள் பாதுகாப்பாக இருந்தார்கள். அப்படியே இப்பொழுதும் கூட குழந்தைகள் பாதுகாப்பாக இருந்தார்கள் அல்லவா? சோதனைத்தாள் வரத்தான் போகிறது ஆனால் உங்களுக்கு இரண்டு வேலை. ஒன்று பயமற்றவர்களாகி எதிர்கொள்ள வேண்டும். மற்றும் தன்னுடைய துக்கத்தில் இருக்கின்ற சகோதர சகோதரிகளுக்கு சேவை யார் செய்வது? நீங்கள் பிரபுவின் துணை என்னும் வர்ணத்தில் மூழ்கியுள்ளீர்கள். எனவே பரமாத்மாவின் துணை என்னும் வர்ணத்தில் கிடைக்கப்பெற்ற பிராப்தங்களை தன்னுடைய சகோதர சகோதரிகளுக்கும். பக்தர்களுக்கும் தராளமாக அன்புடன் மனமுவந்து பகிர்ந்து அளியுங்கள். துக்கமான நேரத்தில் யார் நினைவில் வருகின்றார்? இருப்பினும் பரமாத்மாவைப் புரிந்திருந்தாலும், புரியாமல் இருந்தாலும் ஆனால் வலுக்கட்டாயமாகவாது ஹே தந்தையே, பரமாத்மாவே! என்று கண்டிப்பாக சொல்வார்கள். இப்பொழுது பரமாத்மாவின் குழந்தைகள் நீங்கள் துக்கப்படுபவர்களுக்கு ஆதரவு தர வேண்டும். அவர்களை நல்லாசை மற்றும் நல்விருப்பங்கள் மூலமாக பாபாவிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஒளிக்கிரணங்களின் மூலமாக உதவி புரியுங்கள். அவர்களும் உங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அல்லவா? குடும்பத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்வார்கள் அல்லவா? பெயரே சகயோகம், சிரேஷ்டயோகம் என்பது தானே? அது தான் ஆதரவு தருவதற்கான சாதனமாகும். செய்தியும் அனுப்பப்பட்டிருந்தது, நேரத்தை நிச்சயம் செய்யுங்கள் என்று. இப்படிச் சொல்லாதீர்கள். ஆகி விடும். டிராப்பிக் கண்டரோ அமிர்தவேளை நேரம் நிச்சயக்கப்பட்டிருக்கிறது அல்லவா? அதுபோல தன்னுடைய காரியங்களுக்கு ஏற்ப இந்த மனதில் சேவையும் செய்ய வேண்டியது. இப்போதைய நேரத்தில் மிகமிக அவசிய மாகின்றது. எனவே நேரத்தை ஒதுக்குங்கள். இரக்க மனம் உள்ளவர் ஆகுங்கள், நன்மை செய்பவர் ஆகுங்கள். உங்களது சுயமரியாதை என்ன? விஷ்வ கல்யாணகாரி என்பது தாளே? இரக்கம் வருகிறதா? ஆகி விடுமா? ஆகி விடும் என்று இதில் சோம்பலாக இருந்து விடாதீர்கள்? ஏனென்றால் யாருக்கெல்லாம் நீங்கள் ஒளி தருவீர்களோ அவர்கள் உங்களுடைய பக்தர்கள் ஆவார்கள். எனவே என்ன செய்ய வேண்டும்? கவனம் இருக்கிறதா? யார் எல்லாம் எங்களுக்கு கவனம் இருக்கின்றது. மேலும் கவனத்தை அதிகரிப்போம் என்று சொல்கிறீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். மேலும் கீழும்

செய்கின்றீர்கள். இந்கே தெரிய வருகின்றது. (டிவியில்) ஒருவேளை இவ்வளவு பேரும் தனது கயமரியாதையை நடைமுறையில் கொண்டு வந்து விட்டால் அந்த ஆத்மாக்களும் இப்போதே சங்கமயுகத்தில் உங்களுக்காக பாடல் பாடுவார்கள். ஆஹா, பரமாதமாவின் குழந்தைகளே ஆஹா! எங்களுக்கு நீங்கள் ஆதரவு ஒத்துழைப்பு கொடுத்து விட்டீர்கள். நீங்கள் இப்போது கொடுக்கின்ற உதவிக்காக, அளர கல்பத்திற்கு அவர்கள் உங்களுக்காக பாடல் பாடிக் கொண்டேயிருப்பார்கள். நீங்கள் அவர்களுக்கு மூதாதையர் ஆகி விடுவீர்கள். மூதாதையர் தானே? கல்ப மரத்தில் பிராமணர்கள் எங்கே அமர்ந்துள்ளீர்.கள். கீழே அமர்ந்துள்ளீர்கள் அல்லவா? அப்படி என்றால் நீங்கள் மூதாதையர் தானே பக்தர்களின் கூக்குரல் உங்கள் காதுகளில் வந்து விழுகிறதா? சிறிது தனக்கு எச்சரிக்கை கொடுங்கள், துக்கப்படும் ஆத்மாக்களுக்கு அடைக்கலம் கொடுத்தே ஆக வேண்டும். அப்பொழுது கூக்குரல் காதில் விழும்.

நீங்கள் அனைவரும் ஹோலி கொண்டாடி விட்டீர்கள், உங்களைப் பொருத்த மாட்டில் சங்கமயுகம் முழுவதும் ஹோலி தான், பரமாத்மாவின் துணையிலும், வர்ணத்திலும் இருக்கின்றீர்கள். நினைவார்த்த மாக கொண்டாடுபவர்களுக்கு ஒரிரண்டு நாள் தான் ஆனால் உங்களுக்கோ முழு சங்கமத்திலும் பிரபுவின் தொடர்பிலேயே இருக்கின்றீர்கள். நஷா இருக்கிறதல்லவா? மக்கள் பாலம் கேட்டுக் கொண்டேயிருக்கின்றார்கள், பிரபு இது செய்யுங்கள், அது செய்யுங்கள் ஆனால் உங்களுக்கோ 21 பிறவிகளுக்கு உத்திரவாதம் கிடைத்து விட்டது. கனவில் காட்சிக்காகக் கூட துக்கம் ஏற்படவே ஏற்படாது. எண்ணத்தில் கூட துக்கத்தின் அலை வீசமுடியாது. எனவே சதா ஒவ்வொருவரும் தனது ராஜ்யத்தை பெறவேண்டும் என்றால் இப்பொழுது தனது பரிவாரத்தை சத்யுகத்தின் துணையாக மற்றும் ராயல் பிரஜை. சாதாரண பிரஜைகளை இப்போதே நீங்கள் உருவாக்க வேண்டும். 21 பிறவிகளுக்கு உத்திரவாதம்! சிறிதளவு சேவை செய்யுங்கள். நேரம் ஒதுக்குங்கள், ஏனென்றால் உங்களிடம் சங்கல்ப சக்தி இருக்கவே இருக்கிறது. பாபாவிடம் இருந்து கிடைத்ததை தன்னுடைய சகோதர சகோதரிகளுக்கும் கொடுங்கள். அது போதும்.

பாப்தாதா முன்பு கூட சொல்லியிருக்கின்றார். தன்னிடம் இதனை சதா சோதனை செய்துப் பாருங்கள் நான் பிராமண பரிவாரத்தினுடைய சம்ஸ்காரங்களுடன் இணைந்து நடனம் செய்ய வேண்டும். பாப்தாதா சொல்லியிருக்கின்றார். எப்போது அந்த நடனம் செய்வதற்கான தேதியும் குறியுங்கள். தேதி குறிக்க முடியுமா? முடியுமா? முதல் வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் சொல்லுங்கள், கை உயர்த்துங்கள். முடியுமா? பாண்டவர்களும் கை உயர்த்துங்கள். பாண்டவர்கள் இல்லாமல் வழியே இல்லை. நல்லது. இப்போது கடைசி முறையா? ஒரு முறை இன்னும் பாக்கியுள்ளது. அதற்குள் எல்லோரும் தனக்குள் என்ன திட சங்கல்பம் வைப்பீர்கள். தேதியை நிச்சயம் செய்து எழுதுங்கள். அதற்கு எவ்வளவு நேரம் வேண்டும் பிராமண பரிவாரத்தில் அங்காங்கே எப்பொழுதுமே சம்ஸ்காரம் தனது வேலை செய்யக்கூடாது. எனது சம்ஸ்காரமானாலும் சரி, பிறரது சம்ஸ்காரமானாலும் சரி, என்மீது அது சாயலை ஏற்படுத்தக்கூடாது. இதற்குரிய தேதி குறிக்க முடியுமா? முடியுமா? கை உயர்த்துங்கள். நல்லது. எல்லோரையும் போட்டோ எடுங்கள். ஏனென்றால் இப்போது திடீரென ஒரு சீன் பார்த்தீர்கள் அல்லவா? அதைபோலவே எல்லாமே எதிர்பாரவிதமாக நடக்கும். எனவே பாப்தாதா ஏற்பாடுகளை பார்ப்பார் அல்லவா? பிறருக்கு சுப பாவனை, சுப காம்னா தருகின்றீர்கள், பாப்தாதா பார்க்கின்றார்: இதையெல்லாம் பிறருக்குத் தருவதற்கான சேவைக்கான நிகழ்ச்சிகளை அமைக்கின்றீர்கள். அப்படியே நீங்கள் ஒவ்வொருவர் மீதும் நல்லாசை மற்றும் நல்விருப்பங்களை வையுங்கள், வரிசைக்கிரமமாகத்தான் நடக்கும். உங்களது மாலை நினைவார்த்தம் முதல் நம்பர் தானோ எல்லோருமே முதல் நம்பர் ஆக முடியுமா? வரிசைக்கிரமாகத்தான் இருக்கும் ஆனால் மாலையில் உருட்டப்படுவீர்கள் அல்லவா? ஏன் நம்பர் கிடைக்கிறது? விதவித சம்ஸ்காரங்கள் உள்ளது ஆனால் நாம் சம்ஸ்காரங்களைப் பார்ப்பதற்கு பதிலாக நல்லாசை மற்றும் நல்விருப்பங்கள் வைக்க வேண்டும். அவர்களும் பிராமண பரிவாரம் தானே? எப்படியிருந்தாலும் சரி எனது பரிவாரம் அல்லவா? எனது பாபா என்று சொல்வதுபோலேவே பரிவாரமும் எனது தானே? சரி நல்லது. பெரும்பான்மையானோர். கை உயர்த்தினீர்கள் அனைவருக்குமே ஊக்கம் உற்சாகம் உள்ளது. எனவே கை உயர்த்தினீர்கள் அல்லவா? எனவே ஒருவருக்கொருவர் சகயோகம் செய்து நல்லாசை மற்றும் நல்விருப்பம் கலந்த திருஷ்டி, பார்வை

விருத்தி (உள்ளுணர்வு) ஸ்ருதி (நினைவு) வைப்பதன் மூலம் இந்த நடனம் புரிவது ஒன்றும் பெரிய விஷயம் ஆகாது. மிக சுலபம் தான். இதில் யார் நல்ல மதிப்பெண் பெருவார்களோ, குறித்த தேதிக்குள் நடைமுறையில் செய்து காண்பிப்பீர்களோ அவர்களுக்கு பாபா மிகவும் தனிப்பட்ட, அன்பான சன்மானம் கிடைக்கும். அது என்னவென்று இப்போது சொல்ல மாட்டோம் ஆனால் பாப்தாதா சன்மானம் வழங்குவார். ஏன்? சேவை செய்வதற்காக நேரம் ஒதுக்க வேண்டும் அல்லவா? எனவே இந்த சம்ஸ்காரமானது இடையூறுகள் நேரத்தை தன்பக்கம் இழுத்துக் கொள்கிறது. எனவே நேரம் மிகவும் அவசியமாகிறது சரிதானே? இவர்கள் அனைவரும் மதுபனை சார்ந்தவர்கள் அல்லவா? பிடித்துள்ளதா? ஏனென்றால் மதுபன்வாசி என்றாலே விசேஷமானவர்கள். பாப்தாதாவிற்கும் மதுபன் வாசிகள் மீது உளமார்ந்த அன்பு இருக்கிறது. மதுபனைச் சார்ந்தவர்களுக்கும் அப்படியே இருக்கிறது இதையும் பாபா சொல்கின்றார். பாபா மீது அன்பு இருக்கிறது. அது என்றும் இருக்கும், விலக முடியாது. என்றும் நிரந்தரமாக இருக்கும். இதில் அமரராக இருக்கின்றீர்கள். எனவே தானே மதுபன் வாசிகள் ஆகியுள்ளீர்கள் அல்லவா? மதுபன்வாசி எங்கே சென்றாலும் எந்த மரியாதையோடு பார்க்கின்றார்கள்? இவர் மதுபனைச் சார்ந்தவர். இவர் மதுபனை சார்ந்தவர். எனவே இந்த கவனம். வையுங்கள். கடைசி முறை பாபாவைச் சந்திக்க வருவதற்கு முன்பாகவே மதுபனைச் சார்ந்த அனவைரும் ஏதேனும் ஒரு இடத்தை நிச்சயித்து அங்கே தன்னுடைய சீட்டை எழுதிப்போடுங்கள் ஆனால் அதை கடைசி முறையாக பாபாவை சந்திக்க வருவதற்கு முன்னதாகவே செய்ய வேண்டும்.

அனைவரும் ஹோலி கொண்டாடினீர்களா? உங்களுக்கு தினமும் ஹோலி தானே? இப்போது கூட இது வெளிமுகமாக சிறிது கொண்டாட வேண்டியுள்ளது. வேறு எங்கே கொண்டாட செல்வீர்கள், இங்கே தானே கொண்டாட வேண்டும் ஆனால் அது ஒரு வழக்கம். நாலாபுறமும் உள்ள பாப்தாதாவின் மிக அன்பான மிக பிரியமான செல்லக் குழந்தைகள், தேடிக் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள், சுய மரியாதையில் இருப்பவர்கள். ஒவ்வொரு குழந்தைகளுக்கும், பாப்தாதா அன்பு நினைவு தருகின்றார். மேலும் உளமுவந்து செல்லத்தையும் தருகின்றார்.

பாப்தாதா பார்க்கின்றார்: நாலாபுறமும் அனைவரும் கேட்டும் பார்த்தும் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றீர்கள்.

இன்று முதல் முறையாக வந்துள்ளவர்கள் யார்? எழுந்திருங்கள், இவர்கள் அனைவரும் முதல் முறையாக வந்தவர்கள். முதல் முறையாக மதுபன் வாசியாக ஆவதற்கான பாக்கியத்தை பெற்றுள்ளீர்கள். உங்களது அனைத்து சகோதர சகோதரிகளும், பாப்தாதாவும் முதல் முறையாக வந்திருக்கின்ற உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை வழங்குகின்றார்கள். இப்போது பாப்தாதா பார்க்கின்றார், ஏனென்றால் வாய்ப்புள்ளது. சிறிது காலதாமதமாக வந்திருந்தாலும் ஆனால் விரும்பினால் இப்போதும் கடைசியில் இருந்தாலும் வேகமாகச் சென்று முதல் நம்பரில் வரமுடியும். இன்று வந்துள்ள அனைவருக்காகவும் பாப்தாதா இதை வரதானமாகத் தருகின்றார். மேலும் சுப பாவனை, சுப ஆசை உள்ளது. நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் அவ்வளவு முன்னேறலாம். அனைவரும் உங்களுக்கு மனமார்ந்த ஆசீர்வாதங்களைத் தருகின்றார்கள். எங்கிருந்து வந்திருந்தாலும் உங்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கின்றது. அந்த ஆசீர்வாதம் உங்களைத் தீவிர முயற்சி செய்ய வைத்து உங்களை முன்னேற வைத்து விடும். இதில் நம்பிக்கை வையுங்கள் நல்லது.

சேவைக்கான வாய்ப்பு பஞ்சாப் மண்டலம்: (பஞ்சாப், ஹரியானா, ஜம்மு காஷ்மீர், ஹிமாச்சல், உத்ராஞ்சல்): பஞ்சாப் என்றாலே பஞ்சாப் சிங்கம், சிங்கம் என்றால் வாரிசை உருவாக்குபவர்கள். ஒவ்வொரு சென்டரிலிருந்தும் அவரவருடைய வாரிசு தரமானவர்களின் பெயர் பட்டியலை அனுப்புங்கள். ஆரம்பத்தில் இருந்து இப்போது வரையிலும் ஒவ்வொரு வாரிசு தரமானவர்கள் இருக்கின்றார்கள்? வாரிசு தரமானவர்கள் எங்கேயும் மறைந்திருக்க முடியாது. இன்று பொதுவாக பாப்தாதா அதையும் பார்க்க விரும்புகின்றார். மேலும் நன்கு பேரொலி எழுப்பும் அளவிலான மைக்காக இருப்பவர்கள் எத்தனைப்பேர்? அவரது உள்ளத்தில் இருந்து வெளிவருகின்ற சப்தத்தை பிறரது உள்ளமும் திலராமின் பக்கம் கவர்ந்திழுக்க வேண்டும் ஆனால் பாப்தாதா கேள்விப்பட்டார். அதிகம் துறையினைச் சார்ந்தவர்கள் ஒன்றிணைய வேண்டும். அந்தந்த துறையினரிடம் கேட்கலாம் ஆனால் பஞ்சாப்

அனைத்து சென்டரிலும் சிறியதோ பெரியதோ எதுவானாலும் சரி அங்குள்ள வாரிசு தரமானவர்கள் எத்தனைப்பேர் இருக்கின்றார்கள்? எப்போதிருந்து வந்தவர்கள்? ஏனென்றால் பஞ்சாப் கூட முதன் முதலில் உருவானது. பஞ்சாப்பில் கூட மிகவும் மகாவீர், மகாரதி சேவைக்கு அதிகாரியாக மாறினார்கள். பாலனையும் கிடைத்துள்ளது. அனேக பூர்வஜ் ஆத்மாக்களும் சேவை செய்து சென்றுள்ளார்கள். பாப்தாதாவிற்கும் பஞ்சாப் மீது அன்புள்ளது ஏன்? ஏன் அன்புள்ளது? ஏனென்றால் பஞ்சாப்பில் நதிகளும் அதிகம் உள்ளது. எப்படி பஞ்சாப் நதிகளின் பிரசித்தமான இடமோ, அதுபோலவே பாப்தாதாவின் பக்கம் பஞ்சாப்பின் சேவாதாரிகள் பிரசித்தமானவர்கள். தியாகம் செய்வதிலும், செய்விப்பதிலும் புத்திலியானவர்கள். எனவே வாரிசு தரமானவர்களை உருவாக்குவது சுலபம் தான். பாப்தாதா ஒவ்வொரு மண்டலத்திற்கும் நம்பர்-1 தர விரும்புகின்றார். பாப்தாதா பார்க்கின்றார் மண்டலம் வரும்பொழுது இதுவரையிலும் எந்த மண்டலமும் குறைவாக வருவதில்லை. ஒருவரை விட ஒருவர் அதிகமாகத் தான் வந்திருக்கிறார்கள். எனவே பஞ்சாப்பிலிருந்து சேவை மூலமாக வந்தவர்கள் முக்கியமாக அதற்காகவே சேவை செய்து வாரிசு தரமானவர்களை கொண்டு வர வேண்டும். கொண்டு வரமுடியுமா? கவனம் வைத்தால் உருவாக்கலாம். தரத்தை மட்டும் புரிந்துகொண்டு அவர்கள் மீது சற்று கவனம் வைத்தால் சுப பாவனை, சுப ஆசையுடன் சற்று பிரத்யேகமாக முயற்சி செய்யுங்கள். சற்று விசேஷ கவனம் செலுத்த வேண்டிவரும் ஆனால் தரமானவர்களாக இருக்க வேண்டும். இப்போதுள்ள நேரமும் சற்று வைராக்கியத்தை உடையதாகும். நாலாபுறமும் எல்லோருக்குமே அல்ப காவ வைராக்கியம் வந்துள்ளது. இப்படிப்பட்ட சமயத்தில் ஒவ்வொரு ஜோனிலும் அப்படி தரமானவர்கள் மீது சற்று கவனம் வைத்து புரிந்து கொண்டு சுலபமாக முன்னேற்ற முடியும். அவர்களை யக்ஞ சினேசிகளாகவும், யக்ஞத்தை ரட்சிப்பவர்களாகவும் மாற்ற முடியும். இப்பொழுது வைராக்கியம் தூடேரியுள்ளது (ஜப்பான் காகரணமாக). இப்போது முதலி ல் இன்று பஞ்சாப் முறை வந்துள்ளது. எனவே பஞ்சாப் முதல் நம்பரில் ஆரம்பம் செய்யுங்கள், நல்லது. பாப்தாதா அனைவரின் முகத்தையும்பார்த்துக் கொண்டிருக்கின்றார். தூரத்தில் இருந்தாலும் டிவியில் அருகில் தென்படுகின்றீர்கள். பார்த்துக் கொண்டிருக்கின்றார். நல்லது.

**6-துறையினைச் சார்ந்தவர்கள் (Wings) வந்துள்ளார்கள்: (சமூக சேவை, 2-போக்குவரத்து துறை, ஊடகம் அறிவியல் மற்றும் பொறியாளர், மேலும் மருத்துவத்துறை, செக்யூரிட்டி மற்றும் ஐ.டி.:** அனைத்து துறையை சார்ந்த சகோதர சகோதரிகளையும் பாபா எழுந்திருக்க கூறினார். பெரும்பாலும் துறையை சார்ந்தவர்களே தென்படுகின்றார்கள். மேலும் பாப்தாதாவிற்கும் இங்கு வந்துள்ள அனைத்து துறையினரும் சேவை செய்து கொண்டிருக்கின்றார்கள், பாப்தாதாவும் பார்க்கின்றார். சேவைக்கான பலனும், நன்றாக வந்து கொண்டிருக்கின்றது, எனென்றால் நாலாபுறமும் சேவைக்காக தனித்தனியே சென்றுள்ளார்கள். எனவே ஒவ்வொரு துறையினரும் அவரவர் துறையில் நாளுக்கநாள் முன்னேற்றம் கொண்டு ஆத்மாக்களை அருகில் கொண்டு வருகின்றார்கள். எனவே பாப்தாதா ஒவ்வொரு துறையினர் மீதும் அவர்கள் செய்யும் சேவை குறித்தும் மகிழ்ச்சி அடைகிறார். கைத்தட்டுங்கள்.

இப்பொழுது அடுத்து என்ன செய்யப் போகிறீர்கள்? சேவை விரிவாக சென்று கொண்டிருக்கின்றது ஆனால் இப்பொழுது சேவை மூலமாக அருகே வந்திருப்பவர்களை ஒவ்வொரு துறையிலும் ஒன்று சேர்த்து அவர்களை யக்ஞ சினேகியாக மாற்றுங்கள். ஒருமுறை யகளுத்தில் வந்துள்ளார்கள், அதுவேறு விஷயம், யக்ஞ சினேகி ஆவதால் அவர்களுக்கு யக்ஞம் என்றால் என்ன? யக்ஞத்தின் அன்பு என்பது எப்படிப்பட்டது. இவற்றையெல்லாம் புரிய வைத்து அருகாமையில் கொண்டு வாருங்கள். சற்று வீட்டில் ஒருவராக மாற்றுங்கள். சொற்பொழிவு செய்கின்றார்கள். கேட்கின்றார்கள், இதில் எல்லோருமே தேர்ச்சி அடைந்து விட்டார்கள் ஆனால் பரிவாரத்தில் துணையாக இருக்கட்டும். அப்படிப்பட்டவர்களின் பெயர் பட்டியலை உருவாக்குங்கள். ஒவ்வொரு து யக்ஞத்தின் தொடர்பில் வந்துள்ளார்கள், பாப்தாதாவிற்கு சொல்லப்பட்டது, அனேக ஆத்மாக்கள் எத்தனை பேர் முரளி கேட்கும் அளவிற்கு வந்திருக்கிறார்கள். அதுவும் நல்லது தான். எப்படி முரளி கேட்கும் அளவிற்கு வந்துள்ளார்களோ அதுபோலவே யக்ஞ சிநேகம் என்றால் என்ன? யக்ஞ சினேகியாக நிமித்த ஆத்மா என்னென்ன செய்து தன்னை முன்னேற செய்யலாம். இப்படிப்பட்ட நிமித்த ஆத்மாக்களை இப்போது உருவாக்குங்கள். சொற்பொழிவு செய்வதில் உதவியாளராக உள்ளார்கள். பிறருக்கும்

அறிமுகம் தருவதிலும் நிமித்தமாக உள்ளார்கள். இது குறித்து பாப்தாதா வாழ்த்துக்கள் தருகின்றார். முரளி கேட்கும் அளவிற்கு வந்துள்ளார்கள். இப்பொழுது அவர்களை மேலும் முன்னேற்றுங்கள். தன்னை அவர்கள் சகயோகியாக மட்டுமல்ல. சினேகியாகவும் அனுபவம் செய்யட்டும். நான் யக்ஞ சினேகி, யக்ஞத்தின் சகயோகி, நானும் இந்த பரிவாரத்தின் ஒரு உறுப்பினர் என்பதை உணர வையுங்கள். வி.ஐ.பி.யாக கூட இருக்கலாம் ஆனால் பரிவாரத்தின் உறுப்பினர். பரிவாரத்தின் அருகாமையில் கொண்டு வாருங்கள். நீங்கள் எப்படி நிமித்தமாக இருக்கின்றீர்களோ அதுபோலவே அவர்களையும் நீங்கள் சேவை செய்வது போலவே அவர்களும் தன்னை பொறுப்பானவர் என்று உணரட்டும். துறைகள் அமைத்த பிறகு சேவை வளர்ச்சி அடைந்துள்ளது. தெரியாமல் இருந்த அநேக ஆத்மாக்களுக்குத் தெரிய வந்துள்ளது. பிரம்மா குமாரிகள் என்ன செய்கிறார்கள், அவர்களின் செயலாக்கம் என்ன என்பது பற்றி அறிமுகம் கிடைத்துள்ளது. இப்போது மேலும் முன்னேற செய்யுங்கள், ஒன்று தினசரி வருகைப் பதிவு எதிரில் வராமல் இருந்தாலும் போன் மூலமாகவாவது ஏதேனும் ஒரு விதி மூலமாக தனது பிரசன்ட் (வருகை) வர வேண்டும். ஏனென்றால் வீட்டின் உறுப்பினர் அல்லவா? அவசியம் வருகை தர வேண்டும். பாப்தாதா இப்படிப்பட்ட பெயர் பட்டியலை உருவாக்க முன்பு சொல்லியிருக்கின்றார். ஒவ்வொரு மண்டலத்திலும் அவர்களை ஒன்று சேர்த்து அவர்களையும் ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வாருங்கள். ஒவ்வொரு ஜோனிலும் சென்டரில் இருக்கின்றவர்கள் மட்டுமல்ல, ஆனால் ஒவ்வொரு துறையிலும் தலைமை யிடத்தில் இருப்பவர்கள், அப்படிப்பட்டவர்களின் பெயர் பட்டியைல தயார் செய்யுங்கள். அவர்களை ஒன்று சேருங்கள். அப்படி ஒருவரை ஒருவர் பார்க்கும்போது உற்சாகம் ஏற்படும். இதுபோல் நாங்கள் எங்களது துறையில் மண்டலம் முழுவதும் கூட்டத்தினை ஒன்று சேர்ப்போம், இப்படியெல்லாம் தரமானவர்கள் வந்தார்கள் என்று செய்தி இதுவரையிலும் வரவில்லை. மற்றபடி பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி தான் பொதுவான முறையில் கவனம் கொடுத்துள்ளீர்கள், கவனம் கொடுத்து செய்து கொண்டுமிருக்கிறீர்கள். இப்போது குழுவைத் தயார் செய்யுங்கள். யாரெல்லாம் தொடர்பில் வந்துள்ளார். களோ அவர்கள் ஐ.பி.யோ அல்லது வி.ஐ.பியோ யாரானாலும் சரி, அவர்கள் எவ்வளவு சேவை செய்துள்ளார்கள், எத்தனை பேருக்கு செய்தியை

கொடுத்துள்ளார்கள் இந்த செய்தியைப் பெற வேண்டும். அவர்களுக்கும் ஆர்வத்தை அதிகப்படுத்துங்கள். நமது ரிசல்ட் மதுபனிற்கு செல்கிறது என்று அவர்கள் தெரிந்து கொண்டால் ஆர்வம் அதிகரிக்கும். மற்றபடி பாப்தாதா முன்பு கூட உங்கள் அனைவருக்கும் சொல்லியிருக்கின்றார். சேவையில் ஊக்கம் உற்சாகம் இருக்கிறது, அனவைரும் சய்து கொண்டிருக்கின்றீர்கள், அதற்கான வாழ்த்துக்களை பாப்தாதா முன்பே கொடுத்து விட்டார். நல்லது.

ஒவ்வொரு துறையிலிருந்தும் ஒவ்வொருவர் எழுந்துள்ளீர்கள் அல்லவா? அவ்வாறே ஒவ்வொரு துறையைச் சார்ந்தவர்களும் புரிந்து கொள்ளுங்கள், பாப்தாதாவிற்கு முன்பாக இருக்கின்றோம். பின்னால் இருந்தாலும் எதிரில் இருக்கின்றோம். பாப்தாதா உங்கள் ஒவ்வொருவருடைய துறையினரையும் வெகு அருகில் பார்த்துக் கொண்டிருக்கின்றார். எனவே பல கோடி மடங்கு வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!

600-இரட்டை அயல் நாட்டு சகோதர சகோதரிகள் 50-தேசங்களிலிருந்து வந்துள்ளார்கள்! பாப்தாதாவிற்கு அயல் நாட்டவரின் நினைவு விசேஷமாக வருகிறது பொதுவாக எல்லா குழந்தைகளின் நினைவும் வருகிறது ஆனால் அயல் நாட்டவரின் பெயரைக் கேட்டு பாரத வாசிகளுக்கும் உற்சாகம் வருகிறது. அயல் நாட்டைச் சார்ந்தவரே பரமாத்மாவைப் புரிந்து கொண்டு ஆஸ்திக்கு அதிகாரி ஆகும் போது நாம் இதிலிருந்து வஞ்சிக்கப்பட்டவர் ஆகி விடக்கூடாது என்று ஊக்கம் உற்சாகம் வருகிறது. எனவே இப்போது சேவையில் அயல் நாட்டவரும் பாரதவாசிகளும் ஒன்று சேர்ந்து நிகழ்ச்சிகளை ஆரம்பித்துள்ளீர்கள். தெரிந்து கொண்டீர்கள். அயல்நாட்டவரே புரிந்து கொண்டு செயல்படும் போது நாம் நின்றுவிடக்கூடாது என்று ஊக்கம் வருகிறது. எனவே பாரதவாசிகளுக்கு முன்னேறுவதற்கான ஊக்கத்தை ஏற்படுத்து விதில் நிமித்தமான ஆத்மாக்களாக இருக்கின்றார்கள் அயல்நாட்டவர்கள். எனவே ஒவ்வொரு துறையை சார்ந்தவர்களும் முயற்சி செய்கிறார்கள். இப்போது கூட டில்லியில் ஒன்று சேர்ந்து நிகழ்ச்சிகளை செய்தீர்கள் அல்லவா? சிறிய அளவிவோ, பெரிய அளவிலோ ஆனால் ஓரிருவர் அயல் நாட்டவர் தன்னுடைய உளமார்ந்த ஊக்கத்துடன் அனுபவத்தை சொல்கிறார்கள். தலைப்பில் பேக்கிறார்கள். அதைக் கேட்டு மகிழ்ச்சி

ஏற்படுகிறது. ஏனென்றால் முன்பே பாப்தாதா சொல்லியிருக்கின்றார், அயல் நாட்டவர் பாரதத்தை விழிப்படைய செய்வதில் நிமித்தமாக இருப்பார்கள். எனவே இப்போது சேவையில் நாளுக்கு நாள் அயல் நாட்டவர்களும் செயல்பாடுகிறார்கள், பாரதத்தை சார்ந்தவர்களும் சேர்ந்து செயல்பட முயற்சி செய்கிறார்கள். எந்த ஒரு பெரிய நிகழ்ச்சியும் எப்படி ஆரம்பத்தில் அயல்நாட்டிலிருந்து யாரேனும் ஒரு விசேஷமான வி.ஐ.பி. வந்து கொண்டிருந்தார்கள், அதுபோலவே இப்பொழுதும் முயற்சி செய்யுங்கள். ஏதேனும் ஒரு நிகழ்ச்சி செய்யும் பொழுது எங்கிருந்தாவது யாரேனும் ஒரு வி.ஐ.பி. அழைப்பின் பேரில் வர வேண்டும். ஆரம்பத்தில் இது மிக நன்றாக நடைபெற்று வந்தது. இப்பொழுதும் கூட ஒன்று பிராமண ஆத்மாக்களும் தனது அனுபவத்தை சொல்ல வேண்டும் மற்றொன்று வி.ஐ.பி. யாராவது ஒருவர் பாரதம் மற்றும் அயல்நாடு இணைந்து செயல் பட வேண்டும். அயல் நாடு பாரதத்தை விழிப்படைய செய்யும். பாரதம் அயல் நாட்டை விழிப்படைய செய்யும். இந்த சேவை செய்ய செய்ய அயல் நாட்டில் நமது இராஜ்யத்தில் யார் யார் வரயிருக்கிறார்கனோ இதுவும் பிரசித்தமாகி விடும். ஏனென்றால் விசேஷமாக வருகின்ற ஆத்மாக்களின் பிரபாவம் அரசாங்கத்தின் வரையில் சென்றடைகிறது. அவர்களை அரசாங்கம் பராமரிக்க வேண்டியுள்ளது. செய்தித் தாளிலும் பெயர் வருகிறது. இதனால் சேவை முன்னேறுவதற்கான சுலபமான வழியும் பிறக்கிறது. அயல் நாட்டினர் சேவை செய்து கொண்டிருக்கின்றார்கள். இது குறித்து பாப்தாதாாவிடம் பதிவு உள்ளது. இப்போது அனைத்து துறையினரையும் சார்ந்தவர்கள் விரும்புகிறார்கள் எந்த ஒரு நிகழ்ச்சி செய்தாலும் அந்த நிகழ்ச்சிக்கு ஏற்ப அயல் நாடு பாரதத்தை விழிப்படைய வைப்பதும், பாரதவாசிகளின் இவ்வளவு பெரிய ரூபத்தைப் பார்த்து அயல்நாடும் விழிப்படைய வேண்டும். ஒவ்வொரு விசயத்திலும் அயல் நாட்டவர் பாப்தாதாவைப் பார்த்துமகிழ்ச்சி அடைகின்றார். எவரெடியாக இருக்கும் நடிப்பை நன்றாக செய்கிறார்கள். ஒருபோதும் மறுப்பதில்லை. எனவே பாரதத்தின் துறையினைச் சார்ந்தவர்களும் அப்படி நிகழ்ச்சிகள் அமைக்கட்டும். மண்டலங்களிலும் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை அமைக்கட்டும். இரண்டும் ஒன்றிணையட்டும். பாப்தாதா பார்க்கின்றார், அயல் நாட்டவர் எப்போதுமே எவரெடி. பாரதவாசிகளும் எவ்ரெடிதான் ஆனால் அதுபோன்ற நிகழ்ச்சிகளை அமையுங்கள். மேலும் அவல்

நாட்டு குழந்தைகளைப்பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். என்னுடைய குழந்தைகள் எங்கெல்லாம் பிரிந்து சென்றுள்ளார்கள், பாப்தாதா உங்கள் அனைவரையும் கண்டுபிடித்து விட்டார் அல்லவா? எத்தனை தேசத்திலிருந்து வந்துள்ளீர்கள், எனவே பாப்தாதா அத்தனை சேதத்திலி ருந்தும் கண்டுபிடித்து விட்டார் அல்லவா? மகிழ்ச்சி இருக்கிறது அல்லவா? நீங்கள் பாபாவைத் தேடி அடைய முடியாது ஆனால் பாபா ஆங்காங்கே உள்ள உங்களைக் கண்டு பிடித்து கொண்டு வந்து விட்டார். எனென்றால் கல்ப கல்பத்தின் அதிகாரி நீங்கள். ஒவ்வொரு சுல்பத்திலும் பாப்தாதா உங்களைக் கண்டுபிடிக்கிறார். விட்டு செல்ல முடியாது. தந்தையின் குழந்தைகள் தந்தையிடம் வந்தே ஆக வேண்டும். பிரிந்துபோன குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகிறார் அல்லவா? ஆஹா என்னுடைய குழந்தைகளே! ஆஹா என்னுடைய குழந்தைகளே மதுபனையும் நீங்கள் அலங்காரம் செய்கின்றீர்கள். பாப்தாதா பார்க்கின்றார். அயல் நாட்டில் இருந்து பாப்தாதாவிற்கு மிக அதிகமான அளவில் சகயோகம் மனதாலோ, பொருளாலோ, உடலாலோ அனைத்து வகையிலும் யக்ஞ சினேகியாகவும், பாப்தாதாவின் சினேகியாகவும் மேலும் மேலும் முன்னேறிக் கொண்டேயிருக்கின்றார்கள். மேலும் முன்னேறுவார்கள். நல்லது. ஒவ்வொருவருக்கும் பாப்தாதா அன்பு நினைவுகளையும், செல்லத்தையும் வழங்குகின்றார். நல்லது.

தாதி ஜானகிஜியுடன்: நல்லது. அனைவரும் மகிழ்ச்சி அடைகிறார்கள். மகிழ்ச்சி அடைய வைப்பதற்கு உங்களிடம் இரண்டு வழிகள் உள்ளது. ஒன்று வகுப்பு, இன்னொன்று டோலி. நல்லது. நன்றாக நடிக்கின்றீர்கள். பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார்.

சகோதரி மோகினியுடன்: யக்ஞத்தில் ஒவ்வொருவரின் நடிப்பும் அவரவருக்குரியது மிகவும் அவசியம் ஆகும். ஒவ்வொரு நடிகரும் நிமித்தமான சேவாதாரி அவர்கள் காணாமல்போனால் தெரியவில்லை என்று சொல்ல முடியாது. ஒவ்வொருவருடைய சேவையும் மகிமைக்குரியது தான். ஒருவர் அதிலிருந்து விலகினாலும் தொந்தரவு ஏற்படும் அல்லவா? பாபாவின் இந்த வரதானம் பொதுவான ஒவ்வொரு நடிகருக்குமே உள்ளது. பண்டாராவிலும் இருக்கிறார்கள், அது ஒரு பொதுவான சேவையாக இருந்தாலும் சரி, ஆனாலும் பண்டாராவில்

(சமையலறை) இல்லை என்றால் வேலை நடக்காது, சுத்தம் செய்பவர்கள் இல்லை என்றாலும் வேலை நடக்காது, வகுப்பு நடத்துபவர்களும் இல்லை என்றாலும் வேலை நடக்காது, ஒவ்வொரு நடிகரும் நடகப்படி தனக்கு கிடைத்த நடிப்பை புரிந்து நடிக்க வேண்டும். நான் ஒரு விசேஷமானவர், நிமித்தமானவன் என்று உணர வேண்டும். நாடகம் ஒவ்வொருவருக்கும் முக்கியமான ஒரு பங்கை கொடுத்துள்ளது. செயல் சிறியதாக இருந்தாலும் அதுவும் அவசியமானது தான். ஐந்து விரல்களில் ஒரு விரல் இல்லை யென்றாலும் வித்தியாசம் தெரியும் அல்லவா? அதுபோலவே தான் யக்ஞத்தில் உள்ள அனைவருக்கும் என்னென்ன நடிப்பு கிடைத்துள்ளதோ அது மிகமிக மிக அவசியமான நடிப்பே ஆகும். நல்லது. நல்லது. இப்போது டாக்டர் இல்லையென்றால் நீங்கள் நடப்பீர்களா? இவர் அவசியம் தானே? ஒவ்வொரு நடிகரும் யக்ஞத்தில் நிமித்தமானவர், யக்ஞத்தில் முக்கியமான ஆத்மாக்கள். இன்று சுத்தம் செய்பவர்கள் வரவில்லையென்றால் உங்களுக்கு பிடிக்குமா? அவர்களும் அவசியம் தானே?

பரதாதியுடன்: உங்களது நடிப்பும் அவசியமானது. நீங்கள் ஏதும் செய்யாவிட்டாலும் பரவாயில்லை, உங்கள் முகத்தை பார்த்தாலே எல்லோருக்கும் மகிழ்ச்சி தான். நீங்கள் மகிழ்ச்சியை தர வேண்டியதில்லை. உங்கள் முகமே மகிழ்ச்சி தருகிறது. (ஹோலி பரதாதியின் பிறந்த நாள்) ஆஹா பிறந்தநாள் பரதாதிக்கு. வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!!

(மூன்று சகோதரர்களும் பாப்தாதாவிற்கு பூச்செண்டு வழங்கி ஹோலி வாழ்த்துக்களை அளிக்கின்றார்கள்): ஹோலி ஆத்மாக்களான அனைவருக்கும் ஹோலியின் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்.

அயல்நாட்டு நான்கு பெரிய சகோதரிகளுடன்: (சகோ. மோகினி, சகோ சுதேஷ், சகோ, ஜெயந்தி மற்றும் சகோ.நிர்மலா); பாபா சொல்கிறார் குழந்தைகளுக்கு மிக மிக நன்றி. நீங்கள் பாபாவை பிரத்யட்சம் செய்கிறீர்கள். (செய்பவர் செய்விக்கின்றார் ஆனால் குழந்தைகள் தான் செய்கிறார்கள் அல்லவா? எனவே குழந்தைகளுக்கு நன்றி பாபா குழந்தைகள் இல்லாமல் என்ன செய்வார். (பாபா செய்கிறார்)

இருவருமே ஒருவருக்கொருவர் துணையாக இருந்து செயல்படுகின்றனர். நல்லது.

பாப்தாதாவும் சகோதரிகளுக்கு பூச்செண்டு வழங்குகிறார். நால்வருமே பெற்றுக் கொள்ளுங்கள். கை வையுங்கள். ஜானகி தாதி அவர்களுக்கும் பூச்செண்டு வழங்கப்படுகிறது. இவரது நடிப்பும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது விசேஷமான நடிப்பு நடந்து கொண்டிருக்கிறது. பாப்தாதா பார்க்கின்றார். இப்போது உங்கள் அனைவரது கவனமும் பாரதத்தின் பக்கம் உள்ளது. ஏதேனும் ஒரு சகயோகம் தருவதற்கு தயராக உள்ளார்கள். பாரதம் அயல் நாட்டிற்கும். அயல் நாடு பாரதத்திதற்கு சகயோகம் தருகிறது. இருவருமே ஒன்றோடு ஒன்று இணைந்து செல்ல வேண்டும், செயல்பட வேண்டும். இந்த லட்சியம் நன்றாக இருக்கிறது. (ஜெயந்தி சகோதரி கராச்சி செல்கிறார்) இப்போது ரிசல்ட் நன்றாக இருக்கிறது. முன்னேற்றம் உள்ளது. நல்ல தரமானவர்களை உருவாக்குங்கள்.

ஜப்பானில் வெளிப்பட்ட வாயு இப்போது பிலிப்பைன்ஸ், அமெரிக்காவிலும் பரவிக் கொண்டிருக்கிறது வெளிப்பட்ட வாயு எங்காவது செல்லத்தானே வேண்டும். தன்னை காப்பாற்றிக் கொள்ளுங்கள். அரசாங்கம் தருகின்ற டைரக்ஷனை கூட கடைபிடிக்கத்தான் வேண்டும். ஒன்றும் இல்லை. ஒன்றும் இல்லை என்று சும்மா இருந்து விடக் கூடாது. அவர்கள் தரும் டைரக்ஷன்களையும் கவனத்தில் வைக்க வேண்டும்.

பாப்தாதா குழந்தைகளுடன் ஹோலி கொண்டாடினார் மற்றும் அனைவருக்கும் ஹோலிக்கான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்! அனைவரும் ஹோலி கொண்டாடினீர்களா? உங்களுக்கு எப்போதுமே ஹோலி தான். அதாவது பாபாவுடன் பாபாவின் பாலனையில் இருக்கின்றீர்கள், பாபாவுடனே எழுந்திருக்கின்றீர்கள், பாபவுடனே பேசுகின்றீர்கள். பாபாவுடன் வரதானம் பெறுகின்றீர்கள். மற்றும் தருகின்றீர்கள். இன்று ஹோலி நாளில் வரதானம் எடுத்துள்ளீர்கள். அதாவது ஒருபொழுதும் பாபாவிடமிருந்து தனிமையில் பிரிந்திருக்க மாட்டேன், கூடவே இருக்கின்றார், கூடவே செல்வோம், பிறகு பிரம்மாபாபாவுடன் இராஜ்யத்தில் வருவோம். எனவே இந்த கூடவே

என்றவார்த்தையை காப்பாற்றுங்கள். ஒரு நொடிக்கூட துணையில்லாமல் இருக்கக் கூடாது, உடன் இருப்போம், உடன் செல்வோம் இப்போது இந்த நினைவை சதா கவனத்தில் வைக்க வேண்டும். நல்லது. இப்பொழுது பாப்தாதா அனைவருக்கும் மிகப் பெரிய நல்லதொரு குட் நைட் சொல்கின்றார். இரவு வணக்கம். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 31.03.2011 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# திட சங்கல்பத்தின் மூலமாக டென்சனிலிருந்து (மன இறுக்கம்) விடுபட்டு முன்னுதாரணமாக மாறி, அனைவருக்கும் ஆதார மூர்த்தி ஆகுங்கள், மன சக்தி மூலமாக துக்கத்தில் இருக்கும் ஆத்மாக்களுக்கு குஷியின் வரதானத்தை வழங்குங்கள்!

இன்று கிரேட் கிரேட் கிரண்ட் பாதர் கோடியில் ஒருவர், அந்த ஒருவரிலும் ஒருவரான குழந்தைகளின் அதிர்ஷ்ட ரேகையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரின் நெற்றியிலும் மின்னுகின்ற செய்வீகமான நட்சத்திரங்களின் பிரகாசத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். கண்கள் மூலமாக சீனேகத்தின் ரேகையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார், வாய் மூலமாக ஞான ரேகையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். உள்ளத்தில் திலாராமின் லவ்லீன் (ஆழமான அன்பின்) ரேகையை பார்த்துக் கொண்டிருக்கின்றார், கரங்களில் ஞானம் என்னும் பொக்கிஷங்களின் ரேகைடைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். பாதங்களில் ஒவ்வொரு அடியிலும் கோடிமடங்கின். ரேகையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் இந்த ரேகைகளில் வரிசைக் கிரமமாக சம்பன்னமாக (நிறைவு) இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட பாக்கியம் உங்களை அன்றி வேறு யாருக்குமேயில்லை. உங்களுடைய இந்த சிரேஷ்டமான பாக்கியம் ஒவ்வொரு குழந்தை களிடமும் பிரகாசமாகத் தென்படுகின்றது. மேலும் இந்த பாக்கியம் அழிவற்றதாக மாறி விடுகிறது. ஏன்? ஏனென்றால் கொடுப்பவர் அழிவற்ற தந்தை. இந்த

சங்கமயுகத்தில் மட்டுமே தான் இப்படிப்பட்ட சிரேஷ்டமான பாக்கியம் பிராப்தமாகிறது. மேலும் எதிர்காலத்திலும் தொடர்ந்து வருகிறது. இந்த சங்கமயுகம் சர்வ பிராப்திகளையும் பெறுகின்ற யுகம். ஒருவர் எவ்வளவு பாக்கியத்தை சேமிக்கின்றாரோ அந்தளவிற்கு அநேக ஜன்மங்களுக்கான பலன் கிடைத்துக் கொண்டேயிருக்கின்றது. இந்த சங்கமயுகத்தைப் பற்றிய மகிமை குழந்தைகளாகிய நீங்கள் மட்டுமே தான் தெரிந்துள்ளீர்கள். சங்கமயுகத்தில் பிராப்திகள் முழு கல்பத்திலுமே மிகவும் சிரேஷ்டத்திலும் சிரேஷ்டமானது.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையும் இந்த சங்கமயுகத்தில் பிராப்திகளால் எவ்வளவு சம்பன்னமாக ஆகியிருக்கின்றார் என்பதைப் பார்க்கின்றார். நீங்கள் அனைவரும் கூட சர்வ பிராப்திகளின் அனுபவத்திலும் சதா இருக்கின்றீர்களா? அல்லது அவ்வப்பொழுதா? தந்தையும் ஆழிவற்றவர். எனவே பிராப்திகளும் அழிவற்றதாக உள்ளது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் எந்த ரூபத்தில் பார்க்க விரும்புகின்றார்? தெரியுமல்லவா? ஒவ்வொரு குழந்தையும் சுயராஜ்ய அதிகாரி, இராஜா ஆக வேண்டும் என்று தான் பாபா விரும்புகின்றார். சுயத்தின் மீது அதாவது கர்மேந்திரியங்கள் மீது. மனம்-புத்தி-சம்ஸ்காரங்களின் இராஜாவாக இருந்து இராஜ்யம் செய்ய வேண்டும். நாளைய உலகில் இராஜா ஆவீர்கள் தான்; ஆனால் இப்பொழுது சுயம் இராஜ்ய அதிகாரி இராஜா ஆக வேண்டும். அனைத்து கர்மேந்திரியங்களும் தனது கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும். ஏனென்றால் பாபா மூலமாக சர்வ சக்திகளின் பொக்கிஷம் பிராப்தமாகியுள்ளது. எனவே பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் சுய இராஜ்ய அதிகாரி, இராஜா ரூபத்தில் பார்க்க விரும்புகின்றார். எனவே நீங்கள் அனைவரும் சுய இராஜ்ய அதிகாரி ஆகியுள்ளீர்களா? மனம் பத்தியின் மீது ரூலிங் பவர் (ஆளுமை சக்தி), கண்ட்ரோலிங் பவர் (கட்டுப்பாட்டு சக்தி) வந்து விட்டதா? அடிமைத்தனம் இல்லாமல் இருக்கிறதா? அதிகாரி ஆகியுள்ளீர்களா? பாப்தாதா உடன் இருக்கும்பொழுது தனிமையாவது இல்லை தானே? பாபாவை சதா காலமும் தன் துணையாக வைத்துள்ளீர்கள் என்றால், இந்த மனம் புத்தி சமஸ்காரம் தனது கட்டுப்பாட்டில் இல்லாமல் போவதற்கான சக்தி பெறாது. எனவே பாப்தாதா சக்திகளுக்கு சதா சொல்கிறார், தன்னுடைய எந்த சொரூபத்தினை நினைவில் வைக்கும் பொழுதும் பாபாவுடன்

இருக்கிறோம் என்பதை ஒருபொழுதும் மறந்து விடக்கூடாது. அது தான் நாம் சிவசக்தி என்பதாகும். சிவனும் சக்தியும் உடன் இருக்கிறீர்கள். இந்த நினைவு மாயா ஜீத், பிரக்ருதி ஜீத் ஆக (மாயை வென்றவர்கள், இயற்கையை வென்றவர்கள்) தானாகவே ஆக்கி விடுகிறது. ஏனென்றால் பாப்தாதா சொல்லி யிருக்கின்றார். தற்போது இயற்கை தனது காரியத்தை செய்து கொண்டிருக்கிறது. ஏனென்றால் இயற்கையையும் மனித ஆத்மாக்கள் தொந்தரவு செய்கிறார்கள். எனவே இயற்கையும் தொந்தரவு செய்கிறது. இப்பொதெல்லாம பார்த்தீர்களானால் இயற்கையும் ஆங்காங்கே தனது செயலையும் செய்து கொண்டேயிருக்கிறது, ஆனால் நீங்கள் இயற்கையை வென்றவராக ஆகி, இயற்கையையும் சதோபிரதானமாக மாற்றிக் கொண்டேயிருக்கின்றீர்கள். உலக மக்கள் இயற்கையின் சீற்றத்தைக் கண்டு நாளை என்ன ஆகுமோ என பயப்படுகிறார்கள் ஆனால் உங்களுக்குத் தெரியும் மிகமிக நல்லதே நடக்கும். ஏனென்றால் இப்பொழுது இந்த சங்கமயுகம் சிருஷ்டி சக்கரத்தில் அமிர்தவேளை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அமிர்தவேளைக்குப் பிறகு என்ன வரும்? காலைப்பொழுது. இருள் முடிவடைந்து வெளிச்சம் வந்து விடும். எனவே உங்களுக்கு மகிழ்ச்சி யுள்ளது. இப்பொழுது நமது இராஜ்யம் சுகமயமான உலகம். அங்கே இயற்கையும் சுகமயமாக இருக்கும். இந்த இராஜ்யம் வந்தே வந்து விட்டது. மகிழ்ச்சி இருக்கிறதல்லவா? இந்த இராஜ்யத்தில் துக்கம் அசாந்தியும் பெயர் அடையாளத்திற்குக் கூட இருக்காது. ஏனென்றால் இப்பொழுது சங்கமயுகத்தில் இயற்கையை வென்றவர்களாக ஆகிக் கொண்டே யிருக்கின்றீர்கள். எனவே அனைவருக்கும் குஷி தானே. எதற்காக' சொல்லுங்கள். நமது இராஜ்யம் வரயிருக்கிறது. இந்த குஷி உள்ளதா? இந்த குஷியில் இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். மிக்க நல்லது. நீங்கள் குஷியாக இருக்கின்றீர்கள், அதற்கு வாழ்த்துக்கள்! ஆனால் இப்படிப்பட்ட தனது குஷியால் உங்களுடைய சகோதர சகோதரிகள் துக்கத்தில் அமைதியிழந்து இருப்பவர்கள், அவர்களுக்கு தன்னுடைய தந்தை மூலமாக கிடைத்துள்ள கிரணங்கள் மூலமாக குஷியின் கதிர்களை அனுப்பு கின்றீர்களா? பாப்தாதா சொல்லியிருக்கின்றார், இப்படி மனதில் சேவை செய்வதற்காக ஒவ்வொரு வரும் அவரவரது தினசரி நடவடிக்கை களில் நேரத்தை நிச்சயக்க வேண்டும். எப்படி மற்ற காரியங்களுக்காக நேரம் நிச்சயக்கப்பட்டுள்ளதோ அவ்வாறே

தன்னுடைய மகிழ்ச்சி என்னும் டானிக் மூலமாக துக்கத்தில் இருக்கும் ஆத்மாக்களுக்கு மனோ சக்தி மூலமாக சிறிது அதிகமாகவே வரதானங்களை வழங்கி அவர்களையும் குஷிப்படுத்துங்கள். இவ்வாறு தனது மன சேவைக்காக நேரத்தை நிச்சயம் செய்துள்ளவர்கள் கை உயர்த்துங்கள். யார் நிச்சயம் செய்யவில்லையோ அப்படியும் சிலர் இருக்கின்றீர்கள் ஆனால் இதற்காக நேரம் அவசியம் ஒதுக்க வேண்டும். ஏனென்றால் அவர்களும் உங்களுடைய சகோதர சகோதரிகள் அல்லவா? எனவே இரக்கம் வருகிறது அல்லவா? இரக்கம் வரவில்லையா? வருகிறதா? மேலும் பாப்தாதா சங்கமயுகத்தில் விசேஷமாக இரண்டு விசயங்களைப் பார்க்க விரும்புகின்றார். அதாவது மதிப்பு வாய்ந்த எண்ணங்களின் சக்தி மூலமாகவும், மற்றும் சங்கமயுகம் என்ற சமயம், இவைகளின் மூலமாக இந்த ஒரு பிறவியில் அநேக ஜென்மங்களுக்கான பலனை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இப்பொழுதெல்லாம் பாப்தாதா பார்க்கின்றார், அநேகருடைய அசுத்தமான சங்கல்பம் குறைந்துள்ளது, வருகிறது ஆனால் வீண் எண்ணங்கள் வந்து சென்று விடுகிறது. இந்த ஒரு பிறவியில் மதிப்பிற்கு ஏற்ப வீண் எண்ணங்கள் இப்பொழுது முடிவடைய வேண்டும். ஏனென்றால் சங்கமயுகத்தின் மகிமை கணக்கில் ஒரு வினாடி பல மடங்கு மதிப்பிற்கான அதிகாரத்தை நினைவூட்டுகிறது. எனவே ஒவ்வொரு வருக்கும் இந்த இரண்டு விசயங்களிலும் நேரம் சங்கல்பம் இரண்டின் மதிப்பை உணர்ந்து அந்த இரண்டையும் லாபகரமாக பயன்படுத்த வேண்டும். எப்படி ஸ்தூலமான பொக்கிஷங்களை லாபகரமான வகையில் பயன்படுத்துகிறீர்களோ, தெரியும் அல்லவா? இந்த ஒரு பிறவியில் லாபகரமாக மாற்றிக் கொண்டால் அநேக ஜென்மங்கள்: அதற்கான பிராப்திகள் சேமிப்பாகின்றது. அவ்வாறு இந்த இரண்டு விசயங்களிலும் கவனம் கொடுத்து லாபகரமாக அமைத்து வெற்றி மூர்த்தி ஆகுங்கள்.

பாப்தாதா இன்று ஒவ்வொரு குழந்தைகக்கும் விசேஷமாக ஒரு வரதானம் வழங்குகின்றார். ஒவ்வொரு குழந்தையும் தன்னை டென்ஷன் ஃபிரியாக மனம் இறுக்கமற்றவராக) இருக்க முடியுமா? திடசங்கல்பம் வையுங்கள். இன்று முதல் டென்ஷன் ஃபிரி, நோ டென்ஷன், முன் இறுக்கமே கிடையாது அட்டென்ஷன். பாப்தாதா

குழந்தைகளை டென்ஷனாக பார்க்கும் பொழுது பாபா நினைக்கின்றார். இப்பொழுதே இந்த குழந்தைகளை போட்டோ எடுத்து அனுப்ப வேண்டும். அப்பொழுது அவர்களே புரிந்து கொள்வார்கள், நான் என்னவாகி விட்டேன். பாப்தாதா மனதை வென்றவராகவும், உலகை வென்றவராகவும் மாற்ற விரும்புகின்றார். டென்ஷன் எங்கே வருகிறது? மனதில் தானே? நீங்கள் இராஜா அல்லவா? சுய இராஜ்ய அதிகாரி அல்லவா? மனம் உங்களுடையதா? அல்லது மனம் உங்களுக்கு இராஜாவ? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? முழு நாளும் எனது மனம் என்று தானே சொல்கிறீர்கள். அது உங்களுக்கு இராஜா இல்லையே? யார் தைரியம் வைத்துள்ளீர்கள். பாபாவிடம் வரதானம் சுலபமாகக் கிடைத்து விடும், ஆனால் சிறிதளவு கவனம் வைக்க வேண்டியிருக்கும். பாபா கொடுத்த வரதானத்தை, உதவியை அனுபவம். செய்துப் பாருங்கள். அனைவர் முகமும் எப்பொழுது பார்த்தாலும் எப்படி தென்படும், டென்ஷன் ஃபிரியாக மனம் இறுக்கம் இல்லாமல் தாமரை மலர்போல மலர்ந்திருக்கும். ரோஜா மலர் போல இருக்க வேண்டும்.

பாப்தாதா பார்க்கின்றார். முன்பு கொடுத்த ஒருவேலை சதவீகிதத்தில் எழுத வேண்டியது அதைப்பற்றி அனைத்து இடங்களிலிருந்தும் செய்திகள் ஒரு சில வந்தது. இங்கேயும் ரிசல்ட் வந்தது. கவனம் கொடுத்துள்ளீர்கள், அதற்காக பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார் ஆனால் இப்பொழுது பாப்தாதா விரும்புவது என்னவென்றால், சமயத்திற்கேற்ப இப்போது வார்த்தைகள் மூலமாக கேட்பதற்கான நேரமும் குறைந்து விட்டது. எனவே மனதின் மூலமாக மற்றும் முகம் மற்றும் நடத்தையின் மூலமாக சேவை செய்யுங்கள் இப்போது செய்யும் பயிற்சி இனி வரும் காலத்தில் உதவிகரமாக இருக்கும். இன்று முதல் மன இறுக்கம் இல்லாமல் இருப்பதற்கான சங்கல்பம் வைக்க முடியுமா? செய்ய முடியுமா? செய்ய முடியுமா? கை உயர்த்துங்கள். டென்ஷன் ஃபிரி, நல்லது. அனைவரையும் போட்டோ எடுங்கள். மிக்க நல்லது. எந்த ஆத்மாக்கள் சூழ்நிலைக்கு ஏற்ப மிக அதிகமாகவே டென்ஷனில் இருக்கிறார்களோ, இப்பொழுதெல்லாம் உலகில் டென்ஷன் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. எனவே உங்களுடைய மன இறுக்கமற்ற அனுபவம், மன இறுக்கமில்லாத நடத்தை மற்றும் முகம் அவர்களுக்கு முன்பாக ஒரு ஆதார மூர்த்தியாக

விளங்கும். இன்றைய உலகில் நீங்கள் சுற்றிப் பாருங்கள், அல்லது செய்தியைக் கேளுங்கள் என்ன தென்படுகிறது. தற்காலத்திற்காக தன்னை மகிழ்ச்சிப்படுத்துவதற்கான சாதனங்களை உருவாக்கிக் கொண்டேயிருக்கின்றார்கள். எனவே டென்ஷனில் இருப்பவர்களுக்கு, டென்ஷன் இல்லாமல் இருப்பவர்களின் உதாரணத்தைக் காண்பித்தால் அவர்களுக்கும் ஒரு வழி பிறக்கும். எனவே சங்கல்பம் செய்வீர்களா? தனது மனதில் சங்கல்பம் வைத்தீர்களா? மன இறுக்கம் இல்லாமல் இருப்பீர்களா? என்ன செய்வீர்களா? திடமாக எண்ணம் வைத்தீர்களா? அல்லது சாதாரணமாக வைத்தீர்களா? எங்கே திடத்தன்மை யிருக்குமோ அங்கே வெற்றி நிச்சயம் இருக்கும். செய்யலாம் என்றில்லை, செய்தே ஆக வேண்டும். பிடித்துள்ளதா? இதில் கை உயர்த்துங்கள். பாப்தாதா ஒரு விஷயத்தைப் பார்க்கின்றார், கை உயர்த்தி மிகவும் குஷி படுத்திவிடுகிறீர்கள், சரி கை உயர்த்தி குஷிப்படுத்திவிட்டீர்கள், ஆனால் இப்பொழுது என்ன செய்வீர்கள், திடமான சங்கல்பம் மற்றும் சாதாரண சங்கல்பம் இவற்றில் இரவு பகலுக்கான வேறுபாடு உள்ளது. செய்வீர்களா கண்டிப்பாக செய்தே ஆக வேண்டும். இந்த சீசனில் கடைசி நாள் இது ஆனால் அடுத்த சீசனில் பாப்தாதா சிறிய பெரிய சென்டர் (இடையில் இன்னும் அதிக நாட்கள் உள்ளது). அடுத்த ஆண்டு சீசனில் காரணமற்ற ஆனால் நிவாரண சொரூபத்தைப் பார்க்க விரும்புகின்றார். அந்த அளவிற்கு தைரியம் ஊக்கம், பிராமண பரிவாரத்தில் டென்ஷன் என்ற பெயர் அடையாளம் கூட இல்லாமல் இருக்க வேண்டும். முடியுமா? ஒவ்வொருவரும் தன்னைத்தானே கேளுங்கள், இருக்க முடியுமா? இந்த ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை பாப்தாதா கேட்க விரும்புகின்றார்.

பாப்தாதா பார்க்கின்றார், அனைவருமே அப்படித்தான் ஆர்வம் வைக்கின்றீர்கள். செய்கிறீர்கள் ஆனால் இன்னல் வரும் பொழுது அந்த இன்னல் உங்களை தனதாக்கிக்கொள்கிறது. பிறகு நீங்கள் இனிமையாகப் பேசுகின்றீர்கள். இப்படி ஆகி விட்டது அல்லவா? இதெல்லாம் இருக்கத்தானே செய்யும். இது எல்லாம் நடப்பது தான் இப்படியெல்லாம் பாப்தாதாவிற்கு மிக இனிமையாக விசயங்களை சொல்கின்றார்கள். அனைத்திற்கும் நிவாரணம் இராஜா ஆகி விடுங்கள். போதும். சுய இராஜ்ய அதிகாரி ஆகி விடுங்கள். இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளையும், எதிரில் அமர்ந்துள்ளவர்கள்,

தொலைவில் அமர்ந்துள்ளவர்கள் உள்ளத்தில் அமர்ந்துள்ளீர்கள், நீங்கள் கண்களுக்கு எதிரில் அமர்ந்துள்ளீர்கள் ஆனால் தொலைவில் அமர்ந்துள்ளவர்களை பாப்தாதா தனது உள்ளத்தில் பார்க்கின்றார்.

பாப்தாதாவிற்குத் தெரியும் இன்றைய நாளில் மதுபனில் சிறிய சிறிய கீதா பாடசாலைகள் உருவாகியுள்ளது. குழந்தைகள் வந்துள்ளார்கள். பாப்தாதா கீழே அமர்ந்துள்ள அனைத்து குழந்தைகளையும் ஆங்காங்கே அமர்ந்துள்ளவர்களையும், எல்லாவற்றிற்கும் முன்னதாக உள்ளத்தில் பிரியமான குழந்தைகள் எல்லோருக்கும் அன்பு நினைவுகளை வழங்குகின்றார். (இன்று சாந்திவனில் 28000- மேலான சகோதர, சகோதரிகள் வந்துள்ளார்கள்) பாப்தாதா பார்க்கின்றார். குழந்தைகளுக்கு சற்று கடினம் ஏற்பட்டிருக்கும் ஆனால் குஷியில் அந்த அனுபவம் ஆகவில்லை. இருப்பினும் சௌகரியமாக உறங்குவதற்காக மூன்றடி கிடைத்து விட்டதல்லவா? யாரெல்லாம் தரையில் படுத்துள்ளார்களோ, பட்ராணி ஆகியுள்ளார்களோ, அந்த குழந்தைகளுக்கும் பாப்தாதா விசேஷமாக அன்பு நினைவுகளை வழங்குகின்றார். நல்லது இன்று பாபாவை சந்திக்க முதன் முறையாக வந்தவர்கள் எழுந்து நில்லுங்கள். இன்று முதன் முறையாக வந்திருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதா புதிய பிராமண பரிவராத்தில் வந்ததற்காக தன் சார்பாகவும், அனைத்து பிராமண பரிவாரத்தின் சார்பாகவும் மிகமிக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். ஏனென்றால் டூலேட்டில் (மிகவும் தாமதமாக) வந்துள்ளீர்கள் ஆனால் எப்படியோ வந்து விட்டீர்கள். பாப்தாதாவையும், பரிவாரத்தையும் பார்த்து விட்டீர்கள், பாப்தாதா இன்று வந்திருக்கும் குழந்தைகளுக்கு நீங்கள் விரும்பினால் விசேஷமான வரதானம் கொடுக்கின்றார். நீங்கள் மனமார் விரும்பினால் இறுதியாக வந்தாலும் விரைவாக முன்னேறிவிடலாம். பாப்தாதாவிற்கும். பரிவாரத்திற்கும் ஆத்மாக்களாகிய உங்கள் மீது அன்பு உள்ளது. சகயோகமாக இருப்பார்கள். அன்பு வழங்குவார்கள், உங்களை முன்னேற்றி விடுவார்கள், வாய்ப்பும் தருவார்கள். எனவே இன்று வந்திருப்பவர்களுக்கு முன்னேறுவதற்கான வாய்ப்பு அதிகம் நாடகப்படி நன்றாகவே கிடைத்துள்ளது. நீங்கள் அனைவரும் எங்கிருந்து வந்தாலும் பரிவாரம் முழுவதும் சகயோகியாக இருப்பார்கள். நீங்கள் சகஜயோகியாக ஆகுங்கள்.

சேவைக்கான முறை: இராஜஸ்தான் மற்றும் போபால் ஜோன்: நல்லது. பாப்தாதா பார்க்கின்றார். எந்த ஜோன் சேவைக்காக வந்துள்ளீர்களோ அவர்களிடம் தான் புதிய ஆத்மாக்களும் அதிகமாக வந்துள்ளார்கள். நல்லது. பாதி வகுப்பிற்கு மேல் இராஜஸ்தானைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். இராஜஸ்தான் பூமி பிரம்மாபாபாவிற்குப் மிக பிரியமானது எனவே தான் இராஜஸ்தானில் வந்து மதுபனை அமைத்துள்ளார். இராஜஸ்தானின் சேவையை பாப்தாதா பார்க்கின்றார். ஒவ்வொரு இடங்களிலும் இப்பொழுது நன்றாக விருத்தி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. புதுப்புது ஆத்மாக் களுக்கு பாப்தாதாவின் செய்தி தரும் நிழ்ச்சிகளும் நன்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது ஆனால் பாப்தாதா அனைவருக்கும் இதையே சொல்கின்றார். ஒவ்வொரு சேவை நிலையங்களிலும் யக்ஞ சினேகியான வாரிசு குழுவை உருவாக்குங்கள். தானும் முன்னேறிச் செல்ல வேண்டும், பிறரையும் யக்ஞ சினேகியாக மாற்ற வேண்டும். முன்பு கூட பாப்தாதா இதை சொல்லியிருக்கின்றார். யக்ஞ சினேகி மற்றும் சோ சிநேகி மேலும் லாபகரமாக செய்வதில் சதா மேலும் மேலும் முன்னேறுபவர்களாக விருத்தி ஆகிக் கொண்டே யிருக்கின்றது. நல்லது. செய்தி தரும் காரியமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஊாக்கம் உற்சாகத்தோடு ஒவ்வொருவரும் செய்தி வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள். இப்போது பாப்தாதா இதைத்தான் எதிர்பாக்கின்றார். சுயம் மற்றும் சேவை இரண்டிலும் சமநிலை வைப்பவர்கள், ஒவ்வொரு சென்டரிலும் அதிகத்திலும் அதிகமாக முன்னால் வர வேண்டும் சேவை மட்டும் அல்ல; சுயம் மற்றும் சேவை ஏனென்றால் சுயமாற்றத்தித் திற்கான நேரம் அவ்வளவு அதிகமாக இல்லை. எனவே முதலில் சுயம் மேலும் அதன் கூடவே சேவை ஒவ்வொரு சேவை நிலையமும் தடையற்று நிர்விக்னமாக (தடைகளற்ற) இருக்க வேண்டும். சேவைக்கு துணையாக இருப்பவர்களும் நிர்விக்னமாக இருக்க வேண்டும். ஆசிரியர்கள் மட்டும் அல்ல; ஆனால் வகுப்பில் உள்ள அனைவருமே தடைகளற்றவர்களாக, சுய மாற்றத்தில் மட்டுமே கவனம் வைப்பவர்களாக இருக்க வேண்டும். இதை விருத்தி செய்யுங்கள். ஒவ்வொருவருடைய விசயங்களையும் கேளுங்கள், மேலும் அவர்களுக்கு ஊக்கம் உற்சாகம் என்ற சிறகுகளைக் கொடுங்கள். அதன் மூலமாக பாப்தாதாவிற்கு தடைகளற்ற சென்டர் என்ற செய்தி தர வேண்டும். மற்றபடி பாப்தாதா பார்க்கின்றார். இராஜஸ்தானிலும் முன்னேறிக் கொண்டேயிருக்கின்றீர்கள், இன்னும்

முன்னேற்றம் ஏற்படும் பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளுக்கும் முன்னேறுவதற்கான வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். நல்லது.

போபால் ஜோன்: நல்லது. இந்த ஜோனும் தன்னுடைய மாற்றத்தில், சேவையில் விருத்தியில் நன்றாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி. ஒவ்வொரு குழந்தையும் சுய மாற்றத்திற்காக திட்டங்களையும் அமைக்கிறார்கள். மேலும் அப்படியே நடைமுறையிலும் கொண்டு வருகிறார்கள். மேலும் பாபாவிற்கும் நல்லாசை உள்ளது. சதா முன்னேறிக் கொண்டேயிருப்பீர்கள். ஒவ்வொரு ஜோனிலும் பார்க்கும் பொழுது இப்போது ஊக்கம் உற்சாகம் உள்ளது. எனவே சேவையில் அவரவரது இடங்களில் அபிவிருத்தியும் செய்து கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதா மேலும் வரயிருக்கின்ற காலத்திற்காகவும் வாழ்த்துக்களை வழங்கு கின்றார். முன்னேறிக் கொண்டே செல்லுங்கள், பறந்து செல்லுங்கள். பறக்க வைத்துக் கொண்டே யிருங்கள். நல்லது.

இரட்டை அயல்நாட்டு சகோதர சகோதரிகளுடன்: அயல் நாட்டவர்களுக்கு இரட்டை அயல் நாட்டவர் என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. அயல் நாட்டவர் அல்ல, இரட்டை அயல் நாட்டவர். நடைமுறையில் பார்க்கும்பொழுது எப்படி பெயர் கொடுக்கப்பட்டுள்ளதோ அவ்வாறே இரட்டை அயல் நாட்டவரில் பெரும்பாலும் அநேகருக்கு இரட்டை போதையும் உள்ளது. இருக்கிறதா? டபுள் நஷா இருக்கிறதா? நாம் இரட்டை ஊக்கம் உற்சாகத்தில் இருப்பவர்கள் என்று நினைக்கிறீர்களா? பாப்தாதா பார்க்கின்றார் ஊக்கம் உற்சாகம் நன்றாக இருக்கிறது. பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி. லண்டனில் ஓர் இடத்தில் ஸ்தாபனை ஆனது. இன்று இரட்டை அயல் நாட்டவர்கள் அநேக இடங்களில் சேவை செய்து பாப்தாதாவின் மற்றும் பிராமண பரிவாரத்தினுடையவராக மாற்றிவிட்டார்கள், மேலும் மாற்றுவதற்கான லட்சியம் நன்றாக அவைத்துள்ளார்கள், அதற்கான ப்ரூப்பும் உள்ளது. முன்பெல்லாம் தன்னுடைய நேரத்தில் மட்டுமே வந்து கொண்டிருந்தார்கள் ஆனால் இப்பொழுது பெரும்பாலும் ஒவ்வொரு முறையிலுமே வந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் பாப்தாதாவிற்கு குஷி என்னவென்றால்

அயல் நாட்டு குழந்தைகளைப் பார்த்து பாரதவாசிகளிடமும் ஊக்கம் உற்சாகம் வருகின்றது. பாரதவாசிகளும் முன்னேறுகின்றார்கள். அயல் நாட்டவர்கள் முன்னேறும் போது நாம் பின்தங்கி விடக்கூடாது. என்று பாரத வாசிகளுக்கும் ஊக்கம் உற்சாகம் வருகிறது. மேலும் முயற்சியில் பார்க்கும் பொழுது இப்பொழுதெல்லாம் சோதனைத்தாள் வருகிறது, அயல் நாட்டவருக்கும் வருகிறது ஆனால் ஒரு விசேஷம் என்ன வென்றால், அவர்கள் உண்மையான உள்ளத்தோடு சொல்லி விடுகிறார்கள். உள்ளே வைத்திருப்பதில்லை, மேலும் அதற்கான. சமாதானமும் உண்மையான உள்ளத்தோடு செய்துவிடுகிறார்கள். தூய உள்ளத்தோடு கட்டளைக்குக் கீழ்ப்படிபவராக இருக்கிறார்கள், இதில் பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. நல்ல ரிசல்ட்டைப் பார்த்து பாப்தாதா வரதானமும் வழங்குகின்றார். சதா முன்னேறிக் கொண்டேயிருங்கள். ஆசிரியர்களும் தங்களுடைய முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி என்னவென்றால் எல்லோரையும் விட அதிகமாக மதுபனின் லாபத்தை அயல் நாட்டவர்களே எடுத்துக் கொள்கின்றார்கள். பாப்தாதா பார்க்கின்றார் அயல்நாட்டில் சிறிய சிறிய இடங்களில் கூட பேரொலி எழுப்புவதற்கான சேவை செய்ய ஆரம்பித்து விட்டார்கள். எனவே சேவைக்கான வாழ்த்துக்கள், சய மாற்றத்திற்கான வாழ்த்துகள், பறந்து கொண்டே இருங்கள், பறக்க வைத்துக் கொண்டேயிருங்கள். நல்லது.

நாலாபுறமும் உள்ள உள்நாடு மற்றும் அயல்நாடு குழந்தைகளுக்கு பாப்தாதா புருஷார்த்தத்தில் சுலபமாக முன்னேறுவதற்காகவும், முன்னேற்றுவதற்காகவும் விசேஷமாக வாழ்த்துக்களை வழங்குகின்றார். இனி வரயிருக்கின்ற காலத்திற்காக டைரக்ஷனும் தருகின்றர், தீவிர முயற்சியாளராக ஆகி ஒரு வினாடியில் முற்றுபுள்ளி வைப்பதற்கான பயிற்சியை மிக அவசியம் செய்யுங்கள். இதனை சாதாரணமாக விட்டுவிடாதீர்கள். எதிர்பாராத விதமாக என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். எனவே பாபாவின் நல்லாசை என்னவென்றால், ஒவ்வொரு குழந்தையும் பிரம்மாபாபாவுடன் கூடவே இருக்கின்றார்கள். கூடவே செல்வார்கள், கூடவே இராஜ்யம் செய்வார்கள். சிவபாபா சாட்சியாகி விடுவார். துணையாக இருப்பவர்கள் பாப்தாதாவிற்குச் சமமாக ஆகியே தீர வேண்டும். நல்லது. ஒவ்வொரு குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் சார்பாக இந்த

ஆண்டிற்கான வாழ்த்துக்கள், மற்றும் வரயிருக்கின்ற ஆண்டுக்காகவும் வாழ்த்துக்கள். சதா பாப்சமான் ஆகியே தீர வேண்டும்.

**சகோதரி மோகினியிடம்**: நான் செய்ய வேண்டும் என சங்கல்பம் வைத்தீர்கள். செய்து விட்டீர்கள். இது உங்களது சக்தி. புரிந்து கொள்ளுங்கள் நடந்தே தீரும்,

**ஜானகி தாதியுடன்**: அன்பு உள்ளது, உங்களின் அன்பு வந்து சேர்ந்தது. (அனைத்து தாதிகளுடன்) பாப்தாதா உங்கள் அனைவரையும் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். (ஏன் மகிழ்ச்சி ஏனென்றால் யக்ஞத்தை ரட்சிப்பதில், யக்ஞத்தை நடத்தி செல்வதில் அனைவரும் நிமித்தமாக உள்ளீர்கள் அல்லவா? (சகோதரி நிர்மாலாவுடன் நன்றாக செய்துள்ளீர்கள்)

**ருக்மணி தாதியுடன்:** பாப்தாதாவிற்குத் தெரியும் அனைவரும் தன்னுடைய உடலை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் நீங்கள் நிமித்தமாக இருக்கிறீர்கள் அல்லவா? நிமித்தமாக இருப்பவகள் கண்டிப்பாக நடத்திச் செல்வீர்கள், எனவே ஒவ்வொருவரும் நிமித்தமாக நினைத்துக் கொண்டு தன்னையும் பார்த்துக் கொள்ளுங்கள். யக்ஞத்தையும் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள்அனைவருமே பொறுப்பாளர்கள். புரிந்ததா? ஒவ்வொருவருமே ஒவ்வொரு பொறுப்பில் இருக்கின்றீர்கள்.

**பரதாதியுடன்**: உங்களுடைய அறையில் அமர்ந்து கொண்டே சகயோகம் என்னும் ஒளிக்கிரணங்களை யக்ஞம் முழுவதும் பரப்பிக் கொண்டேயிருக்கின்றீர்கள். சதா மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள். எனவே முகம் சதா புன்முறுவலுடன் இருக்கிறீர்கள். மகிழ்வாக இருக்கிறீர்கள். மகழ்ச்சியான ஆத்மா நீங்கள்.

**டாக்டர் அசோக் மேத்தாவுடன்:** இப்போது நன்றாக இருக்கின்றீர்களா? பலவீனம் போய் விட்டதா? (இப்பொழுது அறுவை சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளது) இனிபோகப்போக நன்றாகவே நடைபெறும். நன்றாக உங்களுடைய பங்கை செய்கிறீர்கள் ஆனால் ஒரு விசயத்தில் கவனம் வைக்க வேண்டும். எப்பொழுதுமே புத்தியை பாபாவுடம்

இணைத்தே வைத்திருக்க வேண்டும். புத்தியில் பிறவிசயங்களின் பிரபாவம் ஏற்படக்கூடாது. ஏனென்றால் புத்தியோகத்தில் தான் வருமானம் உள்ளது? முடிந்ததற்கு முற்றுபுள்ளி வையுங்கள், அதைப்பற்றி சிந்திப்பதோ, வர்ணிப்பதோ கூடாது, அதிலிருந்தும் நஷ்டத்திலிருந்தும் லாபத்தை எடுக்க வேண்டும். ஏனென்றால் பாபாவின் நிமித்த ஆத்மாக்கள் அல்லவா? எனவே உங்களில் பாபா தென்பட வேண்டும். எல்லோருமே இவர் பாபாவை போல் என்று சொல்ல வேண்டும் பாப்சமான். அப்படி முடியுமா? தனது புத்தியை மிகவும் குஷியுடன் நியாரா, ப்யாராவாக வைத்திருந்தால் விந்தை நடைபெறும் பரிவாரத்தில் ஒரு உதாரணமாக தென்படுவீர்கள். நல்லது. இனி மேலும் மாற வேண்டும்.

**ஆச்சாரியா பிரமோத கிருஷ்ணம்ஜியுடன்:** தனது பரிவாரத்தைப் பார்த்தீர்களா? உங்களுயை வீடு தான் இது உங்களுடைய பரிவாரம் தான். தன்னுடைய வீட்டிற்கு வந்துள்ளீர்கள். பாபாவிற்கும் மகிழ்ச்சி குழந்தை தன் வீட்டிற்கு வந்து விட்டது.

புனித் இஷர் (மகாபாரதத்தில் துரியோதனாக நடித்தவர்): பாருங்கள் இன்று தன்னுடைய பரிவாரத்தில் வந்து விட்டீர்கள். இந்த பரிவாரம் நன்றாக பிடித்திருக்கிறதா? (அற்புதம்) இவ்வாறே நீங்களும் மாறி மாற்ற வேண்டும். மிகவும் அதிர்ஷ்டசாலி நீங்கள் மதுபனில் வந்துள்ளீர்கள். மதுபனை அடைந்தவர்களின் அதிர்ஷ்டம் சதா திறந்து கொண்டே இருக்கும். மிக்க நல்லது மகாபாரத்தில் துரியோதனாக நடித்துள்ளீர்கள்) இப்போது மாறி விட்டீர்கள் இப்போது துரியோதனன் அல்ல; பாபாவின் காரியத்தில் துணையாகி விட்டீர்கள், இவரும் துணையாகி விட்டார்.

**பாப்தாதாவிடம் முக்கிய பிரமுகர்கள் தனித்தனியே சந்திக்கிறார்கள். (உத்திர பிரதேச மினிஸ்டர் பகவதி பிரசாத், தனஞ்செய், எம்.எல்.ஏ. மகாராஷ்டிரா பரிவாரத்துடன்):**

1. உங்களுடைய வீடாக அனுபவம் ஆகிறதா? உங்களுடைய வீட்டிற்கு வந்து கொண்டே யிருங்கள்; பாப்தாதாவின் வரதானம் இது தான். சதா குஷியாக இருங்கள். குஷியை வழங்குங்கள்.

2. பாருங்கள், எவ்வளவு சகயோகி ஆவீர்களோ அவ்வளவு யோகி ஆகிக் கொண்டேயிருப்பீர்கள். சேவையில் சகயோகியாக இருந்தால் அப்போது யோகி ஆவீர்கள், படிப்பை அவசியம் படியுங்கள், ஈஸ்வரிய படிப்பில் மிகச் சரியாக இருங்கள்.

3. எப்படி நடந்துகொள்கிறீர்களோ அப்படியே நடந்து முன்னேறிச் செல்லுங்கள். மேலும் முன்னேறிக் கொண்டேயிருங்கள்

4. தனது வீடு என உணர்ந்து சகயோகியாக இருங்கள், சகயோகி யோகி, கர்மயோகியாக நடித்துக் கொண்டேயிருங்கள். கர்ம யோகி என்னும் வார்த்தையை முன் வையுங்கள். எவ்வளவு கர்மம் செய்தாலும் ஆனால் யோகி. யோகத்தை ஒருபோதும் விடக்கூடாது. இதுவும் கர்மயோகி.
5. பாருங்கள் முரளி மீது அன்பு உள்ளது என்றால் இதன் அர்த்தம் பாபா மீதும் அன்பு உள்ளது. பாபா மீது அன்பு உள்ளது என்றால் ஆஸ்திக்கு அதிகாரி ஆக வேண்டும். ஆவீர்களா

5. இப்பொழுது இந்த காரியத்தை புரிந்து கொண்டீர்கள். இப்பொழுது இதில் எந்தளவிற்கு சகயோகி ஆவீர்களோ அந்த அளவிற்கு பாபா நினைவு இருந்து கொண்டேயிருக்கும். கடினமாக இருக்காது. ஏனென்றால் சகயோகம் உங்களை முன்னேற்றும். கர்மயோகி நீங்கள் கர்மம் மட்டும் அல்ல; யோகமும் இணைந்தே இருக்க வேண்டும். நான் கர்மயோகி ஆத்மா என்பதை நினைவில் வையுங்கள்.

<u>நிர்மா குரூப்பின் சகோதரர் கர்ஷன் அவர்கள் குடும்பத்துடன்</u>: பாப்தாதா பார்க்கின்றார். இரண்டு விதமான நடிப்பை நன்கு செய்து கொண்டிருக்கிறீர்கள். முரளி மற்றும் நினைவு இதிலும் நன்றாக நடத்திச் செல்கிறீர்கள், தன்னுடைய காரியத்திலும் முன்னேறிக் கொண்டேயிருக்கிறீர்கள். இதைத்தான் கர்மயோகி என்று சொல்லப்படுகிறது. கர்மமும் உள்ளது. யோகமும் நன்றாகவே இருக்கிறது. கர்மயோகி குழந்தை நீங்கள்!

<u>ஹாலிவுட் ஹைதராபாத் மேகா ஸ்டார் சிரஞ்சீவி சகோதரர் துணைவி சுரேகா சகோதரி அவர்களுடன்</u>: இப்பொழுது இங்கும் சேவை மற்றும் யோகத்திலும் ஹீரோவாக இருங்கள். இங்கே ஹீரோவுடன் ஜீரோவாக

மாற வேண்டும். இவர் உங்கள் துணைவியார், இருவரும் இணைந்துள்ளீர்கள். இருவரும் ஒரு வழி தானே. ஒருவழியில் இருப்பதால் மிகவும் சுலபமாகி விடும். மிகவும் சுகமே அது தான். இதை நினைவில் வையுங்கள். ஹீரோ மட்டும் அல்ல ஜீரோ. போதும் முன்னேறிக் கொண்டேயிருக்கிறீர்கள். இந்த வார்த்தையை மட்டும் மறக்க வேண்டாம் மேரா பாபா எனது என்று சொன்னவுடனேயே ஆஸ்தி அனைத்தும் கிடைத்து விடும். ஒருவரைவிட ஒருவர் முன்னேற்றத்தில் நீங்கள் இருவரும் அவரவர் வழியில் முன்னேறி செல்லுங்கள்.

ஆசீஷ் குப்தா தன்னுடைய பீஸ் ஆ்ப் மைண்ட் சேனல் ஆரம்பிக்கின்றார். நீங்களும் செய்ய வைப்பவர்களாக அல்ல செய்பவர்களாக மாறுங்கள். துணையாக இருப்பீர்கள் தானே? சுப காரியங்களில் துணையாக இருப்பது மிகப் பெரிய புண்ணியமாகும். நடத்துபவர் மட்டும் அல்ல நீங்கள்; நீங்களும் இணைந்து அனைவரிடமும் உற்சாகத்தை கொண்டு வர வேண்டும். உங்கள் வேலையே உற்சாகத்தை கொண்டு வர வேண்டும். நீங்கள் நிமித்தமாக உள்ளீர்கள். நீங்கள் சுபபானை வையுங்கள் போதும். சுபபாவனை வைக்கத் தெரியுமல்லவா? உங்களது சுபபாவனை அநேகரிடம் சுபபாவனையை ஏற்படுத்தும்.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# 13.04.2011 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஜுவாலாமுகி அக்னி சொரூபத்தின் மூலம் யோக சக்தியால் சம்ஸ்காரத்தினை அழித்து விடுங்கள், தன்னுடைய நடத்தை, முகம், திருஷ்டி, விருத்தி (உள்ளுணர்வு) மற்றும் சங்கல்பத்தால் பாபாவை பிரத்யட்சப்படுத்துங்கள்!

இன்று குழந்தைகளின் அன்பால் அன்புக்கடலான தந்தையையே தன் பக்கம் அழைத்து விட்டீர்கள். பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி தான். குழந்தைகளுக்கு பாபாவிடம் உளமார்ந்த அன்பு நன்றாக இருக்கிறது. எப்பொழுதுமே இந்த அன்பின் ஆதாரத்தால் பாபாவிற்குச் சமமாக மாறுவீர்கள். பொதுவாக பாப்தாதா அன்பு என்ற பாடத்தில் குழந்தைகளை முன்னால் வைக்கின்றார். அவ்வாறே இன்றும் குழந்தைகள் தன் அன்பு என்ற கயிற்றால் அன்புக்கடலான தந்தையையே கட்டி விசேஷமாக மதுபனிற்கு அழைத்து விட்டீர்கள். இப்படிப்பட்ட அன்பு சதா இருக்கட்டும். திலாராம் பாபாவிற்கும் குழந்தைகளின் உளமார்ந்த அன்பு எப்பொழுதுமே வந்தடைந்துக் கொண்டிருக்கின்றது ஆனால் நம்பர் பிரகாரமாக, வரிசைக் கிரமமாகத்தான் இருக்கிறது. பாபா விரும்புவது என்னவென்றால், அன்பின் அடையாளமாக எப்பொழுதுமே ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் திலாராம் இணைந்தேயிருக்க வேண்டும். ஒரு குழந்தையும் தனிமையில் இருக்க வேண்டாம். இணைந்து சேர்ந்தே இருக்க வேண்டும். சோதனை செய்துப் பாருங்கள், சதா சேர்ந்தேயிருக்கிறீர்களா? அல்லது அவ்வப்போது தனிமையில் இருக்கின்றீர்களா? தனிமையில் இருக்கும்போது மாயா தன்னுடைய வாய்ப்பைத் தேடிக் கொள்கிறது. எனவே பாப்தாதா எப்போதுமே

சொல்கின்றார் திலாராமை உள்ளத்தில் சதா வைத்துக் கொள்ளுங்கள். இதைத்தான் உண்மையான அன்பு, சதா அன்பு என்று சொல்ல முடியும். எப்போதாவது தனிமையில் இருக்கின்றீர்களா? துணையுடன் இருக்கின்றீர்களா? கொடுத்த வாக்கு (உறுதிமொழி) என்ன? ஒவ்வொரு குழந்தையும் செய்த வாக்கு என்ன? முக்கியமாக மதுபன் வாசிகளுக்கு போதை உள்ளது? துணையாகவே இருக்கின்றீர்கள். கூடவே இருக்கின்றீர்கள். கூடவே செல்வீர்கள். கூடவே இராஜ்யம் செய்வீர்கள். அவ்வாறே விசேஷமாக மிகமிக இனிமையான, நிமித்தமான குழந்தைகள் அமர்ந்துள்ளீர்கள். அவர்களோடும் பாபாவின் வாக்கு இது தான், மேலும் பெரும்பான்மையான குழந்தைகள் நடைமுறை வாழ்க்கையிலும் அப்படியே இருக்கின்றீர்கள், சதா இணைந்தே இருக்கின்றீர்கள் ஆனால் வரிசைக்கிரமமாக இருக்கின்றீர்கள், பாபா விரும்புவது என்னவென்றால், ஒவ்வொரு குழந்தையும் மகாரதிகள். நிமித்தமான குழந்தைகள் நீங்கள் உங்களுடைய முகம் மற்றும் நடத்தை மூலம் பாபாவை சாட்சாத்காரம் செய்விக்க வேண்டும். உங்களது முகமும் நடத்தையும் பாபாவினுடைய பிரகாசமான முகமாக இருக்க வேண்டும். மேலும் பாபாவைப் போலவே அன்பான நடத்தையாகவும், சாட்சாத்காரத்தில் தெரிய வர வேண்டும்.

பிரம்மாபாபாவைப் பாருங்கள், பிரம்மாபாபா இறுதி வரையிலும் பாபாவின் ஸ்ரீமத்படி ஒவ்வொரு முரளியிலும் எத்தனை முறை பாபா பாபா என்று சொல்கின்றார். எண்ணிப் பாருங்கள். மேலும் பாபாவைப் போலவே முகத்தின் மூலமாக, நடத்தையின் மூலமாக, சொல் மூலமாக முக்கியமாக கண்களில் மற்றும் நெற்றியின் மூலமாகவும் பாபாவை பிரத்யட்சம் செய்தார். இதை குழந்தைகள் நீங்கள் அனுபவம் செய்துள்ளீர்கள். பிரம்மாபாபாவைப் பார்க்கும் போது என்ன அனுபவம் ஆகிறது. பாப்தாதா. பாபா என்ற வார்த்தையை மட்டும் தனித்து யாரும் சொல்வதில்லை. எப்போதுமே ஒவ்வொருவரின் வாயிலிருந்தும் பாப்தாதா, பாப்தாதா என்ற இணைந்த வார்த்தைதான் வெளிப்படுகிறது. அதுவே அனுபவம் ஆகிறது. அப்படியே நீங்கள் தந்தையைப் பின்பற்றுங்கள். உங்களுடைய முகத்தின் மூலமாக சொல்லின் மூலமாக, நடத்தையின் மூலமாக பார்வையின் மூலமாக பாபாவின் நினைவு பார்ப்பவர்களுக்குத் தானாகவே வர வேண்டும். உங்கள் அனைவரையும் பாபா இப்போது பார்த்தார். பெரும்பான்மையான

குழந்தைகளுக்கு இதே சங்கல்பம் தான் உள்ளது. நாம் நமது முகம் மற்றும் சொல் செயல் மூலமாக பிரத்யட்சம் செய்ய வேண்டும் என்று அபப்டியே தந்தையைப் பின்பற்றுங்கள். எப்படி பிரம்மா தன்னுடைய நடத்தை முகம், மற்றும் பார்வை மூலமாக உள்ளுணர்வு மூலமாக சங்கல்பத்தாலும் சதா பாபாவை பிரத்யட்சம் செய்தாரோ உங்கள் அனைவருக்கும் அனுபவம் இருக்கிறது அல்லவா? பிரம்மாபாபாவை மட்டும் தனித்துப் பார்க்கவில்லையே, பாப்தாதாவைத்தான் பார்த்தீர்கள். காரணம்? பிரம்மாபாபா எப்போதுமே தன்னுடைய கண்களில், நெற்றியில் பாபாவை வைத்திருந்தார். அவ்வாறே உங்களுடைய விசேஷமான கண்களும் முகமும் நடத்தையும் பாப்தாதாவையே கலந்திருப்பதாக பிரத்யட்சம் செய்ய வேண்டும். ஒவ்வொரு சொல்லிலும் கற்பிப்பவர் யார் என்பதை அனுபவம் செய்ய வேண்டும். இவர்கள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் இவர்களுக்கு கற்பிப்பவர் சர்வ சக்தி நிறைந்த தந்தை பகவானே தான் என்பதைக் காண்பிக்க வேண்டும். இவர்கள் பகவானின் குழந்தைகள், பகவானுடைய மாணவர்கள், பகவானைப் பின்பற்றக்கூடிய தொண்டர்கள் மட்டும் அல்ல ஆனால் ஒவ்வொரு அடியிலும் பலபல லாபத்தை அடையக்கூடியவர்கள் நீங்கள். இப்போது நேரமும் உங்களுக்கு சகயோகம் செய்வதற்குத் தயாராக உள்ளது. நிலவரம் மாறிக் கொண்டிருக்கிறது. நிலவரங்கள் விரும்பாத பொழுதும் கூட பகவானை நினைவூட்டுகிறது. ஒன்று நேரம் மற்றொன்று நிமித்தமான ஆத்மாக்களாகிய உங்களுடைய விசேஷத்தன்மை, இருவரின் விசேஷமும் இது தான். ஒன்று விசேஷமான நிமித்த ஆத்மாக்கள். நீங்கள். முன்பே அமைக்கப்பட்ட குழுவினர். இந்த கூட்டத்தில் வந்துள்ளீர்கள்.

பாப்தாதா பார்க்கின்றார், பெரும்பான்மையாக வருகின்ற குழந்தைகளின் உள்ளத்தில் நாம் பாபாவை பிரத்யட்சம் செய்தே ஆக வேண்டும் என்ற ஊக்கம் உற்சாகம் வருகின்றது. முகத்தின் மூலமாகவும் அகத்தின் மூலமாகவும் சொல் மூலமாகவும், தன்னுடைய தொடர்பில் வருகின்ற ஆத்மாக்கள் யாராக இருப்பினும் இப்பொழுதெல்லாம் உங்கள் மனதில் இருந்து எழுகின்ற நன்மை செய்யும் பாவனை அநேக ஆத்மாக்களை உங்களுடைய தொடர்பில் கொண்டு வருகிறது. அனேகர் வர விரும்புகிறார்கள். மேலும் பாப்தாதா

கொடுத்துள்ள மனதின் சேவை, இந்த சேவையிலும் பார்க்கும்பொழுது யோக யுக்தமாக இருந்து மனதின் சேவைக்கான பயிற்சி செய்கின்றர்கள், அதனுடைய அதிர்வலைகள் (வைப்ரேஷன்) நாலாபுறமும் இருக்கின்ற ஆத்மாக்கள் யாரேனும் ஒருவருக்காவது சேர்ந்து கொண்டிருக்கிறது. அவர்களும் நமக்கு எங்கிருந்தோ ஒளிக்கிரணங்கள், சுகம், சாந்தியைத் தருகின்றது என்பதை உணர்கின்றார்கள் ஆனால் அது எங்கிருந்து வருகிறது என்பது மட்டும் தெளிவாக தென்பட வில்லை, வருகிறது ஆனால் பாரதத்தில் பாப்தாதாவின் குழந்தைகளிடம் இருந்து வருகிறது என்பது அவர்களுக்குத் தெளிவாகத் தென்படவில்லை. அப்படி தெரிந்து விட்டால் எல்லோரும் ஓடி வந்து விடு வார்கள். இப்பொழுது மேலும் சக்திசாலியான கிரணங்களை அப்படிப்பட்ட ஆத்மாக்கள் மீது பரவச் செய்யுங்கள். அவர்களுக்குத் தெளிவாகத் தென்பட வேண்டும் இப்போதும் சென்று அடைந்து கொண்டு தான் இருக்கிறது. ஆரம்பமாகி விட்டது ஆனால் வெகு சிலருக்கு மட்டுமே சென்று சேர்கிறது. இப்போது இதனை இன்னும் சக்திசாலியானதாக மாற்றுங்கள். அதற்காக தடையாக இருக்கின்ற விசயங்களை, சக்தி சென்று சேர்வதில் தெளிவு ஏற்படுவதில் காரணமாக இருக்கின்ற விசயங்களைக் கண்டு பிடியுங்கள். யோகம் செய்கின்றீர்கள். அமிர்தவேளையில் அமர்கின்றீர்கள் ஆனால் ஜுவாலாமுகியாக இருக்க வேண்டும்; அது குறைவாக இருக்கிறது. இந்த காரணத்தால், ஒன்று எந்த பக்த ஆத்மாக்களுக்கு நீங்கள் ஒளிக்கிரணங்களை அனுப்புகின்றீர்களோ, அது தெளிவாக இல்லை மற்றொன்று ஜுவாலாமுகியான அக்னி சொரூபமான யோக சக்தியில்லாததால் யோகத்தின் குறைவால் சம்ஸ்காரம் இடையிடையே தடையாக இருக்கிறது. அந்த சம்ஸ்காரமும் முற்றிலும் முடிவை அடைவதில்லை. சமஸ்காரத்தை மாற்ற வேண்டும் தான் என முயற்சி செய்கிறீர்கள் ஆனால் அந்த சம்ஸ்காரம் இறந்து போகிறதே தவிர எரிந்து போவதில்லை. எப்படி இராவணனைக் கொன்று விடுவது மட்டும் அல்ல, கொன்ற பிறகு எரிக்கவும் செய்கின்றீர்கள். ஏனென்றால் கொன்ற பிறகு தேகம் இருக்கிறது தானே. எனவே அது போலவே நீங்கள் அமிர்தவேளையில் நினைவில் அமர்கின்றீர்கள், ஆனால் யோக அக்னி ரூபத்தில் ஜுவாலையின் ரூபம் குறைவாக உள்ளது. சந்திக்கின்றீர்கள், ஆன்மீக உரையாடல் செய்கின்றீர்கள், தனது வாழ்க்கைப் பற்றியும்

பேசுகின்றீர்கள், இடைவிடாத யோக அக்னியாக இருக்க வேண்டும், கொழுந்து விட்டு எரிய வேண்டும். சம்ஸ்காரத்தை அவசியம் கொன்று விடுகிறீர்கள், ஆனால் அது இறந்து போகிறதே தவிர இடையிடையே எழுந்தும் விடுகிறது. எரிந்து போனால் பெயர் உருவம் கூட இல்லாமல் அழிந்து போய் விடும்.

இப்பொழுது குழந்தைகள் அனைவருமே ஆன்மீக உரையாடலிலும் சொல்கின்றீர்கள். எந்த அளவிற்கு விரும்புகின்றோமோ அந்த அளவிற்கு இல்லை. எனவே பாப்தாதா இன்று இதையே சுட்டிக் காண்பிக்கின்றார், ஏனென்றால் சிறப்பாக மகாவீர் குழந்தைகள் மட்டுமே மீட்டிங்கில் (வருடாந்திர சேவைக்கான பொதுக்குழு கூட்டம்) வந்துள்ளீர்கள், மேலும் மதுபன் நிவாசியும் வந்துள்ளீர்கள் அதாவது மதுபனில் என்ன உள்ளது? மதுபன் என்றாலே பாபா தான். மதுபன் என்ற உடன் எல்லோருக்கும் நினைவு வருவது என்ன? மதுபனில் பாபா எனவே மதுபனில் இருப்பவர்கள் முக்கியமாக ஒரு விசயத்தில் கவனம் வைக்க வேண்டும். மதுபன் என்ற உடனேயே மதுபனில் பாபா நினைவு வருகிறது அல்லவா? மதுபனில் இருப்பவர்களை எந்த பார்வையோடு பார்க்கின்றார்கள். மதுபனில் இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். அதிகம் இருக்கின்றீர்கள். கீழே இருப்பவர்கள் மற்றும் மேலேயிருப்பவர்கள் (சாந்திவன் பாண்டவ பவன், ஞானசரோவர்) இன்றைய சபையில் எல்லோரையும் விட அதிகமாக மதுபன் வாசிகள் தான் இருக்கின்றீர்கள். பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி தான். மதுபனில் இருப்பவர்கள் கண்டிப்பாக விந்தை செய்து காண்பிப்பீர்கள். தன்னுடைய முகம் மற்றும் மனம் இரண்டிலிருந்தும் பாபா பாபா மட்டுமே தென்பட வேண்டும். ஒவ்வொரு விசயத்திலும் பாபாவே தென்பட வேண்டும். ஏனென்றால், மதுபனில் யக்ஞ சேவைக்கான பலனும் மற்றும் பலமும் அதிகமாக கிடைக்கிறது. அதனை எடுப்பவர்கள் எடுத்துக் கொள்ளலாம், ஆனால் கண்டிப்பாக கிடைக்கின்றது. சம்ஸ்காரத்தை பார்ப்பதில் சம்ஸ்காரத்தோடு இணைவதில் எப்போதுமே கவனம் வைப்பது மிக அவசியமாகும் மதுபனில் உள்ள ஒவ்வொரு குழந்தைகள் மீதும் பாப்தாதாவிற்கு விசேஷமான அன்பு உள்ளது. ஏன்? பாபாவால் ஸ்தாபனை செய்யப்பட்ட யக்ஞம், இந்த யக்ஞ சேவையில் நீங்கள் தங்களை சமர்ப்பணம் செய்துள்ளீர்கள். மதுபனில் இருப்பவர்களுக்கு ஒன்று தன்னுடைய முயற்சிக்கான பலனும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. மற்றொன்று

மதுபனிற்கு வருபவர்கள் பிராமணராக இருந்தாலும், புதிய ஆத்மாக்களாக இருந்தாலும் அவர்களுக்கு செய்கின்ற சேவை யக்ஞ சேவை இது சாதாரண சேவை அல்ல, இந்த யக்ஞ சேவைக்கான அதிகப்படியான புண்ணியமும் கிடைத்துக் கொண்டிருக்கிறது ஒருவேளை மதுபனில் இருப்பவர் யாராவது பாப்தாதா சொல்லும் ஸ்ரீமத்படி அமிர்தவேளை முதல் இரவு வரையில் நடந்து கொண்டால் அவர்களுக்கு அதிகமாகவே புண்ணியம் கிடைக்கின்றது. மதுபனில் இருப்பவர்களே அதனை தெரிந்திருந்தாலும் சரி தெரியாவிட்டாலும் சரி, சோம்பலாக இருந்தாலும் கூட சரி மதுபனில் செய்கின்ற சேவைக்கான புண்ணியம் கண்டிப்பாக கிடைத்துக் கொண்டேயிருக்கின்றது. மதுபன் நிவாசியாக ஆவது என்பது சாதாரண விசயம் அல்ல. யார் எப்படித் தான் வேலை செய்தாலும் சரி எந்தவிதமான வேலை செய்தாலும் சரி, சுத்தம் செய்யும் வேலையாக இருந்தாலும் சரி, சாதாரண கர்மம் செய்தாலும் புண்ணியம் அதிகம் கிடைக்கிறது. ஏனென்றால், இது பாபாவால் படைக்கப்பட்ட யக்ஞம், இந்த யக்ஞத்தால் தான் மதுபனில் இருக்கின்ற அனைவருக்குமே பரமாத்மாவின் அன்பு கிடைக்கிறது. எனவே மதுபனைத் தவிர பாபா வேறு எங்குமே வருவதில்லை. மதுபனில் மட்டுமே வருகை மற்றும் சந்திப்பு என்ற நடிப்பு நிச்சயக்கப்பட்டுள்ளது. எனவே மதுபனில் உள்ள ஒவ்வொருவரும் தன்னுடைய புண்ணியக் கணக்கைத் தெரிந்து கொள்ளுங்கள், புரிந்து கொள்ளுங்கள். மேலும் அந்த மகான் மேன்மை பொருந்திய பிராப்தி சொரூபத்தை அடையுங்கள். எதுவாக இருந்தாலும் சரி, உங்களுடைய வேலை பெரியவர்களுக்குத் தெரிவிப்பது தெரிவித்து விட்டால் உங்கள் உள்ளத்தை காலி செய்து விட்டதாகும். உங்களுடைய பொறுப்பு முடிவடைந்து விட்டது, மாறாக நாம் கூறினோம்; ஆனால் ஒன்றும் நடைபெறவில்லையே என்று நினைக்காதீர்கள். இதில் உங்களுக்கு பாவம் சேராது. பொறுப்பாக இருப்பவர்களுக்கே அந்த பாலம் சேரும். நீங்கள் கவலையற்று இருங்கள். விசயத்தை பெரியவர்களிடம் சொல்லி விடுவதுதான் உங்கள் வேலை ஆனால் என்ன ஆயிற்று? ஏன் நடக்கவில்லை ஒன்றும்? ஏன் இன்னும் ஒன்றும் செய்யவில்லை? அது ஏன் நடைபெறவில்லை? அட்டியெல்லாம் யோசிக்க வேண்டிய அவசியம் உங்களுக்கு இல்லை, அப்படி யோசித்தால் உங்கள் சங்கல்பம் தான் வீணாகும். உங்களுடைய பொறுப்பு என்னவோ அதை மட்டும் செய்யுங்கள். பெரியவர்களிடம்

விசயத்தை சேர்ப்பித்து (கூறி விடுங்கள்) விடுங்கள் ஆனால் சேர்ப்பித்த பிறகு, அப்படி சேர்ப்பிப்பது கூட அந்த முறைப்படி இருக்க வேண்டும். மதுபன் நிவாசி பிராமணர்கள் உயர்ந்தவர்கள், தனது நிலையினைத் புரிந்து அதற்கேற்ப உயர்ந்த காரியம் செய்யுங்கள், நீங்கள் செய்யும் செயலைப் பார்த்து மற்றவர்களும் கற்றுக் கொள்ள வேண்டும். மதுபன் நிவாசிகள் மீது அனைவருக்குமே நல்ல பாவனை உள்ளது. அப்படிப்பட்ட பாவனை உங்கள் மீது வைத்திருப்பவர்களுக்கு அந்த பாவனைக்கான பலனைக் காண்பியுங்கள், பாப்தாதாவிற்குத் தெரியும், மதுபனில் இருப்பவர்களில் சில குழந்தைகள் மிகவும் மரியாதைப் பூர்வமாக சுய முயற்சியில், பாபாவிடம் சிநேகம் உடையவராக, சகயோகம் (உதவி) தரக்கூடிய குழந்தைகளாகவும் இருக்கிறார்கள் ஆனால் பாப்தாதா இப்போது எதிர்பார்ப்பது என்னவென்றால், மதுபன் நிலாசிகள் பொருட்டு பாபா விரும்புவது என்ன? மதுபன் நிவாசி ஒவ்வொரு குழந்தைகளும் பாபாவினுடைய யக்ஞ சிநேகிகள் சகயோகியாக மாறி தன்னுடைய நடத்தை மூலமாக அனைவருக்கும் பாபாவின் அறிமுகத்தைத் தர வேண்டும். நாங்கள் மதுபன் வாசிகள் எவ்வளவு பாக்கியம் செய்தவர்கள், என்பதை உணர்ந்து அந்த பாக்கியத்தினை வெளிப்படுத்துங்கள். ஏனென்றால், நீங்கள் யக்ஞ நிவாசிகள் பரமாத்மா முதலில் படைத்தது. எதனை? யக்ஞத்தைப் படைத்தார். மேலும் அந்த யக்ஞத்தில் யக்ஞத்திற்கான, நிமித்தமான பூமி மதுபன் தான். மதுபனைப் பற்றிய மகிமை தெரியும் அல்லவா? மதுபனின் மகிமையை உணர்ந்தவர்கள் கை உயர்த்துங்கள். இங்கே பாப்தாதா பார்க்கின்றார். நல்லது மிக நல்லது. பாப்தாதா மிகமிக சக்தி வாய்ந்த உளப்பூர்வமான அன்பை, உளமார்ந்த ஆசீர்வாதங்களை ஒவ்வொரு மதுபன் வாசிகளுக்கும் வழங்குகின்றார். மேலும் மகாரதிகளை மீட்டிங்கிற்காக வந்திருப்பவர்களை பார்த்து ஆஹா குழந்தைகளே ஆஹா குழந்தைகளே என்று மிகவும் உளமுவந்து பாடல் பாடுகின்றார் ஆனால் மீட்டிங்கில் வந்திருக்கின்ற நீங்கள் ஒவ்வொருவருமே ஒரு விசயத்தில் இன்னும் முன்னேற்றம் அடைய வேண்டும். உங்களுக்கு சேவையில் எத்தனை பேர் துணையாக இருக்கிள்றார்களோ அவர்களையெல்லாம் எப்பொழுதுமே தன்னுடைய மகிழ்ச்சி மற்றும் பிராப்திகள் மூலமாக திருப்தியாக வைத்திருங்கள். அறிவுரையே செய்தாலும் கூட அறிவுரையின் கூடவே அன்பையும் வழங்குங்கள். அந்த அன்பின் ஆதாரத்தால் அவர்கள் தன்னை

முன்னேற்றி செல்ல முடியும். மாறாக அவர்கள் தன்னுடைய லாபத்தை அடையும் அளவிற்கு சாதாரண அன்பைத் தர வேண்டாம் செய்வதையெல்லாம் செய்து விட்டு மன்னிப்பு என்று சொல்லும் அளவிற்கு அப்படிப்பட்ட அன்பும் வேண்டாம். நிமித்தமாக இருப்பவர்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். நீங்கள் கவனம் வைத்துள்ளீர்கள் ஆனால் கவனம் வைத்து திருப்தியும் செய்ய வையுங்கள். உலகத்திற்கும் திருப்தியின் ஒளிக்கிரணங்களை அனுப்புங்கள். இந்த காரியமும் நிமித்தமாக இருப்பவர்கள் செய்ய வேண்டும். நிமித்தமாக இருப்பவர்கள் தத்தமது உதவிக்கரங்களாக இருப்பவர்களுக்கு அவர்களின் சம்ஸ்காரத்தை மாற்றி அமைப்பதில் சிறிது முயற்சியும் செய்ய வேண்டியிருக்கும். சேவை செய்ய வைக்கின்றீர்கள். இருக்க, இடம், உணவு இவற்றிற்கான ஏற்பாடு பெரும்பாலும் சென்டரில் தருகின்றீர்கள், ஆனால் அவர்களுக்குள் சக்தியை நிரப்புங்கள், பாபாவிடமிருந்து சக்தியைப் பெற்று தன்னை சக்திசாலியாக மாற்றிக் கொள்ள வேண்டும். உங்களுடைய சேவை நிலையங்களுக்கு வருபவர்கள் முதலில் சென்டரின் வாயுமண்டலத்தால் கவர்ந்திழுக்கப்பட வேண்டும். அந்தளவிற்கு வாயுமண்டலத்தை அமையுங்கள். ஏனென்றால் இப்பொழுதெல்லாம் அனைவரும் வந்தவுடனேயே அனுபவம் செய்ய வேண்டும் என்ற அளவிற்கு எதிர்பார்க்கிறார்கள். நீங்களும் அதற்கேற்ப காரியத்தைச் செய்யுங்கள். பார்த்த மாத்தித்திரத்திலேயே அனுபவம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். கேட்பதாலும் அனுபவம் அனுபவம் ஆகிறது ஆனால் வாயுமண்டலத்திலும் அனுபவம் ஆக வேண்டும். நிமித்தமான ஆத்மாக்கள் விசேஷமாக இதில் கவனம் வைக்க வேண்டியது அவசியமாகும். இதுவே அவர்களின் விசேஷமான சேவையும் ஆகும். நீங்கள் தன்னுள் யோக யுக்தமாக இருந்து வாயுமண்டலத்தில் சரியான ஸ்திதியை அமைத்து வைத்தால் அதனுடைய பிரபாவம் சேவை நிலையத்தில் தானாகவே பரவும். எப்படி பாப்தாதா மற்றும் பெரிய நிமித்தமான ஆத்மாக்களால் வாயுமண்டலம் அமைகிறது. வைப்ரேஷன் (அதிர்வலைகள்) தெரிகிறது அல்லவா? பாப்தாதா வந்தவுடனே வாயுமண்டலம் மாறுகிறது அல்லவா? அவ்வாறே நீங்கள் ஒவ்வொரு குழந்தைகளும் வாயுமண்டலத்தை அமைக்க வேண்டும். ஏனென்றால் இப்பொழுது தன்னுடைய சென்டரின் வாயுமண்டலத்தை மாற்றினால் தான் உலகின் வாயுமண்டலம்

மாற்றம் அடையும். அதற்கு நிமித்தமாக இருப்பது உங்களுடைய சேவை நிலையங்கள் தான், முயற்சியும் உள்ளது. லட்சியம் உள்ளது ஆனால் லட்சியத்தை மேலும் சக்திவாய்ந்ததாக அமையுங்கள். உலக மக்கள் இப்பொழுதெல்லாம் யாரைப் பார்த்தாலும் முகத்தை பார்த்தே வைப்ரேஷன். மூலமாகவே தெரிந்து கொள்கிறார்கள். ஏனென்றால் அசுர சக்தியின் தாக்கமும் அவர்கள் புத்தியில் உள்ளது. ஞானத்தின் தாக்கமும் உள்ளது. எனவே இங்கே மீட்டிங்கிற்காக யாரெல்லாம் வந்துள்ளீர்களோ, நீங்கள் ஒவ்வொருவரும் இதற்குப் பொறுப்பாளர்கள் தான் அப்படியில்லையென்றால், ஏன் மீட்டிங்கில் பெயர் கொடுக்க வேண்டும். தைரியம் இருக்கிறது அல்லவா? அதனால் தானே பெயர் கொடுத்தீர்கன் எனவே தனது கடமையை பிரத்யட்சம் செய்யுங்கள். நீங்கள் செய்யத்தான் விரும்புகின்றீர்கள். பாப்தாதாவிற்கும் தெரிகிறது செய்ய வேண்டும் என முயற்சியும் செய்கின்றீர்கள் ஆனால் சற்று முயற்சியை அதிகப்படுத்துங்கள் புரிந்ததா?

இன்று விசேஷமாக அழைத்துள்ளீர்கள், அன்பு என்னும் பாடத்தில் வெற்றி அடைந்து விட்டீர்கள், மதுபன் நிவாசிகளின் சங்கல்பம் இருந்தது. அவர்களின் சங்கல்ப சக்தி மற்றும் நீங்கள் அழைத்தற்கான நடைமுறையிலான சக்தி அன்போடும். உரிமையோடும் சொன்னீர்கள், மதுபனைச் சார்ந்தவர்களும் சொல்லியிருந்தார்கள் ஆனால் நீங்களும் சேர்ந்ததால் அந்த சக்தி இரண்டு மடங்கு கூடி விட்டது நல்லது. இப்போது வேறு ஏதாவது சொல்ல வேண்டுமா? இப்போது பாப்தாதா அனைவருடைய ரிசல்ட்டையும் பார்க்க விரும்புகின்றார். மதுபனைச் சார்ந்தவர்கள் மீட்டிங்கிற்காக வந்தவர்கள் இருவருடைய ரிசல்ட்டையும் பாப்தாதா பார்க்க விரும்புகின்றார். ஜகதம்பாவின் விசேஷமான முயற்சி இருந்தது. பாபா சொன்னார், அதையே ஜகதம்பா செய்தார். உங்களுடைய தீதியின் வார்த்தையும் இதுவாகத் தான் இருந்தது. இப்போது வீடு செல்ல வேண்டும். இப்போது வீடு செல்ல வேண்டும். உங்களுடைய தாதிக்கும் அவ்வாறு தான் எண்ணம் இருந்தது. இப்போது கர்மாதீத் ஆக வேண்டும். கர்மாதீத் நிலை அடைவதற்கான வகுப்புகள் நடத்த வேண்டும். கர்மாதீத் நிலைக்கான ஊக்கத்தை அதிகப்படுத்த வேண்டும். உங்களை விட்டு சென்று விட்ட பாண்டவர்களுக்கும் உள்ளத்தில் இப்படித் தான் சங்கல்பம் இருந்தது. நாம் பாண்டவர்கள். பாண்டவர்கள் என்றாலே வெற்றி என

சொல்லப்பட்டுள்ளது. எனவே பாண்டவர்களின் லட்சியமாக இருந்தது. இப்போதும் அது தான் இருக்கிறது. பாண்டவர்களுக்கே வெற்றி என்பது புகழப்பட்டுள்ளது. பாண்டவர் என்ற உடனேயே நினைவில் வருவது என்ன? வெற்றி தானே? அசோனி சேனை என்றாலும் பாண்டவர் என்று சொன்னவுடனேயே வெற்றி தான் நினைவிற்கு வருகிறது பாண்டவர்கள் ஐவர் தான் ஆனால் வெற்றி அங்கே தான். வாயுமண்டலம் எப்படியிருந்தாலும் அசோனி சேவையின் வாயுமண்டலமாக இருந்தது ஆனால் பாண்டவர்கள், பாண்டவ பதியின் ஸ்ரீமத்தால் வெற்றி அடைந்தார்.கள். அந்த வெற்றியே பெயர் புகழுக்குரியதாகி விட்டது. இப்போது அதே பாண்டவர்கள் வெற்றி அடைந்து பிறருக்கும் வெற்றியை பெற்று தருபவர்கள். எனவே பாண்டவர்களைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். எந்த விசயத்தில் மகிழ்ச்சி அடைகிறார்? சக்திகளுக்குத் துணையாக இருக்கின்றீர்கள். சக்திகளுக்கு சகயோகம் செய்து முன்னேறச் செய்வதில் துணையாக இருக்கின்றீர்கள். எப்படி பாபா சக்திகளுக்கு சிவசக்தி என்ற மந்திரத்தைக் கொடுத்து கம்பைண்டாக இணைத்து வைத்தாரோ அதுபோலவே பாண்டவர்களும் தன்னுடைய விசேஷங்களால் சக்திகளுக்கு சகயோகம் செய்து மிக நன்றாகவே முன்னால் வைக்கின்றீர்கள். எப்போதுமே நன்றாக செய்கின்றீர்கள், மேலும் நன்றாக இருந்து முன்னேறி செல்பவர்கள். நல்லது,

பாப்தாதா இன்று உங்களுடைய அன்டைப் பார்த்து உங்கள் அனைவருக்கும் அன்பு என்னும் மாலை அணிவிக்கின்றார். போதும். அப்படியே நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு சகயோகம் மாலையை அணிவியுங்கள். வெறும் கரங்களை மட்டும் மாலையாக்காதீர்கள். உளமுவந்து சகயோகம் கொடுத்து மாலை அணிவியுங்கள். பாப்தாதா முன்பு கூட சொல்லியிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தைகளின் சட்டைப்பையிலும் ஒத்துழைப்பு என்ற நோட் (பணம்) இருக்க வேண்டும். தவறான நோட் அல்ல ஆனால் சகயோகம். ஒத்துழைப்பு என்ற நோட்டால் உங்கள் சட்டைப்பை நிரம்பியிருக்க வேண்டும். எங்கு பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும் ஒத்துழைப்பு தேவைப்பட்டால் உடனேயே சகயோகம் என்ற நோட்டைக் கொடுங்கள். உங்களுடைய சட்டைப்பையில் அது உள்ளதா? சகயோகம் என்ற நோட் இருக்கிறதா? நிரம்பியுள்ளதா? அரைகுறையாக உள்ளதா? காலியாக இல்லையே?

நீங்கள் அவர்களுக்கு சகயோகம் என்ற நோட் கொடுத்தால் அவர்கள் உங்களுக்கு ஆசீர்வாதம் என்ற மாலையை அணிவித்தார்கள்.

அடுத்த சீசனில் வரும்பொழுது மகிழ்ச்சிகரமாக என்ன சொல்வீர்கள், சம்ஸ்காரம் அழிந்தே விட்டது. இப்படி சொல்வீர்களா? தயாரா? அனைவரும் தயாரா? தயாரா? முதல் வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் கை உயர்த்தவில்லையே? கை உயர்த்துங்கள். அனைவரும் உயர்த்தினார்கள். பின்னால் இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். முன்னதாகவே இந்த மகிழ்ச்சிக்கரமான செய்தி சொல்வீர்கள் அல்லவா? இப்போதும் சம்ஸ்காரத்தை அகற்றுகின்றீர்கள் ஆனால் எரிப்பதில்லை, எனவே தான் மீண்டும் அது உருவெடுத்து வந்து விடுகிறது. எனவே தான் சொல்லப்படுகிறது. சம்ஸ்காரத்தை சம்காரம் செய்து விடுங்கள். அதனை அமிழ்த்தி அமிழ்த்தி வைக்க வேண்டாம். எளித்தே விடுங்கள். ஏனென்றால் நேரத்தை நீங்கள் தான் அருகே கொண்டு வர வேண்டும். அட்வான்ஸ் பார்ட்டியில் உள்ள உங்களது விசேஷமான ஆத்மாக்கள் மற்றும் சூட்சும வதனத்தில் பாபா இருவருமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கு அவர்களின் சங்கல்பம் வந்து சேருகிறதா? அவர்கள் தேதி கேட்கின்றார்கள், உங்களுடைய பெரிய பெரிய தாதிமார்கள், தாதாக்கள் அனைவரும் தேதியை எதிர்பர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் தேதி தருவீர்களா? தருவீர்களா? முதல் வரிசையில் உள்ளவர்கள் சொல்லுங்கள். தேதி தருவீர்களா? அல்லது பொருத்திருந்து பாருங்கள் (Wait and See) என சொல்வீர்களா? நீங்கள் ஒவ்வொருவரும் இதில் என்ன செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் தன்னிடம் மீதம் உள்ள சம்ஸ்காரங்களை சம்காரம் செய்து விடுங்கள். அப்படி சம்ஸ்காரங்களை அழித்து எரித்து விட்டால் நேரமும் அருகே வந்து விடும். நேரத்தை அருகே கொண்டுவருவதற்கான வழி இது தான். உங்களிடம் மீதமுள்ள சம்ஸ்காரம் தான் இதில் தடையாக உள்ளது. அடுத்த சீசன் ஆரம்பமாகும். அதற்கு இன்னும் சில நாட்கள் உள்ளது. நாட்கள் அதிகமாகவே உள்ளது. தினசரி ஏதேனும் ஒரு சம்ஸ்காரத்தை சம்காரம் செய்து அழித்து விடுங்கள். ஒவ்வொன்றாக அழித்துக் கொண்டே. செல்லுங்கள். எத்தனை நாட்கள் இருக்கிறது இன்னும் அடுத்த முறை பாப்தாதா வரும்பொழுது நாங்கள் சம்ஸ்காரத்தை சம்காரம் செய்து விட்டோம் என்று கை உயர்த்துவோம் என்று யார்

சொல்கிறீர்களோ அவர்கள் இப்போது கை உயர்த்துங்கள். அழிந்து விடுமா?

கை உயர்த்தி விட்டீர்கள். பாப்தாதா முன்னதாகவே அதற்காக மிகமிக அதிகமான வாழ்த்துக்களைத் தருகின்றார். நல்லது. பாபா வாக்கை காப்பாற்றினார் அல்லவா? அவ்வாறே நீங்களும் வாக்கை காப்பாற்று.. வதில் புத்திசாலிகள் தானே! பாபாவிற்கு ஒவ்வொரு குழந்தையும் அன்பானவர்கள் தான். என்மீது பாப்தாதாவிற்கு எங்கே அன்பு உள்ளது என்று யாரும் நினைக்க மாட்டீர்கள். நானோ பின்னால் இருக்கின்றேன். நான் இப்படியிருக்கிறேன். பின்னால் இருந்தாலும் பாபாவிற்கு மிகமிக பிரியமானவர்கள்தான். ஏனென்றால் பாபாவைப் பார்த்து மேரா பாபா (எனது பாபா) என்று சொல்லி விட்டீர்கள் அல்லவா?

நாலாபுறமும் உள்ள குழந்தைகள் யாருக்கெல்லாம் தெரிகின்றதோ தூரத்தில் இருந்தாலும் அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா வாழ்த்துக்களை வழங்குகின்றார். முன்னதாகவே வெற்றிக்கான மகிழ்ச்சிகரமான செய்திக்கு பதிலையும் பாபா உள்ளத்தில் வைத்துள்ளார். இப்போது அதனை சாகாரத்தில் நிஜத்தில் பார்ப்போம். நல்லது.

இன்று வேறு ஒன்றும் செய்வதற்கில்லையே! சந்திப்பது மற்றும் மகிழ்ச்சிவூட்டுவது இது மட்டுமே இன்றைய நடிப்பு பாப்தாதாவிற்கு மகிழ்ச்சியோ நல்லது மதுபனின் முக்கிய இடங்களின் பெயரை வாசித்துக் கொண்டே செல்லுங்கள், அவர்கள் கை உயர்த்தட்டும்.

பாண்டவ பவன் ஞானசரோவர், சாந்திவன் நிவாசி, ஹாஸ்பிட்டல், சங்கம் பவன், பீஸ் பார்க், மியூசியம், அபு நிவாசி, பி.கே. காலனி உட்பட அனைவரும் தனித்தனி குழுவாக எழுந்து நின்று பாபாவிடம் இருந்து ஆசீர்வாதம் பெறப்பட்டது. எல்லோரையும் விட அதிகமாக சாந்திவனத்தில் இருக்கிறார்கள்.

<u>ச-ரி. நீலுவுடன்</u>: ரதத்தை நன்றாக பராமரிக்கிறீர்கள். மிகவும் மனமுவந்து சேவை செய்கின்றீர்கள். எனவே பாபாவின் உதவி மற்றும் உங்களுடைய நிமித்தமான சேவை காரியத்தை நடத்திக் கொண்டு

செல்கிறது. மேலும் நீங்கள் எல்லோருக்கும் எவ்வளவு பிரியமானவர்களாக இருக்கின்றீர்கள். அனைவரும் உங்களை எந்த பார்வையில் பார்க்கின்றார்கள். சந்திக்க வைப்பவர் என்ற பார்வையில் உங்களைப் பர்க்கின்றார்கள்.

**ச-ரி. முன்னியுடன்**: நீங்களும் யக்ஞத்தை மிக நன்றாகவே காப்பாற்றி வருகின்றீர்கள், சிக்கனமாக செயல்படுத்தி வருகின்றீர்கள். சிக்கனமாக இருப்பது இது உங்களது விசேஷ குணம். அவ்வப்போது பாப்தாதாவும் இந்த விசேஷ குணத்தைப் பார்க்கின்றார். நல்லது.

**ச-ரி. மோகினியுடன்**: நீங்களும் யோக பலத்தால் மற்றும் பாபாவின் நினைவுடன் தன்னை சரி செய்து விட்டீர்கள். மேலும் நலமுடன் இருப்பீர்கள். உங்கள் புத்தியில் சாதனம் வந்து விட்டது. எனவே பாபா உங்கள் மீது மகிழ்ச்சி அடைகின்றார், நீங்களும் தன்னை நியமத்தில் வைத்து முறைப்படி தன் நடிப்பை நன்றாக. செய்து வருகின்றீர்கள், செய்து கொண்டேயிருப்பீர்கள்.

**தாதி இரத்தன்மோகினியுடன்**: நீங்களும் தன்னுடைய நடிப்பில் நாலாபுறமும் அனைத்து விதமான சேவையிலும் பராமரிப்பதில் வெற்றி அடைந்து வருகிறீர்கள். வெற்றிக்கரமாகவே இருப்பீர்கள். நல்லது.

**இஷு தாதியுடன்:** நீங்கள் ஆரம்பத்தில் இருந்தே பாபாவின் ரகசியங்களைப் புரிந்து கொள்பவர். சாகார பாபாவுடன் இருந்து எல்லாவற்றையும் புரிந்து கொண்டீர்கள் ஆனால் குப்தமாக (மறைவாக) இருக்கின்றீர்கள், குப்தமாக இருப்பதும் நல்லது தான் ஆனால் அவ்வப்பொழுது பிரத்யட்ச ரூபத்திலும் வாருங்கள். நல்லது.

**ஜானகி தாதியுடன்:** யக்ஞத்தை வெற்றிகரமான ரூபத்தில் பார்க்க வேண்டும் என்ற உங்கள் ஆர்வம் நல்ல ஆர்வம் தான். மேலும் சேவையும் உள்ளது. இந்த சேவை குறித்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். முடிந்த அளவிற்கு எத்தனை பேரை தன்னைப்போல் பாபாவிற்கு பிரியமானவராகவும் விலகியிருப்பவராகவும் மாற்ற முடியுமோ அந்த அளவிற்கு மாற்றம் செய்கின்றீர்கள் மேலும்

பொறுப்பை உணர்ந்து முன்னேறிச் சென்று கொண்டேயிருக்கின்றீர்கள். இதைப் பார்த்து பாப்தாதா பெருமை அடைகின்றார். (நாற்பதாவது ஆண்டை அயல் நாட்டில் கொண்டாடுகின்றார்கள்) செய்தி அனுப்பி விடலாம்.

நிர்மலா தீதியுடன்: உங்கள் வேலை இயலாத காரியத்தையும் செய்து காண்பிப்பது, பாப்தாதாவின் விருப்பத்தை பிரத்யட்ச ரூபத்தில் கொண்டு வந்து காண்பியுங்கள்.

பரதாதியுடன்: அதிர்ஷ்டசாலியும், மகிழ்ச்சி உடையவரும் நீங்கள் இது உங்கள் முகத்தின் மூலம் தென்படுகிறது. இது உங்களது விசேஷ தன்மை, மூத்த சகோதரர்கள் மூவருடன்: இப்பொழுது மூவரின் கவனமும் சென்றுள்ளது. விசயம் எதுவாக இருந்தாலும் மூவரும் சேர்ந்து தெளிவு படுத்தி தாதிமார்களையும் துணையாக வைத்துக் கொண்டு செய்யும் பழக்கத்தை உருவாக்கியுள்ளீர்கள் ஆனால் இதே பழக்கத்தை அதிகப்படுத்திக் கொண்டேயிருங்கள். தாதிமார்களிடம் மிக அருகாமையில் வந்து விசயங்களை உளப்பூர்வமாக தெரிவித்துக் கொண்டேயிருங்கள். இதில் சங்கோஜம் (கூச்சப்பட) வேண்டாம். தாதிமார்களிடம் கூட சங்கோஜம் வேண்டாம், நீங்களும் சங்கோஜப்பட வேண்டாம். இணைந்து யக்ஞத்தை நிமித்தமாக செயல்படுத்துங்கள்.

ச-ர்.பிரிஜ்மோகனுடன்: உங்களது நிகழ்ச்சி நல்லவிதமாக நடைபெறும்.

ச-ர்.ரமேஷ் உடன்: (ரமேஷ் சகோதரர் பாபாவிற்கு செய்தி அனுப்பியிருந்தார் -சோமநாத் அருகில் ஒரு சென்டர் அமைப்பதற்கான இடம் கிடைத்திருக்கிறது. அது பற்றி பாப்தாதாவின் பிரேரணை என்ன? இப்போது நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் அங்கே இரண்டு ஜோன் உள்ளது. ஒன்று குஜராத், மற்றொன்று மும்பை. முதலில் குஜராத்தில் மீட்டிங் வையுங்கள், முதலில் குஜராத்தை சார்ந்தவர்கள் அக்கம் பக்கம் எங்கெல்லாம் சேவை செய்து கொண்டிருக்கின்றார்களோ அந்த ரிசல்ட்டைப் பாருங்கள். மேலும் அந்த ரிசல்ட்டில் அந்த கோவிலுக்கு அருகாமையில் நடைபெறும் சேவையைப் பாருங்கள் அங்கே இடைவெளி உள்ளதா? உங்களுக்கு அதைப் பற்றித் தெரியும், கோவில் உள்ள இடத்தில் சேவை செய்து கொண்டிருக்கிறார்கள்

ஆனால் அங்கே பெரிய அளவில் சேவை செய்யும் அளவிற்கு அங்கே உள்ள சுற்றுச் சூழலையும் பாருங்கள். பிறகு மும்பை குஜராத் இருவரும் 5-6 பேர் கலந்து அதைப் பற்றி ஆலோசனை செய்யுங்கள். அதிகமான பேரைக் கூப்பிட வேண்டாம். முதல் 5-6 பேரை வைத்து ஆலோசனை செய்யுங்கள். நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள். அங்கே என்ன நடைபெறுகிறது என்று குஜராத்தும் சேவை பற்றி ரிசல்ட்டும் சொல்லட்டும். அங்கு அக்கம் பக்கத்தில் என்ன சேவை நடைபெறுகிறது என்று ரிசல்ட் முதலில் தெரிந்து கொள்ளுங்கள். நல்லது

பாப்தாதாவிற்கு பிளாட்டினம் பவள விழா கொண்டாடப்பட்டது. அனைவரும் பாப்தாதாவிற்கு அலங்காரம் செய்தார்கள், மலர் மாலை அணிவித்தார்கள், கேக் வெட்டி பாடலும் பாடி கொண்டாடினார்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋

## 19.10.2011 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## தந்தையை பின்பற்றி பிரம்மாபாபாவுக்கு சமமாக வீணான சமயம், வீணான சங்கல்பத்தில் வெற்றி அடைந்து, கர்மாதீத் ஆகி முக்திக்கான கதவை திறக்க நிமித்தமாகுங்கள், இந்த தீபாவளியில் ஒவ்வொருவரும் தங்களுக்குள் கலந்து சம்ஸ்கார சந்திப்பின் ஆனந்த நடனத்திற்கான சங்கல்பம் எழுப்புங்கள்!

இன்று பாப்தாதா தனது நாலாபுறத்திலும் உள்ள இனிமையிலும் இனிமையான அன்பான குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கின்றார். அனைவரும் மிகவும் அன்பாக தனது நினைவைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வளவு அன்பை பாபாவிடம் மட்டும்தான் காட்டுகின்றார்கள். இந்த பரமாத்மாவின் அன்பு இப்பொழுது மட்டுமே பிராப்தியாகின்றது. ஒவ்வொரு குழந்தையும் அன்பில் மூழ்கி இருக்கின்றார்கள். பாபாவும் ஒவ்வொரு குழந்தைகளின் அன்பிற்கு கைமாறு கொடுத்துக் கொண்டிருக்கின்றார். ஆஹா குழந்தைகளே ஆஹா சிலர் அருகிலும் சிலர் தூரத்திலும் இருந்தாலும் ஒவ்வொரு குழந்தைகளும் பாபாவின் இதயத்தில் மூழ்கி இருக்கின்றார்கள். அனைவரின் இதயத்திலும் இவ்வளவு அன்பை செலுத்துபவர் யாரோ....! என்ற இந்த பாடல் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இந்த பாபா மற்றும் குழந்தைகளின் ஆன்மீக அன்பானது ஒவ்வொரு குழந்தைகளையும் தேகத்திலிருந்து விடுபடவும் பாபாவுக்கு அன்பானவராகவும் ஆக்கக் கூடியது. மேலும் இந்த அன்பானது இப்பொழுதுதான் குழந்தைகளுக்கு பிராப்தியாக ஆகின்றது. இந்த அன்பானது குழந்தைகளை

என்னவற்றிலிருந்து என்னவாக ஆக்க கூடியதாக உள்ளது. இந்த அன்பானது, இந்த ஒரு ஜென்மத்தில் மட்டும்தான் பிராப்தி ஆகின்றது. பாபாவும் குழந்தைகளின் அன்பை பார்த்து குழந்தைகளின் அன்பில் மூழ்கி விடுகின்றார்.

இன்று பாப்தாதா ஒவ்வொருவரின் நெற்றியிலும் இந்த மூன்று பாக்கியத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒன்று பாபாவின் சொரூபத்தில் பிராப்தி ஆகின்ற ஆஸ்தியின் பாக்கியம், இரண்டாவதாக, ஆசிரியரின் ரூபத்தில் உயர்ந்த படிப்பிற்கான பாக்கியம், மூன்றாவதாக சத்குருவின் ரூபத்தில் வரதானங்களின் பாக்கியம், ஒவ்வொருவரின் நெற்றி இந்த மூன்று பாக்கியங்களால் ஜொலித்துக் கொண்டுள்ளது.

பாப்தாதா கூட தனது பாக்கியசாலி குழந்தைகளைப் பார்த்து புன்முறுவல் பூத்துக் கொண்டிருக்கின்றார். முன்னே அமர்ந்திருந்தாலும் சரி, தூரத்திலிருந்தாலும் இதயத்தில் நெருக்கத்தில் உள்ளீர்கள். அப்படிப்பட்ட குழந்தைகள் மற்றும் தந்தையின் அன்பானது முழு கல்பத்திலும் இந்த நேரம் மட்டுமே பிராப்தி ஆகின்றது. இந்த அன்பின் அனுபவம் மற்றவர்களுக்கும் கூட செய்விக் கின்றீர்களா? இப்பொழுது இந்த பிராமண ஆத்மாக்களுக்கு ஏதோ கிடைத்துள்ளது என ஒரு சிலர் புரிந்துகொண்டுள்ளார்கள். என்ன கிடைத்துள்ளது. அதற்கான தெளிவு இப்பொழுது ஏற்பட்டுக் கொண்டே வருகின்றது. இப்பொழுது பிளாட்டினம் ஜூப்பிளியின் பிரபாவம் நாலாபுறமும் உள்ளது. மேலும் குழந்தைகளும் கூட உளமாற சேவை செய்கின்றீர்கள். மேலும் திட்டங்களும் தீட்டியுள்ளீர்கள். ஆஹா குழந்தைகளே ஆஹா! என்று பாப்தாதாவும் கூட நாலாபுறத்திலும் உள்ள குழந்தைகளுக்கு வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டுள்ளார். இந்த 75-ஆண்டுகளில் தன்னுடைய முயற்சியின் ஆதாரத்தில் நிர்விக்ன நிலையுடையவராகி, பிறரையும் ஆக்கிக் கொண்டு வந்த அடைந்து விட்டீர்கள். இப்பொழுது பாபா குழந்தைகளிடம் என்ன விரும்புகின்றார்? சதா ஒவ்வொரு குழந்தைகளும் பாப்சமமாக ஆக வேண்டும் என்று பாபாவுக்கு ஆசையுள்ளது. எப்படி பிரம்மாபாபா வெற்றி அடைந்தாரோ அதே போன்று ஒவ்வொரு குழந்தைகளும் சதா வெற்றி அடைய வேண்டும். இதற்காக பிரம்மாபாபா கூட என்ன செய்தார்? அதேபோன்று தந்தையை பின்பற்றுங்கள். நீங்கள் அனைவரும் ஒவ்வொரு அடி எடுத்த

வைப்பதற்கு முதலில், இந்த அடியை பிரம்மாபாபா செய்வாரா, சோதனை செய்யுங்கள், பிரம்மாபாபா ஒவ்வொரு குழந்தைளின் புருஷார்த்திலும் சேவையிலும் உள்ள குறைகளைப் பற்றி தெரிந்திருந்தாலும் பலகீனங்களின் மீது மேலும் இரக்கம் மற்றும் நன்மைக்கான பாவனை வைத்தார்.தனது பரிவாரத்தின் ஒவ்வொரு சகோதர சகோதரிகளின் மீதும் சுபபாவனை, சுபமான ஆசை, இரக்கம் மற்றும் நன்மைக்கான பார்வையினால் அவர்களுக்கும் சகயோகம் ஆகுங்கள் என்று இதையே அனைத்துக் குழந்தைகளுக்கும் கூறிவந்தார். பாப்தாதா, அன்பு என்ற பாடத்தில் ஒவ்வொரு குழந்தையும் தனது சக்தியின் அனுசாரம் தேர்ச்சியடைந்துள்ளார்கள் என்று முதலிலேயே கூறியுள்ளார். அன்பின் காரணத்தினால் தான் முன்னேறிக் கொண்டுள்ளீர்கள். இப்பொழுது பாப்தாதா குழந்தைகளின் அன்பைப் பார்த்து குஷியாகியுள்ளார். அன்பு என்ற பாடத்தினால் தான் ஒவ்வொரு குழந்தைகளும் வரிசைக்கிரமமாக சென்று கொண்டுயிருக்கின்றனர். அன்பில் கொஞ்சம் சமர்ப்பணம் செய்யவேண்டியது உள்ளது என பாபா விரும்புகின்றார். பாபாவிடம் அன்பு உள்ளது ஆகையால் எம்மாதிரியான சமர்பணம் செய்ய வேண்டும்? என்ன பாப்தாதா விரும்புகின்றாரோ அதை புரிந்து விட்டீர்கள், பாபா என்ன விரும்புகின்றார் என்று புரிந்து விட்டீர்கள் தானே? புரிந்து விட்டீர்களா? தலையை அசையுங்கள். புரிந்துள்ளீர்களா? செய்ய வேண்டும் என்றால் இதற்கும் கூட தைரியம் வேண்டும் அல்லவா! தைரியத்துடன் கையை உயர்த்துங்கள். தைரியம் உள்ளதா? நல்லது. தைரியமான குழந்தைகளுக்கு பாபாவின் உதவி எப்பொழுதும் கிட்டும்.

இப்பொழுது பாப்தாதா விரும்புகின்றார்கள், ரிசல்ட்டில் பார்க்கபோனால், இப்பொழுது வரை சம்பூர்ண தூய்மையின் கணக்குபடி வீணான எண்ணங்கள் கூட அபவித்திரதன்மையின் விதையாகும். பாப்தாதா. இந்த வீணான சங்கல்பத்தை எழுப்புவது மெஜாரிட்டி குழந்தைகளிடம் இப்பொழுதும் சமஸ்காரமாக உள்ளது என்பதை பார்த்தார். ஒன்று வீணான சங்கல்பம் மற்றும் இரண்டாவது வீணான சமயம் என்ற இவை மெஜாரிட்டி குழந்தைகளிடம் இப்பொழுது தென்படுகின்றது. மேலும் வீணான சங்கல்பத்திற்கு மனமே ஆதாரமாகும். அதை மன்மனாபவ என்ற நிலையில் இருக்கவிடுவ தில்லை. ஏனென்றால் பாப்தாதா கொஞ்ச காலத்திற்கு முன்பே இந்த

சமிக்ஞையை கொடுத்து விட்டார் - எது நடக்க வேண்டுமோ அது திடீரென்றுதான் நடக்கும். திடீர் என்ற கணக்குபடி அதிகபட்ச குழந்தைகளிடம் இந்த வீணான சங்கல்பம் சமஸ்காரமாக எழுந்துள்ளதை பாப்தாதா சோதனை செய்து விட்டார். பிரம்மாபாபா இந்த வீணான நேரம். வீணான சங்கல்பம் இவற்றில் வெற்றியாளராகி கர்மாதீத் நிலையை அடைந்துள்ளார் எனவே தந்தையைப் பின்பற்றுங்கள்.

பாப்தாதா, மனம் உங்களின் படைப்பு, நீங்கள் மனதின் படைப்பாளர்கள் எனில் மனதை நீங்கள் நடத்தக்கூடியவாகள் என்பதை பார்க்கின்றார். மனதின் கட்டுப்படுத்தும் சக்தி மற்றும் அதிகார சக்தியை பயன்படுத்தும் எஜமானர்கள் நீங்கள். ஆனாலும் கூட மனம் ஏமாற்றி விடுகின்றது. மனதை ஒரு குதிரை எனக் கூறப்படுகின்றது ஆனால் உங்களிடம் ஸ்ரீமத் என்ற கடிவாளம் உள்ளது. இருக்கின்றதா கடிவாளம்? ஒருபொழுதும் மனம் வீணான எண்ணங்களின் பக்கம் செல்லக்கூடாது. கடிவாளத்தை டைட்டாக (இறுக்கமாக) வைத்துக் கொள்ளவதால் தன்னை வீணான சங்கல்பங்களின் சிறிதளவாவது அபவித்திரதன்மையை அழித்து கொள்ளமுடியும். மனதிற்கு எஜமானராகி, எப்படி பிரம்மாபாபா மனதிற்கு சோதனை செய்தாரோ அதே போன்று தினமும் சோதனை செய்யுங்கள். மேலும் வீணான சங்கல்பத்தை அழியுங்கள். இன்று பாப்தாதா வீணான சங்கல்பங்களை சமாப்தி செய்ய விரும்புகின்றார். தீய எண்ணங்கள் குறைவாக வருகின்றது ஆனால் வீணானவை அதிகமாக உள்ளது இதில் தான் சமயம் விரையமாகிறது. ஆகவே மனதை வேறு கவர்ச்சியில் பலகீனமாகி விடாத அளவிற்கு மனதிற்கு எஜமானர்களாகி மனதை பிஸியாக வைத்துக் கொள்ளுங்கள். இது முடியமா? இன்று பாப்தாதா அனைவருக்கும் வீணான எண்ணங்களை அழிப்பதற்கான சங்கல்பத்தை கொடுத்துக் கொண்டுள்ளார்கள். முடியுமா? வீணான சங்கல்பத்தை அழித்து விழாவையும் கொண்டாடு வோம் என்பவர்கள் கையை உயர்த்துங்கள். வீணாகும் சமயத்தை பாதுகாக்க வேண்டும். சமயம் மற்றும் சங்கல்பம் இரண்டையும் சேமிக்க வேண்டும். ஏனென்றால் பாப்தாதா, அனைவரின் சார்ட்டைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். சார்ட்டில் இந்தக் குறைபாடானது அதிகபட்ச குழந்தைகளிடம் இருப்பது தெரியவந்துள்ளது. மனதின் எஜமானர்கள் தான் உலகத்தின் எஜமானர்கள் ஆகியுள்ளார்கள். எப்படி பிரம்மாபாபா

மனதை வென்றதின் மூலமாக உலத்தை வென்றாரோ அப்படி இப்பொழுது உங்களையும் எதிர்பார்த்துக் (ஆவாகணம்) கொண்டுள்ளார்கள். இப்பொழுது அட்வான்ஸ் பார்ட்டியும் கூட எதிர்பார்த்துக் கொண்டுள்ளது. நான்கு மணிக்கு அட்வான்ஸ் பார்ட்டி குழந்தைகள் கூட வதனத்திற்கு வந்து எப்பொழுது முக்திக்கான வாசல் திறப்பீர்கள்? என்று கேட்கின்றார்கள். யார் திறப்பவர்கள்? நீங்கள் அனைவரும் முக்திக்கான வாயிலை திறப்பவர்கள் தானே! நீங்கள் சம்பூர்ணமாக ஆவது என்றால் முக்திக்கான வாசலை திறப்பதாகும். பாப்தாதாவிடம் எதுவரை என்று அட்வான்ஸ் பார்ட்டியும் ஆன்மீக சம்பாசனை செய்கின்றார்கள். ஆகையால் பாபா உங்களிடம் கேட்கின்றார் எதுவரை? என்ன பதில் கொடுக்கப்போகின்றீர்கள்? முதல் வரிசையில் உள்ளவர்கள் கூறுங்கள் எது வரை? ஒவ்வொரு காரியத்திற்கும் தேதி முடிவு செய்கின்றீர்கள் அல்லவா இந்த காரியத்திற்குகான தேதி எப்பொழுது வரை? பிரம்மாபாபா பரிஸ்தா ரூபத்தில் அழைப்பு விடுகின்றார். கூறமுடியுமா? தேதியை கூறமுடியுமா? கூறுங்கள் தேதி கூறமுடியமா? இப்பொழுது தேதி முடியவாகி விட்டதா? பாண்டவர்கள். கையை உயர்த்துங்கள். தேதியை குறித்து விட்டீர்களா? இல்லையா? ஏன்? பாபா. எங்களுக்கு ஆர்வமே வீட்டிற்கு போக வேண்டும். வீடு போக வேண்டும். வீடு போக வேண்டும் என்று தீதீ கூறுகின்றார்கள். எங்களுக்கு ஆர்வமே கர்மதீத நிலை ஆக வேண்டும் ஆக வேண்டும்.. என தாதி கூறுகின்றார்கள். உங்களுக்கு தீதி தாதியிடம் அன்பு உள்ளதுதானே! அன்பு என்பது அனைவரிமும் தான் ஏன்னென்றால் யாரேல்லாம் அட்வான்ஸ் பார்ட்டியில் சென்றுள்ளார்களோ அவர்கள் அனைவரிடமும் உங்களுக்கு அன்பு உள்ளது. இப்பொழுது அவர்களின் கேள்விக்கு பதில் கொடுங்கள். தங்களுக்குள் ஆன்மீக உரையாடல் செய்து பதில் தயார் செய்யுங்கள். செய்வீர்களா?

இன்று இரட்டை அயல் நாட்டினர்களின் சந்திப்பு தினம் அல்லவா! இரட்டை அயல்நாட்டினரும் தங்களுக்குள் ஆன்மீக உரையாடல் செய்து பதில் கூறவேண்டும், பாரதவாசிகளும் இந்த விசயத்தில் கலந்து ஆலோசித்து பதில் சொல்ல வேண்டும். பதில் உள்ளதா நல்லது பேசுங்கள்... பேசுங்கள். யார் பேசவேண்டுமோ அவர்கள் கையை உயர்த்துங்கள். (ச-ரி.மோகினி நியூயார்க்: பாபா தேதியை உறுதி

செய்தால் நாங்கள் எப்பொழுதும் எவரெடியாக இருக்கின்றோம்) இல்லை நீங்கள் தான் தேதியை முடிவெடுக்க வேண்டும். ஏற்பாடுகளை நீங்கள் தானே செய்யவேண்டும் அல்லவா! இந்த தீபாவளியில் தீபாவளியை கொண்டாடுங்கள் என்று பாபா கூறுவார் பரவாயில்லையா? எவரெடியா? எவரெடியா? சீக்கிரம் என்று கூறுவேன். ஆகையால் நீங்கள் கூறுங்கள் என்று கூறுகின்றேன். (டாக்டர் நிர்மலா பாபா ஒரு வருடம் கொடுங்கள்) நல்லது நீங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்கிறீர்களா? இவர் ஒரு வருடம் என்று கூறுகின்றார். யார் ஒரு வருடம் தேவை என்று புரிந்துள்ளீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். பெரியதாக கையை உயர்த்துங்கள். நல்லது, ஒரு வருடம் என்பவர்களின் பெயரை குறித்து கொள்ளுங்கள். நல்லது இரண்டாவது சிலர் சிரிக்கின்றார்கள். சொல்லுங்கள் (நிர்வேயர் இப்பொழுது இல்லையெனில் இனி எப்பொழுதும் இல்லை -இன்று இப்பொழுது ஏற்பட வேண்டும்) கைதட்டுங்கள். நல்லது. மிக நல்லது இப்பொழுதே அனைவரும் தனது மனதினால், ஒருபொழுதும் வீணான சங்கல்பம் வர விடமாட்டோம் என்று உறுதிமொழி செய்யுங்கள். இது முடியமா? இப்பொழுதிலிருந்து நவ் ஆர் நெவர் (now or never) என்று சொல்வோம். குறைந்ததிலும் குறைந்தபட்சம் எந்த வீணான சங்கல்பமும் வர விடமாட்டேன். வீணாக சமயத்தை செலவழிக்க மாட்டேன் என்ற உறுதிமொழி எடுப்போம். இதில் யார் தயாரோ அவர்கள் கையை உயர்த்துங்கள். மெஜாரிட்டி உயர்த்தினீர்கள். கொஞ்சம் நேரம் பிடிக்கும் என்பவர்கள் கையை உயர்த்துங்கள். யாரும் இல்லை. கொஞ்சபேர் கையை உயர்த்துகின்றார்கள். நல்லது இந்த தீபாவளியில் இந்த உறுதிமொழியை செய்யவேண்டும். யாரெல்லாம் அதிகபட்சம் கையை உயர்த்தினார்களோ அவர்கள் இவற்றை ஸ்வாஹா செய்ய வேண்டும். ஆகையால் உங்கள் அனைவரின் சார்பாக திடசங்கல்பத்திற்காக இன்று கேக் வெட்டுவோம். விருப்பம் தானே? இன்றைய கேக் இந்த திட்சங்கல்பத்தின் ரககியமாகும். ஏனென்றால் அனைவரும் விரும்புகிறார்கள், ஏன் அஞ்ஞானிகள் கூட இதைத்தான் விரும்புகின்றார்கள். இப்பொழுது ஏதாவது நடக்க வேண்டும்... இப்பொழுது ஏதாவது நடக்க வேண்டும் ஆனால் அவர்களிடம் சக்தியில்லை. குழந்தைகளாகி உங்களிடம் சங்கல்பங்களை பூர்த்தி செய்யும் சக்தியுள்ளது. தந்தையை பின்பற்றுகின்றீர்கள் அல்லவர் பிரம்மாபாபாவின் ஜென்மமே திடசங்கல்பத்தினால் உருவானது

செய்யவேண்டும், யோசிக்க கூடாது, என்ன செய்யவேண்டும். என்ன செய்யக் கூடாது ஆனால் செய்யவேண்டும். இந்த ஒரு சங்கல்பம் தான் இவ்வளவு குழந்தைகளின் எதிர்காலத்தை உருவாக்கியது. ஒரு பிரம்மாபாபா எவ்வளவு தைரியம் வைத்தார். பாதி பங்கு கிடைத்தது மேலும் யக்ஞத்தை ஸ்தாபனை செய்தார். ஒரு பிரம்மாவின் திடசங்கல்பத்தினால் யக்ஞத்தின் பிராமணனர்கள் படைக்கப்பட்டார்கள். மேலும் தேசம், வெளி தேசத்தின் ஆத்மாக்கள் வரை சென்றுவிட்டது. அப்படியானால் திடசங்கல்பத்தினால் என்ன செய்யமுடியாது இவர் உங்களுக்கு முன்னே எடுத்துக்காட்டாகும். பாபாவிடம் நீங்கள் எழுப்பும் நல்ல நல்ல சங்கல்பங்கள் வந்து சேர்கின்றது ஆனால் திடத்தன்மைதான் குறைவாக உள்ளது. ஏதாவது விசயம் முன்னே வந்து விட்டால் திடத்தன்மை குறைந்து விடுகின்றது. திடத்தன்மைதான் வெற்றிக்கு திறவுகோலாகும்.

பாருங்கள் தில்லியைச் சேர்ந்தவர்கள் செய்தே ஆக வேண்டும் என்று திட சங்கல்பம் செய்தார்கள். ஆகி விட்டதல்லவா யோசிக்கலாம், பார்க்கலாம் என்று நினைக்கவில்லை. அனைவரின் திடசங்கல்பம் இதற்கு நிமித்தமானது. எப்படி நிமித்தமானது? அனைத்து குழந்தைகளின் சகயோகம் மற்றும் திடசங்கல்டம் இதை நடைமுறைப்படுத்தி வெற்றி கொடுத்தது. இதில் அனைவரும் துணை கொடுத்தனர் மற்றும் ஒருவழியில் சென்றனர். ஆமாம், இல்லை என்றில்லாமல் ஒரு வழியில் ஏற்பட்டதால் திடத்தன்மையில் அவ்வளவு சக்தி உள்ளது. எந்த காரியம் ஆரம்பித்தாலும் அதில் முதலில் திடசங்கல்பத்தின் விதையை விதையுங்கள். அதற்கு பலன் வெளிப்பட்டே ஆக வேண்டும். இந்த 75 வருடங்கள் எப்படி கடந்தது. பிரம்மாபாபா மற்றும் குழந்தைகளின் திடசங்கல்பத்துடன் 75-ஆண்டு முடிந்து விட்டது. ஊக்கம் உற்சாகத்துடன் வளர்ந்து முன்னேறி இப்பொழுது 75-ஆண்டு முடிந்து விட்டது. இப்பொழுது. இன்று வீணான சமயம் வீணான சங்கல்பத்தை அழித்தே ஆக வேண்டும் என்று இந்த சங்கல்பத்தை எழுப்புங்கள், எப்பொழுது வீணானது சமாப்தி ஆகி விடுகின்றதோ அப்பொழுதே சதா சிரேஷ் சங்கல்பத்தின் கஜானா அதிசயத்தை காட்டும்,

இன்று இரட்டை அயல்நாட்டவரின் விசேஷ சந்திப்புக்கான தினமாகும். இரட்டை அயல்நாட்டு குழந்தைகள் நாலாபுறத்திலும் இரட்டை சேவை நன்றாக செய்து கொண்டுள்ளனர் என்பதால் பாப்தாதாவுக்கு மகிழ்ச்சியே. ஒன்று சுயபுருஷார்த்தம் மற்றும் இரண்டாவது மற்ற ஆத்மாக்களின் சேவை இரண்டிலும் நன்றாக தைரியம் வைத்து முன்னேறிக் கொண்டுள்ளார்கள். உங்களுக்கும் வாழ்த்துக்கள், பாரதவாசிகளுக்கும் வாழத்துக்கள். தில்லியில் நிமித்தமாக பிரிஜ்மோகன், ஆஷா மற்றும் இவர்களுடன் குப்தமாக குல்சார் குழந்தையும் இருந்தார்கள். மேலும் ஒருவழியில் ஆமாம் ஆமாம் (ஹான்ஜி) எனச் சொல்வதில் முழு தில்லியிலும் ஊக்கம் இருந்தது மற்றும் செய்து காட்டினார்கள், முடியாது என்று சொல்லவில்லை. செய்தே ஆக வேண்டும். இப்படி ஒருவழியில் இருப்பது என்றாலே வெற்றியாகும். வெற்றி என்பது உங்கள் ஒவ்வொரு குழந்தைகளும் பிறப்புரிமையாகும், அதை பயன்படுத்துங்கள். சோம்பேறியாகாதீர்கள். ஆகி விடும், செய்யலாம், என்று யோசிக்காதீர்கள். செய்தே ஆக வேண்டும் என்பது தான் பிராமணர்களின் பாஷையாகும். பாப்தாதாவுக்கோ அனைத்து குழந்தைகளின் மீதும் திருப்திதான் ஆனால் இன்று தில்லியைச் சேர்ந்தவர்களும் அதிசயத்தை காட்டியுள்ளனர்கள். அரசாங்கத்தின் விசேஷமாக சிலருக்கு பிரம்மா குமாரிகள் என்ன செய்வார்கள் என்று புரியும் அளவிற்கு நல்ல விதத்தில் செய்தியானது சென்றுள்ளது. சிலர் தவறுதலாகவும் புரிந்திருந்தனர் ஆனால் இந்த 75ஆம் ஆண்டைக் கேட்டு இப்பொழுது இவர்களால் என்ன விரும்பினாலும் செய்ய முடியும் என்று புரிந்து விட்டார்கள். ஆகையால் யாரெல்லாம் அரசாங்கத்திற்கு பொறுப்போ அவர்கள் வரை நன்றாக குரல் சென்று அடைந்து விட்டது. இது ஒருவழியின் அதிசயமாகும்.

பாப்தாதாவுக்கு அயல்நாட்டினரைப் பார்த்து ஆனந்தம் மற்றும் முன்னேற்றமும் செய்து கொண்டிருக்கின்றார்கள், இரட்டை சேவையில் கவனம் நன்றாக உள்ளது. தங்களுக்குள் சமஸ்கார சந்திப்பின் ராச நடனம் புரியுங்கள் என்று பாப்தாதா இந்த செய்தியை மட்டும் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். சென்டர் நன்றாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சேவையும் நன்றாக சென்று கொண்டிருக்கின்றது என்று மட்டும் யோசிக்காதீர்கள் ஆனால் ஒரு

பரிவாரம். பிரபுவின் பரிவாரம், லௌகீக பரிவாரமில்லை இது பிரபுவின் பரிவாரமாகும். பிரபு பரிவாரம் என்றால் ஒருவர் மற்றவருக்குள் சுப பாவனை, கல்யாண பாவனையுடன் இருப்பதாகும். நாம் அனைவரும் கூடகூடவே ஒருவர் மற்றவர்களை முன்னேற்றிக் கொண்டு முக்திக்கான வாயிலை திறந்து ஒன்றாக செல்ல வேண்டும் என்ற எண்ணம் தான் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்க வேண்டும். ஆகையால் சென்டருக்கு வருபவர்கள். நம்மைப் பார்த்து இவர்கள் 8 அல்ல, 10 அல்ல ஆனால் பத்தும் ஒன்று எனப் புரிந்து கொள்ளும் அளவிற்கு வாயுமண்டலம் இருக்க வேண்டும். இப்பொழுது சமஸ்கார சந்திப்பின் ராச நடனம் புரியவேண்டும் என்று ஒவ்வொருவரும் மனதில் தீபாவளியில் சங்கல்பத்தை எழுப்புங்கள். ஒரு ஆத்மா கூட ஒருவர் மற்றவரிமிருந்து விலகிச் செல்லாமல் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும். ஆகவே இந்த தீபாவளியில் சமஸ்கார சந்திப்பின் ராச நடனம் புரியவேண்டும். ஒருவர்கூட என்னால் சுமையாகாமல் அனைவரும் லேசாக இருக்க மனதில் திடசங்கல்பம் செய்யவேண்டும். சமஸ்காரம் கலக்கவில்லை எனில் சுமையாகி விடும். இந்த எண்ணத்தினால் வாசலின் கதவுகளை திறப்பதற்கான விரைவான ஏற்பாடு ஆக வேண்டும் என்று பாப்தாதா விரும்புகின்றார். யாரொருவரும் நம்மிடம் கோபமாகவோ, சுமையாகவோ இருக்கக்கூடாது என்பதை சோதனை செய்யுங்கள் இது முடியுமா? முடியுமா? தலையை அசையுங்கள். முடிந்தால் கையை உயர்த்துங்கள். அப்பொழுதுதான் இது இந்த தீபாவளியில் அருமையான அலங்கார ஆபரணமாகி விடும்.

இரட்டை அயல்நாட்டினர். பாப்தாதாவின் உள்ளத்தில் தினமும் இரட்டை அயல்நாட்டினரை எமர்ஜ் செய்கிறார் ஏன்? ஏன் எமர்ஜ் செய்கிறார்? ஏனென்றால் இரட்டை அயல்நாட்டினர் முழு உலகத்திலும் பாபாவின் பெயரை வளர்ப்பதற்கு நிமித்தமாகியுள்ளார்கள். எந்த விசயத்தில்? பாரதவாசி மட்டுமின்றி வெளிநாடட் வரும் நாங்கள் ஏன் பின்தங்கி விடவேண்டும் என்று தங்களது பாக்கியத்தையும் உருவாக்கி விட்டார்கள். இந்த பிரேரணை தில்லி நிகழ்ச்சியிலிருந்து பாரத்தில் நன்றாக பரவியுள்ளது ஆகையால் பாப்தாதா சேவைக்கு நிமித்தமாக தங்கள் அனைவரையும் எமர்ஜ் செய்கின்றார். பாரத்தை விழிப்படையச் செய்யுங்கள். விழிப்படைய செய்து கொண்டுள்ளார்கள். மேலும்

பாரத்தை விழிப்படையச் செய்யும் அளவிற்கு வரும் காலங்களில் வி.ஐ.பிகளை தயார் செய்வார்கள். அவர்களின் அனுபவம் பாரத வாசிகளை விழிப்படையச் செய்யும். ஆரம்பத்தில் அதிமான வி.ஐ.பிகளை அழைத்து வந்தது பாப்தாதாவிற்கு நினைவிலிருக்கின்றது நிகழ்ச்சிகளை நடத்தியிருந்தார்கள். இப்பொழுது இந்த சேவையில்லை. மேடையில் அப்படிப்பட்ட அனுபவம் சொல்லும் பிரமுகர்களை தயார் செய்யுங்கள். இப்பொழுது அதிசுமான கலை நிகழ்ச்சிகளை காட்டினீர்கள். அனுபவமும் சொன்னீர்கள் ஆனால் இன்னும் கொஞ்சம் காலம் உள்ளது, இப்பொழுது பாரதத்தைச் சேர்ந்தவர்களின் அதிர்ஷ்டத்தை விழிப்புர செய்யும், அப்படிப்பட்ட பிரமுகர்களை அழைத்து வாருங்கள் இப்பொழுதும் கூட வெளிநாட்டவர்கள் மற்றும் பாரத்தின் சேவையையும் இணைந்ததின் பிரபாவமும் நன்றாக இருந்தது. இப்பொழுது இணைந்து அப்படிப்பட்ட சேவையை அதிகரியுங்கள். மேலும் முக்கியமான விசயம் என்னவெனில் தன்னைத்தான் ஒவ்வொருவரும் சீக்கிரத்திலும் சீக்கிரமாக சம்பன்னமாக்க வேண்டும். அது உங்கள் அனைவரின் சம்பன்ன தன்மைக்கான முக்தியின் வாயிலை திறந்து விட வேண்டும். நல்லது!

(**90-தேசங்களிலிந்து 2400-இரட்டை அயல் நாட்டினர்கள் வந்துள்ளார்கள். அதில் 600 புதிய சகோதர சகோதரிகள் உள்ளனர்.)** வாழ்த்துக்கள். காணாமல் போன குழந்தைகள் இன்று தனது பரிவாரம் மற்றும் தந்தையை வந்து சந்தித்துக் கொண்டுள்ளனர் என்பது பாப்தாதாவுக்கு குஷியாகும். மிகவும் நல்லது இப்பொழுது அனைவரும் தீவிர வேகத்தில் புருஷார்த்தியாக வேண்டியதுள்ளது ஏன்னென்றால் கொஞ்ச சமயத்தில் தனது நம்பரை முன்னே கொண்டு செல்ல வேண்டியதுள்ளது. ஆகையால் தீவிர புருஷார்த்தியாகி அனைவரைக் காட்டிலும் முன்னேறிச் செல்ல வேண்டும். ஆனாலும் வந்து சேர்ந்ததிற்கு வாழ்த்துக்கள். பாப்தாதா ஒவ்வொருவரையும் பார்த்து புன்முறுவல் பூத்துக் கொண்டுள்ளார். இப்பொழுது மிகஎளிதான நினைவின் மூலம் தன்னை சம்பன்னமாக்கி அனைவரைக் காட்டிலும் முன்னேறிச் செல்ல முயற்சி செய்யுங்கள். மேலும் முன்னேற முடியும், பின்னே வருபவரும் கூட பின்னே இருக்க வேண்டாம். முன்னேறி செல்ல வேண்டும். நல்லது குளோபல் மருத்துவமணைக்கு 20-வருடம் முடிந்து விட்டது) இந்த மருத்துவமனை அநேக ஆத்மாக்களை

பரிவாரத்திற்கு கொண்டு சேர்த்துள்ளது. அபுவின் இந்த மருத்துவமனைக்கு பின் அதன் வைப்பிரேசன் எப்படிப்பட்டது எனத் தெரியாமல் இருந்தனர், இப்பொழுது இவர்கள் இரட்டை சேவை செய்து கொண்டுள்ளார்கள் என யோசிக்கின்றனர்கள் சரீரத்திற்கும் ஆத்மாவுக்குமான இரட்டைப் பாகம் நடித்துக் கொண்டுள்ளார்கள் ஆகையால் எங்கெல்லாம் சேவை நடந்து கொண்டிருந்தாலும் வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள்! பாப்தாதாவுக்கு. இந்தமாதிரி இரட்டை டாக்டராவது, இரட்டை சேவாதாரியாவது பிடித்துள்ளது. இப்பொழுது ஒவ்வொருவரும் மேலும் முன்னேறிச் செல்ல வேண்டும். நல்லது நல்லது சேவையில் நல்லது.

நாலாபுறத்திலும் உள்ள எதிரில் அமாந்திருந்தாலும் தூரமாக எங்கு அமர்ந்திருந்தாலும். அனைவருரின் கவனம் மதுவனத்தில் உள்ளது. பாப்தாதாவை பார்த்து கொண்டுள்ளார்கள். அதிகபட்சமாக பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். பாப்தாதாவும் அனைத்து குழந்தைகளுக்கும். நாலாபுறமும் உள்ள குழந்தைகளுக்கு சதா புன்முறுவல் பூக்கும் குழந்தைகளுக்கு, சதா இரட்டை புருஷார்த்தத்திற்கு இரட்டை புருஷார்த்தி என்றாலே சுயமுயற்சிலும் சேவைக்கான முயற்சிலும் அப்படிப்பட்ட இரட்டை புருஷார்த்தி மற்றும் இரட்டை நம்பிக்கையின், ஆனந்தத்தில் இருக்கூடியவர்களுக்கு, சதா பாபாவினுடனே இருக்கக் கூடியவர்களுக்கு சதா தங்களுக்குள்ளும் நன்மையான மற்றும் இரக்கமான சுப பாவனையில் இருக்கக் கூடியவர்களுக்கும், ஒவ்வொரு குழந்தைகளின் பெயர் சகிதமாக பாப்தாதாவின் உள்ளத்தின் அன்பு நினைவுகள் உரித்தாகுக!

ஆனால் இன்றைய விசயமான வீணான சங்கல்பத்தின் சாமாப்தியை மறக்க வேண்டாம். பாப்தாதாவிடம் பதிப்புகுறிப்புகளும் (ஆவணம்) வந்து சேர்ந்து விடுகின்றது. எத்தனை தீவிர புருஷார்த்தி குழந்தைகள் உள்ளார்கள். மேலும் ஒருவர் மற்றவருக்கு ஊக்கம் உற்சாகத்தைக் கொடுத்து முன்னேற்றக்கூடியவர்களா என பாப்தாதா பார்ப்பார். ஒருவேளை யாராவது தவறு செய்தாலும் கூட அவர்களுக்கான தவறை செய்கின்றார்கள், மற்றும் நீங்கள் அவர்களின் தவறை மனதில் சங்கல்டம் செய்கின்றீர்கள், இதை செய்கின்றார்கள். இதைச் செய்கின்றார்கள்.. இதையும் கூட அழித்து விடுங்கள். அவர்களுக்கு

சகயோகத்தை கொடுங்கள். சிரேஷ்ட பாவனையை கொடுங்கள், அப்படிப்பட்ட சேவை செய்து முழு கூட்டத்தை சிரேஷ்ட சங்கல்பம் கொண்டவர்களாக ஆக்கித்தான் தீர வேண்டும். சில சென்டரில் எப்பொழுதோ சிலர் ஒருவர் மற்றவருக்காக எதுவானாலும் ஆது பாவனையில்லை, ஆனால் சுபபாவனை மற்றும் சுபமான ஆசை இருக்க வேண்டும், சரிதானே! மிகவும் நல்லது இப்பொழுது அனைத்துக் குழந்தைகளுக்கும் பாப்தாதா வாழ்த்துக்களுடன் இதயத்தின் நினைவுகளையும் சேர்த்து தந்து கொண்டுள்ளார்.

தாதி ஜானகிஜியுடன்: வெளிநாடு மற்றும் தேசம் இரண்டையும் புத்துணர்ச்சியுட்டும் நல்ல பாகம் நடிக்கின்றீர்கள். நிமித்தம் நீங்கள் என்றால் உருவாக்குபவர் பாபா அல்லவரி

மோகினி சகோதரி: உடல் சரியாக உள்ளது, சென்று கொண்டேயிருங்கள். ஏன்னென்றால் பாதி நடந்து விட்டது. கொஞ்ச காலம் எடுக்கும் ஆனால் பாபாவின் பார்வை உள்ளது. (உங்களுடைய வரதானம்) வரதாதா பாபாவே உள்ளார்- வரதானம். நல்லது, அனைவரும் கலந்து சென்று கொண்டுள்ளீர்கள் என்பதால் பாப்தாதாவுக்கு உங்கள் ஒவ்வொருவரின் மீதும் திருப்தி எங்கும் எப்படியும் நடத்திக் கொண்டுள்ளீர்கள். நல்லது!

நிர்வேயர் சகோதருடன்: பாப்தாதா குஷியாக உள்ளார். பாபா அனைத்து குழந்தைகளுடனும் உள்ளார். உதவியும் உள்ளது.

பிர்ஜ்மோகன் சகோதரருடன்: நன்றாக செய்தீர்கள், தில்லியின் பெயரை வளர்த்தீர்கள். நன்றாக செய்தீர்கள் நிமித்தமானவர்கள் யாரயினும் அனைவருடன், அனைவரின் ஊக்கம் ஒன்றாகியதால் பேரொலி ஏற்பட்டு விட்டது. மேலும் யாருக்கும் முடியாது என்ற சப்தம் எழவில்லை. (சாந்தி சகோதரியிடம்) சரீரத்தை நடத்த நன்றாக வருகின்றதா? சமயத்தில் காரியத்தை செய்தாய், மிகவும் நன்றாக செய்தீர்கள் ஆனால் உதவியும் யாராவது கொடுப்பார்கள். பாபாவின் உதவி என்பது உள்ளது ஆனாலும் சமயத்தில் எடுக்க வேண்டும். நன்றாக செய்தீர்கள். அனைவருக்குள்ளும் இப்பொழுது ஊக்கம் வந்திருக்கும். தில்லியைச் சேர்ந்தவர்கள் இணைந்து செய்வீர்கள்.

அதிசயம் செய்தே ஆக வேண்டும். தைரியம் வைத்தீர்கள் தானே தைரியத்தால் அனைவரின் மற்றும் பாபாவின் உதவியும் உள்ளது. அனைவரும் நன்றாக செய்தீர்கள், தனது தனது இடத்தில் நன்றாக செய்தீர்கள். ஆகையால் தில்லிக்கு வாழ்த்துக்கள்.

பரதாதியிடம்: பிரம்மாபாபாவை பார்க்க வேண்டும் என்றால் இவரிடம் பாருங்கள். நல்லது. மிகவும் நல்ல தைரியம் மற்றும் ஊக்கம் உற்சாகத்தில் இருக்கின்றீர்கள் ஆகையால் வியாதியானது தென்படவில்லை. (ருக்மணி சகோதரியிடம்) நன்றாக பார்த்துக் கொள்கிறாய். தாதிகளை பாதுகாத்துக் கொள்பவர்களுக்கும் கூட வாழ்த்துக்கள்.

**வெளிநாட்டு பெரிய முக்கிய சகோதரிகளுடன்:** (பாப்தாதாவுக்கு வாழ்த்துக்கள்) உங்களுக்கும் உரித்தாகுக. நீங்கள் இல்லை என்றால் இது எப்படி முன்னேறும். இப்பொழுது வி.ஐ.பிக்களை அழைத்துவாருங்கள். ஆரம்பத்தில் நீங்கள் வி.ஐ.பிக்களை அழைத்து வந்தீர்கள். இப்பொழுது அங்கு சேவை செய்து அவர்களை தயார் செய்யுங்கள் ஏனென்றால் இன்றைய நாளில் மக்களுக்கு செய்தித்தாளில் செய்தி நன்றாக கிடைக்கின்றது. நம் எதிரில் கொஞ்சம்தான் வருகின்றார்கள் ஆனால் செய்தித்தாள் மூலம் அநேக வீடுகளில் செய்தி சென்று அடைந்து விடுகின்றது. வி.ஐ.பிகளின் செய்திகளை பேப்பரில் கண்டிப்பாக போடுவார்கள். (வெளிநாட்டில் 40வது ஆண்டு விழா கொண்டாடினீர்கள்) அனைவரும் இணைந்து செய்தால் மக்களின் மனதில், வர்கள் ஒரு சதாரணமான இயக்கம் அல்ல என்று தோன்றும். வெளிநாடுகளில் ஆங்காங்கே முஸ்லீம் மாணவர்கள் வருகின்றார்கள் அவர்களின் குரலை கொஞ்சம் அதிகப்படுத்துங்கள். முஸ்லீம்களும் வருகின்றார்கள் என்று அவர்களுக்கு தெரிய வர வேண்டும். சேவை நிலையம் இருந்தாலும் மறைவாக உள்ளது. இப்பொழுது பௌத்தர்களுக்கு சேவை ஏற்படவில்லை. பௌத்தர்களின் எந்த உதாரணங்களும் இல்லை. அதுவும் இருக்க வேண்டும். (ஸ்ரீலங்கா, சைனாவிலும் உள்ளது) இப்பொழுது மேடையில் வரவில்லை. (வாஜிகா நினைவு கூர்ந்தார்கள்) வாஜிகாவிற்கு மிகவும் மிகவும் அன்பு நினைவுகளை கொடுங்கள்.

**ச-ர்.ரமேஷ் உடன்:** (காலிற்கான அறுவைசிச்சை நன்றாக நடந்தேறியது.) தாங்கள் நன்றாக. இருக்கின்றீர்கள் தானே! முக்கிய நிமித்தமானவர்கள் ஆரோக்கியமாக இருந்தால் அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். நேரத்திற்கு முன்னே செய்து விட்டார், நன்றாக செய்தாய் மேலும் அனைவரின் சுபபாவனை அதிகமாக உள்ளது. ஒவ்வொரு நிமித்தமானவர்களின் ஆசீர்வாதம் உங்களுக்கு அதிகமாக உள்ளது. பாம்பேயிலும் இப்படிப்பட்ட சேவை உள்ளது. அதற்கு தங்களின் சமிக்ஞையை கொடுங்கள். ஆமாம் நடந்தேறிவிடும். இது என்ன பெரிய விசயம். இப்பொழுது ஒரு உதாரணம்(தில்லி) நடந்து விட்டது ஆதலால் அனைவரும் பிரேரணை எடுத்துக் கொள்வார்கள். செய்வார்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 15.11.2011 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இப்பொழுது விசயங்களைப் பார்க்காமல் தீவிர முயற்சி செய்து பிரம்மாபாபாவிற்கு சமமாக நிறைவாக (சம்பன்னமாக) மற்றும் சம்பூர்ணமாக தடைகளற்றவராக (நிர்விக்னமாகவும்) மற்றும் எவரெடியாகவும் இருந்து 108-மணி மாலையை தயார் செய்யுங்கள்!

இன்று சர்வ சக்திவான் பாபா தனது மாஸ்டர் சர்வ சக்திகள் நிறைந்த குழந்தைகளுக்கு சர்வ சக்திகளின் பொக்கிஷங்களை வழங்க வந்துள்ளார். சர்வ சக்திகளின் பொக்கிஷங்கள் எவ்வளவு சுலபமாகக் கிடைத்துள்ளது. ஒரு நொடியில் 'மேரா பாபா' என்று தெரிந்து கொண்டீர்கள், பாபாவும் என் குழந்தைகளே (மேரே பச்சே)! என்றார். உடனேயே பொக்கிஷங்களுக்கு எஜமானனாக மாறி விட்டீர்கள். எனவே ஒவ்வொரு குழந்தைகளிடமும் அனைத்து பொக்கிஷங்களும் எப்பொழுதுமே இருக்கிறது அல்லவா! இது பாபாவுடைய பொக்கிஷம், எனது பொக்கிஷம் என்கின்ற போதை உள்ளதா? பாபா ஒவ்வொரு குழந்தைகளுக்கும் அனைத்து பொக்கிஷங்களையும் கொடுத்துள்ளார். ஒன்று கூட குறைவு இல்லை ஆனால் அந்த அனைத்து பொக்கிஷமும் ஒவ்வொருவரிடமும் சதா உள்ளதா? அல்லது ஏதேனும் சில கஜானா மட்டும் தான் உள்ளதா என்பதை சோதனை செய்யுங்கள். சில கஜானாக்கள் குறைவாக உள்ளதா? பாப்தாதா கொடுத்து விட்டார் ஆனால் ஒவ்வொருவரிடமும் அனைத்து பொக்கிஷங்களும் எப்பொழுதுமே உள்ளதா? மேலும் அந்த அனைத்து பொக்கிஷங்களும் தக்க சமயத்தில் செயலில் வருகிறதா? மாலிக்காக (எஜமாள்) இருந்து

கட்டளை இட்டவுடன் தக்க சமயத்தில் அந்த பொக்கிஷம் அனுபவத்தில் வருகிறதா? பாப்தாதா நாலாபுறத்திலும் இருக்கின்ற குழந்தைகளின் சேவைக்கான உற்சாகத்தையும் பார்த்தார்! அதைப்பற்றிய செய்திகளையும் கேட்டார். நாலாபுறங்களிலும் மிகுந்த ஊக்கம் உற்சாகத்துடன் 75ஆம் பிறந்தநாள் ஆண்டை கொண்டாடிக் கொண்டிருக்கின்றீர்கள். இப்பொழுது மாற்றம் வந்தே விட்டது என்று சவாலும் செய்கின்றீர்கள். மிக நன்றாகவே சவாலும் விடுகின்றீர்கள். பாப்தாதா குழந்தைகளின் ஊக்கம், உற்சாகத்தைப் பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். பாடலும் என்ன பாடுகின்றார். ஆஹா என் குழந்தைகளே ஆஹா! அது மட்டும் அல்லாமல் பாப்தாதா இதையும் பார்க்கின்றார். மிக நன்றாக சவால் விடுகின்றீர்கள். ஊக்கம் உற்சாகத்துடன், ஆனால் அத்துடன் மட்டுமல்லாமல் குழந்தைகளிடம் உள்ள அனைத்து தாரணைகளின் வெற்றி ரூபத்தையும் பார்க்கின்றார். நீங்களும் கூட தன்னுடைய முழுமை மற்றும் வெற்றியின் சொரூபத்தை தெரிந்திருக்கின்றீர்கள். ஏனென்றால் நிமித்தமாக இருக்கின்ற குழந்தைகள் அனைவருமே எப்பொழுதும் சம்பன்னமாகவும், வெற்றி மூர்த்தியாகவும் ஆகி விட்டீர்களா அல்லது இனிதான் ஆக வேண்டுமா? ஏனென்றால் சுகமயமான உலகத்திற்கு ஆதார சொரூபம் குழந்தைகள் நீங்கள் தான் எனவே பாப்தாதா அனைத்து குழந்தைகளின் ரிசல்ட்டையும் பார்க்கின்றார். ஆதார மூர்த்திகளான நீங்கள் வெகு சில குழந்தைகள் மட்டுமல்ல அனைத்து குழந்தைகளும் சவால் விடுகின்றீர்கள் நாங்கள் சுகமயமான உலகத்தைப் படைப்பதில் நிமித்தமானவர்கள்.

பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் கேட்கின்றார் சுகமயமான உலகைக் கொண்டு வருவதில் நிமித்தமான குழந்தைகள் நீங்கள்! சம்பூர்ண மற்றும் சம்பன்னமாக ஆதார மூர்த்தி களாக ஆகி விட்டீர்களா? பாப்தாதா குழந்தைகள் மீது வைத்துள்ள ஆசை என்னவென்றால் ஒவ்வொரு குழந்தையும் வெற்றி மூர்த்தி ஆக வேண்டும். ஏனென்றால் நீங்களே பாப்தாதாவுடன் சேர்ந்து சங்கல்பம் வைத்துள்ளீர்கள். மேலும் மிகுந்த குஷியுடன் சவால் செய்துள்ளீர்கள். மாற்றம் வந்தே விட்டது. இப்பொழுது தன்னையே கேட்டுப் பாருங்கள். உலகை மாற்றுவதில் நிமித்தமான குழந்தை என்னிடம் சம்பன்ன சுய மாற்றம், சம்பூர்ணம் எவ்வளவு தூரம் வந்துள்ளது? ஏனென்றால்

இராஜ்யம் ஸ்தாபனை ஆக வேண்டும் என்றால் இராஜ்யத்தை ஸ்தாபனை செய்வதற்கு முன்னதாக நிமித்தமான ஆத்மாக்களிடம் மாற்றம் வர வேண்டும். அதற்குப் பிறகுதான் நிமித்தமாக இருக்க முடியும். பாப்தாதா பார்க்கின்றார். இப்பொழுது சம்பூர்ணம் ஆவதில் இன்னும் சிறிது இடைவெளி உள்ளது. சேவைகள் செய்கின்றீர்கள் ஆனால் சேவையில் உங்களுக்கு துணையாக எத்தனை பேர் இருக்கின்றார்கள். கணக்கு பாருங்கள். கேட்பவர்கள் எத்தனை பேர், உங்களுக்கு அருகாமையில் வருபவர்கள் எத்தனை பேர். பாப்தாதா குழந்தைகளின் தைரியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார் ஆனால் இப்பொழுது சேவைக்கான ரிசல்ட்டில் மேலும் தீவிரத்தன்மை கொண்டு வர வேண்டும். ஒவ்வொரு சமயமும் ஆத்மாக்களை வெகு அருகே சம்பந்தத்தில் கொண்டு வர வேண்டும். மிகவும் மகிழ்ச்சி அடைகின்றார்கள்; எல்லோருமே பிரம்மாகுமாரிகள் செய்யும் செயலைத் தெரிந்து கொண்டு அருகாமையில் வந்துள்ளார்கள் ஆனால் பாப்தாதா முன்பு கூட சொல்லி யிருக்கின்றார். ஆஸ்தி எல்லோருக்கும் பாபா மூலமாக கிடைக்க வேண்டும். எனவே பாபாவையும் நேரத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். சுயமரியாதையையும் தெரிந்து கொள்ள வேண்டும் அப்பொழுதுதான் ஆஸ்திக்கு அதிகாரி ஆக முடியும். இப்பொழுது தந்தை வந்துள்ளார், ஆஸ்தி வழங்கிக் கொண்டிருக்கின்றார். இது எல்லோர் புத்தியிலும் வர வேண்டும். அப்பொழுது தான் ஆஸ்தி பெற்று இராஜ்யத்தின் அதிகாரி ஆவார்கள்.

நீங்கள் பாடுகின்ற இந்த பாடல் 'நமது பாபா வந்து விட்டார்! இந்த சப்தம் நாலாபுறமும் பரவ வேண்டும். இப்பொழுது பாப்தாதா இந்த ரிசல்ட்டை தான் பார்க்க விரும்புகின்றார். மாற்றம் வந்துள்ளது. சேவைக்கான பலனும் கிடைத்துள்ளது, முயற்சிக்கான பலனும் கிடைத்துள்ளது ஆனால் இப்பொழுது பாபா வரையிலும் சென்று சேரவில்லை. இதற்காக திட்டம் தீட்டுங்கள். பாபாவை எப்படி பிரத்யட்சம் செய்வது? இராஜாங்கத்தில் இராஜ்யம் செய்பவர்களும் தடைகளற்றவர் ஆகி விட்டார்களா? இப்பொழுது மாற்றத்திற்கான பட்டனை டிராமா அழுத்தி விடலாமா? எவரெடியா? எவரெடியா? பட்டனை அழுத்திவிடலாமா? என்ன நினைக்கிறீர்கள்? பட்டனை அழுத்திவிடலாமா? எவரெடியா? ஏனென்றால் எல்லோரும் தயாராக வேண்டும். இராஜ்ய அதிகாரியும், ராயல் குடும்பத்தைச் சார்ந்தவர்களும், ராயல் பிரஜைகளும், சாதாரண

பிரஜைகளாவது ஒன்றும் பெரிய விஷயமல்ல இன்று பாப்தாதா குழந்தைகளிடம் இந்த ரிசல்ட்டைத்தான் கேட்கின்றார், நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? பாப்தாதாவிற்கு பட்டனை அழுத்துவதில் நேரம் அதிகம் ஆகாது. முதல் வரிசையில் அமர்ந்துள்ளவர்கள் என்ன நினைக்கின்றீர்கள். சக்திகள் என்ன நினைக்கின்றீர்கள். பாண்டவர்கள் என்ன நினைக்கின்றீர்கள். பதில் கொடுங்கள். ஆம் பாண்டவர்கள் பதில் கொடுங்கள். பட்டனை அமுக்கலாமா? எவரெடியா? (பாபா நீங்களே மாலிக் உங்களுக்கு எண்ணம் வந்து விட்டது பட்டனை அமுக்கலாம் என்று, அமுக்கி விடுங்கள்) பாப்தாதா குழந்தைகளை ஏன் கேட்க வேண்டும். ஏனென்றால் பாபா இராஜ்யத்தில் வருவதில்லை. பிரம்மாபாபா வர வேண்டும். (இங்கே பாப்தாதாவை சந்தித்துக் கொண்டே இருக்கலாமா? இது மிக நன்றாக இருக்கிறதா) இதுவும் நல்ல விஷயம் தான் ஆனால் பாப்சமானாக மாறி பாபாவுடன் வாழ்க்கையை அனுபவம் செய்ய வேண்டும். அதுவும் தேவையல்லவா? அது இருக்கிறதா? தயாரா? நீங்கள் மட்டுமல்ல. இராஜாங்கமே. நீங்கள் யார் மீது இராஜ்யம் செய்கின்றீர்கள். இராஜாங்கம் தேவையல்லவா! துணையாகவும் இருக்கின்றார்களா, எல்லோரும் தயாரா? முற்றிலும் தயார் ஆகி விட்டீர்களா? அம்பன்னம் அடைவதில் தயார் ஆகியிருக்கின்றீர்களா? நல்லது. எல்லோருமே யோசிக்கிறீர்கள் பரவாயில்லை.

பாப்தாதா தெரிந்துள்ளார் இப்போது கூட ரெடிதான் ஆனால் எவரெடி ஆக வேண்டும். பாப்தாதா இரண்டு விஷயங்களைச் சொல்லியிருக்கின்றார். ஒரு நொடியில் முற்றுப்புள்ளி வைக்கின்ற குழந்தைகள் வேண்டும். வீண் எண்ணம் என்ற பெயர் அடையாளமும் இருக்கக் கூடாது. நீங்கள் யாருக்கெல்லாம் செய்தி கொடுப்பீர்களோ அவர்கள் எல்லோரும் கேட்டு மாற வேண்டும் என்ற ஊக்கம் உற்சாகத்தில் வர வேண்டும். இப்பொழுது பாப்தாதா இந்த ரிசல்ட்டைத்தான் எதிர் பார்க்கின்றார். இதற்காக பாப்தாதா அறிவுரையும் மேலும் வழியையும் காண்பிக்கின்றார். சேவை செய்கின்றீர்கள்; ஆனால் யாருக்கெல்லாம் சேவை செய்கிறீர்களோ ஒரே சமயத்தில் மூன்று விதமான முறையில் சேவை செய்யுங்கள். அந்த மூன்று ரூபம் நாலேட்ஜ்ஃபுல், பவர்ஃபுல், லவ்ஃபுல், இந்த மூன்று ரூபத்திலும் சேவை செய்யுங்கள். மேலும் மூன்று விதமாக சேவை

செய்யுங்கள், அந்த மூன்று விதம் என்பது மனம், சொல், செயலால்! ஒரே நேரத்தில், வார்த்தைகளால் மட்டும் சேவை செய்வது அல்லாமல் மனதின் சேவையும் உடனிருக்க வேண்டும். மனம் சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும். எனவே இப்போது தேவைப்படுவது, ஒரே நேரத்தில் மனம் சக்திவாய்ந்ததாக இருக்க வேண்டும். அதன் மூலமாக ஆத்மாக்களிடம் மனதில் பரிவர்த்தனை (மாற்றம்) ஏற்பட வேண்டும். வார்த்தை மூலமாக ஞானம் முற்றிலுமே தெளிவாக வேண்டும். மேலும் கர்மத்தின் மூலமாக செய்யும் சேவையால் அனைத்து ஆத்மாக்களுக்கும், உண்மையில் நாம் நமது பரிவாரத்தில் வந்து சேர்ந்து விட்டோம் என்று அனுபவம் ஏற்பட வேண்டும். பரிவாரம் என்கின்ற உணர்வு வரும்பொழுதுதான் மிக நெருக்கத்தில் துணையாக இருப்பார்கள். எனவே பாப்தாதா இப்பொழுது ஒரே சமயத்தில் மூன்று விதமான சேவையை ஒன்றாகப் பார்க்க விரும்புகின்றார். முடியுமா? முடியுமா? கை உயர்த்துங்கள் முடியுமா? இப்பொழுது பாப்தாதா ரிசல்ட் பார்த்துள்ளார். வார்த்தைகள் மூலமாக ஞானம் நிறைந்தவர்களாகி உள்ளீர்கள் ஆனால் அதனைக் கேட்பவர்கள் ஈஸ்வரிய குடும்பத்தில் உதவியாளர்களாக மாற வேண்டும். இதற்காக இப்பொழுது நேரம் அதிகம் பிடிக்கின்றது. பாப்தாதா பார்க்கின்றார். சமயத்திற்கான சவால் விடுவதைப் போலவே சேவையிலும் அப்படிப் பட்ட ஒரு சேவை செய்யுங்கள். ஒரே சமயத்தில் மூன்று விதமான சேவை மூலமாக பிராப்திகளை அனுபவம் செய்ய வேண்டும்.

அனைவரும் சந்திப்பதற்காக ஊக்கம், உற்சாகத்துடன் வந்து சேர்ந்து விட்டீர்கள். பாப்தாதா குழந்தைகளின் ஊக்கத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். இப்பொழுது கவனம். வையுங்கள். சம்பூர்ணம் மற்றும் சம்பன்னம் ஆவதில், ஏனென்றால், குறைந்த பட்சம் 108 மணி மாலையாவது தயார் ஆக வேண்டும். முடியுமா? 108 மணி மாலை தயாராகி விட்டதா? தயாரா? ஏனென்றால் இராஜாங்கத்தில் இராஜ்ய அதிகாரிகள் அவர்கள் தான் ஆவார்கள். இப்பொழுது 108 ரத்தினங்களின் பட்டியல் எடுக்க முடியுமா? எடுக்க முடியுமா? எடுக்க முடியுமா? (ஹாஞ்ஜி) முடியும் என்று சொல்லவில்லையே 108 இராஜ்ய அதிகாரி பிறகு 16,000. 108 இராஜ்ய அதிகாரியுடன் துணையாக இருப்பவர்கள். பிறகு வரிசைக்கிரமமாக இருப்பவர்கள். எனவே இப்பொழுது பாப்தாதா சமயத்திற்கு ஏற்ப இறுதி நேரத்தை அருகே கொண்டு வரக் கூடிய

குழந்தைகளிடம் இதையே எதிர்பார்க்கின்றார். 108 மாலை எவரெடியா? பாப்சமான் ஆகி விட்டீர்களா? அவ்வளவு பேர் இருக்கிறார்களா? முதல் வரிசையில் உள்ளவர்கள் 108 நம்பரில் வர முடியுமா? ஏதாவது சொல்லுங்கள் ஆம் அல்லது இல்லை. சாகாரத்தில் பிரம்மாபாபா இருந்தபொழுது பல முறை ஒத்திகை செய்தார் ஆனால் முடிவுக்கு வர முடியவில்லை ஆனால் இப்பொழுதோ 75 ஆண்டுகள் பூர்த்தி அடைந்து விட்டது. இந்த 75-வது ஆண்டில் விழாவை ஜூப்லியைக் கொண்டாடுவதில் ஏதேனும் ஒரு புதுமையை செய்து காண்பிக்க வேண்டுமல்லவா? எனவே புதுமையாக ஒன்றை செய்து காண்பியுங்கள். இங்குள்ள அனைவரும் தன்னை 108 மணி மாலையில் ஒரு மணியாக மாற்றுங்கள். எண்ணிக்கையில் வர வேண்டும். 108 மணி மாலை வந்து விட்டதா? ஏனென்றால் முதலில் இராஜ்ய அதிகாரிகள் உருவானால் தான் பிறகு இராஜ்யத்தில் தொடர்பில் வருபவர்கள் உருவாக வேண்டும். அவர்களுக்கும் இடம் வேண்டுமல்லவா? எனவே பாப்தாதா சொல்வதின் சாரம் என்ன வென்றால், இப்பொழுது ஒவ்வொருவரும் தனது முயற்சியை தீவிரமாக்கி திட சங்கல்பம் செய்ய வேண்டும். நான் பாபாவுக்கு நிகராக மாறியே தீர வேண்டும். ஏனென்றால் பாப்தாதா சொல்லிவிட்டார் எதிர்பாராத விதமாக மாற்றம் ஏற்படும். அதற்கு முன்னதாகவே குறைந்த பட்சம் சேவையில் நிமித்தமாக இருக்கின்றவர்கள் மண்டலத்திற்கே தலைமை நிர்வாகியாக இருப்பவர்கள் மற்றும் சென்டருக்கு நிமித்தமாக (இன்சார்ஜ்) இருப்பவர்கள், மேலும் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற பாண்டவர்கள், அவர்கள் சென்டருக்கு நிர்வாகத் தலைவர் அல்ல; ஆனால் ஏதேனும் ஒரு விசேஷமான செயலில் நிமித்தமாக இருப்பார்கள்; அவர்களை விசேஷமான பார்வையில் பார்ப்பார்கள். அப்படிப்பட்ட பாண்டவர்களும் முயற்சியை தீவிரமாக்கி சுயமாற்றத்தின் பொலிவுடன் வெளியில் மேடையில் வர வேண்டும்; இதற்காக எவரெடி ஆகி விட்டீர்களா? இந்த காரியத்தைச் செய்தே ஆக வேண்டும். தன்னை பாப்சமானாக மாற்றியே ஆக வேண்டும். பிரம்மாபாபாவைப் பின்பற்றியே ஆக வேண்டும் என்று யாரெல்லாம் நினைக்கிறீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். எல்லோரும் கை உயர்த்தி மகிழ்ச்சியை ஏற்படுத்திவிடுகிறீர்கள்; இதை மட்டும் நன்றாகச் செய்கிறீர்கள் ஆனால் அந்த கையை உயர்த்தும்பொழுதே திடமான

எண்ணமும் வையுங்கள். திடமான சக்திதான் மிகவும் சகயோகம் தருவது.

பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். கையை உயர்த்துவதில் எல்லோருமே உஷார்தான் ஆனால் உறுதித்தன்மையை நடைமுறை வாழ்க்கையில் கொண்டு வாருங்கள். குழந்தைகள் உஷார் தானே இதமாகத்தான் செய்கிறீர்கள் ஆனாலும் போகப் போக விதவிதமான ரூபங்களில் மாறி விடுகிறது. இது ஆயிற்று அது ஆயிற்று இப்படி ஆகவில்லையென்றால் அப்படி. ஆகியிருக்காது. இப்படிப்பட்ட சாக்கு போக்கில் மிகவும் உஷார்தான். இப்பொழுது பாப்தாதா என்ன எதிர் பார்க்கின்றார். இப்பொழுது ஒவ்வொருவரும் பாப்சமான் ஆக வேண்டும். மனம், சொல், தொடர்பில் உங்களை யார் பார்த்தாலும் யார் உங்களைச் சந்திக்க வந்தாலும் இதையே சொல்ல வேண்டும். ஆஹா! என்ன மாற்றம். பாப்தாதாவும் நிமித்தமாக இருக்கின்ற குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகின்றார். பாப்தாதாவிற்குப் பிடித்திருக்கிறது; சந்திப்பிலும் பாபா மகிழ்ச்சி அடைகிறார். இன்று என்ன சங்கல்பம் செய்தீர்கள்? ஆகியே தீர வேண்டும். பிரம்மாபாபாவுக்கு நிகராக மாறியே தீர வேண்டும். மாறியே ஆக வேண்டும். கண்டிப்பாக ஆக வேண்டும். விஷயம் எது வந்தாலும் சரி! அந்த விசயத்திற்குப் பதிலாக பாபாவை முன்னால் வையுங்கள். தூரத்தில் அமர்ந்திருக்கும் குழந்தைகள், அருகே அமர்ந்திருக்கும் மற்றும் எதிரில் அமர்ந்திருக்கும் குழந்தைகள் எல்லோரையும் பார்த்து பாபா மகிழ்ச்சி அடைகிறார். குழந்தைகள் எல்லோரும் நன்றாகவே திட்டம் தீட்டுகின்றீர்கள், அமிர்தவேளையிலும் இனிமையான விஷயங்களையும் நன்றாகப் பேசுகின்றீர்கள். பெரும்பாலான குழந்தைகள் பேசுகின்ற விசயங்களைக் கேட்டு பாப்தாதாவே சரண்டர் ஆகி விடுகின்றார் ஆனால் ஒன்று தெரியுமா? பிறகு என்ன ஆகின்றது என்று. கர்மஷேத்திரத்தில் வரும்பொழுது, சேவையில், தொடர்பில் வரும்பொழுது எதிரில் வருகின்ற விசயங்களைப் பார்க்கும் பொழுது மாற்றங்களும் சிறிது ஏற்பட்டுவிடுகின்றது. அமிர்தவேளையில் இருந்த ஊக்கம், உற்சாகம் சேவையில் வரும்பொழுது, தொடர்பில் வரும்பொழுது சற்று மாற்றம் அடைந்து விடுகின்றது.

இப்பொழுது பாப்தாதா ஒரு வேலை தருகிறார். அதை செய்யத் தயாரா? தலை அசையுங்கள் கை உயர்த்துங்கள் பாப்தாதாவிற்கு ஒரு சங்கல்பம்,

ஒரு மாதத்திற்கு தன்னை திட சங்கல்பத்தின் ஆதாரத்தில் பாப்சமான் ஸ்திதியில் நிலை பெறச் செய்ய முடியுமா? ஒரு மாதம் செய்ய முடியுமா? அதிகமாக உள்ளதா? ஒரு மாதம் திட சங்கல்பம் வைக்க முடியும். திடத்தன்மையை தன் துணையாக ஆக்கிக் கொள்ள முடியும். பாப்தாதாவை எப்பொழுதுமே எதிரில் வைக்க வேண்டும். பிரம்மாபாபாவை கண்களுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும். பிரம்மாபாபா என்ன செய்தாரோ மனம், சொல், செயலால் அதையே செய்ய வேண்டும். சிலர் பிரம்மாபாபாவைப் பார்த்திருக்கலாம், பார்க்காமலும் இருக்கலாம் ஆனால் ஞானம் எல்லோருக்கும் உள்ளது. எந்த செயலும் செய்வதற்கு முன்பு இதனை சோதனை செய்து பாருங்கள் பிரம்மாபாபாவுக்கு இப்படி சங்கல்பம் இருந்ததா, சொல், செயல் இருந்ததா, சம்பந்தம் இப்படி இருந்ததா, தொடர்பு இப்படி இருந்தா? முதலில் சிந்தியுங்கள்; பிறகு செயல்படுங்கள். முடியுமா? இதில் கை உயர்த்துங்கள் முடியுமா? கையை உயரமாக உயர்த்துங்கள். தாய்மார்கள் உயர்வாகக் கையை உயர்த்துங்கள். இங்கே நீங்கள் உடல் பயிற்சி செய்கிறீர்கள் தானே கையை மிக உயரமாக உயர்த்துங்கள். முன் வரிசையில் உள்ளவர்கள் கை உயர்த்துவீர்கள் அல்லவா? மதுபன் சார்ந்த அனைவரும் இதில் நம்பர்-1 வர வேண்டும். மதுபனைச் சார்ந்தவர்கள் முன்னால் முன்னால் அமர்ந்துக் கொள்கின்றீர்கள் அல்லவா? மதுவனம் என்றால் சாந்திவன் மட்டும் அல்ல அனைவருமே ஒரு மாதம் தடைகள் அற்றவராக இருக்க வேண்டும். ஒவ்வொரு சென்டரும் தடைகளற்றதாக இருக்க வேண்டும். குஜராத்தைச் சார்ந்த ஆசிரியைகள் (சகோதரிகள்) கை உயர்த்துங்கள். குஜராத்தின் ஆசிரியைகள் முடியும் என நினைக்கின்றீர்களா? இதில் கையை உயரமாக உயர்த்துங்கள். நன்கு கையை உயரமாக உயர்த்துங்கள்; அப்படி இப்படி செய்ய வேண்டாம். முடியுமா? நல்லது

சாந்திவனத்தில் இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். வெகு சிலரே. அமர்ந்திருப்பவர்கள் அனைவரும், பின்னாலும் அமர்ந்திருக்கின்றீர்கள். மதுபன்னில் உள்ள 4-5 இடத்தை சார்ந்தவர்களும் செய்வீர்கள் தானே! மதுபனில் இருப்பவர்கள் இரண்டு கையையும் உயர்த்துங்கள்.

குஜராத்தைச் சார்ந்தவர்கள் மாணவர்களும், நிமித்தமான சகோதரர்களும், நிமித்தமான ஆசிரியர்களும் அனைவரும் கை

உயர்த்துங்கள் செய்வீர்களா? நன்கு கையை உயர்த்துங்கள். பின்னால் இருப்பவர்கள் கைகள் தெரியவில்லை. நல்லது குஜராத்தைச் சார்ந்தவர்கள் எழுந்து நில்லுங்கள். குஜராத்தைச் சார்ந்தவர்கள் அதிகம் வந்துள்ளார்கள். ஹாலில் பாதி அளவிற்கு குஜராத்தைச் சார்ந்தவர்களே அமர்ந்துள்ளார்கள் (குஜராத் 15000 மீதம் உள்ளவர்கள் 3000) குஜராத்தைச் சார்ந்தவர்சுளுக்கு பாப்தாதா மற்றும் பரிவாரத்தின் சார்டாக வாழ்த்துக்களை வழங்குகிறார் வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள் இப்பொழுது எப்படி கை தட்டினீர்களோ அதைப் போலவே ஒரு மாதத்திற்குப் பிறகு குஜராத்தில் ரிசல்ட் நம்பர்-1னில் வர வேண்டும். நல்லது கூட்டம் நன்றாக உள்ளது. பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். குழந்தைகளுக்கு பாபாவின் மீதும் மதுபனின் மீதும் உளமாற அன்பு உள்ளது. மிக நல்லது! இப்பொழுது குஜராத் விந்தைகள் செய்து காண்பிக்க வேண்டும். இந்த ஒரு மாதம் ரிசல்ட்டில் நம்பர்-1 ஆக வந்து காண்பிக்க வேண்டும். பொதுவாக எல்லோருமே நம்பர்-1 வந்தாக வேண்டும். மதுபனைச் சார்ந்தவர்கள் நம்பர்-1-ல் வருவீர்கள் அல்லவா? கை உயர்த்துங்கள். எது நடந்தாலும் சரி? எவ்வனவு இன்னல்கள் ஏற்பட்டாலும் சரி? இன்னல்கள் வரத்தான் செய்யும் மாயை கேட்டுக் கொண்டிருக்கின்றது அல்லவா? எனவே மாயை தன் ரூபத்தை காண்பிக்கும் ஆனால் மாயாவின் வேலை வருவது உங்களின் வேலை வெற்றி அடைவது. பிறகு இப்படி சொல்லக் கூடாது. இப்படி ஆகி விட்டது அப்படி ஆகி விட்டது இப்படி எல்லாம் செய்யக் கூடாது. வரும். அப்படித்தாள் நடக்கும். பாப்தாதா முன்பே சொல்லிவிட்டார். மாயாவும் கேட்டு கொண்டிருக்கின்றது. அது மிகவும் புத்திசாலி ஆனால் மாயை எப்படித்தான் புத்திசாலி யாக இருந்தாலும் நீங்கள் யார்? சர்வசக்திவானோடு துணையாக இருப்பவர்கள் தானே!. உங்கள் முன்பாக மாயை என்ன செய்ய முடியும்? பாப்தாதா பார்க்கின்றார். டிவியில் பார்த்துக் கொண்டிருக்கின்றார் எல்லோருமே நம்பர்-1-ல் வர வேண்டும். யாருமே நம்பர்-2 ஆக வரக்கூடாது. நல்லது.

**சேவைக்கான முறை குஜராத்:** குஜராத்தைச் சார்ந்தவர்கள் எவ்வளவு அருகாமையிலி &ருக்கின்றீர்கள். எல்லோரைவிட அருகே இருப்பவர்கள் யார்? குஜராத் தானே எல்லோரைக் காட்டிலும் வெகு அருகே உள்ளது. எனவே முயற்சிக்காள லட்சியத்தையும் இதையே வைத்துக் கொள்ளுங்கள். நாம் இராஜ்ய அதிகாரியாக பரிவாரத்திற்கு

வெகு அருகே வந்தே ஆக வேண்டும். என்ன முயற்சி செய்ய வேண்டும். பாபாவைப் பின்பற்ற வேண்டும். திட சங்கல்பத்தை ஒருபொழுதும் மறக்கக்கூடாது. எங்கே திட சங்கல்பம் இருக்குமோ அங்கு வெற்றி நிச்சயம் பாப்தாதாவிற்கும் குஜராத்தை மிகவும் பிடித்திருக்கின்றது. அன்பும் உள்ளது. ஒரு விசேஷத்தன்மையின் காரணத்தால் பாப்தாதாவுக்கும் பிடித்துள்ளது. எப்பொழுது எந்த சமயத்தில் கூப்பிட்டாலும் உடனடியாக வந்து குஜராத்திலிருந்து வந்து ஆஜராகி விடுகின்றீர்கள். அருகே இருப்பதின் லாபத்தை அடைகின்றீர்கள். அதுபோலவே எப்பொழுதும் பாபாவைப் பின்பற்றுவதிலும் வெகு அருகே இருக்க வேண்டும். பாபா என்ன செய்தாரோ அதையே செய்ய வேண்டும். அவரையே பின்பற்றுங்கள். நல்லது

**நான்கு துறையைச் சார்ந்தவர்கள் வந்துள்ளார்கள்: (சமூக சேவை, பெண்கள் துறை, அலுவலக அதிகாரிகள் துறை மற்றும் இளைஞர் துறை):** எந்த வர்க்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுடைய ரிசல்ட் பாப்தாதாவிடம் வருகின்றது. பாப்தாதா பார்க்கின்றார். எப்பொழுது பல துறைகளுக்கான சேவை துறைவாரியாக தனித் தனியாக ஆரம்பமானதோ அப்பொழுதிவி ருந்தே நாலாபுறமும் சேவை விருத்தி அடைந்துள்ளது. ஏனென்றால் பாப்தாதா பார்க்கின்றார், ஒவ்வொரு துறையிலும் எப்போதுமே யோசிக்கின்றீர்கள், நமது துறையில் ஏதாவது புதுமையைக் கொண்டு வர வேண்டும். இதைப் பற்றி செய்தியும் எல்லோருக்குமே கிடைக்க வேண்டும். இப்படி பொறுப்பு இருக்கின்ற காரணத்தால் தனித் தனி துறையாக இருப்பதால் ஒவ்வொரு வருக்குமே சேவைக்கான வாய்ப்பு நன்றாக கிடைக்கின்றது. பாப்தாதா ஒவ்வொருவருடைய பெயர் தனித் தனியாக எடுக்கவில்லை ஆனால் அனைத்து துறையினருக்காகவும் சொல்கின்றார். சேவை நன்றாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நன்றாகச் செய்கின்றீர்கள். தனது பொறுப்பை உணர்ந்து செய்கின்றீர்கள் ஆனால் பாப்தாதா முன்பு கூட சொல்லியிருக்கின்றார்; ஒவ்வொரு துறையிலும் விசேஷமான ஆத்மாக்களும் இருக்கின்றார்கள். இது பாப்தாதாவிற்குத் தெரியும் அப்படிப்பட்ட முக்கியமான எல்லோரையும் ஒன்று சேர்த்து குழுவாக அமையுங்கள். ஒவ்வொரு மண்டலத்திலும் ஏதாவது விசேஷமான ஆத்மாக்கள் கிடைத்திருப்பார்கள். அதிலிருந்து தேர்ந்தெடுத்து ஒரு முறை ஒவ்வொரு துறையிலும் 10, 15, 20 என்று அனைத்து

துறையிலும் ஒன்று சேருங்கள். அவர்களுக்கான நிகழ்ச்சிகளை செய்யுங்கள். இங்கே அபுவில் செய்யுங்கள். அப்பொழுது சேவைக்கான ரிசல்ட் பார்வையில் தென்படும். அவர்களுக்கும் இங்குள்ள கூட்டத்தைப் பார்க்கும் பொழுது ஊக்கம் உற்சாகம் ஏற்படும். இந்த இந்த துறையிலிருந்து இவர்கள் வருகின்றார்கள் என்பதை ஒருவருக்கொவருவர் கேட்டு பார்க்கும் பொழுது ஊக்கம், உற்சாகம் வரும். அப்படிப்பட்ட நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யுங்கள். ஒவ்வொரு துறையிலும் 15-20 பேர் இருக்க வேண்டும் அவர்களுக்காக ஒரு நிகழ்ச்சி வையுங்கள். அவர்கள் எல்லோரையும் ஒன்று சேருங்கள். இது உங்களுக்கு சரியாகப்படுகின்றதா? ஏனென்றால் பாப்தாதா அவர்களை எல்லாம் இப்பொழுது அனுபவத்தின் ஆதாரத்தில் ஸ்பீக்கராக (மக்களுக்கு எடுத்துச் சொல்பவர்களாக) மாற்ற விரும்புகின்றார். நீங்கள் சொற்பொழிவு செய்யுங்கள் அதோடு மட்டுமல்லாமல் இப்படி அனுபவம் உள்ள ஆத்மாக்கள் அனுபவத்தை சொல்லும்பொழுது நல்ல ஒரு பிரபாவம் ஏற்படும். இப்பொழுது இப்படிப்பட்ட சேவை செய்யுங்கள். ஒவ்வொரு துறையிலும் நிமித்தமாக இருக்கின்ற ஆத்மாக்களுக்கு கிடைத்த லாபத்தைப் பற்றி புத்தகம் அச்சடித்துள்ளார்கள். யார் அப்படி அச்சடித்தீர்களோ கை அவர்கள் உயர்த்துங்கள். அவரவர் துறையில் உள்ள நல்ல நல்ல அனுபவிகள், அவர்களைப் பற்றிய புத்தகம் அச்சடிக்கப் பட்டுள்ளது. அதைச் செய்தவர்கள் கை உயர்த்துங்கள். யாருமே அச்சடிக்கவில்லையா? (இளைஞர் துறையிலும், கல்வி துறையிலும்) இவ்வாறே அனைத்து துறையிலும் அச்சடிக்க வேண்டும். ஏனென்றால், யாராவது வரும்பொழுது இப்படிப்பட்ட புத்தகங்கள் வைக்க வேண்டும். வேலையில்லாமல் இருக்கும்பொழுது படிக்க வேண்டும். ஒவ்வொரு துறையிலும் இப்படிப்பட்ட புத்தகம் படிக்கும்பொழுது அவர்களுக்கு நல்லதொரு பிரபாவம் ஏற்படும். சிலர் நினைக் கின்றார்கள்; வேலை செய்யும்பொழுது முக்கியமான பொறுப்பிலிருக்கும்பொழுது இதெல்லாம் செய்ய முடியாது. அப்படி நினைப்பவருக்கும் இவர்களே இப்படி செய்யும்பொழுது நாம் ஏன் செய்ய முடியாது? நாமும் இப்படி ஆக வேண்டுமென்ற ஊக்கம் உற்சாகம் வர வேண்டும். இது போன்ற புத்தகங்களை வெளியிட வேண்டும். அவரவர் சென்டரிலும் எல்லா இடங்களிலுமே வாசக சாலை (Library) போன்று அமைத்து அங்கே வைக்க வேண்டும். இந்த வேலை செய்யுங்கள். மற்றபடி பாப்தாதா சமூக சேவையில் நடத்தப்பட்ட மீட்டிங்கைப்

பற்றியும் கேள்விப்பட்டார். சந்தேஷி மூலமாக செய்தி வந்தது; பாப்தாதாவும் அதைக் கேட்டார். மேலும் இளைஞர் துறையினருக்கான செய்தியும் கேட்டார். நல்லது ஏதாவது ஒரு நிகழ்ச்சி ஒன்றன் பின் ஒன்றாக செய்து கொண்டே இருங்கள். இப்படி ஒவ்வொரு துறையிலும் செய்ய வேண்டும். இளைஞர் துறை, கல்வித் துறை இன்னும் மீதமுள்ள துறையும் செய்ய வேண்டும். மற்றவர்களும் செய்வீர்கள்; ஆனால் இவர்கள் அதிகமாக செய்கின்றார்கள். சமூக சேவை பற்றிய செய்தியை குழந்தை படித்துக் காண்பித்தார். சேவைக் கான திட்டம் நன்றாகவே சிந்தித்துள்ளீர்கள். நன்றாக உள்ளது. இப்படி செய்கின்ற துறைகளுக்கான சேவை பாப்தாதா விற்கும் பிடித்துள்ளது. எனவே செய்து கொண்டே இருங்கள். எந்த ஒரு துறையினரும் உங்களுக்கு புகார் செய்பவராக வைத்துக் கொள்ளாதீர்கள். எங்களுக்கு இதுவரையில் செய்தி கிடைக்கவில்லையே என்று சொல்லக்கூடாது. அப்படி எங்காவது இருக்கிறார்களா? நீங்கள் சிந்தித்துப் பாருங்கள் ஏதாவது துறை அப்படி விடுபட்டுள்ளதா? அப்படியிருந்தால் அங்கும் சென்று சேவை செய்ய வேண்டும். ஏனென்றால் இப்பொழுது எல்லாம் அவரவர்கள் வேலையில் அதிகமான பிரச்சனைகளிலேயே மூழ்கி விடுகின்றார்கள். எனவே எல்லோரையும் விழிக்கச் செய்ய வேண்டும். தந்தை வந்துள்ளார்; குழந்தைகளுக்குத் தெரிய வில்லையென்றால், புகார் செய்வார்கள் அல்லவா? எனவே செய்தியைக் கொடுத்து விடுங்கள். இதுவும் உங்களுடைய வேலை. புகார் வரக்கூடாது, உங்கள் வட்டாரத்தில் இப்படி கேள்விப் படவில்லையே என்று யாருமே சொல்லக்கூடாது. செய்தி கண்டிப்பாக எல்லோருக்கும் சென்று சேர வேண்டும். யாருமே புகார் செய்யக் கூடாது. உங்களுக்கு தெரியுமா? முதன் முதலில் குழந்தைகள் சேவைக்குச் சென்ற பொழுது பிரம்மா குமாரிகளின் வெண்ணிற ஆடையைப் பார்த்து எல்லோரும் கதவை சாத்திக் கொள்வார்கள். தூரத்தில் பார்க்கும்பொழுதே கதவை அடைத்து விடுவார்கள். வெண்ணிற சேவை இல்லத்தில் இருப்பவர்களுக்குப் பிடிக்காது. எனவே குழந்தைகள் சேவையை எப்படி ஆரம்பித்தார்கள் தெரியுமா? அவர்களுடைய தடால் பெட்டியில் போட்டு விட்டு வருவார்கள். ஏனென்றால் கண்டிப்பாக தபால் எடுக்க வருவார்கள். அப்படி எடுக்கும்போது செய்தி கிடைத்து விடும். முதன் முதலில் சேவை ஆரம்பிக்கும் பொழுது மிகவும் கடின உழைப்போடுதான் ஆரம்பிக்கப் பட்டது. இப்பொழுது நன்றாக மாறி விட்டது; மிகவும்

சுலபமாக ஆகி விட்டது. இப்பொழுது நினைக்கிறார்கள், பிரம்மா குமாரிகள் போல மிக நல்ல நிகழ்ச்சிகள் யாருமே செய்ய முடியாது என்று. இப்போது பெரும்பாலும் மாற்றம் வந்து விட்டது. நீங்கள்தானே அப்படிச் செய்துள்ளீர்கள். அனைத்து துறைகளிலும் ஆங்காங்கே செய்துள்ளீர்கள். எனவே பாப்தாதா அனைத்து துறையினருக்கும் பல பல பலமடங்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கினறார். இன்னும் விரைவாகச் செய்யுங்கள். அனைத்து துறையினருக்கும் மிக மிக வாழ்த்துக்கள்.

**மதுபனில் (பவள விழாவில் 325-மகா மண்டலேசுவரர் (சந்நியாசிகள்) வந்திருந்தார்கள்):** அவர்களுடைய மாநாடு நன்றாக நடைபெற்றது. நேபாளம் மற்றும் கான்பூர் லக்னோவிலும் மிக நன்றாக நிகழ்ச்சி நடைபெற்றது) நேபாளத்திலும் பாப்தாதா பார்த்தார். அவ்வளவு பாவனை உள்ளவர்கள் இருக்கின்றார்கள்; சகோதரிகளைப் பார்த்து விட்டால் அவ்வளவு மதிப்பு அளிக்கின்றார்கள். இப்போது அந்த அளவிற்கு பிரபாவம் ஏற்பட்டுள்ளது. நேபாளம் மற்றும் அயல்நாடு வெளிநாடு எங்கிருந்தாலும் அனைத்து இடங்களிலுமே நிமித்தமாக இருக்கின்ற சேவாதாரிகள் சேவையின் விருத்தியை நன்றாகச் செய்துள்ளார்கள். எந்த இடத்திலுமே சேவை குறைவு இல்லை. சேவை விஸ்தாரமாகி உள்ளது. மிக அதிகமாக சேவை விஸ்தாரம் அடைந்துள்ளது. அதற்காக பாபா உள்நாடு வெளிநாடு குழந்தைகளுக்கு வாழ்த்துக்களை வழங்கியுள்ளார் ஆனால் விசேஷமாக பாபா தீவிரமான முயற்சி செய்யும் குழந்தைகளின் கூட்டத்தைப் பார்க்க விரும்புகின்றார். அவர்கள் மீது நிமித்தமானவர்கள் சற்று கவனம் வைத்தால் நன்கு விருத்தி ஏற்படும். ஒவ்வொரு சென்டரிலும் இருக்கின்றார்கள் அப்படி ஆனால் எவ்வளவு உருவாக வேண்டுமோ அவ்வளவு இன்னும் உருவாகவில்லை. ஒரு குறிப்பிட்ட சேவையில் விசேஷமான முயற்சி செய்ய வேண்டும். மேலும் சென்டர் அனைத்திலும் இப்பொழுது நிர்விக்னமாக மாற வேண்டும். முதலில் பாப்தாதா தன் சங்கல்பத்தைப் பற்றிச் சொல்கின்றார். முதலில் மதுபன் கீழே இருந்தாலும் மேலே இருந்தாலும் எல்லோரும் நிர்விக்னமாக மாற வேண்டும். ஜனக் (ஜானகி தாதி) மதுபனைச் சார்ந்தவர்களுக்கு வகுப்பு எடுக்க வேண்டும். ஜானகி தாதிஜி அவர்களுக்கு பாபா சொல்கின்றார்; மதுபனில் உள்ள அனைத்து இடங்களைச் சார்ந்தவர்களுக்கும் எல்லோரையும் ஒன்று சேர்த்து

ஒருமாதத்திற்கான பாபா சொன்ன விசயத்தை (பக்கா) உறுதியாக்கிக் கொள்ள வேண்டும். மனதில் இருப்பதை பெல்லாம் வெளியே எடுக்க வேண்டும். வெளியில் சொல்வது குறைவு மனதில் வைத்திருப்பது அதிகம். மதுபனில் எல்லோருமே ஃபரிஸ்தாக்களாகத் தென்பட வேண்டும். நீங்கள் தயார் செய்யுங்கள் பிறகு பாப்தாதா மதுபனில் இருப்பவர்களின் ரிசல்ட்டைப் பார்க்க வருவார். ஏனென்றால் மதுபனின் வைப்ரேஷன் மிகவும் சக்தி வாய்ந்தது. இங்கே வருபவர்கள் எல்லோருமே வி.பி மற்றும் சாதாரணமானவர்கள் நன்கு உணர்கிறார்கள்; நாம் இதுபோல வேறு எங்குமே பார்க்கவில்லையே என நினைக்கின்றார்கள்; நல்ல இடத்தில் வந்து சேர்ந்திருக் கின்றோம் என்பதை உணர்கின்றார்கள். முற்றிலும் இங்குள்ள சுற்று சூழலில் அலௌகீக தன்மையிலும் நியாரா நிலையிலுமே இருக்க வேண்டும். இதுபோலவே எல்லா சென்டரிலும் ஜோனில் (மண்டலம்) இருப்பவர்களும் இதுவரையில் ஒருவர் கூட இந்த ரிசல்ட் தரவில்லை. எங்களுடைய ஜோன் தடைகளே இல்லை என்று பாப்தாதா சொல்லியிருக்கின்றார்: ஆனால் இதுவரையில் ஒருவர் கூட ஒரு ஜோனிலிருந்தும் செய்தி தரவில்லை. ஏனென்றால் பாப்தாதா பார்க்கின்றார் சமயத்தின் வேகம் மிக விரைவாகச் சென்று கொண்டிருக்கின்றது. எனவே குழந்தைகளின் முயற்சிக்கான வேகமும் மிக விரைவாக இருக்க வேண்டும். நல்லது.

(மதுபனில் நடந்த சந்நியாசிகள் பற்றிய மாநாடு பற்றிய செய்தி பாப்தாதாவிற்கு சொல்லப்பட்டது) இப்போது எந்தெந்த சென்டரிலிருந்து வந்திருக்கின்றார்களோ அவர்களை தொடர்பில் வைத்துள்ளார்கள். ஒவ்வொரு சென்டரிலும் தொடர்பில் வந்துள்ளார்கள். ஏனென்றால் சென்டரில் இருப்பவர்கள் அவர்கள் தொடர்பில் இருக்க வேண்டும். நல்லது!

**CAD குரூப்**: நல்லது இவர்கள் அனைவரும் மருத்துவம் செய்து தன்னை சரி செய்து கொண்டார்கள். யாரெல்லாம் இந்த மருத்துவம் மூலமாக மனதை சரி செய்கின்றீர்களோ கை உயர்த்துங்கள். எத்தனை பேர் எண்ணுங்கள் 150 நல்லது! நடைமுறையில் பார்க்கும் பொழுது நன்றாக இருக்கின்றது. இந்த செய்தியை பிறருக்கும் கொடுத்து தன்னைப்போல மாற்றிக் கொண்டே செல்லுங்கள். ஏனென்றால், இப்பொழுதெல்லாம்

பெரும்பான்மையானவர்களுக்கு இதயத்தில் தொந்தரவு ஏற்படுகின்றது. நீங்கள் அக்கம், பக்கம் இருப்பவர்களுக்கு இந்த அனுபவத்தைச் சொல்லுங்கள். நல்லது! வாழ்த்துக்கள்! மருந்து மாத்திரை இல்லாமல் விடுபட்டீர்கள். முக்தி அடைந்தீர்கள். ஜீவன் முக்தியும் கிடைத்து விட்டது. டபுள் பிராப்தி. இதற்கும் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள் நல்லது. நன்றாக சேவை செய்தார்கள். நடைமுறையில் உதாரணமாக ஒரு சேவை செய்து ரிசல்ட் கொடுத்து இருக்கின்றீர்கள்.

**325-இரட்டை அயல்நாட்டவரைச் சார்ந்த சகோதர சகோதரிகள் வந்துள்ளார்கள்: (ச-ரி.வஜீகா, குவைத்):** இந்த குழந்தையும் வந்திருக்கின்றாரா! அதிசயம்! சேர்ந்த உடனேயே மிகவும் சிநேகியாக, சகயோகியாக நல்ல சேவாதாரியாக மாறி விட்டார். கஷ்டங்களும் ஏற்பட்டது முந்தைய பிறவியின் காரணத்தால் ஏற்பட்டது ஆனால் பாப்தாதா குழந்தைக்கு சேவை மற்றும் சகயோகம், பணிவு இதற்கான சான்றிதழ் வழங்கியுள்ளார். நல்லது இரட்டை அயல் நாட்டவர். ஒரு விசயத்தில் பாபாவிற்கு அயல்நாட்டவரைப் பார்க்கும்பொழுது மிகப் பிரியமாக உள்ளது. இரண்டு விதமாக பாக்கியத்தை ஒரே முறையாக அடைந்தார்கள். ஒன்று தங்களுக்குள் ஒருவரை ஒருவர் சந்திக்கின்ற மீட்டிங்கையும் மற்றும் பாப்தாதாவையும் சந்தித்து விடுகின்றார்கள். மேலும் பாரதத்தின் சேவையிலும் துணையாக இருக்கிறார்கள். இப்படி செய்துள்ள முறை பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்துள்ளது. ஏனென்றால், வேறு எங்குமே இவ்வளவு பேர் ஒன்று சேர முடியாது. மதுபனில்தான் ஒன்று சேர முடியும். ஒவ்வொரு முறையும் குழுவாக வருகின்றார்கள். கொடுக்கல்-வாங்கல் எல்லாம் மதுபனில் வாயு மண்டலத்தில் நன்றாக செய்யப் படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் செய்யப்படுகின்றது. இந்த விதி பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்துள்ளது. பரிவாரத்தையும் சந்திக்க முடிகிறது. மிக நல்லது அயல்நாட்டிலும் பாப்தாதா பார்த்தார். இப்போது பாப்தாதா சொன்னது போல எந்தவிதமும் செய்தி கிடைக்காமல் இருக்கக் கூடாது. இது குறித்து எல்லோருமே தன்னை சுற்றியுள்ள சிறிய சிறிய இடங்களில் கூட நன்கு விருத்தி செய்துள்ளார்கள்; மேலும் விருத்தி அடைந்துக் கொண்டே சென்றுள்ளார்கள். எனவே பாப்தாதா சேவைக்கான வாழ்த்துக்களை வழங்கியுள்ளார். மேலும் தடைகள் இல்லாமல் இருப்பதற்காக தங்களுக்குள் செய்கின்ற ஆன்மீக உரையாடல் அதுவும் நன்றாக இருக்கின்றது. இப்போது ஜெயந்தி

குழந்தைக்கு இந்த வேலை உள்ளது ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு சென்டரின் ரிசல்ட்டைக் கேட்க வேண்டும். மதுபன் வந்து புத்துணர்ச்சி பெற்று சென்றவர்கள் அதே நிலையில் இருக்கின்றார்களா அல்லது சோதனைக்கு உட்பட்டு இருக்கின்றார்களா? இந்த சேவையில் வேறு யாரையாவது துணையாக வைத்திருக்கின்றார்களா? செய்து கொண்டே இருங்கள். இப்படி ஒவ்வொரு சென்டரிலும் செய்ய வேண்டும். எங்காவது பிரச்சனை ஏற்பட்டால் செய்ய வேண்டும் என்பதல்ல எங்கு பிரச்சனை இல்லையோ அங்கும் செய்ய வேண்டும். ஏனென்றால் வெகு தூரத்தில் இருக்கின்றார்கள் அல்லவா? கவனம் தர வேண்டும். பாப்தாதா பார்க்கின்றார் இப்பவும் கவனம் உள்ளது. மேலும் அதை அதிகப்படுத்த வேண்டும். நல்லது அயல்நாட்டவர் அனைவருமே பறக்கும் பறவையாக பறந்து கொண்டிருக்கின்றீர்களா? ஃபரிஸ்தா, ஃபரிஸ்தாவாகி இந்த உலகில் இருந்தாலும் ஃபரிஸ்தா உலகில் பறந்து கொண்டே இருங்கள். முயற்சியில் நம்பர்வார் ஆனால் கவனம் தன் பக்கம் ஈர்ப்பதால் மாற்றம் ஏற்படுகிறது. நன்கு விருத்தியும் அடைகிறது. முயற்சியிலும் கவனம் உள்ளது. பாப்தாதா பார்க்கின்றார். ஜனக் குழந்தையின் கவனம் அயல்நாட்டவரிடம் நன்றாகவே உள்ளது. மதுபனில் இருந்தாலும் அயல்நாட்டு சேவையில் குறைவு இல்லை. இதற்காக வாழ்த்துக்கள்! ஒவ்வொருவரும் தன்னுடைய ஜோனில் இங்கு இருப்பது போலவே அயல்நாட்டிலும் செய்ய முடியுமா? ஒவ்வொரு ஜோன் இன்ஜார்ஜ் (சகோதர சகோதரிகள்) அவரவர் ஜோனில் அந்தளவிற்கு பராமரிக்க வேண்டும். ஒவ்வொரு சென்டரின் செய்திகளை கேட்டுக் கொண்டே இருப்பதால் எல்லோருக்கும் தெரியவரும். ஒவ்வொரு மாதமும் தன்னுடைய சேவை நிலையங்களைப் பற்றிய செய்தியைத் தெரிந்து கொள்ள வேண்டும். இப்போது நேரம் மிக நெருங்கிக் கொண்டே வருகின்றது. எனவே சற்று கவனம் தர வேண்டும். நல்லது அயல்நாட்டுக் குழந்தைகளுக்கு பாப்தாதா வாழ்த்துக்கள் மனமார தருகின்றார். மேலும் முயற்சியில் முன்னேறும் கலைக்கான வாழ்த்துக்களையும் தருகின்றார். நல்லது!

இப்போது பாப்தாதா தூரத்திலிருப்பவர்களையும் எதிரே பார்க்கின்றார். பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் 75ஆம் ஆண்டுகளுக்கான முயற்சிக்கான வாழ்த்துக்களையும் வழங்கு கின்றார். இதில் ஒவ்வொருவருடைய சகயோகமும் உள்ளது. முன்னால் பின்னால்

வந்திருந்தாலும் சரி எல்லோருடைய உதவியின் காரணமாகத்தான் இத்தனை ஆண்டுகளை வந்து அடைந்துள்ளீர்கள். பாப்தாதா ஆங்காங்கே நடைபெறுகின்ற நிகழ்ச்சியின் வெற்றிகளைப் பார்த்து சேவைக்கான வெற்றிக்கு வாழ்த்துக்களை வழங்குகின்றார். பாப்தாதா இப்போது அனைத்து குழந்தைகளுக்கும் ஒரேயொரு சிரேஷ்ட சங்கல்பத்தைச் சொல்ல விரும்புகின்றார். இப்பொழுது தானும் நிர்விக்னமாகவும் மற்றும் தன்னோடு இருப்பவர்களையும், தன் தொடர்பில் இருப்பவர்களையும் நிர்விக்னமாக மாற்றுங்கள். இறுதி நேரத்தை அருகாமையில் கொண்டு வாருங்கள். துக்கம் மற்றும் அசாந்தியை பாப்தாதா குழந்தைகளிடம் பார்க்க முடியவில்லை. இப்போது தனது இராஜ்யத்தை விரைவாக பூமிக்கு கொண்டு வாருங்கள். பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தைகள் மீதும் அன்பு உள்ளது. கடைசி மற்றும் பலவீனமான குழந்தை இரண்டின் மீதும் உள்ளது. பலவீனமான குழந்தையின் மீது இரக்கம் வைக்கின்றார் பாபா. நீங்களும் எப்படிப்பட்டவர்களாகவும் எப்படிப்பட்ட சுபாவம் உள்ளவர்களாக இருந்தாலும் சரி, அவரும் நம்மவர்தான். எப்படி பாபா நம்மவரோ அப்படியே பரிவாரமும் நம்முடையது. எனவே அவருடைய சுபாவ சம்ஸ்காரத்தைப் பார்க்காமல் அவர்களுக்கும் ஒத்துழைப்பு வையுங்கள். நல்ல பாவனையும், சுபமான பாவனையும் வையுங்கள். நல்லது! எதிரில் உள்ள குழந்தைக்கும் தூரத்தில் உள்ள குழந்தைக்கும் ஒவ்வொருவருக்கும் பாபா தனித்தனியே திருஷ்டி மற்றும் வாழ்த்துக்களையும் வழங்குகின்றார் நல்லது. உங்கள் அனைவருக்கும் பாபாவினுடைய வாழ்த்து கிடைத்தது அனைவருக்கும் கொடுத்த வாழ்த்து உங்களுக்கும் கிடைத்துள்ளது நல்லது

சகோதரி நீலு பாப்தாதாவிற்கு நேபாள் செய்தியைத் தருகிறார்: ஒவ்வொருவருக்கும் வாழ்த்துக்கள் கொடுங்கள், நன்றாக மற்றும் ஈடுபாட்டுடன் செய்கின்றார்கள். அதற்கான பலன் கண்டிப்பாக உள்ளது.

சகோதரி மோகினியுடன்: தன்னை நன்றாக பார்த்துக் கொள்கிறீர்களா? (படியில் ஏற முடியவில்லை) அதிகமாக நடக்க வேண்டும். நடந்தால் கால்களுக்கு சக்தி வரும். கொஞ்சம் கொஞ்சமாக படியில் ஏறுங்கள். நடந்து பிறகு மூன்று நான்கு படி ஏறி பார்த்தால் நல்ல மாற்றம் ஏற்படும்.

**தாதி ருக்மணி அவர்களுடன்:** ஆதி ரத்தினத்தில் உள்ளீர்கள் தீவிர முயற்சி செய்கின்றீர்கள் மிக்க நல்லது! டில்லி எல்லோருடைய உள்ளத்திலும் உள்ளது ஏனென்றால் எல்லோருமே அங்கு வந்துதான் இராஜ்யம் செய்ய வேண்டும். டில்லியை தடையில்லாத நிர்விக்னமாக மாற்றுங்கள். எல்லோரும் ஒன்றிணைந்து ஒரு நிகழ்ச்சி வையுங்கள். விசயம் எதுவானாலும் அது அப்போதே முடிந்து விட வேண்டும்.

தாதி ஜானகிஜியுடன்: (பாபா நீங்கள் மிக நல்ல நல்ல விசயங்களை சொல்கின்றீர்கள்) சொல்லவில்லையென்றால் எப்படி சம்பன்னம் ஆவீர்கள். இப்போது பாப்தாதா விரும்புவது வெகு விரைவில் சம்பன்னம் ஆக வேண்டும் என்பதுதான். (தாதி ஜானகி இப்போது மதுபனில் அமர்ந்து சேவை செய்வார்கள்) இவர் இருக்கவே முடியாது. சில சமயம் ஆங்காங்கே சென்றும் வரலாம். ஒரே இடத்தில் இருக்க முடியாது. ஆனாலும் சிறிது காலத்திற்கு இருக்க வேண்டும்.

**பரதாதியுடன் (நிர்மல் சாந்தா தாதி):** பாருங்கள் எவ்வளவு அதிசயம்! வயது அதிகமாகிக் கொண்டே இருக்கின்றது ஆனால் முகம் மட்டும் மாறவில்லை. முகம் எப்போதுமே பொலி வுடன் உள்ளது.

**சகோதரி டாக்டர் நிர்மலாவுடன்:** இருபுறமும் நன்றாக பார்த்துக் கொள்கிறார்கள். எப்படி இவரோ அப்படியே நீங்களும் நன்கு பார்த்துக் கொள்கிறீர்கள்.

மூன்று முக்கிய சகோதரர்களுடன்: இப்போது எப்படி தாதி மார்களுடன் கவனம் உள்ளதோ அப்படியே உங்கள் மூவர்கள் மீதும் கவனம் உள்ளது. எனவே சந்திக்கும் நிகழ்ச்சிகள் எங்கிருந்தாலும் தொலைபேசி மூலமாக இருந்தாலும் செய்து கொண்டே இருங்கள். அயல்நாட்டில் செய்வது போலவே நாமும் நிமித்தமானவர்கள் பொறுப்பானவர்கள் என்று உணருங்கள். விசயம் எதுவாக இருந்தாலும் சரி., தொலைபேசி மூலமாக கூடத் தீர்வு காணலாம். நேரம் அதிகம் எடுக்கக் கூடாது. விரைவாக முடிவு எடுத்தால் தடைகள் இல்லாமல் இருக்கலாம். சரியா! (சகோதரர் ரமேஷ் உடன்) உடல் நலம் சரியாக இருக்கின்றது பொறுப்பு என்ற கிரீடத்தை பாப்தாதாவும், பரிவாரமும் கொடுத்து விட்டார்கள். செய்தும் கொண்டும் வருகின்றீர்கள். இன்னும் ஒருவருக்கு ஒருவர்

கலந்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். இங்கு வரும்பொழுது அமருகிறீர்கள். அங்கு இருக்கும்பொழுதும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள். அயல்நாட்டிலும் செய்கின்றார்கள் அல்லவா? அர்த்தம் என்னவென்றால் பிரச்சனை எதுவாக இருந்தாலும் அதற்கு விரைவாகத் தீர்வு காண வேண்டும். அதனை வளர்க்கக் கூடாது. இவர் வந்தால் செய்யலாம் என்று இருக்கக்கூடாது நீங்கள் செய்து முடிவைக் கொண்டு வர வேண்டும். (தாதி ஜானகி அவர்கள் இங்கு மதுபனில் இருப்பதால் எல்லோருமே இங்கு வருவார்கள் அயல்நாடும் செல்லலாம். இங்கேயும் ஆங்காங்கே தேவைப்படுகிறது. இங்கேயும் தேவை உள்ளது.

**சகோதரி ஆஷாவுடன்:** டில்லி நன்றாக இருக்கிறதா! ஏனென்றால் டில்லியில் அனை வருடைய இராஜ்யம் வரப்போகிறது எனவே டில்லியை சக்திவாய்ந்ததாக மாற்ற வேண்டும். (ORC-யில் ஜனாதிபதி (President) வந்திருந்தார். அதைப்பற்றிய ஆல்பம் பாப்தாதாவுக்கு காண்பிக்கப்பட்டது) கிடைக்கிறது, ஆனால் கர்மத்தை செய்துகொண்டே யோகத்தில் இருந்தீர்கள் எனில் இந்த வாய்ப்பு உங்களுக்கு அதிகமாக கிடைக்கும். எனவே நீங்கள் இந்த தலைப்பில் குறிப்டாக விசேஷமான கலனம் கொடுக்க வேண்டும். நல்லது

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 30.11.2011 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அமிர்தவேளையில் விசேஷ சர்வ சக்திகளின் அனுபவி சொரூபமாகி, யோகத்தின் அலைகளை (சகாஷ்) வாயுமண்டலத்தில் பரப்புங்கள், மனதை சதா சுறுசுறுப்பாக வைத்திருங்கள், சமயத்தின் அழைப்பு -தீவிர புருஷார்த்தி ஆகுக!

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளின் நெற்றியில் பாக்கியத்தின் பிரகாசிக்கக்கூடிய நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். முதலாவது, இந்த பிறவியினுடையது. அடுத்தது சம்மந்தத்தினுடையது. மூன்றாவது பாக்கியத்தினுடையது. மூன்று பாக்கியங்களையும் பார்த்து புன்சிரித்துக் கொண்டிருந்தார்.

இந்த பிறவியினுடைய பாக்கியத்தை நீங்கள் அறிவீர்கள் உங்கள் அனைவருக்கும் இந்த தெய்வீகமான பிறவி, பிராமண பிறவி ஆகியவற்றைக் கொடுக்கக்கூடியவர் சுயம் பாக்கியத்தை வங்கும் வள்ளலாவார். எனவே எண்ணிப்பாருங்கள், எவ்வளவு பெரிய பாக்கியம் இது கூடவே சம்மந்தம் (தொடர்பு) இதனுடைய சிறப்பை அறிவீர்களா? மூன்று சம்மந்தம், பாபா, ஆசிரியர், சத்குரு மூன்று சம்மந்தங்களும் ஒரே ஒரு பாபாவிடமிருந்து கிடைக்கின்றது! ஒரே விதமான தந்தை ஒருவரிடமிருந்து மூன்று சம்மந்தங்களும் பிராப்திகளையும் எங்கு பாபாவோ அங்கு பிராப்தி என்பது அனைத்தும் மற்றும் எல்லையற்றதுமாகும். ஒரே ஒருவரில் மூன்று சம்மந்தங்களும் உள்ளன. பொதுவாக வாழ்க்கையில் இந்த மூன்று சம்மந்தங்களும்

தேவையானவையாகும் ஆனால் உலகினரின் ஒவ்வொரு சம்மந்தமும் தனித்தனியாக இருக்கும். மேலும் மூன்று சம்மந்தங்களும் ஒரே ஒருவரிடம் ஒரே ஒருவரிடம்! மூன்று சம்மந்தங்களும் இருப்பதன் காரணமாக நினைவும் அனுபவமும் செய்வது மிக எளிதாகிறது. அனைவரும் மூன்று சம்மந்தங்களின் அனுபவிகள் தானே பாபா மூலம் என்ன கிடைக்கிறது? ஆஸ்தி! ஆஸ்தியும் எவ்வளவு உயர்ந்ததாகக் கிடைக்கிறது. மேலும் இந்த ஆஸ்தி எவ்வளவு காலத்திற்கு வருகிறது ஏனெனில் பரமாத்மா தந்தை மூலம் கிடைக்கின்றது. இரண்டாவது சம்மந்தம் ஆசிரியருடையது. கல்வி வருமானத்திற்கான ஆதாரம் என்று கூறப்படுகிறது. ஆக உங்கள் அனைவருக்கும் ஆசிரியர் மூலம் எவ்வளவு உயர்ந்த பிராப்தி கிடைத்துள்ளது. அறிவீர்கள் தானே! இம்மாதிரி உயர்ந்த பிராப்தியைத் தவிர பரமாத்மா தந்தையைத் தவிர வேறு எவரிடமிருந்தும் கிடைக்க முடியாது. கல்வியின் மூலம் பிராப்தி ஏற்படுகிறது. மேலும் உங்கள் அனைவருக்கும் மிக சிரேஷ்டமான பிராப்தியாகும். இராஜ்ய பதவியை உயர்ந்த பிராப்தி என்று உலகில் கூட கூறப்படுகிறது. ஆக உங்களுக்கும் ஆசிரியரின் மூலம் இராஜ்ய பதலியின் பிராப்தி கிடைத்துள்ளது. இப்பொழுது கூட சுயராஜ்யத்தின் இராஜா நீங்கள். ஏன்? ஆத்மா இராஜயோகி ஆனதின் காரணமாக சுயராஜ்ய அதிகாரி ஆகிறது. சுயத்தின் மேல் ஆட்சி செலுத்துகிறது. கர்ம இந்திரியங்களின் வசமாவதில்லை. ஆத்மா எஜமானனாகி இந்த கர்ம இந்திரியங்களின் இராஜவாகிறது. ஆக இப்போதைய சுயராஜ்யம் மற்றும் எதிர்காலத்தின் இராஜ்ய பாக்கியம் கிடைக்கிறது. ஆக இரட்டை இராஜ்யம் இப்பொழுதும் மற்றும் எதிர்காலத்திலும் பதவியானது கிடைக்கிறது. மூன்றாவது சம்மந்தம் சத்குருவினுடையது. மூன்று சம்மந்தங்களும் கிடைத்துள்ளது தானே? பாபா, ஆசிரியர் மற்றும் சத்குரு. சத்குருவின் மூலம் குருவினுடைய ஸ்ரீமத் கிடைக்கிறது. எவ்வளவு சிரேஷ்டமான வழி கிடைக்கிறது. ஆக உங்களை நீங்களே சோதனை செய்யுங்கள். சதா ஸ்ரீமத்படி நடக்கிறோமா அல்லது அவ்வப்போது மன வழிப்படி புத்தி போகவில்லை தானே? சோதனை செய்வீர்களா? நாங்கள் எப்பொழுதுமே சிரேஷ்டமான வழி ஸ்ரீமத்படி நடப்பவர்கள், மன வழி மற்றும் பிற வழிப்படி ஒருபோதும் சொப்பனத்தில் கூட செல்வதில்லை. அப்படிப்பபட்டவர்கள் கை உயர்த்துங்கள். சதா ஸ்ரீமத்படியே நடப்பவர்கள். மன வழி, பிற வழியில்லை. அப்படிப்பட்டவர்கள் கை உயர்த்துங்கள்!

இதில் பாருங்கள். தாய்மார்கள் கை உயர்த்தியுள்ளனர். கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்திக் கொண்டிருக்கின்றனர். அவ்வப்போது வெளியே சென்று விடுகின்றனர். மேலும் மன வழி, பிற வழி ஏமாற்றி விடுகிறது. விசேஷமான ஸ்ரீமத் என்ன? தன்னை ஆத்மா என்று உணர்ந்து கொண்டு பாபாவை நினைவு செய்யுங்கள் ஆக இது கடினமானதா? அல்லது எளிதானதா? அவ்வப்போது கஷ்டமாகி விடுகிறது ஆனால் இந்த மூன்று சம்மந்தங்களின் மூலம் ஒவ்வொரு குழந்தையும் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும் என்றே பாபா விரும்புகிறார். பாபா கேட்கின்றார். யாரெல்லாம் கை உயர்த்தினீர்களோ அவர்கள் இப்போதிலிருந்தே மனவழி பிற வழி ஆகியவற்றை விட்டு விட முடியுமா? விட்டுவிட முடியுமா? அவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. ஏனெனில் பாபா காலத்தினுடைய அருகாமையை ஜாடையாகக் கூறியுள்ளார். இப்பொழுது சங்கமயுகத்தின் காலம் மிகவும் மதிப்பு வாய்ந்தது. பாப்தாதா இதைக் கூட சைகை மூலம் கூறியுள்ளார் -தற்சமயத்தின் பிரகாரம் அனைத்துமே திடீரென்று நடக்கும். எனவே சதா எவரெடியாக வேண்டும். அனைவரும் கூடவே செல்வீர்கள் தானே! அல்லது பின்னால் வருவீர்களா? பாப்தாதாவின் கூடவே நமது வீடு செல்ல வேண்டுமல்லவா தயார் தானே! கூடவே செல்வதற்குத் தயாரா? எவரெடி! வெறும் ரெடி மட்டுமல்ல, எவரெடி, ஆக. பாப்தாதா காலத்தின் முக்கியத்துவத்தை சைகை மூலம் கூறிக் கொண்டிருக்கின்றார். இந்த ஒரு பிறவியில் 21 பிறவிகளின் பிராப்தியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஆக எண்ணிப் பாருங்கள். எவ்வளவு கவனம் தர வேண்டும். தந்தைக்கு குழந்தைகளிடம் மிகுந்த அன்பு உள்ளது. தந்தை இதையே விரும்புகிறார். ஒவ்வொரு குழந்தையும் தன் கூடவே வர வேண்டும். மேலும் கூடவே இராஜ்ய அதிகாரியும் ஆக வேண்டும்.

ஆக, கூடவே செல்வதற்கு பாபாவிற்குச் சமமாக முழுமையான மற்றும் நிறைவானவர்களாக ஆக வேண்டும். அப்பொழுது தான் கூடவே செல்ல முடியும் எனவே இந்த சிறிய பிறவியில் 21-பிறவிகளுக்கான பிராப்தி நிச்சயமானது. ஆக எண்ணிப் பாருங்கள், சங்கமத்தின் சிறிய யுகத்தில் ஒவ்வொரு நிமிடமும் எவ்வளவு மகான் தன்மையுடையது. கணக்குப் போட்டு பாருங்கள். இந்த ஒரு பிறவியிலேயே 21-பிறவிகளுக்கான இராஜ்ய பாக்கியத்தை அடைய வேண்டும். எனவே சங்கமயுகத்தில் ஒரு

நிமிடம் கூட எவ்வளவு மதிப்பு வாய்ந்தது? ஆக இந்த மதிப்பை அறிந்து இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? பாப்தாதா ஏற்கனவே கூட கூறியுள்ளார். இரண்டு விசயங்களின் மீது விசேஷமான கவனம் செலுத்த வேண்டும். அந்த இரண்டு விசயங்கள் நினைவில் இருக்கிறதல்லவா? ஒன்று சமயம், இரண்டாவது சங்கல்பம் சங்கல்பம் வீணாகக் கூடாது, சமயமும் வீணாகக்கூடாது. ஒவ்வொரு வினாடியும் நன்கு பயன்படுத்தப்பட வேண்டும். ஆக கூறுங்கள் அந்த அளவு கவனம் செலுத்த வேண்டும் அல்லவா? பாப்தாதாவிற்கு அனைத்து குழந்தைகள் மீதும் அன்பு உள்ளது. பாப்தாதா இதையே விரும்புகிறார், ஒரு குழந்தைகூட வராமல் இருக்கக்கூடாது. கூடவே இருப்பது கூடவே செல்வது. மேலும் இராஜ்யத்தைப் பெறுவது சதா வாழ்வில் சுகம் சாந்தியினுடைய அனுபவத்தையும் செய்ய வேண்டும் ஆக கூறுங்கள் பார்க்கலாம் கூடவே வருவீர்கள் தானே! தங்கி விட மாட்டீர்களே? பாருங்கள், மூன்று பாக்கியமும் ஒவ்வொருவரின் நெற்றியிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. உங்களது நெற்றியில் இந்த மூன்று பாக்கியங்களும் தென்படுகிறதல்லவா?' சங்கமயுகமே பாக்கியவான் ஆவதற்கான யுகமாகும். எவ்வளவு பாக்கியத்தை ஏற்படுத்தக் கொள்ள விரும்புகிறீர்களோ அவ்வளவு ஏற்படுத்திக் கொள்ள முடியும் ஆனால் வெகுகால கவனம் வேண்டும். அனைத்து குழந்தைகளும் தங்களது புருஷார்த்தத்தில் தீவிர தன்மையைக் கொண்டு வர வேண்டும். புருஷார்த்திகளை பாபா பார்த்துக் கொண்டிருக்கின்றார். புருஷார்த்தம் செய்கிறார்கள் ஆனால் அனைவரது புருஷார்த்தத்திலும் தீவிர தன்மை (வேகம்) இப்பொழுது வேண்டும். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பாலக் இருந்து எஜமானர்களாக பார்க்க விரும்புகின்றார். யாருடைய எஜமான்? அனைத்து கஜானாக்களின் எஜமான் அவ்வப்போது சில குழந்தைகள் பாப்தாதாவிற்குக் கூறுகிறார்கள் -பாபா, நீங்கள் சர்வ சக்திகளைத் தந்துள்ளீர்கள், நாங்களும் எங்களை மாஸ்டர் சர்வ சக்திவான் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனாலும் சில குழந்தைகள் புகார்களைக் கூறிக் கொண்டே இருக்கின்றார்கள். அவ்வப்போது, எந்த சமயத்தில் எந்த சக்தி தேவைப்படுகிறதோ அந்த சமயத்தில் அந்த சக்தி இருப்பதில்லை ஆனால் இதற்கு என்ன காரணம்? பாபா ஒவ்வொருவருக்கும் சர்வ சக்திகளைத் தந்துள்ளார்? சிலருக்கு அதிகமாகவும், சிலருக்கு குறைவாகவும் தரவில்லை. சர்வ சக்தியும் கிடைத்துள்ளவர்கள் கை

தூக்குங்கள்! எல்லோருக்கும் கிடைத்துள்ளது ஆனால் வேண்டிய சரியான சமயத்தில் ஏன் உதவிக்கு வருவதில்லை. இதன் காரணம் என்ன? காரணத்தை அறியவும் செய்கிறீர்கள். அந்த சமயத்தில் மறந்தும் விடுகிறீர்கள். சர்வ சக்திகளின் பொக்கிஷம் ஒவ்வொரு குழந்தைக்கும். ஆஸ்தியாக கிடைத்துள்ளது. பாபாவின் ஆஸ்தி சர்வ சக்திகளின் ஆஸ்தி பாபா அனைவருக்கும் ஒரே மாதிரி தந்துள்ளார், சிலருக்கு அதிகம், சிலருக்கு குறைவு அல்ல. சர்வ சக்திகளைத் தந்துள்ளார் ஆனால் அந்த சரியான சமயத்தில் அவை ஏன் வருவதில்லை, காரணத்தை நீங்களே எண்ணிப் பாருங்கள். தனது சுவமான் என்னும் சீட்டில் இல்லை என்றால், அவரது. கட்டளையை யாராவது ஏற்றுக் கொள்வார்களா? ஆக, எந்த சமயத்தில் சக்தி உதவிக்கு வருவதில்லை என்றால், காரணம் நீங்கள் உங்களது மாஸ்டர் சர்வ சக்திவான் இருக்கையில் இருப்பதில்லை. எனவே இருக்கையில் இல்லாதிருப்பதால் உங்கள் கட்டளையை எவரும் கேட்பதில்லை. எனவே உங்களது இருக்கையில் சதா அமர்ந்திருங்கள். சில சமயம் வீணான எண்ணங்கள் உருவாகின்றன. சில சமயம் மன அழுத்தம் (டென்ஷன்) வருகிறது அச்சமயத்தில் சுவமானத்தில் இருக்கை விலகிப் போய் விடுகிறது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் எவ்வளவு சுவமான்களை தந்துள்ளார். எவ்வளவு பெரிய சுவமான இருக்கை அது எண்ணிப் பாருங்கள் எத்தனை சுவமான்களை பாபா தந்துள்ளார்? சுவமான் இருக்கையில் இருப்பதில்லை. எங்கு சுவமான் இல்லையோ அங்கு என்ன நடக்கிறது? நீங்கள் அறிவீர்கள் தானே? ஒன்று சுவமான் இருக்கும் அல்லது தேக அபிமானம் இருக்கும். தேக உணர்வு என்னும் இருக்கையில் இருந்து கொண்டு கட்டளையிட்டால் சக்திகள் கேட்பதில்லை இல்லை என்றால் மாஸ்டர் சர்வ சக்திவானுடைய சக்திகள் செவி சாய்ப்பதில்லை என்று கூறவே முடியாது. சுவமான் இருக்கையில் அமரும் அப்பியாசத்தை சதா செய்து வாருங்கள், சோதனை செய்துப் பாருங்கள். கர்மயோகத்தில் இருந்தாலும் சரி; அல்லது சேவையில் இருந்தாலும் சரி. அல்லது உங்களது மன சிந்தனையில் இருந்தாலும் சரி ஆனால் உங்களது இருக்கையில் அமர்ந்து இருக்க வேண்டும். அப்பொழுது தான் அனைத்து சக்திகளும் உங்கள் முன் ஆஜராகி இருக்கும்.

இன்று பாப்தாதா பார்த்தார்: அமிர்தவேளையில் நாலாபுறமும் சுற்றி வந்தார். உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் பாப்தாதா சுற்றி வருவதில் அதிக நேரம் எடுக்காது. பாப்தாதா என்ன பார்த்தார்? கூறட்டுமா பெரும்பாலோர் அமர்ந்திருந்தார்கள். எழுந்து தம்தம் இடங்களில் அமர்ந்திருந்தார்கள், புருஷார்த்தமும் செய்து கொண்டிருந்தார்கள். முழு நேரமும் தனது சர்வ அனுபவி மூரத் நிலையில் அமர்ந்திருந்தனர் ஆனால் என்ன பார்த்தார்? அனுபவி மூரத்தாக யாரோ ஒரு சிலர் இருந்தனர். ஏனெனில் அனைத்திலும் மிகப் பெரிய சக்தி அனுபவ சக்தி, அனுபவி சொரூபம், சர்வ சக்திகளின் அனுபவி சொரூபம், மாஸ்டர் ஞான சொரூபம், மாஸ்டர் சர்வ சக்தி சொரூபம், ஆக இவைகளில் அனுபவி சொரூபம் ஆவதில் குறைவு தென்பட்டது புருஷார்த்தம் என்னவோ செய்கின்றனர். பாப்தாதா அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார். பெரும்பாலோர் புருஷார்த்தம் செய்து வருகின்றனர் புருஷார்த்தம் செய்து நிறைய பேர் அமர்கிறார்கள் ஆனால் பாப்தாதா இதையே விரும்புகிறார். ஒளி மற்றும் சக்தி சொரூபத்தில் அனுபவி மூரத்தாக ஆக வேண்டும். ஏனெனில், அமிர்தவேளையின் யோக அலைகள் முழு வாயுமண்டலத்தில் பரவுகிறது. இந்த அனுபவத்தை மேலும் அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். எப்படி பிரம்மாபாபாவைப் பார்த்தோம். எவ்வளவு சக்தி நிறைந்த. பரிஸ்தா சொரூப ஸ்திதி அமைந்திருந்தது. இவ்வாறு இந்த அமிர்தவேளையை தத்தமது முறையில் கவனத்தை தொடர்ந்து செலுத்தி வாருங்கள். அநேக குழந்தைகள் ஒளி மற்றும் சக்தியின் ரூபத்திலும் அமர்கிறார்கள். இல்லை என்று கூறமுடியாது. அமர்கிறார்கள் தான் ஆனால் இந்த சமயத்தின் புருஷார்த்தத்தில் மேலும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். மேலும் பாப்தாதா ஏற்கனவே சைகையாக தெரிவித்துள்ளார். தனது மனதை சதா பிஸியாக (சுறுசுறுப்பாக) வைத்திருங்கள். மனசேவை செய்தாலும் சரி, சொல்லினால் சேவை செய்தாலும் சரி, மனன சக்தியில் சுறுசுறுப்பாக இருந்தாலும் சரி, மனனம் செய்யுங்கள், மனன சக்தி மனதை ஒருமித்த நிலையில் கொண்டு வருகிறது. ஒரு சில குழந்தைகள் மனனம் செய்கிறார்கள் ஆனால் நாள் முழுவதும் அந்த மனன சக்தியை தொடர்ந்து அதிகரியுங்கள். ஏனெனில், பாப்தாதா கடைசி குழந்தையின் மீது கூட அன்பு வைத்துள்ளார். கடைசி குழந்தையும் கூட பாப்தாதா கூடவே வர வேண்டும் என்றே

விரும்புகிறார் பின்னால் தங்கி விடக்கூடாது. என்ன செய்யப் போகிறீர்கள். கவனம் வையுங்கள்.

இன்று பாப்தாதா சபையை பார்த்து, குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே செல்லும் என்பதை அறிவார். 75-ஆண்டு காலத்தின் விழாவைக் கொண்டாடினீர்கள், அதற்கு பாப்தாதா குழந்தைகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். பாப்தாதா சேவையின் ஆர்வத்தையும், பார்த்தார். ஒவ்வொரு மண்டலத்தினரின் உற்சாகம் உள்ளது. மேலும் சேவையின் பலனும் விசேஷமாக அதுவும் கூட தென்படுகிறது. எங்கெங்கு குழந்தைகள் செய்தனரோ (விழா எடுத்தனரோ) அங்கு இந்த முறை அரசு சம்மந்தப்பட்ட ஆத்மாக்களும் அதிகமாக வந்திருந்தனர். அதன் விளைவாக தற்போதைய காலத்தின் அனுசாரம் அனைவரின் துக்கம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் ஒத்துக் கொள்ளவும் செய்கிறார்கள். தற்போது வைக்கப்பட்டுள்ள தலைப்பு அதுவும் அவசியம். ஏனெனில் எவ்வளவு சாந்தியை விரும்புகிறார்களோ அவ்வளவு அசாந்தி அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஏதேனும் விசயம் அசாந்தியை கொண்டு வந்து விடுகிறது. இதனால் நாலா புறமும் ஏதேனும் அசாந்தியான விசயம் வந்து கொண்டு தான் இருக்கிறது. இதன் காரணமாக நாலா புறமும் டென்ஷன் அதிகமாகி விடுகிறது ஆனால் பாரத தேசம் டென்ஷன் இல்லாமல் இருக்க வேண்டும் என்றே அரசாங்கம் கூட விரும்புகின்றது. சேவை செய்த குழந்தைகளுக்கு பாப்தாதா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார். இன்னும் சேவை செய்ய இருப்பவர்களுக்கும் முன்னதாகவே வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார்.

பாப்தாதா இப்பொழுது இதனையே விரும்புகிறார். ஒவ்வொரு குழந்தையும் பாபாவை பின்பற்றி (பாலோ பாதர்) பாபாவிற்குச் சமமாக சம்பன்னமாக நிச்சயம் ஆக வேண்டும். புருஷார்த்தமும் குழந்தைகள் செய்வதை பாப்தாதா பார்க்கிறார். புருஷார்த்தத்தின் ஆர்வம் கூட உள்ளது. உறுதிமொழி கூட நிறைய எடுத்துக் கொள்கின்றனர். மேற்கொண்டு (தவறு) செய்ய மாட்டோம் என்று. காரணம் என்ன? புருஷார்த்தத்தில் திடத்தன்மை குறைவாக. உள்ளது. இடையிடையே அலட்சியப் போக்கு வந்து விடுகிறது. ஆகி விடுவோம். நடந்து விடும்.

இந்த அலட்சியபோக்கு, புருஷார்த்தத்தை தொய்வாக்கி விடுகிறது. ஆக இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள். இதில் விசேஷமான கவனம் வையுங்கள். நீங்களே உங்களது திட்டத்தை (தினசரி நடவடிக்கை) ஏற்படுத்துங்கள். அதில் முழு நாளும் மனதை சுறுசுறுப்பாக வைத்து உங்களது திட்டத்தை நீங்களே தீட்டிக் கொள்ளுங்கள். மனதை சுறுசுறுப்பாக வைத்திருக்கும் அட்டவணை நீங்களே தயார் செய்யுங்கள். கவனத்தைத் தாருங்கள், மனதால் சுறுசுறுப்பாக இருங்கள், சேவையில் பிஸியாக இருக்கிறீர்கள். மனதாலும் பிஸியாக இருங்கள். இவ்வாறு மனதால் பிஸியாக இருக்கும் போது நம்பர்-1 பிஸ்னஸ்மேன் (வியாபாரி) ஆகி விடுவீர்கள். அவ்வாறு செய்வீர்களா? நீங்கள் அறிவீர்கள், பிரம்மாபாபா கூட உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார். மேலும் உங்களது அட்வான்ஸ் பார்ட்டி கூட சமயத்தை எப்பொழுது. அருகாமையில் கொண்டு வரப்போகிறீர்கள் என்று உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில், சமயத்தை அருகாமையில் கொண்டு வருவதற்கான பொறுப்பு உங்களுடையது. தன்னை சம்பன்னமாக ஆக்கிக் கொள்வது, அதாவது, சமயத்தை அருகாமையில் கொண்டுவருவது.

ஆக பாப்தாதா விசேஷமாக ஒரு மாதம் சமயம் கொடுத்துள்ளார். இந்த ஒருமாதத்தில் ஒவ்வொரு வரும் தீவிர புருஷார்த்தி ஆக வேண்டும். வெறும் புருஷார்த்தி அல்ல, தீவிர புருஷார்த்தியாக ஆகியே தீர வேண்டும். சம்மதமா? கை தூக்குங்கள். நல்லது. வாழ்த்துக்கள். இப்பொழுது ஒவ்வொரு வரும் திடசங்கல்பம் எடுத்துக் கொண்டு தினமும் பாப்தாதாவிற்கு நாள் முழுவதற்கான ரிசல்ட்டை எப்படி தரப் போகிறீர்கள். தீவிர புருஷார்த்தத்தின் ரிசல்ட் வெறும் புருஷார்த்தம் அல்ல. தீவிர புருஷார்த்தம். இதற்குத் தயாரா? அப்படி என்றால் கை தூக்குங்கள். மிகவும் நல்லது. இப்பொழுது பாப்தாதா திடீரென்று இடையில் உங்களது ரிசல்ட்டைக் கேட்பார். தேதியை குறிப்பிட மாட்டார். திடீரென்று ஏதேனும் ஒரு நாளில் ரிசல்ட்டை அனுப்பி வைக்கச் சொல்வார். செய்தே தீர வேண்டும். இந்த உறுதிமொழியை உங்களுக்கு நீங்களே செய்து கொள்ளுங்கள். பாப்தாதா செய்விப்பார். அவர் என்னவோ செய்விக்கத்தான் செய்கிறார் ஆனால் நீங்கள் சங்கல்பம் செய்யுங்கள். மேலும் நடைமுறையில் செய்து காண்பியுங்கள். செய்யத்தான் வேண்டும்! செய்வோம்.... செய்வோம்

என்பது நன்றாகவேயில்லை. சமயமானது வேகமாக சென்றுக் கொண்டிருக்கிறது; மிகவும் வேகத்தில் செல்கிறது. மாற்றம் செய்யக்கூடியவர்கள் சமயத்தை மாற்றக்கூடிய முன்னோர்களாகிய நீங்கள் உங்களுக்கு உங்களது துக்கமான குடும்பத்தின் மீது இரக்கம் வரவில்லையா? இரக்கம் உள்ளவர்களாக ஆகுங்கள். துக்ககமானவர்களுக்கு சுகத்தின் வழியைக் காண்பியுங்கள். மனதாலும் சரி சொல்லாலும் சரி, அல்லது சம்மந்தம் தொடர்பினாலும் சரி. உங்களது குடும்பம் தானே! பரிவாரத்தினுடைய துக்கத்தை நீக்க வேண்டும். இரக்கம் உள்ளம் உடையவர்களாக ஆகுங்கள். நல்லது.

சேவையின் வாய்ப்பு கர்நாடக மண்டலம்: 9000-பேர் வந்துள்ளனர். நல்லது. கர்நாடகத்தினர் என்ன விசேஷ தாரணை செய்வீர்கள். தீவிர புருஷார்த்தம் செய்வதற்கான முயற்சி செய்வீர்கள் மற்றும் செய்வீப்பீர்கள். இதில் கை தூக்குங்கள். நல்லது. அமருங்கள். பாப்தாதா இங்கு எதிரில் மட்டும் பார்ப்பதில்லை, எங்கெல்லாம் குழந்தைகள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்களோ, அனைவருக்கும் மிகுந்த நினைவு மற்றும் அன்பை வழங்கிக் கொண்டிருக்கிறார். தூரமாக அமர்ந்திருக்கிறார்கள், ஆனால் உள்ளத்தால் அருகாமையில் இருக்கிறார்கள்.

நாலாபுறமும் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு பாப்தாதா உள்ளத்தின் அன்பு நினைவுகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார். உள்நாடு. வெளிநாட்டின் ஒவ்வொரு குழந்தையையும் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். அதிக தூரம் இருந்தாலும் சரி. அருகாமையில் இருந்தாலும் சரி, ஆனால் பாப்தாதாவின் உள்ளத்தில் வீற்றிருக்கக் கூடியவர்கள். ஏனென்றால் ஒவ்வொரு குழந்தையின் உறுதிமொழியாவது எங்களது உள்ளத்தில் பாபா இருக்கின்றார். நாங்கள் பாபாவின் உள்ளத்தில் இருக்கின்றோம் எனவே பாபாவினுடைய இயர் பெயர் திலாராம் என்பதாகும். நல்லது.

கர்நாடகத்தினர் அதிகம் பேர் வந்துள்ளனர். சேவையினுடைய பாகத்தையும் நன்றாகச் செய்துள்ளார்கள். மதுபன் வாசிகளுக்கும் கூட பாப்தாதா முக்கியமாக கீழே மேலே மதுபன் வாசிகளுக்கும் பலகோடி மடங்கு அன்பு நினைவுகளைச் கூறுகிறார். ஏனெனில் எவ்வளவு பேர்

அதிகரித்தாலும் சேவை நன்றாக உள்ளது. ரிசல்ட் நன்றாக உள்ளது. எனவே களைப்பில்லாது, அன்போடு அனைவரையும் ஏற்றுக் கொள்கின்றனர் என்பதை பாப்தாதா பார்த்தார். இங்கே இருப்பவர்களானாலும் சரி. சமைத்தவர்கள். பரிமாறியவர்கள் எந்தவித சேவை செய்தவர்களானலும் சரி, அனைவருக்கும் சேவை செய்தவர்களுக்கு, உதவி அளித்தவர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் பாபா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். நல்லது.

**4-துறைகள் -கலை மற்றும் கலாச்சாரம், அறிவியல் மற்றும் பொறியாளர், கல்வி மற்றும் அரசியல் துறையினர்:** நல்லது. அனைவரும் எழுந்திருங்கள். ஒவ்வொரு துறையினரும் தம்தம் லட்சியத்தை கொண்டுள்ளனர். பாப்தாதா உற்சாகம், ஆர்வத்தைப் பார்த்து மிகுந்த குஷி அடைகின்றார். ரிசல்ட்டை கூட பார்க்கின்றார். ஒவ்வொரு துறையும் அனேக நிகழ்ச்சிகளை செய்து கொண்டிருப்பது பாப்தாதாவிடம் வந்துள்ளது. மிக நன்றாகச் செய்துள்ளனர். ஆர்வத்துடன் செய்துள்ளனர். மேலும் செய்ய இருக்கும் விவரமும் பாப்தாதாவை வந்தடைகின்றன. என்னென்ன நிகழ்ச்சிகளை திட்டமிட்டுள்ளனரோ நன்றாகவே செய்துள்ளனர். மிகவும் ஆர்வத்துடன் செய்துள்ளனர். அவைகளை நடைமுறையில் செய்து பாப்தாதாவின் முன்னால் அந்த ரிசல்ட்டின் கூடவே ஏதேனும் உதாரணத்தையும் (வாரிசு, மைக்) ஒவ்வொரு துறையும் இங்கே (மதுபன்) கொண்டு வரும். நான்கு துறையைச் சார்ந்தவர்களும் அதிகம் பேர் உள்ளனர். கை தூக்குங்கள் பாப்தாதா அனைவரையும் அருகாமையில் பார்த்துக் கொண்டிருக்கின்றார். இப்பொழுது ஒவ்வொரு துறையும் ரிசல்ட்டை கணிக்கட்டும். அதாவது, எப்பொழுதிலிருந்து துறையின் சேவை செய்துள்ளனரோ அப்போதிலிருந்து இது வரை வாரிசு மற்றும் மைக் எத்தனை பேர் ஆகியுள்ளனர், மேலும் எவ்வளவு ஈஸ்வரிய மாணவர்கள் ஆகியுள்ளனர். ஒவ்வொரு துறையும் உற்சாகத்துடன் செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் பாப்தாதா இந்த ரிசல்ட்டைப் பார்க்க விரும்புகிறார். மேலும் பாப்தாதா வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறார், ஏனெனில் ஒவ்வொரு துறையும் ஒன்று மற்றதைவிட முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது. மேலும் சேவையில் புதிய புதிய திட்டங்களையும் தீட்டுகிறார்கள். எனவே அப்படிப்பட்டவர்களுக்கு பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவித்துக்

கொள்கிறார். கல்வித் துறையினர் விசேஷமான ஆடை கூட அணிந்து வந்துள்ளார்கள். நல்லது.

விஞ்ஞானம் மற்றும் பொறியாளர்கள் துறையினர்: எழுந்திருங்கள் (அவர்களுக்கு இப்போது வெள்ளி விழா) நல்லது. பாப்தாதா விசேஷமாக ஒவ்வொரு குழந்தையும் பார்க்கவும் செய்கிறார். வாழ்த்தும் தெரிவிக்கின்றார்.

75-ஆண்டு பவள விழா யக்ஞத்தினுடையது, இவர்களுக்கு வெள்ளி விழா. செய்து கொண்டே முன்னேறுங்கள், பறந்து செல்லுங்கள். கடைசியில் அந்த நாளும் வரும். அனைவருமே கூறுவார்கள், நமது பாபா வந்து விட்டார் என்று.

இப்பொழுது எந்தெந்த துறையினர் இருக்கின்றனரோ அதில் என்னுடைய பாபா வந்து விட்டார் என்று கூறக் கூடியவர்களை அப்படிப்பட்டவர்களின் பெயரை பாப்தாதாவிடம் அனுப்பி வைக்க வேண்டும். எவ்வளவு சேவை செய்து எவ்வளவு பேர் புதியாக வந்துள்ளனரோ அவர்களில் என்னுடைய பாபா வந்துள்ளார் என்று எத்தனை பேர் கூறுகிறார்களோ அவர்களை அனுப்புங்கள், பிறகு பாப்தாதா பரிசு தருவார். இப்பொழுது இந்த சேவையை கோலாகலமாகச் செய்யுங்கள். இம்மாதிரி புருஷார்த்தம் செய்யக்கூடியவர்கள் வருவார்கள். பிரத்யட்சம் செய்ய வேண்டும் அல்லவா? துக்கமானவர்களை சுகமாக ஆக்க வேண்டும், இந்த பாரத தேசத்தை சொர்க்கமாக ஆக்கியே தீர வேண்டும். அவ்வாறு எப்பொழுது ஆக்குவீர்கள். அதற்கு எவ்வளவு நேரம் வேண்டும். எவ்வளவு நேரம் வேண்டும்? சொல்லுங்கள். யார் யார் துறைகளுக்கு நிமித்தமாக உள்ளீர்களோ அவர்கள் முன்னால் வாருங்கள்.

அனைவரையும் மேடைக்கு அழைத்தார். இதில் பாருங்கள் (இந்த முறை அண்ணாமலை பல்கலைக்கழத்தின் மூலம் பட்டம் அளிப்பு விழா எம்.எஸ்.சி. பட்டம் தருவர்) பாப்தாதா இப்பொழுது என்ன சொன்னாரோ தற்போது அம்மாதிரி வாரிசுகளை தயார் செய்யுங்கள். இவர்கள் தலையில் (பட்டம் அளிப்பு) தொப்பி அணிந்துள்ளனர். அதுவல்ல, ஆனால் வாரிசுகளை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொருவருக்கும்

வாரிசுகளை ஏற்படுத்தும் பொறுப்பு உள்ளது. ஆங்காங்கு சில மைக்குகளை உருவாக்கியுள்ளனர் ஆனால் வாரிசுகளை உருவாக்க வேண்டும். இதில் முன்னால் வாருங்கள். எந்த துறை வாரிசுகளை உருவாக்குவதில் முதல் நம்பரில் வரும். தற்போது வாரிசுகளை உருவாக்கும் சீசன் ஆகும். மேலும் அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். மேலும் வாரிசு ஆக்குங்கள். சகயோகிகளாக அதிகம் பேர் ஆகியுள்ளனர் ஆனால் வாரிசுகளையே ஏற்படுத்துங்கள். கேட்கும்போதே உற்சாகம் பிறக்கும் அளவு முன்னுதாரணமாக ஆக வேண்டும். சமயம் வந்து கொண்டிருக்கிறது. தற்போது காலம் கூட உங்களுக்கு உதவி செய்யும். ஏனெனில் துக்கம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. (தற்போது அதிக சகயோகம் அளித்து வருகின்றனர்) சகயோகம் என்னவோ கொடுக்கின்றனர் ஆனால் அவர்களும் தாங்களே முன்னால் வர வேண்டும். அவ்வாறு ஆகும். நல்லது.

இரட்டை வெளிநாட்டு சகோதர சகோதரிகளுடன்: இரட்டை வெளிநாட்டினர் என்பதில் அர்த்தம் இரட்டை விமானத்தில் பறப்பவர்கள். இரட்டை விமானம் என்றால் வினாடியில் எந்த ஸ்திதி வேண்டுமோ அந்த ஸ்திதி வேண்டுமோ அந்த ஸ்திதியில் நிலைத்திருப்பது. அம்மாதிரி அப்பியாசம் உள்ளதா? எந்த நேரத்தில் எந்த ஸ்திதி விருப்பமோ அதில் பறக்கும் கலையின் அனுபவத்தின் வந்து விடுங்கள். இந்த அப்பியாசம் சரியான சமயத்தில் வேலைக்கு உதவும். எந்த சமயத்தில் விருப்பமோ அந்த சமயத்தில் அந்த ஸ்திதி நடைமுறையில் வந்து விடும். இரட்டை வெளிநாட்டினர் அல்லவா நீங்கள் ஆக புருஷார்த்தம் கூட இரட்டையாக செய்வீர்கள் அல்லவா? செய்து கொண்டும் இருக்கின்றனர். பாப்தாதாவிடம் நல்ல நல்ல செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. சேவையினுடைய சமாச்சாரமும் வந்து கொண்டிருக்கின்றன. சேவையும் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. நிமித்தமாக இருக்கக்கூடிய நல்ல நல்ல ஆத்மாக்களும் உருவாகிக் கொண்டிருக்கின்றனர். எனவே இரட்டை வெளிநாட்டினருக்கு பாப்தாதா இரட்டை வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறார். நல்லது. ஒவ்வொரு குரூப்பிலும் இரட்டை வெளிநாட்டினர் யாரேனும் இருக்கின்றனர். மிக நல்லபடியாக தங்களது பிராயண திட்டத்தை அமைத்துள்ளனர். ஆக. இரட்டை வெளிநாட்டினர் இப்போது வாரிசுகளின் எண்ணிக்கையை உருவாக்க வேண்டும்.

ஒவ்வொரு சென்டரிலும் எவ்வளவு புதிய வாரிசுகள் உருவாகியுள்ளனர்? நீங்களோ இருக்கத்தான் செய்கிறீர்கள் ஆனால் பாப்தாதா உங்கள் மூலம் வாரிசுகளை எதிர்பார்க்கின்றார். நல்லது.

இப்பொழுது எங்கே அமர்ந்திருந்தாலும் சரி, அவர்கள் டி.வி.யில் பார்த்துக் கொண்டிருந்தாலும் சரி. அல்லது இங்கே எவ்வேறு இடங்களில் இருந்தாலும் சரி, அவர்களும் டி.வி. பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு குழந்தைகளுக்கும் இன்று பாப்தாதா தீவிர புருஷார்த்தாம் என்ற பட்டத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றார். இந்த பட்டத்தை சதா நினைவில் கொள்ள வேண்டும். யாரேனும் நீங்கள் யார் என எவரேனும் கேட்டால் தீவிர புருஷார்த்தி என்று இதையே கூறுங்கள். சரிதானே! அனைவருக்கும் சம்மதம் தானே? இப்பொழுது தொய்வான புருஷார்த்தம் சரி வராது, நேரம் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. எனவே தற்போது தீவிர புருஷார்த்தியாக ஆக வேண்டும். காலத்தின் அழைப்பு தீவிர புருஷார்த்தி ஆகுக! ஆக அனைத்துக் குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் மிக அன்பு நினைவுகள் மற்றும் தீவிர புருஷார்த்தி என்னும் பரிசையும் வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

முதல் முறையாக வந்திருப்பவர்களுடன்: நல்லது. முதன் முறையாக வந்திருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதா விசேஷமாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். பாப்தாதா குழந்தைகளாகிய உங்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். ஏன் மகிழ்ச்சி அடைகின்றார். ஏனெனில் நீங்கள் அனைவரும் இறுதி நேரத்திற்கு முன்பாக வந்து சேர்ந்து விட்டீர்கள் எனவே வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். உங்களுடைய உரிமையை எடுத்துக் கொள்ளும் அதிகாரிகளாகி விட்டீர்கள். எனவே இன்று பாப்தாதா மீண்டும் மீண்டும் கூறுகிறார் நீங்கள் அனவைரும் தீவிர புருஷார்த்தி ஆக வேண்டும். தீவிர புருஷார்த்தி ஆகி, மிக வேகமாக முன்னேறிச் செல்ல முடியும், இந்த வரதானம் இப்பொழுது உங்களுக்குக் கிடைக்கக் கூடும். யாரெல்லாம் வந்துள்ளீர்களோ அவர்கள் அனைவரும் இதில் கவனம் செலுத்த வேண்டும். அதாவது சதா தினமும் முரளியை விதிப்படி படித்து வர வேண்டும். மேலும் கூடவே மன சேவை அல்லது சொல்லின் மூலம் சேவை செய்யக்கூடிய

பொன்னான வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆக வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள்!!!

தாதி ஜானகியுடன்: (பாபா நீங்கள் எவ்வளவு நன்றாக இருக்கின்றீர்கள்) நீங்களும் எவ்வளவு நன்றாக உள்ளீர்கள். அனைவரும் மிக நல்லவர்களாக ஆவார்கள். எந்த தடைகளும் இல்லாமல் யக்ஞம் நடந்து கொண்டிருக்கிறது. அனைவரும் நன்றாக நடந்து கொண்டிருக்கின்றனர். (தென் அமெரிக்காவில் சுற்றுச் சூழல் சம்மந்தமான மாநாட்டில் 50000-பேர் சேர்ந்துள்ளனர். அங்கு ஜெயந்தி சகோதரி மேலும் அவருடனிருப்பவரும் மிக நல்ல சேவை செய்து கொண்டிருக்கின்றனர்) அனைத்து குழந்தைகளின் செய்தியை கேட்டோம். மேலும் பாப்தாதா உளப்பூர்வமாக குறிப்பாக யார் நிமித்தமான குழந்தைகள் ஆகியுள்ளனரோ, சகோதரர்களானாலும் சரி அவர்களுக்கு மிகமிக அன்பு நினைவுகளைக் கொடுக்கின்றார். நல்ல தைரியம் வைத்துள்ளனர். அந்த நாளும் இறுதியாக வந்து சேரும். நீங்கள் கொண்டு வருவீர்கள். ஆஹா, ஆஹா என்று அனைவரும் ஆச்சரியப்படுவர்.

மொரீஷியஸின் செய்தி கூறப்படுகிறது: 2012-ஆண்டைப் பற்றி பாப்தாவினுடைய பிரேரணைகளை அவர்கள் கேட்டுள்ளனர்: பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் மீதும் பாப்தாதாவின் எதிர்பார்ப்பு உள்ளது. சிரேஷ்டத்திலும் சிரேஷ்டமானது. ஒவ்வொரு குழந்தையும் பாபாவினுடையவராகி பிறரையும் அவவாறு ஆக்குவார்கள். தற்போது தீவிர புருஷார்த்த சேவையிலும் தாரணையிலும் இவ்விரண்டிலும் தீவிர புருஷார்த்தி!

(ஆந்திர பிரதேசத்தில் மிக நல்ல சேவை நடந்துள்ளது) பாப்தாதா கூறினார் அல்லவா, எங்கெல்லாம் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளனரோ நன்றாகவே செய்துள்ளனர், நாலா புறங்களிலும் மிக நன்றாக செய்துள்ளனர்.

ருக்மணி தாதியுடன்: இப்பொழுது மருந்தை சரியாக எடுத்துக் கொள்கிறீர்களா? விரைவில் சரியாகி விடுவீர்கள் ஆனால் ஏதேனும் செய்தாக வேண்டும். வேறு எந்த விசயத்தைப் பற்றியும் நினைக்க

வேண்டாம். பிறரையும் உங்களைப் பற்றி நினைக்க விடாதீர்கள். நீங்களும் நினைக்காதீர்கள்.

திருமதி ஊர்மினா சிங் மேதகு ஆளுநர் ஹிமாசல பிரதேஷ் அவர்களுடன்: மிகவும் நன்றாகப் செய்துள்ளீர்கள். தாய்மார்களுக்கு மரியாதை செய்துள்ளீர்கள். தாய்மார்கள் எவ்வளவு முன்னேறிச் செல்கின்றார்களோ அவ்வளவு பாரத தேசத்திற்கு நன்மை ஏற்படும். நீங்கள் அதற்கு நிமித்தமாகியுள்ளீர்கள். தற்போது அனைவரையும் மன அழுத்தத்திலிருந்து விடுதலை செய்யுங்கள். உங்களது நகரத்தை டென்ஷன் இல்லாத நகரமாக்குங்கள். தியான பாடமுறை டென்ஷன் இல்லாமல் ஆக்கக்கூடியது. எவ்வளவு தூரம் முடியுமோ அந்த மாதிரி ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யுங்கள். அதில் உங்களது தொடர்பில் இருக்கக்கூடியவர்கள் தியானத்தின் மூலம் டென்ஷனுக்கு விடை கொடுக்கட்டும். அப்பொழுது தானே நாட்டிற்கு நன்மை ஏற்படும். மன இறுக்கத்தின்போது வெற்றிக் கிடைப்பதில்லை. டென்ஷன் இல்லாத போது என்னென்ன திட்டம் தீட்டுகிறீர்களோ அதில் தான் சக்தியுள்ளது. எனவே நிமித்தமாகுங்கள். டென்ஷன் இல்லாமல் ஆக்குங்கள்.

கர்நாடகத்தின் திரைப்பட கலைஞர் ஜெயந்தி அவர்களுடன்: எப்படி மனதை (பிறருடைய) பார்க்க வைக்கிறீர்களோ அவ்வாறு இப்பொழுது மனதில் டென்ஷன் இல்லாமல் ஆகுங்கள். அதற்கு இங்கே தியான பாடமுறை அளிக்கப்படுகிறது. அதை கேட்பீர்களா? உங்களுடன் கூடவே இருப்பவர்களுக்கும் மன இறுக்கத்தை விலக்கும் பாடமுறையை செய்வியுங்கள். அப்படியானால் என்ன ஆகும்? மன இறுக்கத்தை விலக்கும்போது பிற மக்களிடமும் அமைதியைப் பரப்புவீர்கள். இல்லையென்றால், மன இறுக்கத்தால் அமைதி மறைந்து போய் விடுகிறது. ஆக நீங்கள் உங்களுடன் கூட இருப்பவர்களையும் அவ்வாறு ஆக்குங்கள். இங்கே வந்துள்ளீர்கள், எனவே கொஞ்சம் இங்கே கற்றுக் கொண்டு செல்லுங்கள். பிறரையும் உங்களைப்போல் ஆக்குங்கள். பிறகு குரூப்பாக இங்கே அழைத்து வாருங்கள். நல்லது.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# 15.12.2011 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சதா மகிழ்ச்சியில் இருந்து கவலையற்ற இராஜாவாகுங்கள், தீவிர புருஷார்த்தியின் மூலம் சம்பன்னம் மற்றும் சமானமாகி கூடவே செல்வதற்குத் தயாராகுங்கள்!

இன்று பாப்தாதா கவலையில்லாத இராஜாக்களின் சபையைப் பார்த்துக் கொண்டிருந்தார். இந்த சமயத்தில் தான் இச்சபை கூடுகிறது. ஏனெனில் அனைத்து குழந்தைகளும் தனது கவலைகளை யெல்லாம் பாபாவிடம் கொடுத்து விட்டு பாபாவிடமிருந்து மகிழ்ச்சியை பெற்றுள்ளனர். இந்த சபையானது இப்பொழுது தான் (சங்கம யுகத்தில்) கூடுகிறது. நீங்கள் ஒவ்வொருவரும் கூட அதிகாலையில் இருந்தே எழுந்து காரியங்களைச் செய்து கொண்டு கவலையில்லாமல் மேலும் இராஜாவாக நடந்து கொண்டிருக்கின்றீர்கள் இல்லையா இந்த கவலையற்ற வாழ்க்கை எவ்வளவு அன்பானதாக உள்ளது. கவலையில்லாத தன்மையினுடைய அடையாளம் எப்படித் தென்படுகிறது? ஒவ்வொருவரின் நெற்றியில் ஒளி ஆத்மாவானது பிரகாசிப்பது தென்படுகிறது. இந்த கவலையில்லாத வாழ்க்கை எப்படி உண்டானது? பாபா அனைத்து குழந்தைகளின் வாழ்க்கை யிலிருந்தும் கவலையை எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியை தந்துள்ளார். எவரது வாழ்க்கையில் மகிழ்ச்சியில்லையோ, கவலை உள்ளதோ அவர்களது நெற்றியில் ஒளி பிரகாசிப்பதில்லை. அவர்களது நெற்றியில் பாரத்தின் ரேகையானது தென்படுகிறது. ஆக சொல்லுங்கள் உங்களுக்கு எது பிடித்தமானதாக இருக்கிறது. ஒளியா? அல்லது பாரமா? ஏதேனும் பாரமாக இருந்தால் பாரம் என்றால் கவலை. அதை பாபா விற்குக் கொடுத்து விட்டு மகிழ்ச்சியை எடுத்துக் கொள்ள முடியும். உங்கள் அனைவருக்கும் கவலையில்லாத வாழ்க்கை பிடிக்கிறது தானே?

பார்ப்பவர்கள் கூட கவலையில்லாத வாழ்க்கையை விரும்புகின்றார்கள்.

ஆக பாப்தாதா இன்று நாலாபுறமுள்ள குழந்தைகளின் எதிரில் இருந்தாலும் சரி. அல்லது எங்கு அமர்ந்திருந்தாலும் சரி, குழந்தைகளின் நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஒளியாகத் தென்படுகிறது. ஆக சதா கவலையில்லாது இருக்கின்றீர்களா? அல்லது அவ்வப்போது ஏதேனும் கவலை வந்து விடுகிறதா? இன்னும் ஏதேனும் கவலையிருக்கிறதா? பாபா இயற்கையை வென்றவர்கள், விகாரத்தை வென்றவர்களாகவும் ஆக்கியுள்ளார். அப்படி என்றால் கவலை எப்படி வரும்? கையை உயர்த்துங்கள். கவலையில்லாதவர்களாக ஆகியுள்ளீர்களா? அதுவும் நிரந்தரமாக? ஆகியுள்ளீர்களா அல்லது அவ்வப்போது தானா? அவ்வப்போது என்பவரும் கூட இருக்கின்றார்கள். கையை உயர்த்தவில்லை. பாப்தாதா கூட பார்க்க விரும்ப வில்லை. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் கவலையில்லாத இராஜாவாகத் தான் பார்க்க விரும்புகின்றார். அவ்வப்போது என்றிருப்பவர்கள் கூட மிகவும் எளிதான விதியின் மூலம் ஏதோ கொஞ்சம் கொஞ்சம் வருகின்ற கவலையைக் கூட எனது என்பதிலிருந்து உனது என்று மாற்றி விட வேண்டும். இந்த எல்லைக்குட்பட்ட எனது என்பது உனது என்று மாற்றுவது மிகவும் எளிதான விதி. நீங்கள் என்னுடைய பாபா என்று கூறுகின்றீர்கள் அப்படி என்றால் எனது என்பது என்ன? எல்லைக்குட்பட்ட எனது என்பது முடிந்து விட்டதல்லவா? எனது பாபா என்பதாகி விட்டது. அனைவரும், என்னுடைய பாபா என்பதாக இருக்கிறது. எல்லோரும் உளப்பூர்வமாகக் கூறுகிறீர்கள் தானே அன்பான பாபா, இனிமையான பாபா, ஆக எனது என்பதை உனது என்று மாற்றுவதில் கஷ்டமா? வித்தியாசம் எ மற்றும் உ. இவ்வளவு சிறிய வித்தியாசம் தான். எல்லாமே உனது என்று சங்கல்பம் எடுத்துக் கொண்டு விட்டீர்கள். அப்படி என்றால் என்னுடையது என்று என்ன இருக்கிறது? என்னுடைய பாபா!

ஆக பாப்தாதா பார்த்தார். பெரும்பாலான குழந்தைகள் எல்லைக்குட்பட்ட எனது எனது என்பதை உனது என்று ஆக்கியுள்ளார்கள். எனவே கவலையில்லாத இராஜாக்களாக ஆகியுள்ளனர். ஆக பாப்தாதா குழந்தைகளை கவலையில்லாத

இராஜாக்களின் சொரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கின்றார். அதில் பாருங்கள் பக்தி மார்க்கத்தில் கூட உங்களுடைய சித்திரங்களை வரைகின்றார்கள். அதில் இரட்டை கிரீடங்களைக் காண்பிக்கின்றனர், ஒன்று ஒளியின் கிரீடம், ஏனெனில் அது கவலையில்லாத இராஜாக்களின் அடையாளம் -நெற்றியில் ஒளி பிரகாசிக்கின்றது. அடுத்த கிரீடம் விகாரங்களின் மீது வெற்றிக கண்டுள்ளீர்கள். அதற்காக எனவே கிரீடத்தைக் காண்பித்துள்ளனர். ஆக இந்த கவனத்தைக் கொடுங்கள். பாப்தாதா கவலைகளை எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியைத் தந்துள்ளார் என்றால் என்னவாக ஆகியுள்ளீர்கள்? கவலையில்லாத இராஜாக்கள் இராஜாவாக ஆகியுள்ளீர்களா? ஆக சிம்மாசனம் கூட வேண்டும் தானே? ஆக பாப்தாதா மூன்று சிம்மாசனத்தின் எஜமானராக ஆக்கியுள்ளார். மூன்று சிம்மாசனம் என்னவென்று அறிவீர்களா? ஒரு சிம்மாசனம் பிருகுட்டி. அது அனைவருக்கும் உள்ளது ஆனால் அடுத்த சிம்மாசனம் பாப்தாதாவின் உள்ளம் எனும் சிம்மாசனம், மூன்றாவது உலக மகாராஜனின் சிம்மாசனம். ஆக உங்கள் அனைவருக்கும் இந்த மூன்று சிம்மாசனங்களும் கிடைத்துள்ளன தானே? அனைத்திலும் சிரேஷ்டமானது பாப்தாதாவின் உள்ளம் என்னும் சிம்மாசனம். ஆக சோதனை செய்து பாருங்கள். சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்றீர்களா? ஏனெனில் பாப்தாதாவின் உள்ளம் எனும் சிம்மாசனத்தில் யார் அமர்கின்றார்களோ, யார் சதா காலமும் தானும் கூட பாப்தாதாவை தனது உள்ள சிம்மாசனத்தில் அமர்த்தியுள்ளார்களோ, யார் நிரந்தரமாக, சிரேஷ்டமான ஸ்திதியில் மாஸ்டர் சர்வ சக்திவான் நிலையில் இருக்கின்றார்களோ அவர்கள்! ஆக சதா சிம்மாசனத்தில் இருக்கின்றீர்களா என்று சோதனை செய்து பாருங்கள் சதா சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்றீர்களா? அல்லது அவ்வப்போது மண்ணில் வந்து விடுகிறீர்களா? அதாவது இந்த தேக அபிமானம் மண் போன்றதாகும். பல காலம் மண்ணில் இருந்துள்ளீர்கள், எனவே அவ்வப்போது இம்மாதிரி மண்ணில் போய் அமர்ந்து விடுவதில்லையே?

ஆக பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் சமயத்தினுடைய அருகாமையை ஜாடைமாடையாகக் (இஷாரா) கூறிக் கொண்டிருக்கின்றார். திடீரென்று (அச்சானக்) என்று சொல்லக் கூடிய பாகத்தை எண்ணிப் பாருங்கள். அதற்காக இந்த சமயம் சங்கமயுக

சமயத்திற்கு மிகமிக முக்கியத்துவம் தர வேண்டும். ஏனெனில் இந்த ஒரு பிறவியில் அநேக பிறவிகளின் பிராப்திகளை அடைய வேண்டும். எனவே பாப்தாதா ஜாடைமாடையாகக் கூறியுள்ளார். இந்த சங்கம யுகத்தில் சமயத்திற்கு இரண்டு வகையில் கவனம் தர வேண்டும். இந்த இரண்டு விஷயங்கள் என்ன வென்று தெரியுமா? ஒன்று சமயம், மற்றொன்று சங்கல்பம். பாப்தாதாவிற்கு வீணான சங்கல்பத்தினை சங்கல்பத்தின் மூலமாக கொடுப்பதற்குத் தைரியமாக முன் வந்தீர்கள். ஆக சோதனை செய்து பாருங்கள். தைரியம் நிரந்தரமாக இருக்குமா? ஏனெனில் தைரியமான குழந்தைகள், ஒரு தடவை என்றாலும் தந்தை ஆயிரம் தடவை உதவியாளராக இருக்கிறார். எனவே இப்போது என்ன நினைக்கிறீர்கள்? யார் தைரியமாக பாபாவிற்கு சங்கல்பம் செய்து கொடுத்தார்களோ அது நிரந்தரமாக உள்ளதா? ஏனென்றால் வீணான சங்கல்பங்களில் சமயம் வீணாகிறது. மேலும் உங்களது இந்த சமயத்தின் பிரகாரம் காரியம் உலகத்தின் ஆத்மாக்களுக்கு செய்தியை வழங்குவதற்காகத்தான். ஆக வீணான எண்ணங்களை முடித்து விட வேண்டும். அப்பொழுது தான் துக்கமான, அசாந்தியாக இருக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு சுகம் சாந்தியை அனுபவம் செய்விக்க முடியும். பாப்தாதாவிற்கு துக்கமான குழந்தைகளைப் பார்த்து மிகவும் இரக்கம் ஏற்படுகிறது. உங்களுக்கும் கூட உங்களது சகோதர, சகோதரிகளைப் பார்த்து இரக்கம் வருகிறது தானே?

பாப்தாதா பார்த்தார் -தற்சமயத்தில் அனைவருக்கும் மிகுந்த ஆர்வம் உள்ளது. திட்டங்களையும் தீட்டினீர்கள், நடைமுறையும் படுத்தியுள்ளனர். இந்த 75-ம் ஆண்டு பவள விழாவினை விமரிசையாக கொண்டாடி வருகின்றனர். பாப்தாதாவும் அதையே விரும்புகின்றார். நல்ல நல்ல நிகழ்ச்சிகள் என்னமோ செய்துள்ளனர். அதற்காக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார் ஆனால், தற்போது சமய அனுசாரம் சீக்கிரம் சீக்கிரமாக அவர்களை வாரிசு ஆக்குங்கள். அந்த ஆத்மாக்கள் கொஞ்சத்திற்கு கொஞ்சமாவது ஆஸ்திக்கு அதிகாரி ஆகட்டும். நல்லது. மிக நன்றாக இருக்கிறது என்று பல பேர் கூறுகின்றார்கள். பாப்தாதா கூட இந்த குழந்தைகளின் இந்த ரிசல்ட் பார்த்தார். மேலும் குழந்தைகள் மீது பாபாவிற்கு குஷி தான். மிகவும் உளப்பூர்வமாக செய்துள்ளார்கள். மேலும் இப்போது சமயத்தின் அனுசாரம் மிகவும் ஆர்வத்தோடு கேட்கின்றார்கள். இந்த அளவிற்கு

வித்தியாசம் ஏற்பட்டுள்ளது தான்! மிக நன்றாக இருக்கிறது என்று சொல்வது மட்டும் அல்லாமல் ஏதேனும் ஆஸ்திக்கு அதிகாரியாக அவர்களை ஆக்குங்கள். பாப்தாதா முன்பு கூட ஜாடையாக கூறினார். இப்பொழுதும் சமய அனுசாரம் தீவிர புருஷார்த்தியாக ஆவதற்கான அவசியத்தை எடுத்துரைக்கின்றார். தீவிர புருஷார்த்தி ஆவதற்கு முக்கியமான புருஷார்த்தம் என்னவென்றால், ஒரு வினாடியில் பிந்தி அதாவது முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஒரு வினாடி மற்றும் பிந்தி, இரண்டும் சமமாக இருக்க வேண்டும். ஆக இப்பொழுது பார்த்தார். குழந்தைகளின் கவலையில்லாத ராஜா ரூபத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றார். இப்பொழுது இந்த ரூபத்தை சதா அனுபவம் செய்யுங்கள். எது என்ன நடந்தாலும் எனது என்பதை உனதாக மாற்றி விடுங்கள். இன்று பார்த்தார். இன்று வியாழக்கிழமை குருவார். குரு தினம். இன்று அநேக குழந்தைகள் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்துள்ளனர். ஆக பாப்தாதா கூறினார் -வாரத்தில் இரண்டு தினங்கள் முக்கியமானது, ஒன்று வியாழக்கிழமை, மற்றொன்று ஞாயிற்றுக்கிழமை. வியாழக்கிழமை தினம் குருவின் தினமாகும். குருவிடமிருந்து என்ன கிடைக்கின்றது? வரதானம். வியாழக்கிழமை -குரு தினத்தன்று வரதானம் கிடைக்கும் விசேஷ தினமாகும். இந்த ரூபத்தில் குரு தினம் கொண்டாடுங்கள். ஏதேனும் விசேஷமான வரதானத்தை அமிர்த வேளையில் இருந்து புத்தியில் கொண்டு வாருங்கள். வரதானங்கள் பல உள்ளன ஆனால் விசேஷமாக ஒரு வரதானம் தனக்காக புத்தியில் வைத்து சோதனை செய்து பாருங்கள். வரதான தினத்தன்று வரதான சொரூபமாக வேண்டும். வரதானத்தைத் திருப்பி சொன்னால் மட்டும் போதாது ஆனால் வரதான சொரூபமாக வேண்டும். சோதனை செய்துப் பாருங்கள். இன்று எவ்வளவு சமயம் வரதான சொரூபத்தில் இருந்தேன்? ஞாயிற்றுக் கிழமை விசேஷமாக உலகில் விடுமுறை தினமாக உள்ளது. ஆக அந்த ஞாயிற்றுக் கிழமையைக் கொண்டாடுங்கள். தனது வாழ்க்கையில் சங்கல்பத்தில் கூட பலவீனம் இருந்தால், சொப்பன அளவில் கூட பலவீனம் ஏதும் இருந்தால் அதற்கு விடை கொடுத்து விட வேண்டும். ஆக உலகினர் இந்த இரண்டு நாட்களிலும் நன்றாகக் களிக்கின்றனர். அப்படி நீங்களும் கூட இந்த இரண்டு நாட்களை விசேஷமாக இந்த இலட்சியத்தை மற்றும் இலட்சணத்தைக் கவனத்தில் கொண்டு வாருங்கள். வெறும் இலட்சியம் மட்டும் போதாது. இலட்சியத்தின் கூடவே

இலட்சணத்திலும் கவனம் வைத்திருங்கள். பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் கூடவே அழைத்துச் செல்வதற்கான உறுதி அளித்துள்ளார். இதற்காக, கூடவே செல்வதற்கான ஏற்பாடு என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள். பாபா ஒரு வினாடியில் அசரிரி ஆகி விடுவார் ஆனால் நீங்களும் உறுதிமொழி அளித்துள்ளீர்கள், பாபாவும் கூடவே செல்வோம் என்று உறுதி மொழி கொடுத்துள்ளார், ஆக அதற்காக தயாராகிக் கொண்டிருக்கின்றீர்களா என்று சோதனை செய்துப் பாருங்கள். அதன் ஏற்பாட்டை செய்யுங்கள். ஒரு வினாடியில் முற்றுப்புள்ளி சம்பன்னம் மற்றும் சம்பூர்ணமாகிச் செல்ல வேண்டும். இம்மாதிரி ஏற்பாடு செய்துள்ளீர்களா? கூடவே செல்ல வேண்டும் அல்லவா? தலையை அசையுங்கள். கூடவே செல்ல வேண்டும் அல்லவா? நல்லது. உறுதி தானே? அவரது கையில் உங்கள் கையைத் தர வேண்டும். அவருக்குச் சமமாக ஆக்குவது, ஆக சோதனை செய்யுங்கள். சமயமும் திடீரென்று வந்து விடும். அந்த அளவு தயராகியுள்ளீர்களா? கூடவே செல்லும் அளவிற்கு.

தந்தைக்கு குழந்தைகள் மீது அளவு கடந்த அன்பு உள்ளது. ஒருவரைக்கூட அழைத்துச் செல்லாமல் விட்டுவிட்டுச் செல்ல முடியாது. கூடவே செல்வோம். கூடவே இராஜா சம்பிரதாயத்தில் கூட வர வேண்டும். ஆக அந்தளவு தயார் செய்துள்ளீர்களா? தயாராகி உள்ளீர்களா? அதற்கு கை தூக்குங்கள். உயரமாகக் கை தூக்குங்கள். நல்லது நாளையே வினாசம் ஆகி விட்டாலும் தயாரா? ஆனால் தனது சேவையை முடித்து விட்டீர்களா? சேவை இன்னும் பாக்கியுள்ளதா? சேவை முடிந்து விட்டதா? செய்தியானது அனைவருக்கும் சென்று சேர்ந்து விட்டதா? உங்கள் தெருவிலேயே பாருங்களேன்! நீங்கள் ஒவ்வொருவருக்கும் பாபா வந்துள்ளார். ஆஸ்தியைப் பெற வேண்டும் என்றால் பெற்றுக் கொள்ளுங்கள் என்ற செய்தியை தந்துள்ளீர்களா? இப்பொழுது அதற்காக திட்டம் திட்டிக் கொண்டிருக்கின்றனர். பாப்தாதா சொன்னார். ஒவ்வொரு வீட்டிற்கும் செய்தியைத் தர வேண்டும். அதற்கான திட்டத்தைத் தீட்டுங்கள். நல்லது. செய்தியைக் கொடுத்துதானே ஆக வேண்டும். இல்லையெனில் நம் மீதே புகார் வரும். திட்டங்களைத் தீட்டியுள்ளீர்கள் தானே? (மீடியா துறையினரை எழச் செய்தார் எழுந்திருங்கள். நல்லது. இந்த புகார்களை அகற்றுங்கள். ஏனெனில் நடப்பது என்பது திடீரென்று தான் நடக்கும். எனவே

திட்டத்தை நடைமுறையில் கொண்டு வாருங்கள். உங்களுக்குள் ஆலோசனை செய்து சீக்கிரமாக செயல்படுங்கள். நேரம் ஆகிக் கொண்டே யிருக்கின்றது, பிறகு உற்சாகம் கூட சற்று குறைந்து விடும். மற்றபடி பாப்தாதா விற்கு இது விருப்பம் தான். அதாவது, எந்த ஒரு வீட்டிலும் இந்த புகார் இருக்கக் கூடாது. பாபா வந்தார். போயும் விட்டார். எங்களுக்குத் தெரியவில்லை. எங்களுக்குக் கிடைக்காமல் போய் விட்டது. இதைச் செய்வதற்கு எல்லோருக்கும் ஆர்வம் தானே? சேவை செய்து புகார்களை அகற்ற வேண்டும். உற்சாகம் உள்ளது என்றால் பாப்தாதாவின் உதவியும் கூட இருக்கின்றது. நல்லது. அமருங்கள்.

பாப்தாதாவின் உள்ளத்து ஆசையை அனைவரும் அறிவீர்கள். சமானமாகவும். சம்பூர்ணமாகவும். இந்த இரண்டு வார்த்தைகளையும் சதா சோதனை செய்யுங்கள். பாபாவின் இந்த ஆசையைப் பூர்த்தி செய்துள்ளோமா? ஏனெனில் பாப்தாதாவின் ஒவ்வொரு குழந்தை யையும் பாபாவினுடைய ஆசை நட்சத்திரங்களாக நினைக்கின்றார். ஒவ்வொரு குழந்தைக்கும் பாபாவிடம் அன்பு உள்ளது. இதையும் பாப்தாதா அறிவார். இவர்கள் அனைவரையும் மதுபனில் கொண்டு வருவது எது? இந்த அன்பு என்னும் ரயிலில் வருகிறார்கள். அன்பு என்ற விமானத்தில் ஏறி வருகின்றார்கள். ஆக பாபாவும் குழந்தைகளின் குழந்தைகளின் அன்பு என்னும் பாடத்தின் மீது திருப்தியாக, (குஷி) இருக்கின்றார் ஆனால் பாபா எதிர்பார்க்கக் கூடிய இரண்டு வார்த்தைகள் சமான நிலை, மற்றும் சம்பூர்ணம் இதனை பூர்த்தி செய்ய வேண்டும்.

இன்று எங்கு பார்த்தாலும் நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு உளப்பூர்வமாக சினேகத்தோடு கூடிய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார். நல்லது.

சேவா வாய்ப்பு இந்தூர் மற்றும் போபால்: வாழ்த்துக்கள்! இந்த சேவையினுடைய வாய்ப்பு மிக எளிதாகக் கிடைத்துள்ளது. இரண்டு மண்டலங்களும் உற்சாகம், ஆர்வத்தோடு சேவையிலும் புருஷார்த்தத்திலும் முன்னேறுகின்றனர். மேலும் ஒவ்வொரு குழந்தையும் தனது புருஷார்த்தத்தை தீவிரமாக்கி முன்னேறிக் கொண்டு செல்கின்றார்கள். பாப்தாதாவும் குஷி அடைகிறார். இந்த

வாய்ப்பும் கிடைக்கின்றது. அதன் சேவையில் பலனும் கிடைக்கின்றது. மேலும் சக்தியும் கிடைக்கின்றது. அனைவருடைய பார்வையும் எங்கே செல்கிறது? தற்போது எந்த மண்டலத்தினுடைய வாய்ப்பு, அந்த பார்வை செல்கிறது. மேலும் சேவை, சேவை என்பது மதுபனின் சேவை அதாவது சேவையின் பலன் மற்றும் சக்தி கிடைக்க வேண்டும். மிகவும் நன்றாகச் செய்துள்ளீர்கள். தடைகளற்ற சேவை செய்துள்ளீர்கள். அனைவருக்கும் திருப்தி என்னும் பழத்தை வழங்கினீர்கள். பாப்தாதாவிற்கு குஷி ஏற்படுகிறது. ஏனெனில் குழந்தைகள் மதுபனில் வந்து சேர்கின்றனர். எவ்வளவு பெரிய குடும்பத்தோடு சந்திப்பது, எவ்வளவு பெரிய குடும்பத்தின் சேவைக்கான நிமித்தமாவது, இது மிகப் பெரிய பாக்கியம் தானே ஆக தடைகளற்ற திருப்தியான பழத்தை சாப்பிட்டீர்கள். எனவே பாப்தாதாவும் விசேஷமாக இரண்டு மண்டலத்திற்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். நல்லது. ஒவ்வொருவர் மீதும் பாபாவின் பார்வை விழுகின்றது. மேலும் குடும்பத்தின் பார்வையும் விழுகின்றது. பிரத்யட்சமாக ஆத்மாவிற்கு குஷியும் கிடைக்கின்றது. குஷியாகச் செய்விக்கவும் செய்கின்றீர்கள். வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள்.

**கிராம முன்னேற்றம், பாதுகாப்புத் துறை மற்றும் வியாபாரத் துறையினர்களோடு:** நல்லது, ஒவ்வொருவரும் தங்கள் அடையாளங்களைக் கொண்டு வந்துள்ளீர்கள். அனைவருக்கும் குஷி ஏற்படுகிறது. மேலும் பாப்தாதாவிற்கும் ஒவ்வொரு துறையினைரையும் பார்த்து குஷி ஏற்படுகிறது. ஒவ்வொரு துறையினரும் ஏதேனும் புதுமையாகக் கண்டு பிடித்து தங்களது துறையின் சேவையை அதிகரித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை பாப்தாதா பார்க்கின்றார். மேலும் பாப்தாதா இந்த மூன்று துறையினரின் தனித்தனியான முடிவுகளைப் (ரிசல்ட்) பார்த்து குஷி அடைகின்றார். இந்த யோக சக்தியின் மூலமான சாகுபடியின் சேவையை அதிகரித்துக் கொண்டிருக்கின்றனர். மேலும் அரசாங்கம் வரை செய்தி சென்று சேருகிறது. அரசாங்கமும் குஷி அடைகிறது. அதாவது, இதன் மூலம் ஆத்மாக்களுக்கு லாபம் கிடைக்கின்றது. ஒவ்வொரு துறையும் நம்பர்-1 ஆக தென்படுகிறது. இந்த யோக சாகுபடியின் ரிப்போர்ட்டையும் பாப்தாதா பார்த்தார். அவர்களிடம் நல்ல ரிசல்ட் கொண்டு வாருங்கள் என்று பாபா கூறினார், யார் யார் நெருங்கிய சம்மந்தத்தில் வந்தனரோ

அவர்களின் லிஸ்ட் கொண்டு வாருங்கள் என்று கூறியிருந்தார். உடனே முடிவையும் பாபாவிடம் ஒப்படைத்த முதல் துறை இது தான். பாப்தாதா பார்த்தார், விதவிதமான தொடர்புகளில் இவர்கள் வந்துள்ளனர். மேலும் பிரம்மா குமாரிகள் அரசாங்கத்திற்கே உதவியாளர என்பதையும் பார்த்தார். எவ்வளவு அன்போடு இவர்கள் சேவை செய்கின்றனர் என்று நடைமுறையில் பார்க்கிறார்கள் அல்லவா? ஆக மூன்று துறையினரும் வாழ்த்துக்களுக்கு உரிய வகையில் சேவை செய்து கொண்டிருக்கின்றனர். வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள் இந்த சிறு சிறு குழந்தைகள் போன்ற பொம்மைகளை நன்றாகச் செய்துள்ளீர்கள். அனைவருக்கும் காண்பியுங்கள். (கிராம முன்னேற்ற துறையினர் பொம்மலாட்டங்களை செய்து காண்பித்தனர்) அனைவரும் மிகுந்த குஷி அடைவதை பாப்தாதா பார்க்கின்றார். தங்களது குஷியை குழந்தைகளின் உருவத்தில் காண்பித்துக் கொண்டிருக்கின்றனர். நல்லது. ஆக கிராம முன்னேற்ற துறையினரின் விளக்கம் மிக நன்றாக வந்துள்ளது. அவர்கள் எழுத்துப் பூர்வமாகவும் கொண்டு வந்துள்ளனர் ஆனால் கூடவே பிற இரண்டு துறையினரும் குறைந்தவர்கள் அல்ல. இம்மாதிரியே முன்னேறுங்கள். பிறரையும் முன்னேற்றம் அடையச் செய்யுங்கள். மேலும் உலகம் முழுவதும் தான் சேவாதாரியாக ஆகி உலகத்தை அதிலும் குறிப்பாக பாரத தேசத்தை சொர்க்கமாக, சுகம் நிறைந்ததாக நிச்சயமாக ஆக்குவோம் என்னும் செய்தியை பரப்பிக் கொண்டிருங்கள். பிரம்மாகுமாரிகள் இந்த உறுதிமொழியைப் பூர்த்தி செய்கிறார்கள். மேலும் சொர்க்கமாக ஆக்கியே தீருவார்கள். ஆக பாப்தாதா மூவருக்கும் தனித்தனியாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். வியாபரத் துறையினருக்கு (இது வெள்ளிவிழா) வியாபர துறையினர் எழுந்திருங்கள். நல்லது. தைரியமாக முயற்சி செய்துள்ளீர்கள். அதில் வெற்றியும் கிடைத்துள்ளது. மேலும் வெற்றி உங்களது பிறப்புரிமை ஆகும். பாப்தாதாவிற்குப் பிடித்தமாக உள்ளது. அதை இந்த வருடத்திலே மேலும் ஒவ்வொரு துறையிலும் பார்க்கின்றார். மூன்று பேருக்கும் வாய்ப்பாக இது இருக்கலாம் ஆனால் ஒவ்வொரு துறையும் எப்போது ஏற்பட்டதோ அப்பொழுதிலிருந்து சேவையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. இதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். இதற்காக பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். நல்லது.

**1500-டீச்சர்கள் (சகோதரிகள்) வந்துள்ளனர்:** டீச்சர்களை சதா நினைவு செய்கின்றார். அன்பு செலுத்துகின்றார். ஏனெனில் டீச்சர்கள் நிமித்தமாகியுள்ளனர். ஒவ்வொரு சகோதர சகோதரிகளை முன்னேற்றம் அடைய செய்வதற்காக. டீச்சர்களை பாப்தாதா குரு சகோதரர் என்கின்றார். குரு சகோதரர் என்பதன் பொருள் சமமாக இருப்பது. ஏனெனில் எப்படி பாப்தாதாவின் கடமையோ சதா பிஸியாக இருப்பது, இம்மாதிரி தகுதியான டீச்சர்கள் பாபாவிற்குச் சமமாக வெற்றியினுடைய சொரூபத்தை ஆக்கக் கூடியவர்கள். பாப்தாதாவிற்கு டீச்சர்களைப் பொருத்தமட்டில் சதா உள்ளதில் அன்பு உள்ளது. ஏன்? டீச்சர் என்றால் சதா சேவாதாரி, சதா பாபாவிற்குச் சமமாக ஆக்கக்கூடியவர்கள். மேலும் புதிது புதிதானவர்களை பாபாவிற்கு அறிமுகம் செய்வித்து அனுபவிகளாக்கி பாபாவினுடைய ஆஸ்திக்கு அதிகாரி ஆக்கக்கூடியவர்கள். ஆக பாப்தாதா டீச்சர்கள் மீது குஷி அடைகின்றார். மேலும் இந்த உள்ளத்து அன்பு, பாப்தாதாவினுடைய அன்பு இறை மாணவர்களின் உள்ளத்திலும் நிரம்பி அவர்களையும் பாபாவுடைய முழு ஆஸ்திக்கு அதிகாரி ஆக்குகிறது. பாபாவுடைய ஒவ்வொரு டீச்சரிலும் நம்பிக்கையுள்ளது. இந்த ஒவ்வொரு டீச்சரும் பாபாவினுடைய ஆசைகளை, பாபா என்ன விரும்புகின்றாரோ அவைகளை வெளிப்படுத்துவது மற்றும் செய்விப்பது, எனவே ஒவ்வொரு டீச்சருக்கும் பாப்தாதா பல கோடி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார்.

இரட்டை வெளிநாட்டு சகோதர சகோதரிகளிடம்: இரட்டை வெளிநாட்டினரை பாப்தாதா பார்ர்த்தார். சேவையில் பாரதத்தினரைவிட குறைந்தவர்கள் அல்ல. பாப்தாதா குஷி அடைகின்றார். ஒவ்வொரு வரும் தங்கள் தங்கள் இடங்களில் சேவையை அதிகரித்துக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் சுயம் தங்களையும் உற்சாகம், ஆர்வத்தில் கொண்டு செல்கின்றார்கள். இரட்டை வெளிநாட்டினரின் இது ஒரு சிறப்பு சம்ஸ்காரம் ஆகும். எதைச் செய்கிறார்களோ அதை உற்சாகம். ஆர்வத்தோடு முடிப்பார்கள் ஆனால் புருஷார்த்தத்தின் பக்கமும் கவனம் வைப்பார்கள். ஆக அனைவரும் தீவிர புருஷார்த்திகள் தானே கை உயர்த்துங்கள் தீவிர புருஷார்த்திகளா? நல்லது பிற அனைத்து தரப்பிலிருந்தும் மிக மிக வாழ்த்துக்கள் ஏன்?

தீவிர புருஷார்த்தம் என்றால் பாப்தாதாவின் ஆசைகளையும் முழுமையாக நடைமுறையில் கொண்டு வருபவர்கள். ஆக பாப்தாதா தீவிர புருஷார்த்தத்திற்கான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார். தீவிர புருஷார்த்திகள் மேலும் சதா தீவிர புருஷார்த்திகளாகிய பிறரையும் தீவிர புருஷார்த்தி ஆக்குவார்கள். அனைத்து வெளிநாடுகளும் தீவிர புருஷார்த்தத்தின் ரிசல்டில் வந்து விட்டனர். இம்மாதிரி ரிக்கார்டு உள்ளது. மேலும் இன்னும் அதிகமாகக் காண்பிக்க வேண்டும் ஆனால் பாப்தாதா புருஷார்த்தத்திற்கான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றார். முரளியின் மீதும் கவனம் உள்ளது. இந்த முரளியின் மீதான அன்பு பாபாவிற்கு மிகவும் பிடித்திருக்கிறது. மதுபன்னோடு கூட அன்பு, முரளியின் மீது அன்பு, குடும்பத்தினரின் மீது அன்பு எனது பாபாவோடு கூட அன்பு, தற்போது சூட்சுமமான புருஷார்த்தத்தின் பக்கம் கவனம் நன்றாக உள்ளது. மேலும் பாப்தாதா பார்க்கின்றார் -ஜனாகி குழந்தையும் கவனம் அதிகமாக உள்ளது. இங்கே இருந்தாலும் கூட அவர்களது ஒவ்வொரு வகுப்பும் உடனுக்கு உடன் வெளிநாடுகளுக்குச் செல்கிறது, ஆக பாலனையும் நன்றாக கிடைத்துக் கொண்டிருக்கின்றது. இதுவும் உங்களது அதிர்ஷ்டம் தான் அதிர்ஷ்டசாலிகள் மற்றும் இனிமையானவர்கள் நல்லது.

முதல் முறையாக வந்திருப்பவர்களுடன்: மிக அதிகம் பேர் உள்ளனர். கையை அசையுங்கள். நீங்கள் அனைவரும் மதுபன் உங்கள் வீட்டிற்கு வந்துள்ளீர்கள். அதற்காக பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றார். ஏனெனில், இறுதி சமயத்தற்கு முன்பாகவே வந்து சேர்ந்துள்ளீர்கள். இறுதியில் வந்தாலும் வேகமாகச் செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. பாப்தாதா குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகின்றார். வந்துள்ளீர்கள். வாருங்கள். மேலும் எதிர்காலத்திற்காகவும் இப்பொழுது தீவிர புருஷார்த்தம் செய்து மிக முன்னால் செல்வதற்கான திட சங்கல்பத்தை எடுத்துக் கொள்ளுங்கள். திடத்தன்மை வெற்றியின் சாவியாகும். ஆக பாப்தாதா யாரெல்லாம் குழந்தைகள் இங்கு வந்துள்ளீர்களோ, அவர்களுக்கு விசேஷமாக திடத்தன்மையின் சாவியைப் பரிசாக வழங்கிக் கொண்டிருக்கின்றார். மன உறுதியை ஒருபொழுதும் குறைவாக்கிக் கொள்ளாதீர்கள். மன உறுதியானது உங்களை சதா எளிதாக முன்னேற்றம் அடையச்

செய்யும், பாபாவிற்கு மிகுந்த மகிழ்ச்சி. தங்களுடைய ஆஸ்தியை அடைவதற்காக வந்துள்ளீர்கள். இதற்காக நல்வாழ்த்துக்கள் நல்லது.

நாலாபுறங்களிலும் உள்ள சர்வ பிராமணர்களுக்கு பாப்தாதாவின் உள்ளத்து அன்பு மற்றும் சதா முன்னேறிச் செல்வதற்கான கிரேஷ்டமான சங்கல்பத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையையும் பாபா பார்த்துக் கொண்டிருக்கின்றார். மேலும் பார்த்து பார்த்து பாபா உள்ளத்தில் இருக்கச் செய்கிறார். அருகாமையில் இருப்பவர்கள் பாப்தாதாவை எதிரிலேயே பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மேலும் நீங்கள் அனைவரும் சாதனங்களின் மூலம் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். பாப்தாதாவும் உங்கள் அனைவருக்கும் நீங்கள் எங்கிருந்தாலும் சரி, நீங்கள் எதிரில் அமர்ந்திருப்பது போலவே உங்கள் அனைவரையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார். மேலும் ஒவ்வொருவருக்கும் உள்ளத்து அன்பை கொடுத்துக் கொண்டிருக்கின்றார். முன்னேறிக் கொண்டே செல்லுங்கள், தீவிர புருஷார்த்தம் செய்து முதலிலும் முதலாக முன்னேறிச் செல்லுங்கள். நல்லது.

எதிரில் அமர்ந்திருப்பவர்களுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள். மேலும் சதா முன்னேறி. செல்வதற்கான வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். நல்லது.

ஜானகி தாதியுடன்: (அனைவரும் கிறிஸ்துமஸை அனைவரும் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். அனைவரும் அன்பு நினைவுகளை அனுப்பிக் கொண்டிருக்கின்றனர்) அனைவருக்கும் பாப்தாதாவின் தரப்பிலிருந்து பல கோடி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர். சேவையிலும் இவர்கள் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர் என பாப்தாதா கூறினார் அல்லவா? மிக நன்றாக சேவை செய்கின்றனர். பாபா குஷி அடைகின்றார். எங்கெல்லாம் நிகழ்ச்சிகள் நடக்கின்றதோ அங்கெல்லாம் வெற்றியே வெற்றி தான் இங்கு அமர்ந்த படியே நீங்களும் அவர்களுக்கு சேவை செய்து கொண்டிருக்கின்றீர்கள் இல்லையா? இதுவும் நல்லதே!

மோகினி சகோதரியுடன்: நன்றாக இருப்பீர்கள். அங்கு இங்கு அலையாதீர்கள். சரியாகி விடும். போகப்போக சேவையும் செய்வீர்கள். அதிலிருந்து விலகி விட முடியாது. (முன்னி சகோதரியிடம்) இவரும் கூடவே இருக்கின்றார். நன்கு துணையும் தருகின்றார். (ஈஷு தாதியிடம்) இவரோ யக்ஞத்தினுடைய இரகசியப் பாதுகாவலர்! ஆனால் மிகவும் நல்ல முறையில் மறைமுகமாக இருந்து (பின்பக்க பலமாக) காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்றீர்கள். பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி! நல்லது.

பரதாதியுடன்: இயற்கையை வென்றவராகி சரீரத்தை நடத்திக் கொண்டிருக்கின்றீர்கள். குஷியாக இருக்கின்றீர்கள். எனவே இந்த குஷி கூட சேவை செய்கின்றது. (உதவியாளர் ருக்மணி சகோதரியுடன்) நீங்களும் சேவையில் களைப்படைவதில்லை. ஏனெனில் இவருக்கு குஷி அல்லவா? அது களைப்பை நீக்கி விடும். நல்லது.

ஜனவரி மாதத்தில் லண்டன் மற்றும் ஜெர்மனிக்கு அழைக்கின்றார்கள் என்று ஜானகி தாதி கேட்கின்றார் -போவதா? வேண்டாமா? போக வேண்டாம் என்று எல்லையை குறைத்து விடாதீர்கள் என்றே பாப்தாதா கூறுகின்றார். எங்கு அவசியமோ அங்கு கட்டாயம் செல்லுங்கள். (மும்பையிலும் அழைக்கின்றார்கள், அங்கு செல்லட்டுமா) கட்டாயம் சென்று வாருங்கள். எங்கு அவசியமோ அங்கு செல்வதில் எந்த விதத் தவறும் இல்லை. எல்லா இடத்திற்கும் செல்ல வேண்டாம். எங்கு அவசியமோ அங்கு மட்டும் செல்லுங்கள். (புவனேஷ்வருக்கு செல்லவேயில்லை -அவர்களும் மிக நினைக்கின்றார்கள்). அது கடந்து முடிந்து போனது. இப்பொழுது எங்கு அவசியம் என்று நினைக்கின்றீர்களோ அங்கு செல்வதற்குத் தடையில்லை. தன்னை ஒரு பந்தனத்தில் வைத்துக் கொள்ளாதீர்கள். சுதந்திரமாக இருங்கள். போக வேண்டாம் என்று வைத்துக் கொள்வது சரியல்ல. எப்பொழுதும் தயார். எங்கு தேவையோ அங்கு செல்வதற்குத் தடையில்லை. (சில சமயம் சரி என்று சொல்கின்றார். சில சமயம் இல்லை என்று சொல்கிறார்) அப்படி கிடையாது இது பாப்தாதாவே கூறுவதாகும். ஒரேயடியாக உங்களை பந்தனத்தில் வைக்காதீர்கள். போகவே வேண்டாம் என்பதல்லா (சங்கல்பம் உள்ளது. பந்தனம் இல்லை) சங்கல்பம் முழுமை பெறும்.

நிர்வயர் சகோதரர்: கூட எங்குமே செல்வது கிடையாது. உடல் சுகவீனம் காரணமாக இவர் எங்கும் செல்வதில்லை. (தாதியினுடைய உடல் சௌகரியத்தின் அனுசாரம் இப்பொழுது செல்லக்கூடாது) இல்லை. இவர் செல்ல முடியும் ஆனால் தன்னை செல்லக் கூடாது என பந்தனத்தில் வைத்துள்ளார்.

ரமேஷ் சகோதரரிடம்: உடல் நிலை நன்றாக உள்ளதா? (இப்போது ஸ்டுடியோ தயாராகிக் கொண்டிருக்கின்றது) மிகவும் நல்லது. இதுவும் சேவை செய்யும். தயார் செய்வீர்கள். நிறைய நிகழ்ச்சிகள் நிகழும். நல்லது. உடல் நிலையும் நன்கு பராமரிப்பதற்கு ஏதேனும் வழிமுறையை சிந்தியுங்கள். ஏனெனில் நிறைய பொறுப்பு உள்ளது (நாம் கூட உடல் நிலை காரணமாக எங்குமே செல்லவில்லை) ஏதேனும் பந்தனத்தில் போவது, அல்லது போகாமல் இருப்பது அவ்வாறு வைத்துக் கொள்ள வேண்டும். செல்ல வேண்டும். அவசியமாக இருப்பின் சரீரம் கூட துணையாக நிற்கும். எங்கு அவசியம் உள்ளதோ அங்கு உதவி கிடைக்கும். எப்பொழுது முடியுமோ அப்பொழுது இல்லை என்று சொல்லாதீர்கள். செல்ல முடியும் என்றால் சரீரமும் கூடவே செல்ல வேண்டும். சில சமயம் மிகவும் உடல் நிலை கெட்டுப் போகிறது என்றால், அது வேறு விஷயம். மற்றபடி செல்ல முடியும் என்றால், அந்த சேவையின் மூலம் குஷி கிடைக்கின்றது. இதுவும் ஒரு மருந்து, எவ்வளவு குஷி அடைகின்றார்கள். அனைவரது குஷி என்னும் சத்துணவு கிடைக்கின்றது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 31.12.2011 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## புதிய ஆண்டில் தீவிர புருஷார்த்தி பவ என்ற வரதானத்தின் மூலமாக, தனது முகத்தின் மூலமாக பரிஸ்தா ரூபத்தை காண்பியுங்கள், லைட்-மைட் (ஒளி-சக்தி) சொருபம் மற்றும் ஜூவாலாமுகி யோகத்தால் வீணானதை எரித்து விடுங்கள், துக்கம் அசாந்தியாக உள்ள ஆத்மாக்களுக்கு சக்திகளை தானமாக வழங்குங்கள்!

இன்று பிராமண பரிவாரத்தின் (குடும்பத்தின்) படைப்பாளர் தன்னுடைய நாலாபுறத்திலும் இருக்கின்ற பரிவாரத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றார். இந்த குடும்பம் சிறியது தான், சிறிய உலகம் தான் இது ஆனால் மிக அன்பானது. ஏனென்றால் நீங்கள் அனைவருமே கோடியில் ஒருவனானவர்கள். ஏன் அன்பானவர்? ஏனென்றால் தந்தையை தெரிந்து கொண்டீர்கள், தந்தையிடன் மிருந்து ஆஸ்திக்கு அதிகாரியாகவும் ஆகி விட்டீர்கள். எனவே எப்படி பாபா பிரியமானவரோ அப்படியே இந்த பிராமண பரிவாரமும் பிரியமானது. பாப்தாதா பிறந்த நாள் அன்றே ஒவ்வொரு குழந்தைக்கும் நெற்றியில் பாக்கிய நட்சத்திரத்தை மின்னச் செய்துள்ளார். எனவே இது சிறிய உலகமாக இருந்தாலும் மிக பிரியமானதாகும். நீங்கள் அனைவரும் தன்னுடைய சுய மரியாதை பற்றி அந்தளவு உயர்வாக தெரிந்துள்ளீர்கள் அல்லவா? பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து மகிழ்ச்சி

அடைகின்றார். மேலும் என்ன பாடல் பாடுகின்றார் தெரியுமா? ஆஹா! குழந்தைகளே ஆஹா!

இன்று அனைவரும் இந்த நன்னாளில் தந்தையை சந்திக்க வந்துள்ளீர்கள். இன்றைய நாள் சங்கமத்தின் நாளாகும். விடை கொடுத்து அனுப்புவதும், மற்றும் வாழ்த்தி வர வேற்பதுமாகும். பொதுவாக சங்கமம் என்றாலே மகிமைக்குரியதாகும். எங்கெல்லாம் கடலில் நதிகள் சங்கமம் ஆகிறதோ! அங்கெல்லாம் மகிமை அதிகம் உள்ளது. எனவே இன்றைய நாளும் மிகவும் மகிமைக்குரிய நன்னாளாகும். பழைய ஆண்டின் முடிவும், புதிய ஆண்டின் ஆரம்பமும் ஆகும். இன்றைய நாளில் அனைவரின் உள்ளங்களிலும் வரயிருக்கின்ற ஆண்டிற்காக எவ்வளவு உற்சாகம் உள்ளது. ஒவ்வொரு வரும் தன் உள்ளத்தில் திட்டங்கள் வைத்திருப்பீர்கள்? எதை விட வேண்டும். என்னவாக மாற வேண்டும். இரண்டைப் பற்றிய திட்டம் வைத்துள்ளீர்களா? திட்டம் இருக்கிறதா? இருக்கிறதா? யாரெல்லாம் புத்தாண்டிற்காக தன்னுடைய முன்னேற்றத்திற்காக, தீவிர முயற்சி செய்வதற்காக திட்டம் வைத்துள்ளீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். வைத்துள்ளீர்களா? வாழ்த்துக்கள். ஏனென்றால் எல்லோருக்குமே தெரியும், பாப்தாதா ஒவ்வொரு குழந்தையிடமும் என்ன எதிர்பார்க்கின்றார்? பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்காகவும் இதைத்தான் நல்ல ஆகை, நல்விருப்பமாக (சுப பாவனா, சுப காம்னா) வைத்துள்ளார். எனது ஒவ்வொரு குழந்தையும் பாபாவிற்கு சமமாக சம்பன்னமாக. மற்றும் சம்பூர்ணமாக மாற வேண்டும். இப்பொழுது நேரமும் உங்களுக்கு துணையாக இருந்துக் கொண்டிருக்கின்றது. எனவே ஒவ்வொருவரும் தன் மனதில், தனக்காக புதிய திட்டம் வைத்துள்ளீர்கள் தானே? சிலவற்றை விட வேண்டும், சிலவற்றை வாழ்வில் முன்னேற்றத்திற்காக கொண்டு வர வேண்டும். எனவே எதைவிட வேண்டும். பாப்தாதா பார்க்கின்றார். பழைய உலகம் மற்றும் உறவுகளை விடுவதற்கான முயற்சியில் எல்லோருமே கவனம் வைத்துள்ளீர்கள். ஒன்று, விஷயத்தை விடத்தான் விரும்புகின்றீர்கள் ஆனால் இதுவரையிலும் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். பழைய சம்ஸ்காரங்கள் அதனை விடுவது தான் கொஞ்சம் கஷ்டமாக உள்ளது. எனவே பாப்தாதா இதைத்தான் எதிர்பார்க்கின்றார், இந்த புதிய ஆண்டில் ஒவ்வொரு குழந்தையும், நீங்களும் கூட இந்த எண்ணத்தை

பூர்த்தி செய்ய விரும்புகின்றீர்கள். ஏனென்றால் பழைய சம்ஸ்காரம், அதனை நீங்கள் சொல்றீர்கள், எனது பழக்கம் என்று நான் விரும்பவில்லை ஆனால் எனது பழக்கம் என்று. இந்த பிறவியின் பழக்கம் தான், பிராமண பிறவியின் பழக்கம் அல்ல, பழைய பிறவியின் பழக்கம் அது. அந்த பழைய சம்ஸ்காரங்களை இன்றைய நன்னாளில் உங்களுக்கேத் தெரியும் இந்த ஆண்டிற்கு விடை கொடுத்து அனுப்புவதன் கூடவே பழைய சம்ஸ்காரத்தையும் விடுவதற்கான திட சங்கல்பம் செய்ய முடியுமா? செய்ய முடியுமா? நீங்கள் விரும்புவதும் அது தானே? இல்லை என்று சொல்ல முடியாது. அதைத்தான் விரும்புகின்றீர்கள். ஆனாலும் மீண்டும் மீண்டும் அந்த முயற்சியில் முன்னேற்றத்தை கொண்டு வருவதில் அந்த சம்ஸ்காரம் தான் விதவிதமான தடைகளை கொண்டு வருகின்றது. எனவே பாப்தாதா இதைத்தான் எதிர்பார்க்கின்றார், இந்த ஆண்டிற்கு விடை கொடுத்து அனுப்புவதின் கூடவே அந்த பழைய சம்ஸ்காரத்தையும் வழி அனுப்பி விடுங்கள். இதற்காக தயாரா? யார் ரெடியாக இருக்கின்றீர்களோ அவர்கள் கை தூக்குங்கள். இதற்காக என்ன செய்யப் போகின்றீர்கள். தனக்காக ஏதாவது திட்டம் வைத்துள்ளீர்களா? இதற்காக மிக நல்ல விஷயம் திடசங்கல்பம் தான். சங்கல்பம் இருக்கின்றது, செய்ய வேண்டும் என்று? ஆனால் சங்கல்பத்தில் தீவிரத்தன்மை வேண்டும். எப்படி பிராமணன் ஆன முதல் நாளே, எந்தவிதமான அசுத்தமான உணவை நான் உட்கொள்ள மாட்டேன் என உறுதிமொழி செய்துள்ளீர்கள். இதில் எல்லோருக்கும் பெரும்பாலும் திடத்தன்மை உள்ளதை, பாபா பார்க்கின்றார். இதில் பெரும்பாலான குழந்தைகள் தேர்ச்சி அடைந்துள்ளீர்கள். அதுபோலவே உடலுக்கு எப்படி தீய உணவு சாப்பிட மாட்டேன் என உறுதிமொழி எடுத்து அதை செய்து வருகின்றீர்களோ, அதுபோலவே மனதிற்காகவும் இந்த ஒரு திடமான எண்ணம் வைக்க வேண்டும். ஒருபொழுதும் எதற்காகவும், யாருக்காகவும் எந்த ஒரு சூழ்நிலையே வந்தாலும் சரி, எந்த விதமான வீண் எண்ணத்தையும் மனதில் கொண்டு வராமல் சதா ஒவ்வொரு ஆத்மாவுக்காகவும் சுபபாவனை, சுப ஆசை வைத்தே ஆக வேண்டும். மனதிற்கான உணவு சங்கம்பம் தான். எப்படி உடலுக்காக பெரும்பாலோர் திட சங்கல்பம் வைத்துள்ளீர்களோ அது போலவே மனதிற்காகவும் வீண் எண்ணம் என்ற அசுத்த பாவனை என்னும் உணவை விட்டுவிட முடியாதா? ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும்,

உளமார்ந்த அன்பு மற்றும் ஒத்துழைப்பு தன் மனதில் வைக்க முடியாதா என்ன?

இன்று பாப்தாதா இந்த பழைய வருடத்தை அனுப்புவதன் கூடவே இந்த பழைய உள்ளுணர்வு பழைய பாவனை, ஒவ்வொரு குழந்தைகளிடமிருந்தும் வெளியேறி விட வேண்டும் என பாபா எதிர்பார்க்கின்றார். இப்படி உறுதியான எண்ணம் வைக்க முடியுமா? முடியுமா? தாய்மார்கள் கூறுங்கள். டீச்சர்கள் கூறுங்கள் அனைத்து சகோதரர்களும் விரும்புகின்றீர்கள். கை உயர்த்துங்கள். இரண்டு கையையும் உயர்த்துங்கள். நாளை முதலாக எந்த ஒரு ஆத்மாவுக்காகவும் நீங்கள் வீணான உள்ளுணர்வு, வீணான எண்ணம் அதை இன்று அடியோடு அழித்து விட்டு முடிவு நாளை கொண்டாடுங்கள். சொல்லுங்கள், டீச்சர்கள் தயாரா? டீச்சர் இரண்டு கைகளையும் உயர்த்துங்கள். யாரெல்லாம் கை உயர்த்தவில்லையோ அவர்கள் இப்போது உயர்த்துங்கள். யாரெல்லாம் கை உயர்த்தவில்லையோ சற்று எழுந்து நில்லுங்கள். நல்லது முயற்சி செய்கிறீர்கள், ஆனால் திட சங்கல்பம் வைக்கவில்லை அப்படித்தானே? யாரெல்லாம் எழுந்துள்ளீர்களோ அவர்களின் லட்சியம் புருஷார்த்தம் செய்வீர்கள் என்பது தானே? கை உயர்த்துங்கள். ஏனென்றால் நேரத்தில் கவனம் வைத்து இதை சிந்தனை செய்துப்பாருங்கள், எல்லோருமே இந்த சங்கம நேரத்தில் நாளைய நீண்ட காலத்திற்கான வெற்றியை அடைய வேண்டும். 21-பிறவிகளுக்கான ஆஸ்தியை அடைய வேண்டும். இந்த ஒரு பிறவி எங்கே, அந்த 21-பிறவி எங்கே. இந்த ஒரு பிறவியில் நீண்டகாலத்தற்கு தீவிர முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் நீண்ட காலத்திற்கான பிராப்தி அடைய முடியும். பாபாவிடம் அன்பு உள்ளது தானே? பாபா அருகில் தானே இருக்க வேண்டும். பிரம்மாபாபா துணையாக இருந்து இராஜ்ய அதிகாரத்தை பெற வேண்டும் தானே? எனவே இப்போது கூட அந்தளவிற்கு பாப்சமான் ஆக வேண்டும். அந்த அளவிற்கு அவ்வளவு நேரம், பாப்சமான் ஆக வேண்டும். பிரம்மாபாபாவிற்கு ஒவ்வொரு குழந்தையிடமும் எவ்வளவு அன்பு உள்ளது? அது உங்களுக்குத் தெரியும், ஒவ்வொரும் சொல்கின்றீர்கள் என்னுடைய பாபா என்று, பாபாவிற்கு என்மீது எவ்வளவு அன்புள்ளதோ அந்த அளவு வேறு யாரிடமும் இல்லை. என் மீது பாபாவிற்கு அன்பு உள்ளது. அன்பு

உள்ளது தானே? பாப்தாதா இருவரின் அன்பையும் இந்த பிறவியிலேயே அனுபவம் செய்து கொண்டிருக் கின்றீர்கள். மேலும் யாரிடம் அன்புள்ளதோ அவர் சொல்லும் விசயத்தையும் தட்டுவதில்லை தானே? பிரம்மாபாபாவிடம் எல்லோருக்கும் அன்பு உள்ளது தானே. எவ்வளவு அன்பு உள்ளது. அதிகமான அன்பு உள்ளது தானே? அந்த அன்பை வெளியில் காண்பிக்க முடியாமல் இருக்கலாம், ஆனால் பாபாவிற்கு தெரியும் அனைத்து குழந்தைகளுக்குமே அன்பு உள்ளது. வரிசைக்கிரமமாக உள்ளது ஆனால் அன்பு உள்ளது. இதில் பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் சான்றிதழ் தருகின்றார். அன்பு உள்ளது. அன்பு இருக்கிறது தான் ஆனால் அவ்வப்பொழுது குறும்பும் செய்கின்றீர்கள். அப்போது பாபா என்ன செய்கின்றார். பாபா பார்த்து பார்த்து விசேஷமாக சக்தி கொடுத்துக் கொண்டிருக்கின்றார். ஏனென்றால் பாபா இதைத்தான் எதிர்பார்க்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் இராஜா குழந்தையாக வேண்டும். உலகில் கூட மிக செல்லமான குழந்தைகளை பெற்றோர்கள் இராஜா என்று அழைப்பார்கள். உண்மையில் இராஜா இல்லை ஆனால் அன்புடன் இராஜா என்று கூப்பிடுவார்கள் ஆனால் நீங்கள் எல்லோரும் இப்பொழுதும், இராஜா குழந்தைகள் தான், நாளையும் இராஜா குழந்தைகள் தான். இப்போது சுயமரியாதை உள்ளது, சுய இராஜ்யமும் உள்ளது. இப்பொழுது ஆத்மா அனைத்து கர்மேந்திரியங்கள் மீதும் இராஜ்யம் செய்கின்றது. அப்படியென்றால் இப்போதே சுயராஜ்ய அதிகாரி தானே? நாளை விஷ்வ இராஜ்ய அதிகாரி எனவே இராஜா குழந்தைகள் தானே? ஆம் என்று தலை அசையுங்கள்.

பாப்தாதா இன்று அமிர்தவேளையில் நாலாபுறமும் அயல் நாடாக இருந்தாலும் பாரத பூமியாக இருந்தாலும் நாலாபுறமும் சுற்றி பார்க்க வந்திருந்தார். என்ன பார்த்தார்? யோகத்தில் (நினைவு) அமிர்த வேளையில் பெரும்பாலான குழந்தைகள் அமர்ந்திருந்தார்கள். மேலும் அன்பாகதான் இருந்தார்கள், பாபாவிடம் பேசிக் கொண்டே இருந்தார்கள், ஆத்மா உணர்வில் தான் இருந்தார்கள். பாப்தாதாவிடம் சக்தியையும் அடைந்து கொண்டிருந்தார்கள் ஆனால் இன்று பாப்தாதா வர இருக்கின்ற புதிய ஆண்டில் புதுமையை காண விரும்புகின்றார். ஏனென்றால் இப்போது சமயம் நாளுக்கு நாள் மிகவும் தொய்வடைந்து கொண்டுத்தான் போகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் இப்பொழுது

ஜுவாலா முகி என்னும் கொழுந்து விட்டு எரிகின்ற யோக நிலை இருக்க வேண்டும். அந்த ஜூவாலாமுகியான யோகம் இப்போது மிக மிக அவசியமானது. ஜுவாலாமுகி என்னும் யோகம் என்றால் லைட்-மைட் சொரூபத்தின், சக்திசாலியான யோகமாகும். ஏனென்றால் இந்த சமயத்திற்கேற்ப இப்பொழுது துக்கம், அசாந்தி, ஆர்ப்பாட்டம் இன்னும் அதிகரித்துக் கொண்டே செல்லும். எனவே தன்னுடைய துக்கத்தில் இருக்கின்ற கஷ்டப்படுகின்ற ஆத்மாக்களுக்கு முக்கியமாக ஜுவாலாமுகி யோகத்தின் மூலமாக சக்திகளை தர வேண்டிய அவசியம் இருக்கின்றது. துக்கம், அசாந்தியில் இருக்கின்ற ஆத்மாக்களுக்கு. கைமாறாக ஏதேனும் சில சக்தி மற்றும் சாந்தியினை தனது மனசேவையின் மூலமாக கொடுக்க வேண்டும். நீங்களும் தற்சமயத்தில் தலைப்பு வைத்துள்ளீர்கள், ஒரு கடவுள்-ஒரு குடும்பம். அந்த தலைப்பிற்கேற்ப ஒரு குடும்பம் என்று சொல்லும் பொழுது அசாந்தி ஆத்மாக்களுக்கு அஞ்சலி தாவேண்டும் அல்லவா? எனவே பாப்தாதா புதிய ஆண்டு வந்தே விட்டது இப்போது, அதற்காக விசேஷமாக பாபா கவனத்தை திருப்புகின்றார். இப்போது ஜூவாலாமுகி யோகம் மிகவும் அவசியமாக உள்ளது. ஜுவாலாமுகி யோகத்தின் மூலமாகத்தான் மீதமுள்ள சம்ஸ்காரங்களையும், பஸ்மம் செய்ய முடியும். இப்பொழுது உங்களுடைய அட்வான்ஸ் பார்ட்டியில் இருப்பவர்களும் உங்கள் அனைவரிடமும் இதைத்தான் எதிர்பார்க்கின்றார்கள். இப்பொழுது இறுதி நேரத்தை எதிரே கொண்டு வாருங்கள். இப்போது வீடு திரும்பும் நேரம், இதை கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய தீதி மன்மோகினி நினைவு படுத்திக் கொண்டேயிருக்கின்றார்கள், எனக்கு எப்போதுமே இந்த நினைவு தான் இருந்தது, இப்போது வீடு திரும்ப வேண்டும். இப்போது வீடு திரும்ப வேண்டும் உங்களுடைய தாதியும் இதே தான் நிளைவூட்டிக் கொண்டிருக்கின்றார். எனக்கு இப்போது சம்பன்னம் ஆக வேண்டும். சம்பூரணமாக வேண்டும் என்ற எண்ணம் எழுந்த வண்ணம் உள்ளது. இன்று விசேஷமாக அமிர்த வேளையில் வதனத்தில் பாப்தாதாவிடம் சந்திப்பு நிகழும்போது கூறிக் கொண்டிருக்கின்றார்கள். இப்போது எங்கள் சார்பாக யாரெல்லாம் அட்வான்ஸ் சென்றுள்ளார்களோ, எல்வோரும் இணைந்து சொல்லிக் கொண்டிருந்தார்கள் இதைத்தான். இப்பொழுது கொழுந்து விட்டு எரியும் ஜூவாலாமுகி யோகம் மிக மிக அவசியமாகின்றது. பிறருக்கு சக்தி

தருவதற்காகவும், தனது பிராமண குடும்பத்தை சார்ந்தவர்களை சம்பன்னமாக்குவதற்காகவும் இந்த ஜுவாலமுகி யோகம் அவசியம் ஆகும்.

இப்பொழுது நேரத்தை அருகில் கொண்டு வரக்கூடிய நிமித்தமானவர்கள் நீங்கள். எனவே வரும் புத்தாண்டில் என்ன செய்ய போகின்றீர்கள், விசேஷமாக என்ன செய்யப் போகின்றீர்கள். ஒருவர் மற்றவருக்கு அன்பாகவும், ஒத்துழைப்பாகவும் இருந்து ஒவ்வொரு சென்டரிலும் சேவைக்கான இடங்களில் எல்லாம் கூட ஜூலாலாமுகி யோக வைரப்ரேஷனை (எண்ண அதிர்வலைகள்) கர்மத்தில் கூட ஒருவருக்கொருவர் அன்பாகவும், ஒத்துழைப்பாகவும் இருந்து ஒவ்வொருவருக்காகவும் நீங்கள் கவனத்தில் கொண்டு வர வேண்டும். ஏதேனும் குறை இருந்தாலும் அவர்களுக்கு நீங்கள் உதவிகரமாக இருக்க வேண்டும். மனம் மூலமாகவும் பிற ஆத்மாக்களுக்கு சேவை செய்யுங்கள். தனது ஒத்துழைப்பின் மூலம் தன்கூட இருக்கின்ற பிராமண குழந்தைகளுக்கு (பரிவாரத்திற்கு) விசேஷமாக சேவை செய்யுங்கள். அப்போது தான் உங்களுடைய உள்ளத்தின் விருப்பமானது பூர்த்தியாகும். இன்று வதனத்தில் அட்வான்ஸ் பார்டி புது ஆண்டிற்காக உங்கள் அனைவருக்காகவும் அவர்களின் அன்பு நினைவுகளை வழங்கினார்கள், மேலும் தங்கள் உள்ளங்களின் விருப்பங்களையும் தெரிவித்துக் கொண்டார்கள். கூறுங்கள். பாப்தாதாவின் சங்கல்பத்தையும் கேட்டீர்கள் ஆனால் அத்தோடு உங்களுடைய தாதிமார்களின், புதிய ஆண்டிற்கான சுபபாவனையும் கேட்டீர்கள் தானே? பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும். பலவீனம் இருந்தாலும் சரி, தீவிர முயற்சி செய்தாலும் சரி எல்லோருக்குமே மூன்று விதமான வாழ்த்துக்களை கூறுகின்றார். ஒன்று புதிய வாழ்க்கை அடைந்ததற்கான வாழ்த்துகள், இரண்டாவது புதிய வருடத்திற்கான வாழ்த்துக்கள், மூன்றாவதாக புதிய உலகில் துணையாக இருந்து நடந்து கொள்வதற்கான வாழ்த்துக்கள்

பாப்தாதா இதையும் சொல்கின்றார். அனைவரும் தன் மனதில் தனக்காக சமயத்தை நிச்சயம் செய்து கொள்ளுங்கள். எதற்குள் தன்னை பாப்சமான் ஆக்குவீர்கள். இதற்காக தனக்குத்தானே ஒரு நாளை நிச்சயம் செய்து விடுங்கள். நான் குறிக்கத் தெரியுமா? பாப்தாதா இன்று

ஒவ்வொரு குழந்தைகளையும் பார்த்து இதையே வரதானமாக தருகின்றார். வர இருக்கின்ற ஆண்டில் ஒவ்வொரு குழந்தையும் தீவிர புருஷார்த்தியாக ஆகுசு. அமிர்த வேளையில் அனைவரும் நினைவில் அமர்கின்றீர்கள், கண்விழித்து எழும்பொழுதே பாப்தாதாவின் இந்த வரதானத்தை தனது மனதில் நினைவுப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள். தீவிர புருஷார்த்தி பவ (ஆகுக). எப்படி பாப்தாதா இரண்டு விசயங்களில் முன்பிருந்தே கவனத்தை திருப்பிக் கொண்டிருக்கின்றார். ஏனென்றால் சங்கம் நேரமானது திடீரன முடிவடையப் போகின்றது. ஒன்று நேரம் மற்றொன்று திட சங்கல்பம். இந்த இரண்டின் மீதும் ஒவ்வொரு நொடியும் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பாப்தாதாவின். ஒவ்வொரு குழந்தைகள் பொருட்டும் சுபபாவனை, உள்ளது. ஒவ்வொரு குழந்தையும் இந்த ஆண்டில் என்ன ஆவீர்கள் யாரெல்லாம் உங்கள் முகத்தை பார்த்தாலும் உங்கள் முகத்தின் மூலமாக பரிஸ்தா முகம் தென்பட வேண்டும். இப்படிப்பட்டவர், அப்படிப்பட்டவர். என்று சொல்லக்கூடாது. பரிஸ்தா என்பது அனுபவத்தில் வர வேண்டும். இதற்காக ஜுவாலாமுகி யோகம் மிக அவசியம். வீண் எண்ணம் இருக்கக்கூடாது அங்கே, லைட்-மைட் சொரூபத்தால் வீணானதை எரித்து விடுங்கள். சக்திசாலியான பரிஸ்தா தான் கண்ணில் பட வேண்டும். யாரைப் பார்த்தாலும் இவர்கள் நீங்கள் அனைவரும் பாபாவின் செல்லமான குழந்தைகள் அல்லவா? பாபா முக்கியமாக உங்களை எங்கெல்லாமோ தேடி தேடி கண்டெடுத்து தனது குழந்தையாக்கியுள்ளார். எனவே இதை லட்சியமாக வைத்துக் கொள்ளுங்கள், நான் பிராமணனிலிருந்து பரிஸ்தாவாக மாறுகின்றேன். எனவே அமிர்தவேளையில் இருந்து தனது முழு நாள் கடமைகளிலும் இதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நான் பிராமணனிலிருந்து பரிஸ்தாவாக மாறுகின்றேன். நடமாடும் பொழுதெல்லாம் கூட பரிஸ்தா ரூபத்தில் தென்பட வேண்டும். பரிஸ்தா சொரூபம் நன்றாகத் தானே இருக்கிறது. பிரம்மாபாபா பரிஸ்தா ஆனார். நீங்களும் அவரைப் பின்பற்றுங்கள்.

எனவே இந்த ஆண்டிற்காக பாபா கொடுத்த வரதானம் தீவிர புருஷார்த்தம், சாதாரண புருஷார்த்தம் இல்லை, சதாரண முயற்சி என்பது இராஜ்யத்தின் துணையாக வர முடியாது. மேலும் பாபா விரும்புவதும் இது தான். எவ்வளவு மாணவர்கள் இருக்கின்றீர்களோ,

பாப்தாதாவின் முரளி படிப்பவர்கள். இறை மாணவர்கள் அனைவரும் என்னவாக மாறுவீர்கள்? பரிஸ்தா. அனைத்து பாரமும் இறங்கி விடும். எந்த சம்ஸ்காரமாக இருந்தாலும், சுமையாக இருந்தாலும் அழிந்தே போய் விடும் இந்த வருடத்திற்கான ஹோம் ஓர்க் பரிஸ்தா சொரூபத்தில் இருக்க வேண்டும். இதைத்தான் தீவிர முயற்சியாளர் என்று சொல்ல முடியும். இப்போது ஒவ்வொரு சென்டரும், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு மாணவரும் என்ன ஆனார்கள் எந்த ரிசல்ட் பார்க்க வேண்டும்? தீவிர முயற்சி செய்கிறார்களா என்று பார்க்க வேண்டும். ஒருவேளை யாதாவது விசயம் வந்து விட்டது, அதற்காக உதவியாளராக இருந்து அன்போடு அவர்களுக்கு தைரியம் கொடுத்து ஒவ்வொரு வரும் தனது சென்டரில் வருகின்ற மாணவர்களையும் தீவிர புருஷார்த்திகாளாக மாற்ற வேண்டும். ஒவ்வொரு வாரமும் ரிசல்ட் தர வேண்டும். ஏனென்றால் சமயம் மிகவும் கலவரமாகத்தான் மாறும்.

இன்று சங்கம நாளில் வழி அனுப்புவதும், வர வேற்பதுமான நாளில் நாலாபுறமும் இருக்கின்ற யாரெல்லாம் குழந்தைகள் எங்கெல்லாம் அமர்ந்திருந்தாலும் சரி பாப்தாதா எல்லோரையும் பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றார். எப்படி அறிவியல் சாதனம் மூலம் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்க்ள். பார்த்து, பார்த்து எவ்வளவு சந்தோஷம் அடைகின்றீர்கள் அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா விசேஷமாக வரதானம் தருகின்றார். சதா திருப்திமணி (சந்துஷ்டமணி) ஆகுக. திருப்தி ஆகி பிறரையும் திருப்திபடுத்த வேண்டும். அடுத்து என்ன செய்ய வேண்டும். நல்லது.

**சேவா வாய்ப்பு (ஈஸ்டன், தமிழ்நாடு, நேபாளம், 15-ஆயிரம் பேர் வந்துள்ளனர்). வங்காளம்**: வங்காளத்தில் சேவையும் மற்றும் ஒவ்வொருவரின் முயற்சியும் நன்றாகவே செய்து கொண்டிருக்கின்றீர்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளையும் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். சேவையும் ஒவ்வொருவரும் அவர்கள் சக்திக்கு ஏற்ப செய்து கொண்டிருக்கின்றீர்கள். எனவே பாப்தாதா குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். குழந்தைகளும் சதா மகிழ்ச்சி அடைகின்றீர்கள், மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இனியும் மகிழ்ச்சியாகவே இருப்பீர்கள்.

அனைத்து சேவாதாரிகளும் எழுந்து நிற்கின்றார்கள்: ஹாலில் முக்கால் பாகம் இந்த மண்டலத்தை சார்ந்த குழந்தைகளே இருக்கின்றார்கள். பாப்தாதா பார்க்கின்றார், அனைத்து மண்டலத்தைக் காட்டிலும் இது பெரிய மண்டலமாக உள்ளது. ஒரு மண்டலத்திற்குள் 5-சிறிய சிறிய மண்டலங்கள் உள்ளது. பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி, குழந்தைகள் ஆங்காங்கே நிமித்தமாக இருப்பவர்கள் நன்கு சேவை செய்துள்ளார்கள். நன்கு அபிவிருத்தியும் செய்துள்ளார்கள். பாப்தாதா பார்க்கின்றார் இந்த ஒரு மண்டலத்தில் எத்தனை சிறிய சிறிய மண்டலம் வந்துள்ளது ஆனால் எல்லோருமே தடைகளற்றவர்களாக தனது முயற்சியில் பாதுகாப்பாக இருக்கின்றீர்களா? அதற்கு பாப்தாதா வாழ்த்துக்களை வழங்குகின்றார். மேலும் ஏதாவது சிறிய சிறிய குறைப்பாடுகள் இருந்தாலும் வருகின்ற ஆண்டில் இந்த 5-மண்டலத்தில் உள்ளவர்களும் முழுமையாக பாப்தாதாவிற்கு முன்பாக சான்றிதழை அனுப்புங்கள். நாங்கள் எல்லோரும் தடைகளற்றவராக, எவரடியாக, தயராக, தீவிர புருஷார்த்தம் செய்பவர்களாக இருக்கின்றோம். இந்த ரிசல்ட்டை சிறிய சிறிய மண்டலங்கள் 5-லிருந்தும் அனுப்பப்பட வேண்டும். மற்றபடி பாப்தாதா இந்த முறை நான்கில் மூன்று பாகம் வகுப்பு முழுவதும் வந்துள்ளீர்கள் இதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். இந்த அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளீர்கள், எனவே தாள் அழைத்து வந்துள்ளீர்கள். சிலர் புதியதாக இருக்கலாம் ஆனால் புதிய குழந்தைகளும் தீவிர புருஷார்த்தி பவ என்னும் வரதானத்தைப் பெற்று, தீவிர முயற்சி செய்து பிறருக்கும் சேவை செய்து தீவிரமான சேவை செய்து பாக்கியத்தை அடைய வேண்டும். அப்போது அனைவருமே ஏற்றுக் கொள்வார்கள் உண்மையில் இந்த ஆத்மாக்கள் சுகம் அளிக்கும் வள்ளலின் குழந்தைகள் சுக வள்ளல் என்று. இது மிகப் பெரிய மண்டலம். பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார் நீக்களும் டி.வியில் பாருங்கள் இங்கு முக்கால் பகுதி வகுப்பும் நீங்களே இருக்கின்றீர்கள். பாப்தாதா விசேஷமாக இந்த மண்டலத்திற்கு சதா மகிழ்ச்சியை தருகின்ற ஆத்மாக்கள் என்ற வரதானத்தை தருகின்றார். நல்லது.

**நீதிபதி துறையை சார்ந்தவர்கள் (விங்):** பாப்தாதா உங்களுடைய கூட்டத்திற்கான நிகழ்ச்சிகளைப் பார்த்தார். குழந்தையும் செய்தி கொடுத்தார். இனி பாப்தாதா கொடுத்துள்ள வேலையை செய்து

காட்டுங்கள். கீதையின் பகவான் யார் என்பதை உணர்த்துங்கள். இப்போது இந்த சேவையில் ஈடுபடுங்கள் குழு குழுவாக அமையுங்கள். அதைப் பற்றிய ரிசல்ட்டை வரவையுங் அது குறித்து என்னென்ன கருத்துக்கள் கிடைத்தது என்பதை ஒருங்கிணையுங்கள். டில்லியை சார்ந்த குழந்தைகளும் நன்றாக செய்துள்ளார்கள். பிரிஜ்மோகன் குழந்தை செய்தார் அல்லவா? நீங்கள் தானே செய்தீர்கள், ரிசல்ட் என்ன கிடைத்தது? ரிசல்ட் கிடைத்ததா? சொல்லுங்கள். (தர்ம ஆத்மாக்ககளோடு இதைப்பற்றி பேச முயற்சி செய்தோம். இப்போது நீதித் துறையுடன் சேர்ந்து இதை செய்வோம்) (மும்பையில் நடந்த விழாவில் மூன்று அரங்குகள் கீதையின் பகவான் யார் என்பது பற்றி வைக்கப்பட்டது.) நல்லது என்னெவெல்லாம் முயற்சி செய்துள்ளீர்களோ, அதை செய்து கொண்டு தான் இருக்கின்றீர்கள், ஆனால் இதைப் பற்றி சிறிது 'சம்மரி' (summary குறிப்பு) உருவாக்குங்கள், அனைவரும் ஒன்று சேர்ந்து செய்யுங்கள். யாரெல்லாம் செய்தீர்களோ சிறிது சிறிது செய்திருந்தாலும் நன்றாக செய்துள்ளீர்கள், இப்போது இந்த கருத்தில் விசேஷமாக கவனம் கொடுக்க வேண்டும். ஏனென்றால் இப்போது நீங்கள் அனைவரும் 75ம் ஆண்டினை கொண்டாடினீர்கள், இதில் உங்களுக்கு அநேக உதவியாளர்கள் கிடைத்துள்ளார்கள். பெரிய பெரிய நபர்களும் அறிமுகம் ஆகியுள்ளார்கள். இப்போது இந்த கருத்தைப்பற்றி மிக நல்ல முறையில் எடுத்து சொல்லி புரிய வையுங்கள். எங்கெல்லாம் பவளவிழா கொண்டாட்டங்களை செய்தீர்களோ. ஒவ்வொரு இடங்களிலும் ஏதேனும் குழுவை அமையுங்கள். அது தரமான குழுவாக இருக்க வேண்டும். இந்த கருத்தினை முயற்சி செய்து நீங்கள் பொது மக்களுக்கு செய்திகள் வழங்கிக் கொண்டேயிருங்கள். மேலும் செய்தியைக் கேட்டு அவர்களுக்கு நீங்கள் டைரக்ஷனும் வழங்கிக் கொண்டேயிருங்கள். இந்த காரியத்திற்காக முக்கியமாக இரண்டு மூன்று நபரை நியமிக்க வேண்டும், இதற்கான கமிட்டி உருவாக்குங்கள். வெறும் நிதிபதிகள் மட்டும் அல்ல, இதில் ஆர்வம் உள்ளவர்கள், உங்களுக்கு அப்படி தெரிந்தவர் யாரேனும் இருந்தால் அவர்களையும் இந்த கமிட்டியில் சேர்த்துக் கொள்ளலாம். ஏனென்றால் இப்பொழுது அனைவரது புத்தியிலும் வந்து விட்டது. இந்த பிரம்மா குமாரிகள் செய்கின்ற செயல்கள் மூலமாகத்தான் ஏதேனும் மாற்றம் வர முடியும். இந்த விழாவின் மூலமாக இந்த ரிசல்ட் கிடைத்துள்ளது. எனவே இப்பொழுது

அதே கருத்தில் இன்னும் சற்று கவனம் கொடுத்து குழுவை அமைக்க வேண்டும். அதில் நீதிபதியும் இருக்கலாம், வேறு யார் வேண்டுமானலும் இருக்கலாம். எப்படி இந்த பிரிஜ்மோகன் இருந்தாரோ அப்படியே குழுவை அமைத்து பல்னை அடையுங்கள். மேலும் இந்த கருத்து தான் மிகவும் அவசியமானது. இதன் மூதலமாகத் தான் மாற்றம் வரும். இப்போது என்ன செய்வீர்கள். (இப்போது உங்கள் இந்த டைரக்ஷனை கண்டிப்பாக ஏற்று நடப்பார்கள்) இங்கே யாரெல்லாம் என்ன துறையில் இருந்து வந்திருக்கின்றீர்களோ, அவர்கள் அனைவருக்கும் பாப்தாதா வாழ்த்துக்கள் வழங்குகின்றார்;

இரட்டை அயல் நாட்டவரின் குழு: குழந்தைகள், இளைஞர்கள்: குழந்தைகள் பாடல் பாடுகின்றார்கள் மிக நன்றாக உள்ளது பாப்தாதா உங்கள் அனைவரின் அன்பு நினைவுகளையும் பார்த்தார். நீங்கள் அனுப்பிய அன்பு நினைவுகள் அனைத்தையும் பாபா ஏற்றுக் கொண்டார். இப்போது யாரெல்லாம் இங்கு வந்து பயிற்சி எடுத்துக் கொள்கிள்றீர்களோ. அவர்கள் அனைவரும் அவர் அவரது தன் வயதை ஒத்த மற்றவரையும் குழுவாக சேருங்கள். சிறு குழந்தைகளும் குழந்தைகளின் கூட்டத்தை கொண்டு வர வேண்டும். இளைஞர்களும் தன் வயது ஒத்தவர்களை குழுவாக அமைத்துக் கொண்டு வாருங்கள், பெரியவர்களும் தனக்கு நிகரான குழுவினைக் கொண்டு வாருங்கள். சேவை செய்து அதற்கான ரிசல்ட்டை மதுபன்னிற்கு கொண்டு வர வேண்டும். தைரியம் உள்ளதா? தைரியம் உள்ளதா? டிரெயினிங் ரிசல்ட்டையும் பாப்தாதா பார்த்தா. அனைவரும் ஊக்கம் உற்சாகத்தோடு மதுபனில் வந்து கலந்து கொண்டீர்கள். எவ்வளவு நல்ல வாயு மண்டலத்தில் பயிற்சி எடுத்துள்ளீர்கள் அதற்கான ரிசல்ட்டை கண்டிப்பாக காண்பிக்க வேண்டும். எனவே பாப்தாதாவின் பல பல மடங்கு வாழ்த்துக்கள்.

சிந்தி குழுவினரும் மற்றும் இரட்டை அயல் நாட்டவரும்: இரட்டை அயல் நாட்டவரின் லட்சியமே தீவிர முயற்சி செய்வது தான். பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி தான். அயல் நாட்டு குழந்தைகள் ஒரு சம்ஸ்காரத்தை உடையவர்கள். ஒன்று செய்ய வேண்டும் என்றால் அதை முழுமையாக செய்வார்கள். அரை குறையாக செய்ய மாட்டார்கள். செய்ய வேண்டும் என்றால் முழுமையாக செய்து

விடுவார்கள். இந்த விஷேத்தன்மையை பாபா பார்த்து மகிழ்கின்றார். அயல்நாடு சேவையில் முன்னேறி விட்டது மேலும் ஆங்காங்கே மூலைக்கு மூலை சேவைக்கான இடங்களையும் திறந்து கொண்டு இருக்கின்றார்கன், பாப்தாதாவும் குழந்தைகளின் சேவையில், குழந்தைகளின் ஊக்கம் உற்சாகத்தைப் பார்த்து வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார். எப்போதும் தருகின்றார். இரட்டை அயல் நாட்டு குழந்தைகளுக்கு பல பல மடங்கு வாழ்த்துக்கள். பாபா சேவை பொருத்து திருப்தி அடைந்துள்ளார். மேலும் அயல் நாட்டு குழந்கைள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு சென்டரும் தடைகள் அற்றவராக இருக்கின்றார்கள் என்ற ரிப்போர்ட் உடனடியாக வர வேண்டும். சென்டர் தடைகள் அற்று இருக்க வேண்டும். இப்பொழுது எந்த சென்டரெல்லாம் தடைகளற்றவர்களாக இருக்கின்றோம் என்று நினைக்கின்றீர்களோ அவர்கள் ரிப்போர்ட் அனுப்பினால் பாபா அவர்களுக்கு பரிசு வழங்குவார் ஆனால் அங்குள்ள அனவைருமே தடைகளற்றவராக இருக்க வேண்டும். அனைவரும் தடைகளற்றவராக மாறி ரிப்போர்ட் தர வேண்டும். மாறாக இது வரையில் தடைகள் இருந்தாலும் இப்போதிலிருந்து பாபா வாழ்த்துக்கள் தருகின்றார். மாறாக இனி தான் தடைகளற்றவராக மாற வேண்டும் என்று இருந்தால் ரிப்போர்ட் வந்த பிறகு வாழ்த்துக்கள் தருவார் ஆனால் பாப்தாதா இது மட்டும் சொல்வார், அயல் நாட்டவர் என்றால் சொன்ன உடன் செய்வதில் புத்திசாலி குழந்தைகள் என்ன செய்தாலும் உடனடியாக செய்வார்கள். பாரின் என்றாலே உடனடி தான். நல்லது.

சிந்தி குழுவினரும் (சிந்தி வம்சம்) வந்துள்ளார்கள் வாழ்த்துக்கள்: பாருங்கள் இங்கு வந்துள்ள சிந்தி நீங்கள் அனைவருமே பாபாவிற்கு பாரதத்தின் செல்லமான குழந்தைகள் ஏனென்றால் அயல் நாடு சென்றாலும் கூட பாரதத்தில் தன் உடலில் இருக்கின்ற பாரத மண்ணின் குருதிக்கான (இரத்தம்) மதிப்பு வைத்துள்ளீர்கள். பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். மேலும் அமரராக இருங்கள். அமர் வந்துள்ளார். எனவே அமர்பவ என்ற வரதானம் தருகின்றார். இன்று விசேஷமாக இவர் வந்துள்ளார். நல்லது எந்த நிகழ்ச்சிகாக வந்துள்ளீர்களோ பாப்தாதாவிற்கும் அது பிடித்துள்ளது, நன்றாக செய்துள்ளீர்கள். இப்போது இங்கு வந்துள்ள சிந்தி நீங்கள் தினசரி மாணவர்கள் ஆனால் இப்போது அடுத்த முறை வரும்போது புதியதாக உருவாக்கின

குழந்தைகளையும் அழைத்து வர வேண்டும். குழுவினர் இருப்பார்கள்தானே? அவர்களை அழைத்து வாருங்கள் பாப்தாதா உலகிற்கு காண்பிக்க விரும்புகின்றார். பாபா பாரதத்தில் ஜென்மம் எடுத்தவர். அதற்கு இவர் நிமித்தமானவர். யாருக்கு எல்லாம் சேவை செய்துள்ளர்களோ அவர்களையும் அழைத்து வாருங்கள். புதியதாக வந்தவர்களையும், அவர்களையும் குழுவுடன் அழைத்து வாருங்கள். மற்றபடி பாப்தாதா குஷி அடைகின்றார். சேவையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றீர்கள், தன் மீது கவனம் வைப்பதிலும் உங்களுக்கெல்லாம் நிமித்தமாக இருக்கின்ற ஜனக் குழந்தை நன்றாக கவனம் வைக்கின்றார். எனவே நல்ல ரிசல்ட் சிடைத்துள்ளது. பாபாவிற்கும் அயல் நாடு வலம் வருவதற்கான நேரம் கிடைக்கின்றது. எப்போதும் அமிர்தவேளையில் அயல் நாட்டு சென்டரையும் பாப்தாதா வலம் வருகின்றார் ஆனால் இப்போது ஒன்று சேர்க்க வேண்டியது ஜுவாலாமுகி யோகமாகும். இந்த ஜுவாலாமுகி யோகம் தான் அனைவரையும் அருகே கொண்டு வரும். ஏனென்றால் சக்தி கிடைக்கும் அல்லவா? நீங்களும் லைட் மைட் ரூபமாக மாறுகின்றீர்கள். நடமாடும் பொழுதெல்லாம் கூட லைட் மைட் சொரூபத்தில் இருந்தால் பிற மக்களுக்கும் அந்த வைப்ரேஷன் கிடைக்கும். பிறகு உழைப்பு குறைவு பலன் அதிகமாக கிடைக்கும். பாரதத்தில் அனுபவம் செய்தது போல் ஆங்காங்கே பல இடங்களில் விழாக்கள் நடத்தினீர்கள். இதிலும் முன்பை விட நல்ல ரிசலட் கிடைத்துள்ளது. பாபா குழந்தைகளுக்கு அதிலும் விசேஷமாக நிமித்தமாகியுள்ள தாதி, தீதிமார்களுக்கு வாழ்த்துக்களை வழங்குகின்றார், பாப்தாதாவுடன் இணைந்திருந்து 75-ஆண்டுகளை முடித்துள்ளர்கள். மைதானத்தில் வந்துள்ளீர்கள், இதற்காக மிக மிக அதிகமான வாழ்த்துக்கள். இதில் தாதாக்களும் இருக்கின்றீர்கள். தீதி, தாதிமார்கள் மட்டுமல்ல, தாதாக்களும் இருக்கின்றீர்கள். நல்லது,

இப்போது தாதிமார்கள் ஒன்றிணைந்து புதியதொரு திட்டம் அமையுங்கள். என்ன சொல்கின்றார் அவர்? (தாதி ஜனாகி சொல்கின்றார் பாபா ஜனவரி மாதம் மிகவும் மகிமைக்குரிய மாதமாகும். ஜனவரி மாதத்தில் எல்லோரும் ஒன்று சேர்ந்து முயற்சி செய்தால் சேவைக்கான ஒரு நல்ல திட்டம் அமைக்கப்படும். அதன் மூலமாக அனைவர் உள்ளத்தில் இருந்தும் மேரா பாபா என்ற சொல் வெளிப்படும்

என்பது எனது பாவனை. ச-ர். நிர்வயர் சொல்கின்றார் -ஒன்று கலந்து இது குறித்து புதிய திட்டம் ஒன்று அமைப்போம். தாதி ஜானகி விரும்புவதுபோலவும், நீங்கள் விரும்புவது போலவும் எல்லோருடைய வார்த்தையிலும் மேரா பாபா வெளிப்படுவதற்கு அதைக்குறித்து கலந்து ஆலோசனை செய்வோம் அனைவரும் தன் மனதில் ஒரு சங்கல்பம் வையுங்கள். நாங்கள் நிர்விக்னமாக ஆகியே தீருவோம். ஆகியே காண்பிக்க வேண்டும். யாரை யார் பார்த்தாலும் என் முன்பு வந்த இவர் யார் என்று உணர வேண்டும். பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைய வேண்டும். பாப்தாதா புதிய ஆண்டில் புதுமையைக் காண விரும்புகின்றார். அதே பழைய சம்ஸ்காரத்தை விரும்பவில்லை. ஒவ்வொரு குழந்தையும் பாபாவுக்கு நிகராக தென்பட வேண்டும். பிரம்மாபாபாவைப் பின்பற்றுங்கள். விசயங்களும், சூழ்நிலைகள் எல்லாமே பாபாவிற்கு முன்பாக வந்தது ஆனால் பரிஸ்தாவாக மாறி விட்டார். எனவே நீங்கள் பரிஸ்தாவாக ஆக வேண்டும். ஒவ்வொருவரும் தனக்குத்தானே திட சங்கபம் வையுங்கள். ஏனென்றால் தனக்குத்தானே செய்யும் போது கவனம் இருக்கும். நான் அப்படியே மாற வேண்டும். அப்படி நீங்கள் மாறி விட்டால் வைப்ரேஷன் பரவ ஆரம்பிக்கும். இப்போது என்ன லட்சியம் வைத்துள்ளீர்கள், பரிஸ்தா ஆகியே தீர வேண்டும். சொல்லுங்கள் உறுதியா? பின்னால் இருப்பவர்கள் மாறியே ஆக வேண்டும். இன்று 12-மணி அளவில் எல்லோரும் இங்கேயே விட்டு செல்ல வேண்டும். குற்றம் குறைகளையும் விட்டு விட வேண்டும். அனைவருக்கும் பாப்தாதாவின் உளமார்ந்த அன்பும் வாழ்த்துக்களும்.

தாதி ஜானகியுடன்: தாதி குஞ்சு அவர்கள் நினைவை அனுப்பியிருக்கின்றார்கள். நல்ல குழந்தை கணக்கு வழக்கின் காரணமாக வர முடியவில்லை. (ஆன்டி அங்கிள் நினைவை வழங்கினார்கள்) பாப்தாதாவின் உள்ளம் என்னும் பெட்டிக்குள் வைத்திருக்கின்றார். இவர்கள் ஒரு உதாரணம். குழந்தைகள் எவ்வளவு நன்றாக உருவாகியுள்ளார்கள். (ச-ரி. ஜெயந்தியும் குவைத் சென்றுள்ளார்கள். ச-ரி. வசிகாவிடம்) குழந்தை வசிகா தைரியசாலி. இதன் காரணமாக குடும்பத்தில் நன்மை நடந்தது (ச-ரி. சாந்தி டில்லியில் இருந்து நினைவை அனுப்பியிருக்கின்றார்) யாரெல்லாம் உடல் நிலை காரணமாக நாடகப்படி வர முடியவில்லையோ

அவர்களுக்கெல்லாம் பாப்தாதா ஒவ்வொரு பெயர் குறித்து மிக மிக அன்பு நினைவுகளை வழங்குகின்றார்.

பரதாதியுடன்: வாழ்த்துக்கள். உங்களது மண்டலம் எவ்வளவு பெரியதாக உள்ளது பார்த்தீர்களா?. மிகப் பெரிய மண்டலம். பெரிய மனம் படைத்தவர்கள் நீங்கள். எனவே மண்டலமும் பெரியதாக உள்ளது.

ச-ர். பிரிஜ்மோகனுடன்: அனைத்து இடங்களிலும் சேவை செய்துள்ளீர்கள் அதற்கு வாழ்த்துக்கள், நிகழ்ச்சிகள் நடந்த இடத்திற்கெல்லாம் சென்று வந்துள்ளீர்கள், அதற்கும் வாழ்த்துக்கள். (ச-ர். ரமேஷ் மற்றும் ச-ரி. சந்தோஷ் உடன்) மும்பையில் எல்லோரும் இணைந்து செய்துள்ளீர்கள் அதற்கு வாழ்த்துக்கள். எல்லோருமே கை கொடுத்துள்ளீர்கள். இது மிக நன்றாக உள்ளது. இதனால் நல்ல வைப்ரேஷன் வருகின்றது. (தாதி ஜானகியுடன்) சேவை உள்ள இடங்களுக்கு செல்லத்தானே வேண்டும். லண்டனை சார்ந்தவர்கள் அன்புடன் தியாகம் செய்துள்ளார்கள். அவர்களுக்கும் தக்க சமயத்தில் உதவி செய்ய வேண்டும். மேலும் நீங்கள் புத்திசாலி தான் தன் உடலிலும் கவனம் வைத்துக் கொள்ளுங்கள்.

**புதிய ஆண்டு 2012 சுப ஆரம்பத்திற்கான அனைத்து குழந்தைகளுக்கும் வாழ்த்துக்கள்!** நாலாபுறமும் உள்ள பரிவாரம், ஈஸ்வரிய பரிவாரத்திற்கு பாப்தாதா மற்றும் மதுபன் வந்துள்ள அனைத்து பிராமண குழந்தைகள் அணைவருக்கும் பல பல மடங்கு வாழ்த்துக்கள் இப்போது புதிய ஆண்டில் பாப்ததாவும் ஹோம் ஒர்க் கொடுத்துள்ளார். அதை செய்து முடித்து பாப்தாதா முன்பு எல்லோரும் பரிஸ்தாவாக ஆகி காண்பிக்க வேண்டும். இப்போதே இன்றைய நாளில் திட சங்கல்பம் வையுங்கள், நான் யார். நான் பரிஸ்தா, பரிஸ்தா, பரிஸ்தா, இதுவே அனைவரது முகத்திலும் நடத்தையிலும் பாபாவின் சமமாக உலகினருக்கு முன்பாக தென்பட வேண்டும். அனைவருக்கும் பாப்தாதா வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார். நான் யார்? சொல்லுங்கள் பரிஸ்தா. உறுதியாக நினைவிருக்கிறதா? அமிர்த வேளை யோகம் செய்த பிறகு மீண்டும் நிளைவு செய்து பாருங்கள் நான் யார்? பரிஸ்தா பரிஸ்தா மற்றும் பரிஸ்தா ரூபத்தில் பாப்சமனாக சம்பன்னம், சம்பூர்ணம்

ஆகியே தீருவேன் உறுதியா? உறுதியா? நல்லது. அனைவருக்கும் பல மடங்கு வாழ்த்துக்கள். இரவு வணக்கம்

மோகினி சகோதரிக்கு 71ம் ஆண்டு பிறந்த நாள். சதா மகிழ்ச்சியாக இருங்கள், மிகிழ்ச்சிக்கான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டே இருங்கள். ஜானகி தாதிஜியின் 95வது வயது பிறந்த நாள். நீங்களே சக்கரவர்த்தி இராஜா தான். செல்லும் இடங்கள் எல்லாம் அனைவரையும் பரிஸ்தாவாக மாற்றிக் கொண்டே செல்லுங்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂